கம்பனின் மனவளம்

டாக்டர் அ.அ. ஞானசுந்தரத்தரசு



கம்பனின் மன வளம்

மீனாட்சி - பழனியப்பா
அறக்கட்டளைப் பரிசு
பெற்ற நூல்

டாக்டர் **அ.அ. ஞானசுந்தரத்தரசு,** எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.,
முதல்வர் ஸ்ரீ பாரதி ஆசிரியப் பயிற்சி நிறுவனம்,
மேட்டுச்சாலை, இலுப்பூர்-622 102.

உமா பதிப்பகம்

உமா பதிப்பகம்

171, (புதிய எண். 18), பவளக் காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
தொலைபேசி : 2521 5363, 2525 0092

மீனாட்சி பழனியப்பா நூற்றாண்டு நிறை நினைவு ஆய்வு நூலுக்கான
'மீனாட்சி - பழனியப்பா அறக்கட்டளை'ப் பரிசினைப் பெறும்
இந்நூலின் முதற் பதிப்பு காரைக்குடி கம்பன் திருநாளில்
19.3.2008 ஆம் நாள் வெளியிடப் பெற்றது.

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	கம்பனின் மனவளம்
ஆசிரியர்	:	டாக்டர் அ.அ. ஞானசுந்தரத்தரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதல் பதிப்பு - மார்ச் - 2008
பதிப்புரிமை	:	© ஆசிரியருக்கு
தாள்	:	J.K. மேப்லித்தோ
நூல் அளவு	:	14 x 22 செ.மீ. டெம்மி
எழுத்து	:	11 புள்ளிகள்
பக்கங்கள்	:	Viii + 176 = 184
பைண்டிங்	:	சாதாரணக் கட்டு
விலை	:	ரூ. 70.00
ஒளி அச்சு	:	விக்னேஷ்வர் கிராபிக்ஸ் சென்னை - 600 005.
அச்சிட்டோர்	:	பரமேஸ்வரி கிராபிக்ஸ் சென்னை - 600 005.
நூல் வெளியீடு	:	உமா பதிப்பகம் சென்னை - 600 001.

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

- என்ற நடையின் நின்றுயர் இராமகாப்பியத்தில்
சிறந்த ஆய்வு நூலுக்கான பரிசினை
நிறுவக் காரணராய



நூற்றாண்டு நிறை

மீனாட்சி பழனியப்பா

(1908 - 1997)

உள்ளுறை

முன்னுரை

காரைக்குடி கம்பன் கழகம் 1939-இல் தொடங்கப் பெற்றது முதல் நிறுவனர் சா. கணேசன் அவர்களோடு நெருங்கிய நட்புக் கொண்டிருந்தவர்கள் இந்நகர் மெ.செ.அ.மெ.பழ. குடும்பத்தவர்.

இக்குடும்பத்தைச் சேர்ந்த திருமதி. மீனாட்சி பழநியப்பா அவர்கள் 2008ஆம் ஆண்டு நூறாண்டு நிறைவெய்துவதைப் போற்றும் வகையில் கம்பனைப் பற்றி புதிய கோணத்தில் அறிவியல் அணுகுமுறையில் யாரும் இதுவரை வெளிக் கொணராத பரிமாணங்களைக் காட்டும் ஆய்வு நூலொன்றிற்கு மீனாட்சி பழநியப்பா அறக்கட்டளை ஆய்வு நூல் பரிசினை கம்பன் கழகம் மூலம் வழங்கி மகிழ இவர்கள் குடும்பத்தினர் விரும்பியதன் வெளிப்பாடாக முனைவர் அ.அ. ஞானசுந்தரத்தரசு அவர்கள் "கம்பனின் மனவளம்" என்ற தலைப்பில் எழுதிய இந்நூல் சிறந்த ஆய்வு நூலுக்கான பரிசிற்காக நடுவர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப் பெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் மேட்டுச்சாலை ஸ்ரீபாரதி ஆசிரியப் பயிற்சி நிறுவன முதல்வராகப் பணியாற்றும் முனைவர் அ.அ. ஞானசுந்தரத்தரசு அவர்கள் கம்பகாவியத்தை அறிவியல் கண் கொண்டு 'கம்பனும் உளவியலும்' என்ற தலைப்பில் ஆய்ந்து 'முனைவர் பட்டம் பெற்ற கம்ப ரசிகமணி ஆவார்.

தொடர்ந்து கம்பன் மீது கொண்ட கரை காணாக் காதலால் 'கம்பன் காட்டும் தலைமைப் பண்புகள்' என்ற தலைப்பில் இன்று வெகு வேகமாக வளர்ந்து வரும் அறிவியலின் ஒரு கூறான பயில்வோர் மிகப்பாவும் தலைமைப் பண்புகளை கம்பனெனும் இலக்கியத் தேனில் குழைத்து வழங்கியவர். தற்போது மிகப் பெரிய

வளர்ச்சி பெற்று மக்களை மிக விரைவில் சென்றடையும் வலிமையுடைய திரைப்படம், தொலைக்காட்சி முதலான பார்க்கும் ஊடகங்களுக்குச் சவால் விடுவனவாகும். கம்பனின் கை வண்ணத்தில் உருவான காட்சி அமைப்புகளும், அவற்றை அவன் நகர்த்தி நடத்தும் பாங்கும் என நிறுவும் அவர்தம் மற்றொரு நூலான கம்பனின் காட்சிக் கோலங்கள். இப்படியாக அறிவியலின் பல்வேறு கூறுகளைக் கம்பன் வெகு லாவகமாகக் கையாண்டு காட்டி மகிழ்விப்பதை இலக்கியச் சுவை நனி சொட்டச் சொட்டப் பருகத் தருகிறார். மாசு இரிய ஆசிரியப் பயிற்சி நல்கும் பன்முகப் பயிற்றுநர் ஞானசுந்தரத்தரசு அவர்கள் கம்பன் பணி மேன்மேலும் சிறக்க கம்பனருள் முன் நிற்குமாக என வாழ்த்தி மகிழ்கிறோம்.

* கம்பன் பணியே தம் கல்விப் பணியென 'கம்பனின் மனவளம்' எனும் பரிசுக்குரிய இவ்வாய்வு நூலைப் படைத்த முனைவர் அ.அ. ஞானசுந்தரத்தரசு அவர்கள்,
* இனிய இவ்வாய்வு நூலை போர்க்கால அடிப்படையில் செவ்வனே அச்சிட்டு வெளியிட்டுதவும் சென்னை உமா பதிப்பக இராம லெட்சுமணன் அவர்கள்,
* இந்நூலை மீனாட்சி - பழனியப்பா அறக்கட்டளை ஆய்வு நூல் பரிசுக்குரியதெனத் தேர்வு செய்து பரிசினை கம்பன் கழகம் மூலமாக 70-ஆம் ஆண்டுக் கம்பன் திருநாளில் வழங்கி மகிழும், மகிழ்விக்கும் மீனாட்சி - பழனியப்பர் குடும்பத்தார்,

– ஆகியோருக்கு எங்கள் மனங்கனிந்த நன்றி.

காரைக்குடி **கம்பன் கழகத்தார்**
19.3.2008

நூன் முகம்

மனித வளம் என்பது மனவளத்தைப் பொருத்தே அமைகின்றது. இன்றைக்கு நாம் மனிதவளத்தை மேம்படுத்துவதற்காகப் பல வகைகளிலும் திட்டமிடுகிறோம். மனிதனை வளப்படுத்துவதில் இலக்கியங்களின் பங்கும் பணியும் மிகப் பெரிதாக இருக்கிறது.

தாமஸ் ஆல்வா எடிசன் 1882-ஆம் ஆண்டு, செப்டம்பர், 4-ஆம் நாள், 500 மணிநேரம் எரியத்தக்க மின்சார பல்பை உருவாக்கியதாக அவரது வரலாறு கூறுகிறது. இப்போது காணும் மின்னொளி விளக்கு களுக்காக அவருக்கு நாம் நன்றி கூறுகின்றோம். இக்கண்டுபிடிப்பால் அவர் உலகத்தையே வளப்படுத்தி விட்டார். மேரிகியூரி எக்ஸ் கதிர்களைக் கண்டு பிடித்ததன் வாயிலாக மருத்துவ உலகை வளப்படுத்தியுள்ளார்.

இவைகள் எல்லாம் புறப் பொருள்களின் (Material) தொடர்பாக உலகில் ஏற்பட்ட வளங்கள் ஆகும்.

இவற்றைத் தக்க வகையில் பயன்படுத்திக் கொள்வதற்கு மனவளம் தேவைப்படுகிறது. தத்துவ ஞானிகளும், புலவர்களும் நமக்கு மன வளத்தைத் தருவதில் முந்தி நிற்கின்றார்கள்.

மனநலம் போற்றுவது உடல் நலம் போற்றுவதைப் போலவே இன்றியமையாதது.

மனநலத்துடன் இருந்தால் டோபோமைன், செரோட்டின், என்டார்பின்ஸ் ஆகியரசாயனப் பொருள்கள் உடலில் உற்பத்தி ஆகின்றன என்று அறிவியல் கூறுகிறது. இந்த ரசாயனச் சேர்க்கை மனத்திற்கும் மூளைக்கும் புத்துணர்வு தருகிறது எனவும், துன்பங்களைத் தாங்கும் வன்மையை இவை அளிக்கின்றன எனவும் அறிவியல் தெரிவிக்கும் கருத்தைத் துறவிகளும் வலியுறுத்துகின்றார்கள்.

மனநலம் பேணுவது என்பது பயிற்சியால் தான் வலிமை பெற முடியும். இப்பயிற்சியை அனைத்து வகையினரும் பெறும் வகையில் நமது தியானமையங்கள் முயன்று வருவது முன்னேற்றத்தின் அறிகுறியாகும்.

மனப்பயிற்சிகள் பற்றிக் கம்பன் தனது காப்பியத்தில் பல இடங்களில் பேசுகிறான். எனவே கம்பனின் மனவளத்தையும், அவன் மற்றவர்க்கு

வழங்கும் மனவளத்தையும் குறித்து எழுத வேண்டும் என்ற ஆவல் என்னுள் எழுந்தது.

இதயத்தைக் களிப்பு எய்தச் செய்யும் புலவன் கம்பன் என்பதால், அவனைத் தொடுகின்ற இடங்களில் எல்லாம் மானுடத்தின் மாண்பும், மனவளம் பற்றிய கருத்துகளும் நிறைந்திருப்பதனைக் காண முடிந்தது.

தனிமனித வளத்தைப் பெரிதும் வலியுறுத்துபவன் கம்பன். சுற்றுச் சூழல் கேடு, எயிட்ஸ் முதலான உயிர்க்கொல்லி நோய்களின் சவால் ஆகியவற்றுக்குத் தனிமனித ஒழுக்கத்தின் மூலமே தீர்வு காண முடியும். இவ்வகையில் நம்மைச் செழுமைப் படுத்துவதில் கம்பன் காப்பியம் மிகப்பெரிய இடம் வகிக்கிறது. எனவே மனவளத்தைப் பெருக்குவதற்கு இந்நூல் ஒரு கருவியாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

'விஸ்தாரகவி' என்பதனால், கம்பராமாயணத்திற்கு பல்துறை அறிஞர்களைக் கொண்டு விரிவான உரை நூல் வரைவது மிகவும் பயன் உடையதாக இருக்கும் எனவும் கருதுகிறேன்.

எனது முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஊக்கமளித்து, மாணவ, ஆசிரியர்களுக்குக் கற்பிக்கும் பணியில் புதிய பரிமாணங்களைக் காண்பதற்கு உறுதுணையாக இருக்கின்ற, இலுப்பூர் மேட்டுச்சாலை, மதர்தெரசா அறக்கட்டளையின் நிறுவனர் திரு. இரா. சின்னத்தம்பி அவர்களுக்கும், 'புதல்வரால் பொலிந்தான் உந்தை' என்று கம்பன் கூறுவதைப் போல, இடைவிடா முயற்சி, உழைப்பு ஆகியவற்றால், 'அழியாத கல்வியின் அழகான தோட்டாமாக', மேட்டுச் சாலையை ஆக்கி இருக்கின்ற, அன்னாரின் புதல்வர்கள், நிறுவன இயக்குநர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களுக்கும், நிறுவனங்களின் தாளாளர் திரு. இரா. சி. உதயகுமார் அவர்களுக்கும் என் மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலின் உருவாக்கத்தின் போது, படிதிருத்தி உதவிய தமிழ் விரிவுரையாளர் செல்வி. மெ.அ. சாலை ஜீவமாணிக்கம் அவர்களுக்கு என் நன்றி உரியது.

அன்பார்ந்த,
அ.அ. ஞானசுந்தரத்தரசு

"பூபால வீரராகவன் அகம்"
14, முத்துக்கருப்பனார் நகர்,
புதுக்கோட்டை-3.

1. கம்பனின் இலட்சியப் பார்வை

இலட்சியம் என்பது சக்தி

ஒரு குறிக்கோள் அல்லது இலட்சியம் என்பது சக்திகளின் மையமாக இருக்கிறது. அந்த இலட்சியத்தை நோக்கிச் செல்லும் போது, அந்த இலட்சியமே சக்திகளின் ஊற்றுக் கண்ணாகவும் இருக்கிறது. இலட்சியத்தில் இருந்தே நாம் ஒவ்வொருவரும் சக்தியைப் பெற்றுக்கொள்கிறோம்.

பாரதி கண்ட இலட்சியம்

ஒவ்வொரு காலத்திலும் சூழ்நிலைக்கு ஏற்ப இலட்சியங்கள் உருவாகின்றன. அந்த இலட்சியத்தை நோக்கிச் செல்லும் போது, அந்த இலட்சியம் எவ்வாறு சக்தியாக ஊற்றெடுத்துப் பெருகுகின்றது என்பதற்குப் பாரதத் திருநாட்டின் விடுதலைப் போர் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். 'விடுதலை' என்னும் இலட்சியம் எவ்வாறு ஆற்றல் மிகுந்த சக்தியாக மிளிர்ந்தது என்பதை இந்திய விடுதலைப் போர் வரலாறு நமக்கு உணர்த்துக்கிறது. விடுதலை என்னும் இலட்சியத்தைப் பாரதி,

> எண்ண மெலாம் நெய்யாக எம் உயிரினுள் வளர்ந்த
> வண்ண விளக்கு இஃது.
>
> (சுதந்திரப்பயிர்)

என்று பேசுகிறான். விடுதலை என்னும் இலட்சியம் எங்ஙனம் உயிரின் உள்ளே ஒளிவிட்டது என்பது பாரதியின் பாடலில் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

'இலட்சியம்' என்பது உயிர்ப்புச் சக்தியாக உருவாகும் என்பதையே பாரதி இப்பாடலில் தெரிவிக்கின்றான்.

அகிம்சை எனும் இலட்சியம்

தென்னாப்பிரிக்காவில் முதல் வகுப்புப் பயணச் சீட்டினை வைத்திருந்த போதிலும் காந்தியடிகள் கருப்பர் என்பதனால் இரயிலில் இருந்து இறக்கி விடப்பட்டார். அந்த இரயில் நிலையத்தில் கடுங்குளிர் வாட்டியது. பயணிகள் தங்கும் அறையை நோக்கிக் காந்தியடிகள் சென்றார். அந்த அறை மிகவும் இருட்டாக இருந்தது. இங்கிலாந்தில் வழக்குரைஞர் படிப்பை முடித்து மிகவும் இளைஞராகத் தென்னாப்பிரிக்காவுக்கு வந்த அவருக்கு இந்த நிகழ்ச்சி, வாழ்க்கையின் மீது ஒரு பயத்தை ஏற்படுத்தியது. "தென்னாப்பிரிக்காவில் ஆரம்பக் கட்டத்தில் என் வாழ்க்கையை நினைத்து நான் பயந்து போனேன்" என்று காந்தியடிகள் குறிப்பிடுகின்றார். அந்த இருட்டான பயணிகள் தங்கும் அறையில் ஒரு வெள்ளைக்காரரைப் பார்த்தார் காந்தியடிகள். அப்போது அவருக்கு இருந்த அச்சம் மேலும் மிகுதியாயிற்று. அப்போது காந்தியடிகள் சிந்திக்கத் தொடங்கினார்.

கருப்பர் இனத்தை ஒதுக்கித் தள்ளும் இத்தகைய துயரம் மிகுந்த தென்னாப்பிரிக்காவை விட்டு விட்டு இந்தியா செல்வதா? எது வந்தாலும் சரி என்று ஏற்றுக்கொண்டு தென்னாப்பிரிக்காவிலேயே இருப்பதா? என்ற எண்ண ஓட்டத்தின் இறுதியில், காந்தியடிகள் ஒரு முடிவுக்கு வந்தார். "இறைவன் எனக்கு நிச்சயம் உதவி புரிவான்; நான் தென்னாப்பிரிக்கச் சூழ்நிலையை எதிர்த்துப் போரிடுவேன்" என உறுதிகொண்டு தென்னாப் பிரிக்காவில் தங்கித் துன்பங்களை எதிர்கொள்ளத் துணிவு கொண்டார். 'மேரிட்ஸ்பர்க் இரயில் நிலையத்தில் இதே நாளில் அகிம்சை என்னும் அமைதிப் போராட்டம் என்னுள்ளே தொடங்கியது' என்று காந்தியடிகள் தெரிவிக்கின்றார்.[1]

காந்தியடிகளின் உள்ளத்தில் இலட்சிய சக்தி எங்ஙனம் தொடங்கியது என்பதனை மேலே சுட்டிக் காட்டிய நிகழ்ச்சி தெளிவுபடுத்துகிறது. காந்தியடி

1. Mahatma Gandhi Essays and Reflections, Gandhi in South Africa- Sarvepalli Radhakrishnan - P.113

களின் இலட்சியம் அகிம்சையாக உயிர்ப்புக் கொண்டது. இந்த இலட்சிய சக்தி காந்தியடிகளின் வாழ்வின் இறுதி வரை தொடர்ந்தது.

வ.உ.சி யின் குன்றாத இலட்சியம்:-

இந்த இடத்தில் 'வ.உ.சி. நூல் திரட்டு' என்ற நூலில் முன்னுரையாக அமைந்துள்ள "வ.உ.சி சொற்களில் வ.உ.சி" என்ற பகுதியிலிருந்து சில வரிகளைப் பார்ப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

8.6.1935-இல் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் ஸ்ரீமான் வ. ராமசாமி அய்யங்கார் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் ஒருபகுதியைக் காண்போம்:

'அன்பார்ந்த சகோதரர் அவர்களே,

தாங்கள் தேசத்திற்குச் சேவை செய்து முடித்து விட்ட தென்று கருதித் திருப்பழனத்தில் போய்த் தூங்கத் தொடங்கி விட்ீர்களா? அல்லது தாங்கள் பெரும் பொருள் மீதப்படுத்தி விட்டமையால் இன்பம் துய்க்கத் தொடங்கி விட்டீர்களா? இரண்டில் எது நினைத்தாலும் தவறு. தேசம் அடிமைப் பட்டேயிருக்கிறது. என் போன்ற உண்மைத் தேசாபிமானிகள் பலர் வறுமையில் ஆழ்ந்திருக்கின்றோம். இது நிற்க.

தேசத்திற்குச் சேவை செய்ய வெளிக் கிளம்புக. கொழும்பு 'வீரகேசரி' - தினசரிக்குத் தலைமை ஆசிரியர் தேவை. அப்பதவியைத் தாங்கள் வகித்துத் தேசத்திற்குச் சேவை செய்ய வேண்டுமென்பது எனது விருப்பம்.'

மேற்காணும் வரிகள் விடுதலைப் போரில் தாம் இலட்சிய வேட்கையுடன் ஈடுபட்டது மட்டும் அன்றி, தம்மைப் போலப் பிறரையும் அப்போருக்கு ஊக்குவித்து சுதந்திரப் பயிருக்கு நீர் ஊற்றும் பணியைப் புரிந்தவர் என்பதனைப் புலப்படுத்துகின்றன.

மேலும் தாம் அமைத்த கப்பல் கம்பெனி சிதைந்த சூழலில் வ.உ.சி பின்வருமாறு எழுதுகிறார்:

---

1. வ.உ.சி நூல் திரட்டு - தொகுப்பு வீ. அரசு - ப.12
2. மேலது - ப.18

'என் மனமும் என்னுடம்பும்
என் சுகமும் என் நிலையும்
என் மனையும் என் மகவும்
என் பொருளும் என் மணமும்
குன்றிடினும் யான் குன்றேன்'[1]

இதனைப் படிக்கும் போது தேச பக்தியாக உயிர்த்த விடுதலை என்னும் இலட்சியம் எந்த அளவுக்கு அவருக்கு மனச்சக்தியை அளித்திருக்கிறது என்பதை அறிந்து கொள்கின்றோம்.

இத்தகைய உயரிய இலட்சியங்கள் மேற்காணும் பெரியோர்களிடம் தழைத்தன. மேலும் அவை சமுதாய வாழ்வியலாக மலர்ந்தமைக்கு நமது மண்ணிலே தோன்றிய அறக்காப்பியங்களும், இதிகாசங்களும் அடிப்படையாக இருந்துள்ளன. நாம் அறிந்தோ அறியாமலோ இக்காப்பிய மாந்தரின் ஒழுக்கம் நமது குருதியிலே கலந்திருக்கிறது.

கம்பனின் இலட்சியப் பார்வை

அறம் பற்றிப் பேசும் அருந்தமிழ்க் காப்பியமாகிய கம்பராமாயணத்தில் இலட்சியத்தின் சக்தியைக் கம்பன் அற்புதமாகப் படைத்துக்காட்டுகிறான்.

கம்பன் படைப்பில் இலட்சியத்தின் சின்னமாக அனுமன், திகழ்கின்றான். 'இராமபக்தி' என்பதுதான் அனுமனின் இலட்சியம். அந்த இலட்சியம் அவனைத் தருமத்தின் மூர்த்தியாக உயர்த்துகின்றது. காப்பியத்தில் மட்டும் அன்றி மிக உயரிய இலட்சியங்களை வெற்றிகொள்ள ஆர்வப்படுவோர் அனைவரும் அவனைத் தொழுகின்றனர்.

அனுமனைத் தொழுகின்ற போது 'இலட்சியம்' அல்லது குறிக்கோளைத் தொழுகின்ற உணர்வு நமக்கு ஏற்படுகின்றது. அந்த உணர்வின் அலைகள் நம் நெஞ்சக் கதவைத் தட்டி இலட்சியத்தை நோக்கி, அந்த அனுமனைப் போலவே நம்மையும் உந்திச் செல்கின்றன. இறுதி வெற்றிக்குப் பிறகு, "நின்னைத் தலையாலே தொழவே தகும் தன்மையோய்!" என்ற

1. மேலது - ப.18

பாராட்டினைப் பெற்று அனைவரின் வணக்கத்திற்கும் உரியவன் ஆகின்றான் அனுமன். அவனுக்குக் கிடைத்த அதே நிலை கிடைக்க வேண்டும் என்பதற்காக அவனை நினைத்துப் பலர் வழிபடுகின்றனர். அவர்கள் உள்ளத்தில் அத்தகைய வெற்றி அலைகள் நிச்சயம் பாயும் என்பதனை மனவியல் வல்லுநர்கள் மெய்ப்பித்து இருக்கின்றனர்.

கடலைத் தாவும் இலட்சியம்

அனுமன் சிறை இருந்த செல்வியைத் தேடிக் கடலைத் தாண்டிச் சென்றான். அப்போது 'மைந்நாகம்' என்றொரு மலை, கடலை விட்டு மேலே எழுந்து வந்தது. அவனது பயணத்தில் குறுக்கிட்டது. அந்த மலையை அப்புறம் தள்ளிவிட்டு மேலே தன் பயணத்தைத் தொடர முயன்றான் அனுமன். அந்த மலை அவனைத் தொடர்ந்து வந்து, "அனுமனே! நீண்ட தூரம் நீ கடலைக் கடந்து வந்திருப்பதனால் களைப்பு அடைந்திருப்பாய்! ஆகவே என் மீது சிறிது நேரம் தங்கி இருந்து உணவு அருந்தி, இளைப்பாறிச் செல்க!" என்று பணிவாகக்கேட்டது. அப்போது அனுமன் கூறினான்:

"நான் நீண்ட தூரம் செல்ல வேண்டும் என்பதற்கு வருந்த மாட்டேன். அல்லது கடலின் பரப்பைக் கடக்க வேண்டும் என்பதற்காகவும் வருந்த மாட்டேன். காரணம் யாது என்றால் என்னிடம் எம்பெருமானாகிய இராமன் வைத்திருக்கின்ற அன்பே ஆகும். இலங்கையைச் சென்று அடைந்து அங்கே எம்பெருமாட்டி சீதை இருக்கின்றாரா என்பதைத் தேடிக் காண்பதே எனது இலட்சியம். அந்த இலட்சியம் நிறைவேறாமல் நான் எதையும் உண்ண மாட்டேன்.

மைந்நாக மலையே! உனது அன்பு என்னைப் பிணித்து விட்டது. உனது அன்பு என்னைப் பற்றிக் கொண்ட போதே, நான் உன்மீது தங்கி இருந்து, விருந்து உண்ட மனநிறைவை எனக்கு அளித்து விட்டது. உனது அன்பை விடவும் மிகச் சிறந்ததான வேறு எந்த ஒன்றை நீ எனக்கு வழங்க இயலும்?" என்று அனுமன் கூறினான்.

கம்பன் இதனை,

"வருந்தேன்; அது என் துணை
வானவன் வைத்த காதல்"

(கடல்தாவு படலம் - 59)

என்று படைக்கின்றான்.

"இராமபக்தி" என்னும் இலட்சியம் அவனுக்குக் கடலைத்தாவும் சக்தியை அளித்திருக்கிறது என்ற உண்மை இப்பாடலால் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கா தேவியை வீழ்த்தியது

அனுமன், இலங்கையை அடைந்து அதன் மதிலைக் கடக்க முயன்ற போது அந்நகரின் பாதுகாப்புக்காக அங்கே நின்றிருந்த 'இலங்காதேவி' என்னும் கொடியவள் அனுமனை உள்ளே புக விடாமல் அதட்டினாள். அவள் எட்டுத் தோள்களையும் நான்கு முகங்களையும் உடையவள். மூன்று உலகங்களையும் கோபித்துக் கனன்று எழுகின்ற காவல்திறம் மிக்கவள். திரி சூலத்தைக் கையில் உடையவள்.

இத்தகைய கொடுமை படைத்த இலங்காதேவியின் திரி சூலத்தை முரித்துப்போட்டு, அவளது ஆயுதங்களைப் பறித்து எறிந்து தரையில் அடித்து வீழ்த்தினான் அனுமன். தரையில் வீழ்ந்த இலங்காதேவி அனுமனின் பெருமையை நன்கு புரிந்து கொண்டாள். அவள் அனுமனிடம் 'அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்பதற்கு ஏற்ப, உன்னால் முடியாதது ஒன்றும் இல்லை ; இனி உன் விருப்பப் படியே இந்நகரத்திற்குள் புகுவாயாக' என்று கூறிச் சென்றாள்.

இலங்கையில் புகுந்த அனுமனின் வழிபாடு

கடும் போராட்டத்திற்குப் பிறகு அனுமன் இலங்கையின் மதிலின் உள்ளே புகுந்தான். இவ்வாறு புகுந்தவனின் செய்கையை உற்று நோக்குதல் இன்றியமையாதது. இலங்கை நகரின் உள்ளே அடியெடுத்து வைப்பதற்கு முன்னாலே இராமனை மனத்திற்குள்ளே வணங்குகின்றான். இதனைக் கம்பன்,

ஆரியன் கமல பாதம் அகத்துற வணங்கி
ஆண்டு அப்
பூரியர் இலங்கை மூதூர்ப் பொன்மதில்
தாவிப் புக்கான்
(ஊர்தேடு படலம் - 96)

என்று குறிப்பிடுகின்றான்.

அனுமனின் இலட்சியம் இராமபக்தி என்று குறிப்பிட்டதற்கு இணங்க, இராம வழிபாடு என்ற இலட்சிய சக்தி அவனுக்கு எவ்வாறு கைகொடுத்தது என்பதனை இந்த இடத்திலும் கம்பன் உறுதிப்படுத்தி இருக்கிறான்.

கடல்கடந்த இராம பக்தி

மிகப்பெரிய போராட்டத்திற்குப் பிறகு சீதையைக் கண்டான் அனுமன். சீதையின் கற்பையும் காதலையும் கண்டு வியப்புற்றான். ஆனால் சீதையோ இவ்வனுமன் எப்படிக் கடலைக் கடந்தான் என்று வியந்தாள். 'அனுமனே! நீ எவ்வாறு மாபெருங் கடலைத் தாண்டினாய்?' என்று கேட்டாள். அனுமன் கூறினான்:

"உனது நாயகன் இராமபிரான். அவனை ஒருமையுடன் உள்ளத்திலே தியானிப்பவர்கள், மாயையாகிய பிறவிக் கடலையே கடந்து விடுகின்றார்கள். அவ்வாறு இருக்க அவனைத் தியானிக்கும் போது இந்தக் கருங்கடலையா கடக்க முடியாது?" என்றான்.

அனுமனின் உள்ளத்திலே கனன்ற இலட்சிய சக்தி எவ்வாறு உருவெடுத்தது என்பதற்கு மேற்காணும் உரை சான்றாகும்.

அனுமனின் வாதம்

அனுமன் எம்பெருமாட்டி சீதையைக் கண்ணுற்ற பின்னர், தான் வந்ததற்கு அடையாளமாக இலங்கையின் பொழில்களை அழித்தான். அவனை எதிர்த்து வந்த கிங்கரர் முதலான வானரர்களை அழித்தான். இதனைக் கேள்வியுற்ற இராவணன் அனுமனைப் பிடித்து வாருங்கள் என்று

கட்டளை இட்டான். வானர வீரர்கள் அங்ஙனமே அனுமனை இராவணன் முன்னே கொண்டுபோய் நிறுத்தினார்கள். இராவணன் அனுமனிடம் 'நீ யார்?' என வினவினான். 'இராமனின் தூதாக வந்தவன் நான்' என்றான் அனுமன். அது மட்டும் அன்றி இராமனின் பெருமைகளை எல்லாம் மிகவும் விரிவாக இராவணனுக்கு எடுத்து இயம்பினான். அனுமனின் சொற்களில் 'இராமபக்தி' ததும்பி நின்றது. சுந்தர காண்டம் ஏனைய காண்டங்களை விடவும் மிகவும் உயர்ந்தது எனவும், ஏனைய காண்டங்களை விடவும் அழகு பொருந்தியது எனவும், புலவரால் தலைமேல் வைத்துப் போற்றப்படுவதற்கு அனுமனின் இத்தகைய இனிமையான மொழியும் ஒரு காரணம் ஆகும். தூதுவனாக வந்த அனுமனின் வாதம், பின்னால் நிகழ இருக்கின்ற பெரும்போரின் முன்னுரையாக அமைந்திருக்கிறது.

அனுமன் இராமனை உச்சி மேற்கொண்டு போற்றி, இராவணன் முன்னாலே கூறுகின்ற உரை என்றென்றும் அழியாத மிக உயர்ந்த உரையாகும்.

அவனது உரை வருமாறு:

"இறைவனுக்கு முதலும் நடுவும், முடிவும் இல்லை. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களும் இல்லை. எல்லாப் பொருள்களுக்கும் மூலகாரணமாக இருப்பவன் இறைவனே. அழித்தல் கடவுளாகிய சிவபெருமான், திரிசூலத்தைத் தன் கையில் ஏந்தி இருக்கிறான். காத்தல் கடவுளாகிய திருமால், தன் கையில் சங்கு, சக்கரம் ஆகியவற்றை ஏந்தி இருக்கிறான். படைத்தல் கடவுளாகிய பிரம்மன், நீர் இருக்கும் பாத்திரமாகிய கமண்டலத்தை ஏந்தி இருக்கிறான். இந்த மூன்று கடவுளரும் இவற்றை விட்டு விட்டு ஒரே உருவம் பெற்று 'இராமன்' என்னும் பெயருடன் அயோத்தியில் அவதரித்தனர். மேலும் திருமால் தான் இருக்கும் ஆல் இலையையும், பிரமன் தான் இருக்கும் தாமரை மலரையும், சிவபெருமான்தான் இருக்கும். கயிலைமலையையும் விட்டுவிட்டு இம்மூவரும் ஒருருவம் பெற்று 'இராமன்' என்ற பெயருடன் அயோத்தியில் அவதரித்தனர். இராமன் இப்போது கைகளில் வில்லேந்திய வீரனாக இருக்கின்றான். அவன் தனது திருவடியை வழிபடுபவர்களின் பிறப்பைப் போக்கி அருள்புரிபவன். அறத்தை எங்கும்

நிலை நிற்கச் செய்பவன். வேத நெறிகளை இவ்வுலகத்தோர் கொண்டாடும்படி அவர்களைச் செந்நெறியில் செலுத்துபவன். தீயவர்களை அழிப்பவன். நீதி நெறி நின்றவர் துன்பத்தைப் போக்குபவன். அத்தகைய திருமாலே இன்று அயோத்தியில் அவதரித்திருப்பவன். நான் அவனுக்கு அடிமையானவன்" என்று கூறினான் அனுமன்.

மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர்
　　மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த காரணன்;
　　கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும் கரகமும்
　　துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்
　　பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்.

(பிணி வீட்டு படலம் - 80)

மேற்காணும் அனுமனது பேச்சில் இராமபக்தி என்னும் இலட்சியம் மிக உயர்ந்த நிலை பெற்றுத் திகழக் காண்கிறோம்.

முப்பெரும் கடவுளும் ஒன்றாக இணைந்து, ஒரு முழுமையான கூறாகஅவதாரம் செய்திருக்கும் பெருமையை அனுமன் இராவணனுக்கு உணர்த்தும் முகமாக உலகிற்குத் தெரியக் காட்டுகிறான். இறைவனின் மிக உயரிய நிலையை நாம் அனுமனின் சொற்களின் வழியே காண்கின்றோம்.

இலக்குவன் முதலானோரின் இலட்சியம்

உயிர், உடைமை, இன்பம் ஆகியவற்றை விட இலட்சியத்தைப் பெரிதாக மதிக்கும் உயர் குணக் குன்று என இலக்குவனைக் கூறலாம்.

இலட்சியம் சார்ந்த கவனத்தின் வீச்சு எவ்வாறு அளவிடப்படுகிறது என்பதை வில்லியம் மெக்டுகல் என்ற அறிஞர் பின்வருமாறு கூறுகிறார்:

1. இலட்சியத்தை நோக்கிய நமது திறமை. 2. கவனத் சிதைவை ஏற்படுத்தும் காரணிகளுக்கு எதிரான நமது உணர்வுகள்.

கவனச் சிதைவிற்கான காரணிகளை எந்த அளவுக்கு நாம் புறக்கணிக்கின்றோமோ அந்த அளவுக்கு நாம் விழிப்புடன் இருக்கிறோம் என்று கூறலாம். இலக்கு சரியாக இருந்தால்தான் அதனை நோக்கிய கவனம் தீவிரமானதாகவும் தொடர்ந்து செல்வதாகவும் இருக்கும்.'

வில்லியம் மெக் டூகலின் கொள்கையை, வீடணனின் இலட்சியப் பயணத்துடன் ஒப்பிடும் போது, அவன் இராமனை நோக்கிச் செல்லும் பாதையில் தடுப்பனவற்றை உதறித் தள்ளுவதைக் காணலாம். 'நகரத்தை விட்டு நீங்கு' என்ற அரச கட்டளையை அவன் துச்சமாக மதிக்கின்றான்.

குகன் வேடுவனாக இருந்தும் இராமனை விட்டுப் பிரிய வேண்டாம் என்ற கருத்தில் உறுதியாக இருக்கின்றான். பின்னர் இராமனின் வேண்டுகோளை ஏற்கவும் செய்கின்றான்.

சுக்கிரீவன் தன் படையை இராமனுக்காகத் தர உடன்பட்டு, அதைச் செய்து முடிக்கின்றான். கிட்கிந்தையின் ஆட்சியை நிலை நிறுத்தும் பணியில் அவன் வெற்றி பெறுகின்றான்.

இந்திரசித்தன் இறுதி வரை தன் தந்தைக்காகப் போரிடுவதையே இலட்சியமாக் கொண்டிருந்தான். கும்பகருணன் அறத்தை உணர்ந்திருந்தும் செஞ்சோற்றுக் கடன் கழிக்கப் போர்க்களம் சென்றான்.

இப்பாத்திரங்களின் வாழ்க்கைப் போராட்டம் வெவ்வேறாக இருப்பினும் இவர்கள் அனைவரும் ஒரு குறிக்கோளுக்காகச் செயல்படுவதை இராமாயணம் அழகு பொருந்தக் காட்டுகிறது.

2. கம்பன் தந்த வாழ்க்கைப் பாதை

மூவகை வாழ்க்கை

இன்றைய நிலையில் மனிதனுக்கு மூன்று வகையான வாழ்க்கை முறைகள் அமைந்துள்ளன: அவை

1. வீட்டு வாழ்க்கை, 2.தொழில்சார்ந்த வாழ்க்கை, 3. சமுதாய வாழ்க்கை என்பனவாம்.

வாழும்நிலை மூன்றாக இருந்தாலும் 'மனம்' என்பது ஒன்றுதான். அந்த மனத்தைக் கொண்டு நாம் ஒவ்வொருவருடனும் பழகும் விதம் வெவ்வேறாக இருக்கிறது. ஆண்கள், பெண்களுடன் பழகும் முறை உறவுக்கும் நட்புக்கும் ஏற்ற முறையில் அமைகின்றது. தாய், சகோதரி, அண்ணி, மனைவி, மகள், தோழமையுள்ளோர், அலுவலகத் தொடர்பினர் என உறவுகள் பல்வேறு வகையாக இருக்கின்றன். அவ்வாறே பெண்களும் ஆடவருடன் பழகும் விதம் வேறுபட்டு அமைகின்றது. தந்தை, சகோதரன், கொழுந்தன், கணவன், மகன், நட்புடையார், பணிகளின் போது தொடர்பு கொள்வோர் என வேறு வேறாகப் பழகும் தன்மை அமைகிறது. ஒரே மனம் உறவுகளுக்கு ஏற்பத் தன்னைப் பொருத்திக் கொள்கிறது. இதனைப் போலவே ஒரே மனிதன் குடும்ப வாழ்க்கை, தொழில்சார்ந்த வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை என இடத்துக்கும் சூழலுக்கும் ஏற்பத் தன்னை மாற்றிக்கொண்டு வாழவேண்டியுள்ளது. இடத்தையும் சூழலையும் தனக்குள் அகப்படுத்திக் கொண்டு செல்லும் மனிதன் சமுதாயத்துக்குப் பயன் உள்ளவனாக ஆகின்றான். மேலே காணப்படும் மூன்று வகையான வாழ்க்கை நிலையில் வரும் போராட்டங்களைத் தமது மன உறுதியால் தூய்மைப்படுத்தி அவற்றை வெற்றி கொள்பவனை 'சிறந்த பொருத்தப்பாடு பெற்றவன்' (Well - Adjusted Individual) என்று உளவியல்

அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.' இத்தகையோரே 'உளநலம்' பெற்றவர்கள். இப்படி இருப்பதையே வாழ்வின் இலட்சியமாகக் கொள்ள வேண்டும் என்றும் உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இத்தகைய செம்மாந்த உளநலத்தைக் கம்பன் கவியில் நாம் பல இடங்களில் காண்கிறோம்.

இனி இம்மூன்று வகையான வாழ்க்கை முறைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்ப்போம்.

வீடும், அலுவலகமும்

வீட்டில் நாம் விரும்பியவாறு உடை உடுத்துகிறோம். நம் மனம் விரும்பிய உணவை செய்யச் சொல்லி அல்லது நாமே தயாரித்து உண்டு மகிழ்கிறோம். தாய், சகோதரி ஆகியவர்களுடன் நெகிழ்ந்து பேசி, விட்டுக் கொடுத்துப் பாச உணர்வுடன் வாழ்கின்றோம். மழலையரை மடியில் கிடத்தி 'அன்பே! ஆரமுதே!' எனச் சீராட்டி அன்பு பொழிகின்றோம். அலுவலகத்தைப் போல அல்லாமல், வீட்டில் அன்பு செய்யவும் விருப்பம் போல வாழவும் வாய்ப்புகள் உண்டு.

அலுவலகத்திற்குச் செல்லும் போது குறிப்பிட்ட சீருடையையோ, சமுதாயம் மதிக்கின்ற ஓர் உடையையோ அணிந்து கொள்கின்றோம். அலுவலகத்திற்குச் சென்றுவர ஒரு குறிப்பிட்ட நேர முறைமையைக் கையாள்கிறோம். அலுவலகம் அல்லது பணிபுரியும் இடத்தில் அங்கு உள்ள ஒவ்வொருவருடனும் அவர்களுடைய நிலைக்கு ஏற்பப் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டியுள்ளது. மேலதிகாரி அல்லது முதலாளியைப் பார்க்கும் போது ஒருவகையாகவும், நமக்குத் கீழே பணிபுரிபவர்களிடம் ஒரு வகையாகவும் நடந்து கொள்ள வேண்டியுள்ளது. வீட்டில் சகோதரனோ, சகோதரியோ தவறு செய்யும் போது அவர்களை அன்பு காட்டித் திருத்துகிறோம்.

1. எஸ். சந்தானம் - கல்வி உளவியலும்
கல்விச் சமூகவியலும். ப.491

"தவறு செய்வது நமது குடும்பத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்றதா? இதை எண்ணிப்பார்! நீ திருந்தினால்தான் நமது குடும்பம் முன்னேறும்" என்றெல்லாம் அன்பான, கனிவான சொற்களைக் கூறி அவர்களைத் திருத்துகிறோம். வீட்டில் உள்ளவர்களை அணுகும்போது அன்பும் பாசமும் குழைந்து நிற்கிறது.

ஆனால் அலுவலகத்தில் பணிபுரிபவர்களிடம் அளவுக்கு அப்பாற்பட்டுக் குழைவு காட்டினால் அங்கே நிருவாகக் குறைபாடு ஏற்பட்டு விடும். அலுவலகத்தில் தவறு செய்யும் ஒருவரைத் தட்டிக் கேட்கும்போது, அங்கே நிருவாக அணுகுமுறைக்கு உரிய நுட்பத்தைப் (Administrative technique) பயன்படுத்த வேண்டியுள்ளது. குறைகளை அதிகார உரிமையுடன் தட்டிக்கேட்டால் தான் நிருவாகம் செம்மையாக நடக்கும். அங்கே குழைவான அன்புக்கு இடம் இல்லை. வீட்டில் தவறு செய்பவர்களை மன்னிக்கின்றோம். அலுவலகத்தில் அங்ஙனம் செய்யமுடியாது. தவறு செய்பவர்களைத் தண்டனைக்கு உரியவர்களாக ஆக்கினால்தான் அத்தவறுகள் தொடர்ந்து நடைபெறா வண்ணம் தடுத்து நிறுத்த முடியும். அங்கே தந்தை, மகன், சகோதரன் ஆகிய உறவுகள் இல்லை. மாறாக பணிப்பொறுப்பும், ஒருங்கு இணைந்து மேம்படுத்தும் ஆற்றலும் தேவைப்படுகின்றன.

அதிகாரியின் அனுபவம்

அன்றாட வாழ்ககையிலிருந்து ஒரு நிகழ்ச்சியைக் காண்போம்:

அரசுத் தேர்வு. ஒரு கல்வி அதிகாரியின் மகன் துண்டுத்தாளைப் பார்த்து எழுதும்போது பிடிபட்டுவிடுகிறான். அவன் சோர்ந்த முகத்துடன வீட்டுக்கு வருகிறான். அவனுடைய தாய் "அறியாத பையன்; தெரியாமல் தவறு செய்து விட்டான்" என்று கூறி அவனை மன்னித்து விடுகின்றார். அவனுடைய தந்தை ஒரு கல்வி அதிகாரியாக இருக்கின்ற காரணத்தால், "என் பெயரைக் கெடுக்க வந்தவனே! தேர்விலா பார்த்து எழுதுவது? உன் செயலை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்" என்று ஏசுகின்றார். இருந்தபோதிலும் சற்று நேரத்தில் அவர்மனம் கசிந்தது. தன் மகன் என்ற காரணத்தால் அவனிடம், "இந்தத் தேர்வில் தோல்வி கண்டால் அடுத்த தேர்வை எழுதி வெற்றி பெறலாம்;

போகட்டும், அடுத்துவரும் தேர்வுக்கு முயற்சி செய்" என்று ஆறுதல் கூறுகின்றார்; மகன்செய்த குற்றத்தை மன்னிக்கவும் செய்கின்றார். ஏனென்றால் அன்பு என்பது எப்போதும் குற்றங்களை மனதில் பதிவு செய்வதே இல்லை. இது வீட்டில் நடக்கும் நிகழ்ச்சி.

அதே கல்வி அதிகாரி, வேறு ஒரு நேரத்தில் அரசுத் தேர்வு நடைபெறும் போது சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகின்றார். ஒரு மாணவன் துண்டுத் தாளை வைத்துப் பார்த்து எழுதிக்கொண்டு இருக்கின்றான். அதனைப் பார்த்த கல்வி அதிகாரி அவனைப் பிடித்து விடுகின்றார். "இதே தவறு செய்த தன் மகனை மன்னித்தது போல இம் மாணவனைப் போகட்டும் என்று அவரால் விட்டுவிட இயலாது. ஏனென்றால் அங்கே நிர்வாகம் என்பதன் அதிகாரம் குறுக்கிடுகிறது. அம்மாணவனைக் குறைந்த அளவிலாவது தண்டிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார். இந்த நேரத்தில் அந்த அதிகாரி வீட்டில் நடந்து கொள்வதனைப் போல அன்பு குழைந்து இருந்தால் அவரது 'அதிகாரம்' கேலிக்கு உரியதாகிவிடும். வீட்டில் காட்டும் அன்பு வேறு. அலுவலகத்தில் ஆற்றும் நிர்வாகப் பணி வேறு. இரண்டையும் அவர் ஒன்றாகக் கண்டால் அங்கே குழப்பம் ஏற்பட்டு விடும். அலுவலக அதிகாரியாகப் பணியாற்றும்போது அவர் விதிமுறைகளுக்கு உட்பட்டு இயங்க வேண்டியதாக இருக்கிறது. சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு அவர் பணியாற்ற வேண்டியுள்ளது. மாணவன் தவறு செய்யும் போது அவர் ஒரு தந்தையைப் போலப் பரிவு காட்ட முடியாது. மகன் தவறு செய்யும் போது அவனை மன்னித்து ஏற்கத் தயாராக இருக்கின்றார். மற்றொருவன் தவறு செய்யும் போது அவனுக்குக் குறைந்த பட்சத் தண்டனையை அவர் கொடுக்க வேண்டிய கட்டுப்பாட்டிற்கு ஆளாகின்றார். இன்றைக்கு நாம் காணுகின்ற உலகியல் நடைமுறையின் அடிச் சுவடுகளைக் கம்பனிலும் பார்க்க முடிகிறது. பிற இலக்கியங்கள் உலகத்தைக் காட்டும் எனவும், காப்பியத்திலோ உலகம் வந்து ஒன்றிவிடும் எனவும் அறிஞர் கூறுவது மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது. "உலகியலைக் கூற வந்தவனே கம்பன்" எனவும், கம்பனது காப்பியத்தில் உலகியல் திட்பத்துடனும் நுட்பத்துடனும் படம் பிடிக்கப்படுகிறது எனவும் அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் பேசுகின்றார்.

உலகியல் நிகழ்வும், காப்பிய நிகழ்வும்

மேலே குறிப்பிடப்பட்ட அதே கல்வி அதிகாரியின் உலகியல் அனுபவமே கம்பனில் எதிரொலிப்பதனை நாம் காண்கின்றோம்.

வாலி என்ற குரங்கு இனத்தலைவன் தன் தம்பி சுக்கீரவனின் மனைவியைக் கவர்ந்து கொண்டான். அது மட்டும் அன்றி அச்சுக்கிரீவனை நாட்டுக்குள்ளே இருக்க விடாமல் செய்து ஒரு மலைக்குகையில் ஓடி ஒளியச் செய்தான். வாலி குரங்கு இனத்தின் அரசன். அரசனாக இருக்கின்ற ஒருவன் இது போன்ற தவறைச் செய்வது சிறப்பு ஆகாது. மேலும் மற்றொருவன் மனைவியை வவ்வுதல், அறத்துக்கு முரண்பாடான செய்கை ஆகும். அறத்தின் மூர்த்தியாகிய இராமன், இச்செய்திகளை எல்லாம் அனுமனின் வாயிலாக அறிகின்றான். மேலே குறிப்பிடப்பட்ட கல்வி அதிகாரியைப் போல, இராமனும் தண்டனை வழங்க வேண்டிய நிலையில் இருக்கின்றான். மாணவன் செய்தது சிறுபிழை. மேலும் அவன் இளம் வயதினனாகையாலும் அறியாது பிழை செய்து விட்டமையாலும் அவனுக்குச் சிறிய தண்டனையை அந்த அதிகாரி கொடுக்கின்றார். இங்கோ வாலி என்பவன் ஒரு நாட்டின் அரசன். அவன் செய்த பிழையோ பிறன் இல் விழைந்த பெருங்குற்றம் ஆகும். எனவே மண்ணுலகச் சக்கரவர்த்தியாகிய இராமபிரான், வாலிக்கு உரிய தண்டனையை வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எனவே இராமன் போர்த்தந்திரத்தைக் கையாண்டு, மறைந்து நின்று வாலியின் மீது அம்பு எய்து அவனை வீழ்த்துகின்றான். கல்வி அதிகாரி தவறு செய்த மாணவனுக்கு அந்தத் தேர்வை இரத்து செய்து தண்டனை அளிக்கின்றார். அவர் மனம் ஓர் இளைஞனுக்குக் கொடுத்த தண்டனையை எண்ணி வேதனை அடைகிறது. அந்த மாணவனின் மனம் இத்தண்டனையின் காரணமாக என்ன வேதனைப் படுமோ என்று, அவர் தமது மனத்திற்குள்ளேயே வேதனைப் படுகின்றார். எனவே அன்றைய தினம் சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்குச் சென்று "ஆத்தா, தாயே! ஒரு மாணவனின் மனம் வேதனைப் படும் படியாக நான் இன்று தண்டித்து விட்டேன். இத் தண்டனையை நான், எனது கடமையின் காரணமாகவே கொடுத்தேன். எனவே, தாயே! என்னை மன்னித்து விடு! என்னை மன்னிப்பது மட்டும் அல்லாமல், தண்டனை பெற்ற மாணவன்,

வாழ்க்கையில் நிலை தடுமாறி விடாமல் அவன் வாழ்வு வளமாகச் செய்!" என்று இறைவியிடம் வேண்டுகின்றார்.

இந்த வாழ்வியலைக் கம்பனிடமும் காண்கிறேம். இராமனும் வாலியின் மீது அம்பு எய்த செய்கைக்காக வருந்தி நோன்பு நோற்பேன் என்று கூறுகின்றான்.

இல்லறம் துறந்திலாதோர் இயற்கையை
　　இழந்தும், போரின்
வில்அறம் துறந்தும், வாழ்வேற்கு, இன்னன
　　மேன்மை இல்லாச்
சில் அறம்; புரிந்து நின்ற தீமைகள்
　　தீருமாறு,
நல் அறம் தொடர்ந்த நோன்பின்,
　　நவை அற நோற்பல் நாளும்

(அரசியற் படலம்-23)

என்ற இப்பாடல் சுக்கிரீவனுக்கு அரசியலைப் பற்றி இராமன் அறிவுரை கூறும்போது வருகின்றது.

"மனைவியையும் இழந்தேன்; போர்க்களத்தில் மேற்கொள்ள வேண்டிய வில்லறத்தையும் நான் துறந்து விட்டேன். வாலியை மறைந்திருந்து கொன்றமையால் ஒருவனுக்கு ஒரு மனைவி என்ற அறம் நிலைத்தது. ஆனால் போர்க்கள தருமம் வீழ்ந்து விட்டதால், நான் செய்த நன்மையே தீமையாக உருவெடுத்து விட்டது. எனவே என் மனம் சஞ்சலம் எய்திவிட்டது. நான் இத்தீமைகளுக்குப் பிராயச் சித்தமாக நோன்பு நோற்க இருக்கிறேன்." என்று இராமன் தத்துவம் நிறைந்த சொற்களைப் பேசுகின்றான்.

மேலும் வாலியின் மகனாகிய அங்கதனைத் தனக்குத் துணைவனாக ஏற்றுக்கொள்கின்றான்.

இவையெல்லாம் இன்றைய வாழ்வியலில் மிகவும் பொருத்தமான தத்துவங்களாக வெளிப்படுகின்றன.

'எது வினை? இடரிலை? இனிது நும் மனையும்' என, குடிமக்களின் பால் பாசமும் நேசமும் காட்டுகின்றான் இராமன். அதே நேரத்தில் அறம் திறம்பிய வாலியை அழிப்பதற்குச் சிறிதும் தயங்கவில்லை. தீமைகளுக்கு ஏற்ற தண்டனை கொடுத்தல் என்பது நிர்வாகத் திறமைக்குரிய ஒரு பண்பு ஆகும். இதனையே நாம் இராமனிடம் மிகவும் விளக்கமாகக் காண்கின்றோம்.

இராமனின் அன்பும் பாசமும்

குடும்பப் பாசத்துக்கும் அன்புக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இராமன் திகழ்கின்றான. 'மூத்தோரை மதித்தல்' என்பது இராமாயணத்தில் காட்டப்படும் சிறந்த ஒழுக்கநெறி ஆகும். தந்தை, தாய் ஆகிய இருவரையும் கடவுளாக மதிக்கும் போக்கும் இராமாயணத்தில் வலியுறுத்தப்படுகிறது. கைகேயி, கானகம் செல்ல வேண்டும் என்று இராமனிடம் கூறியபோது, அதனை எவ்வித மறுப்பும் இன்றி இராமன் ஏற்கின்றான். கானகம் செல்ல வேண்டும் என்பது 'தந்தையின் கட்டளை' என்று கைகேயி கூறியபோது,

'தந்தையே ஏவ, நீரே உரை செய'

எனவும்,

'மன்னவன் பணியன்றாகில்
நும்பணி மறுப்பெனோ'

எனவும் தாயின் கட்டளையை மனம் உவந்து இராமன் ஏற்றுக்கொள்ளும் காட்சியைப் பார்க்கின்றோம்.

காட்டு வாழ்க்கை சீதைக்கு ஒவ்வாது என்று இராமன் கருதினாலும்

நின் பிரிவினும் சுடுமோ
பெருங்காடு?

என்று சீதை கூறிய மொழிகளால் மனம் குழைந்து போன இராமன், சீதையை ஏற்றுக்கொண்டு அவளையும் காட்டுக்கு அழைத்துச் செல்லத் துணிகின்றான்.

இராமனின் இயக்கம் முழுமையும் 'அன்பு, பாசம்' ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கிறது.

பாசத்தை மையமாகக் கொண்ட தலைமைப் பண்பு என்பதற்கு இராமன் எடுத்துக்காட்டு ஆகின்றான். இதற்கு எதிர்மாறாக அதிகாரத்தை மையமாகக் கொண்ட தலைமைப் பண்பு உடைய இராவணன் வீழ்ந்து அழிகின்றான்.

நிருவாக அடையாளம்

அன்புக்கு இருப்பிடமான இராமன், அரச நீதி என்று வருகின்ற போது கோதண்டத்தைப் பயன்படுத்துகின்ற, கோதண்ட இராமனாக ஆவது இராமயாணம் நமக்குக் காட்டுகிற நிருவாக நெறி ஆகும்.

தாடகை என்னும் கொடிய அரக்கியிடமிருந்து முனிவர்களைக் காப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டவன் இராமன். அப்போது அவன் விசுவாமித்திரனின் நிழல்போல அவரைத் தொடர்ந்து சென்றான். அவனது கோதண்டத்தின் பேராற்றல் விசுவாமித்திரரின் கட்டளையின் காரணமாக வெளிப்பட்டது.

இராமனைப் பிரிய மனம் இல்லாத தயரதச் சக்கரவர்த்தி முனிவர்களைக் காப்பதற்காகக் காட்டுக்கு, 'நான் வருகிறேன்' என்று கூறினார். அங்கே பாசப் பிணைப்பைக் காண்கின்றோம். இராமன் என்னும் அழகிய ஒளியிலிருந்து புறப்படும் குடும்பப் பாசம் தந்தையிடம் மட்டும் அன்றி அனைவரிடமும் பிணைப்பை ஏற்படுத்தி விட்டது.

அந்தப் பிணைப்பில் முதலில் அகப்பட்டவன் தயரத மன்னன் என்பதைக் கம்பனின் பாடல் மிகவும் தெளிவாகத் தெரியப்படுத்துகிறது.

> 'கண் இலான் பெற்று இழந்தான்'
> என உழந்தான்
> கடும் துயரம் - கால வேலான்
>
> (கையடைப்படலம்-12)

மேற்காணும் பாடலில் தயரதனின் பாசநிலை ஒரு ஓவியம் போல் தீட்டப்பட்டு இருக்கிறது. கண் இல்லாத ஒருவன் திடீரெனக் கண் பெற்று விடுகிறான். அந்தக் கண்ணைக் கொண்டு உலகத்தின் வண்ணங்களைக் கண்டு இன்புற்றான். இயற்கையைக் கண்டு மகிழ்வுற்றான். உயிர்

இனங்களின் உணர்வுகளை நேரே கண்டு அவனும் மனித உணர்வுகளின் பிரதிபலிப்பு ஆனான். அத்தகையவனுடைய கண் திடீரென மீண்டும் ஒரு நாள் மறைவுற்றது. கண்ணைக் கொடுத்த இறைவனை எண்ணி நொந்து கொள்ளுவதா, கண்ணை இழந்த விதியை நினைத்து வருந்துவதா என்ற இரண்டாட்டத்தால் அவன் பட்ட நிலை பஞ்சுதான் படுமோ? பாசப் பிணைப்பின் உயரிய நிலையைத் தயரதனுக்குத் தந்தவன் இராமன் தானே! பாசத்தின் போராட்டம் தயரதனின் அரண்மனையில்! கோதண்டத்தின் போராட்ம் தாடகை இருந்த பாலை மண்ணில்!

முனிவர்க்கு அபயம் அளித்தல்

"இராமனை அடைந்த முனிவர்கள் அஞ்சனவண்ண! நின் அபயம்யாம்!" என்றனர். 'அபயம்' என்ற சொல் இராமனின் காதில் விழுந்த அடுத்தகணம், அம் முனிவர்களின் காதில் தனது வில்லின் நாண் ஒலியை வேகமாக எழுப்பி விழவைத்தான். அது மட்டும் அல்லாமல் அடுத்த கணம், மண் முழுவதும் அரக்கர்களின் இரத்தக் கடலாக மாறியது. அரக்கர்களின் தலைகள் ஒரு மலைபோல அங்கே வீழ்ந்தன. கோதண்டத்தின் வலிமையை, கம்பன் பாடுவதைப் போல யாரும் பாடி இருப்பார்களா என்பது தெரியவில்லை.

"அஞ்சனவண்ண! நின் அபயம் யாம்' என்றார்.
கவித்தனன் கரதலம்; 'கலங்கலீர்' என
செவித்தலம் நிறுத்தினன், சிலையின் தெய்வ நாண்;
புவித்தலம் குருதியின் புணரி ஆக்கினன்;
குவித்தனன், அரக்கர்தம் சிரத்தின் குன்றமே'
(வேள்விப் படலம் 49,50)

(செவித்தலம் நிறுத்தல் - வில்லின் நாண் ஒலி
முனிவர்களின் காதில் கேட்கச் செய்தல்;
குருதியின் புணரி - இரத்தக் கடல்;
சிரத்தின் குன்றம் - அரக்கரின் தலைகள்
மலைபோற் குவிதல்)

பாசப் பிணைப்பால் கண்ணீரை வரவழைக்கும் இராமன், தனது கோதண்டத்தின் மாண்பினால் அரக்கரை அழிந்தொழிக்கும் பெருந்திறம் படைத்தவனாக விளங்குவதையும் காண்கின்றோம். குடும்ப வாழ்க்கையில் ஒருவகையாகவும், போர்த்திறத்தில் வேறு ஒருவகையாகவும் இராகவன் விளங்கும் தன்மை இன்றைய உலகியலுடன் பெரிதும் ஒத்துச் செல்கின்றது என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

அனுமன் கொண்ட பற்று

இராம இலக்குவர்களைப் பார்த்த அனுமன் அவர்கள் மீது பாசம் கொண்டான். அப்பாசத்திற்குக் காரணம் யாது என்றால் அவ்விருவரும் தருமத்தையும் நல் ஒழுக்கத்தையும் தனம் போலக் கொண்டவர்கள் என்று அனுமன் தன் மனத்தின் உள்ளே கருதிப் பார்த்த கருத்தே ஆகும். தருமம் அழிந்துபோன இலங்கையின் உள்ளே தருமத்தின் வடிவமாக அனுமன் புகுந்தான் என்று பின்னால் கம்பன் கூறுகின்றான். தருமத்தின் மூர்த்தியாகிய அனுமன், அத்தருமத்தை மண்ணில் நிலைநிறுத்த வந்த இராம இலக்குவர்களைப் பார்க்கும்போது அவர்களின் மீது பாசத்தைப் பொழிவது என்பது இயற்கையாக அமைந்து இருக்கிறது. அனுமன், இராம இலக்குவர்களுக்கு நல்வரவு கூறிச் சுக்கிரீவனை அறிமுகப்படுத்திய போது, அச்சுக்கிரீவன் படுகின்ற இன்னல் காரணமாக இராம இலக்குவர்களுக்கு அருள் சுரக்கின்றது.

இராமன், சுக்கிரீவனிடம் பேசுகின்ற போது மிகவும் வெளிப்படையாகவே, "நாங்கள் பட்ட துன்பத்தை உன் உதவியினாலே கடப்போம் என்ற உறுதியுடனேயே இங்கே வந்திருக்கிறோம்" என்று கூறுகிறான்.

"யாங்கள் உற்ற
கை அறு துயரம், நின்னால் கடப்பது
கருதி வந்தோம்"

(நட்புக்கோட் படலம்-24)

என்ற இராமனின் பேச்சு சுற்றி வளைக்காமல் நேரிடையாகக் கருத்தை நோக்கிப் புள்ளி வைத்தது போல அமைந்திருக்கிறது.

துணையாக வருகின்ற பேராற்றல் சுக்கிரீவனுக்கு உண்டு என்றாலும் அவனது தற்போதைய நிலை வாலியிடமிருந்து உயிர் பிழைத்தால் போதும் என்று நடுங்குகின்ற நிலையாக இருக்கிறது. அதனால் சுக்கிரீவன்,

"உயிர் துறக்கல் ஆற்றேன்;
சரண் உனைப் புகுந்தேன்;
எனைத் தாங்குதல் தருமம்"

(நட்புக்கோட் படலம்-25)

என்று பேசுகின்றான்.

சுக்கிரீவனின் தேவை

உயிர் போகும் நிலையில் இருக்கின்ற சுக்கிரீவனின் கண்களுக்கு, இராம இலக்குவர்கள் இந்த உலகத்தைப் படைத்த பிரமன் செய்த புண்ணியம் எல்லாம் ஒழுங்கு திரண்டு, இரண்டு மனித வடிவமாகத் தோன்றியதைப் போல இருந்தது.

'கமலத்து அண்ணல்
ஆக்கிய உலகம் எல்லாம், அன்று தொட்டு இன்று காறும்,
பாக்கியம் புரிந்த எல்லாம் குவிந்து, இரு படிவம் ஆகி,
மேக்கு உயர் தடந்தோள் பெற்று, வீரர் ஆய் விளைந்த'
என்பான்.

(நட்புக்கோட் படலம்-18)

என்ற கம்பனின் பாடல், சுக்கிரீவனின் உள்ளத்தை அற்புதமாகப் படம் பிடிக்கின்றது.

பசித்து வயிறு நொந்த ஏழை மகன் ஒருவனுக்கு வெண்சோறு நிறைந்த பானை அற்புதமாகத் தோன்றுவதைப் போலே 'பால் நிலவு' விண்ணிலே முகிழ்த்தது என்று பாரதிதாசன் பேசுவார். உள்ளத்தின் தேவையை உலகத்தில் ஓர் உருவமாகப் பார்க்கிற போது மனத்தில் ஏற்படுகின்ற மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அத்தகைய எல்லை இல்லாத மகிழ்ச்சியே சுக்கிரீவனுக்கும் ஏற்படுகிறது.

சுக்கிரீவனின் இப்போதைய தேவை, தன் மனைவியை அபகரித்த வாலிக்குத் தண்டனை நல்கி புண்ணியத்தை, தருமத்தை, நிலைநாட்டுவது ஒன்று. அதனை நிலை நிறுத்த மாபெரும் பேராற்றல் வாய்ந்த வாலியுடன் போராடுகிற வல்லமை மற்றொன்று

தருமத்தை நிலை நாட்டுவதற்கு, பிரம்மன் செய்த புண்ணியம் எல்லாம் சிந்தாமல் சிதறாமல் ஒன்று திரண்டு இரண்டு மானுட உருவங்களாகத் தன் எதிரே நிற்பதைக் கண்டு அளப்பில் மகிழ்வு எய்துகின்றான். அந்த இருவரும், தடந்தோள் பெற்ற வீரராக விளைந்து இருப்பது அவனது இரண்டாவது தேவையை நிறைவு செய்வதாக இருக்கிறது.

இச்சந்திப்பின் முடிவில் இராமன், சுக்கிரீவனிடம் பாசமும் பரிவும் அன்பும் காட்டி "உன்கிளை எனது; என் காதல் சுற்றும் உன் சுற்றம்" (நட்புக் கோட் படலம்-27) என்று பேசுகிற பாசப் பொழிவாக அமைகின்றது.

அன்பின் ஆற்றலும் வில்லின் ஆற்றலும்

இத்தகைய பாசமும் அன்பும் இவ்வாறு இருக்க, சுக்கிரீவன் "ஏழு மராமரங்களின் மீது உனது அம்பை வீசுக" என்று இராமனிடம் கேட்ட போது, இராமன் வில்லில் நாண் ஏற்றி மிக்க வலிமையோடு அம்பை வீசினான். அந்த அம்பு, ஏழு மராமரங்களில் புகுந்து ஏழு உலகங்களின் மீதும் சென்றது. இராமனது வில்லின் ஆற்றல் இதன் காரணமாகவே பின்னாளில் "இராம பாணம்" என்று போற்றிப் பேசப்படுகிற பெருமை உற்றது.

இராமனின் பாச உணர்வு சிகரங்களை எட்டுவதைப் போலவே, அவனது வில்லாற்றலும் சிகரங்களை எட்டுகிற மாண்பு படைத்தது என்பதற்கு மேற்கூறிய நிகழ்ச்சி சான்று பகர்வதாக இருக்கின்றது.

அடையாளச் சின்னம்

இலங்கையின் மீது எரியூட்டிய அனுமனை, அரக்க வீரர் பலர் கொண்டு வந்து இராவணன் முன்னே நிறுத்தினர். அப்போது இராவணன் அனுமனைப் பார்த்து, "நீ யாவன்? நீ இங்கு வந்த காரணம் யாது? உன்னை

அனுப்பியவர் யாவர்?" என்று வினவினான். உள்ளத்தில் சிறிதும் நடுக்கம் இல்லாத அனுமன், மிகத் தெளிந்த சொற்களால் இராவணனது வினாக்களுக்கு விடை பகர்கின்றான். சொல்லின் செல்வன் என்று பாராட்டப்படுவன் அனுமன். அத்தகைய பாராட்டு மொழி உண்மையே என்பதனை அனுமன், இராவணனுக்கு அளித்த விடையானது நிரூபிக்கின்றது.

'உள்ளத்தில் ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்'

என்ற பாரதியின் வாக்கு அனுமனின் சொற்களால் மெய்ப்பிக்கப்படுகின்றது. 'நிரந்து இனிது சொல்லுதல்' என்று வள்ளுவப் பெருமான், சொல் ஆற்றலுக்கு இலக்கணம் வகுத்துத் தருகின்றார். அவ்விலக்கணம் அனுமனது பேச்சில் முழுமையும் அமைந்திருக்கின்றது.

"முதற்கண் அனுமன், சிவந்த கண்களைக் கொண்ட, கோதண்டத்தைக் கையிலே பூண்ட இராமனின் தூதுவன் நான்" என்று தன்னை அறிமுகம் செய்து கொள்கின்றான். அன்பும் அருளும் நிறைந்த பாசப்பிணைப்பு உடைய உத்தமனாக இராமன் இருந்தபோதிலும் அவனது ஆற்றலையும், அறந்தை நிலைகாட்டும் திறத்தையும், பிறருக்கு உணர்த்தும் அடையாளமாக இருப்பது 'கோதண்டம்' என்பதையே அனுமன் இராவணனுக்குச் சுட்டிக்காட்டுகிறான். அனுமன் இங்ஙனம் சுட்டிக்காட்டுகிற பாங்கிலே இவ்வுலகு அனைத்தும் அறியக்கூடிய பெற்றியில் 'பிரகடன'மும் செய்கிறான் என்பதே கம்பன் காட்டும் உண்மை. நிருவாகத் திறமை படைத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் இத்தகையதோர் 'அடையாளம்' இருக்கும் என்பதனை உலகியலில் நாம் அன்றாடம் காண்கின்றோம்.

அழகு பெற்ற பதவிகள்

காந்தியடிகள் தமக்கு அடையாளச் சின்னமாக அகிம்சையைக் கைக்கொண்டு இருந்தார். அவரது நிருவாகப் பாங்கு அனைத்திலும் 'அகிம்சை என்ற அடையாளத்தை நாம் காண்கிறோம்.

காமராசர் தமது அடையாளச் சின்னமாகப் பொதுமக்கள் அனை வருக்கும் பயன் சென்றடையத் தக்க "எளிமை"யைக் கடைப் பிடித்தார்.

அவரது நிருவாகப் பணி அனைத்திலும் இத்தகைய எளிமையை நாம் காண்கின்றோம்.

இவ்வாறே கிராம நிருவாகப் பணியிலிருந்து, நாட்டின் நிருவாகப் பணிவரை அனைத்துப் பணிகளிலும் தமது அடையாளத்தைப் பொறிக்கும் மாமனிதர்கள் பலர் உலகியலை வளப்படுத்தியிருக்கிறார்கள். நாம் எங்கு இருக்கிறோம் என்பதை விட, நாம் என்ன செய்து கொண்டு இருக்கிறோம் என்பதே மிகவும் முக்கியமானதாகும் என்ற கருத்து இவர்களைப் பொருத்தவரை நூற்றுக்கு நூறு உண்மையானதாகும். இவர்களால் பதவிகள் அழகு பெற்றன என்பதே உண்மையாக இருக்கும்.

பலமும் பலவீனமும்

அவர் ஒரு நீதிபதி. மின்சாரமும் புதிய மின்னணு வசதிகளும் வளர்ச்சி பெற்றிராத காலம் அது. இரவில் மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்து அதன் ஒளியில் தீர்ப்பு எழுதுகிற வழக்கம் உள்ளவர். அவர் ஒரு மெழுகுவர்த்தியின் ஒளியில் தீர்ப்பு எழுதிக்கொண்டு இருந்தார். சிறிது நேரத்தில் அந்த மெழுகுவர்த்தியின் நெருப்பை அணைத்து விட்டு வேறு ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்து அதன் ஒளியில் ஏதோ எழுதிக்கொண்டு இருந்தார். அவரது பணியாளன் இதைக் கவனித்துக் கொண்டு இருந்தான். அவனுக்கு நீதிபதியின் செயல் வியப்பாக இருந்தது. நீதிபதியிடம் கேட்டான்: "ஐயா! நீங்கள் முதலில் ஒரு மெழுகுவர்த்தியில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தீர்கள். பின்பு அதை அணைத்து விட்டு மற்றொரு மெழுகுவர்த்தியில் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறீர்களே? என்ன காரணம் ஐயா?" என வினவினான். அதற்கு நீதிபதி கூறினார்: "நான் முதலில் அரசாங்கப் பணி நிமித்தமாக அரசின் சார்பில் தீர்ப்பு எழுதுவதை மேற்கொண்டேன். எனவே அதற்காக அரசு எனக்கு அளித்துள்ள மெழுகுவர்த்தியைப் பயன்படுத்தினேன். அந்த வேலை முடிந்து விட்டது. எனவே அந்த மெழுகுவர்த்தியை அணைத்து விட்டேன். அடுத்தாற்போல இப்போது நான் செய்து கொண்டிருப்பது எனது சொந்த வேலை. எனது சொந்த வேலைக்கு எனது சொந்த மெழுகுத் திரியை ஏற்றி வைத்து இதில் எழுதிக்கொண்டு இருக்கிறேன்" என்று கூறினாராம். அரசாங்கத்தின் வளத்தை நெறியற்ற முறையில் பயன்படுத்தக் கூடாது என்ற

உயரிய நோக்கம் உடையவர் அந்த நீதிபதி என்பது இந்நிகழ்ச்சியால் தெரிகின்றது. தனது சொந்த வேலைக்கு அரசாங்கத்தின் பொருளைச் செலவிடக் கூடாது என்பது அந்த நீதிபதியின் பலம் ஆகும். அவரை அடையாளப் படுத்துகிற அடையாளப் பண்பு இது என்று கூறலாம். ஒவ்வொருவருக்கும் பலமும் பலவீனமும் (Strength and weakness) உண்டு. அவ்வாறே ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பலமும் உண்டு; பலவீனமும்உண்டு. தமக்குப் பலமானது எதுவோ அதை மேலும் மேலும் வளப்படுத்தி வலிவு பெறச் செய்து கொள்ள வேண்டும் என்பது இன்றைய உளவியல் நமக்கு அளித்திருக்கிற அறிவியல் அணுகுமுறை ஆகும். அவ்வாறே பலவீனங்களிலிருந்து விலகி அவற்றின் தாக்கத்தை மட்டுப்படுத்த முயற்சி மேற்கொள்வது வளர்ச்சிப் பாதையை வளப்படுத்துவதற்கான அணுகுமுறை ஆகும். இத்தகைய அணுகுமுறை தனிமனிதருக்கும் நிறுவனங்களுக்கும் பொருந்துவது ஆகும்.

அலுவலக நேரம் அரசாங்க நேரம்

மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவரின் தொடர்பான நிகழ்வைக் காண்போம். மாவட்ட ஆட்சித் தலைவரும் அவர்தம் துணைவியாரும் ஒரே அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் குறித்த நேரத்திற்கு அலுவலகத்திற்கு வருகின்ற வழக்கம் உடையவர். ஒருநாள் அவர்தம் மனைவி குறித்த நேரத்தில் அலுவலகத்திற்கு வர இயலவில்லை. தாமதமாக வந்தார். அப்போது ஆட்சித் தலைவர் தம் துணைவியாரிடம் "ஏன் நீங்கள் தாமதமாக வந்தீர்கள்?" என வினவினார். "நான் புறப்படும் சமயம், எதிர்பாராமல் விருந்தினர் வந்து விட்டனர். எனவே அவ்விருந்தினர்களிடம் ஓரிருவார்த்தைகள் பேசிவிட்டு, அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்யும் படியாகப் பணியாளருக்குக் கூறிவிட்டு, அலுவலகத்திற்கு வேகமாக ஓடி வருகிறேன்" என்றார் மனைவி. அதனை ஏற்றுக்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனம் வரவில்லை. "அலுவலகத்திற்குத் தாமதமாக வருவதை ஏற்க இயலாது; எனவே தாமத வருகைப் பதிவேட்டில் உங்களது வருகையைப் பதிவு செய்யுங்கள்" என்று கடிந்து கொண்டார். அவர் மேலும் தம் துணைவியாரிடம் கூறியது வருமாறு: 'அலுவலக நேரம்' என்பது

அரசாங்கத்தின் நேரம் ஆகும். அந்த நேரத்தை நமது சொந்தப் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்வது சரியாகாது. அது நாம் பணியாற்றுகிற நிறுவனத்தைப் பாதிக்கும்' என்றார். "பணி நேரத்தை பணிக்காக மட்டுமே செலவிடுதல்" என்பது அந்த மாவட்ட ஆட்சித்தலைவரை அடையாளப்படுத்தும் சின்னமாக இருக்கிறது. இங்ஙனம் உலகியலில் மனிதர்களை அடையாளப்படுத்துகிற சின்னங்களை நாம் அன்றாடம் வாழ்வில் சந்திக்கிறோம். இத்தகைய உலக வழக்கியலைக் கம்பனும் பல இடங்களில் பயன்படுத்தி இருக்கிறான்.

இன்றைய உலகியலில் நாம் காண்கின்ற இத்தகைய நேரடிப் பட்டறிவுடன் கம்பனை இணைக்கின்ற போது, அவன் நமது எண்ணங்களுக்கு வலிவும் பொலிவும் தந்து நம்மை அண்மித்து வருபவனாக இருக்கிறான். இத்தகைய பார்வையில் அவன் காப்பிய உலகின் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றான்.

'கோதண்டத்தை' இராமபிரானின் அடையாளமாக அனுமன் முன்னிலைப்படுத்துகிறான் என்பதனை ஏற்கெனவே கண்டோம்.

'சிவன், திருமால், பிரமன் ஆகிய மூவரும் ஓர் உருக்கொண்டு, கையிலே வில்லை ஏந்தி மனித உருவம் பெற்று அயோத்தி வந்து அடைந்தவனே இராமன்' என்று அனுமன் வலியுறுத்துகின்றான்.

'கைவில் ஏந்தி, ... அயோத்தி வந்தான்'

(பிணிவீட்டு படலம்-81)

என்பதிலே பொருள் நிரம்ப இருக்கிறது. 'கைவில் ஏந்தி என்ற குறிப்பு இங்கே முக்கியத்துவம் பெறுகின்றது. இராமபிரானுக்கு 'வில்' அடையாளமாகத் திகழ்கிறது என்பது மட்டும் அல்லாமல், அந்த வில்லுக்கு இலங்கையில் நிரம்பவே வேலைகள் பல இருக்கின்றன என்பதையே அனுமனின் பேச்சுக் குறிப்பாக உணர்த்துகின்றது. பின்னால் இதனைக் கம்பன்,

ஆரியன் சரம்பட அரக்கன் தலை
நீரிடை விழுந்தது

(இராவணன் வதைப்படலம்-148)

என்று பேசுகின்றான். இராமனின் அம்பால் இராவணனின் தலை குறி தவறாமல் கீழே விழுந்தது என்பது இப்பாடலால் வலியுறுத்தப்படுகிற கருத்தாகும்.

இராமனது அம்பு இராவணனின் மூன்று கோடி வாழ்நாளைத் தின்றது; அவன் பெருந்தவமும் அழிந்தது. யாராலும் வெல்லப்பட மாட்டாய் என இராவணன் பெற்றிருந்த வரமும் அழிந்தது. எல்லாத் திசைகளையும் வென்ற இராவணனின் தோளின் ஆற்றலையும் இந்த வேல் தின்றது. திக்கு யானையின் தந்தமும் செல்ல முடியாத அவனது மார்புக்குள்ளே புகுந்த, இராமனின் அம்பு வெளியே வந்தது. இத்தகைய தன்மையெல்லாம் கொண்ட இராகவனின் அம்பு உண்மையில் புனிதமானது தான் என்பது கம்பனின் தீர்ப்பு ஆகும்.

முக்கோடி வாழ்நாளும், முயன்று உடைய
பெருந்தவமும், முதல்வன் முன்நாள்
'எக் கோடியாராலும் வெலப்படாய்'
எனக் கொடுத்த வரமும், ஏனைத்
திக்கோரும் உலகு அனைத்தும் செருக்கடந்த
புயவலியும், தின்று, மார்பில்
புக்கு ஓடி உயிர் பருகிப் புறம் போயிற்று
இராகவன் தன் புனித வாளி

(இராவணன் வதைப்படலம்-196)

என்ற பாடல் அற்புதங்கள் பலவற்றை நம்முன்னே கொண்டு வந்து காட்டும் ஓர் அரிய பாடலாகும்.

இராவணனின் கொற்றம் முழுவதும் அறிந்தவள் அவன் பட்டத்து அரசியாகிய மண்டோதரி. அவள் இராவணனின் மார்பில் வீழ்ந்து அரற்றுகிற போது இராமனின் அம்பினையே மிகவும் வியந்து பேசுகிறாள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மனப்பதிவுகள்

அறிஞர் ஒருவர் 'மனப்பதிவுகள்' என்ற தலைப்பில் அருமையான நிகழ்ச்சி ஒன்றைப் படம் பிடித்துள்ளார். தொடர் வண்டியில் பழம் விற்கும் பெண் ஒருத்தியைப் பற்றியது அம்மனப் பதிவு.

காசிப் பல்கலைக் கழகத்திற்கு அவர் தொடர் வண்டியில் சென்று கொண்டிருந்தார். அவரது அனுபவத்தைப் பின்வருமாறு கூறுகிறார்: பச்சை போர்த்த மரங்கள், கொடிகள், குளங்கள் ஆகியவை காண்பதற்கு இனித்தன. ஓர் இடத்தில் தொடர்வண்டி நின்றது. கூடை நிறையப் பழங்களை உடைய பெண் ஒருத்தி வண்டியில் ஏறினாள். கூடையில் இருந்த கொய்யாப் பழங்களை எடுத்து விற்கத் தொடங்கனாள்.

கடமுட என்று விரையும் வண்டியின் இரைச்சல், பெட்டியில் அங்கும் இங்கும் செல்லுபவர்கள், பயணிகள் பேசும் ஒலி இவை அனைத்தும் அவளை ஒன்றும் செய்யவில்லை. பழங்களை விற்பதிலேயே அவள் கவனமாக இருந்தாள். பழங்களை விற்கும் போது அவள் முகத்தில் ஒரு மகிழச்சியைக் காண முடிந்தது.

இரைச்சலின் நடுவில் இனிய பழங்கள்

பெரும்பாலான பயணிகள் வேகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்; சிரித்துக் கொண்டிருந்தார்கள்; கைப்பேசியில் பேசிக் கொண்டிருந்தார்கள். சிலர் மட்டுமே 'பழம், பழம்' என்று கூவியதைக் கேட்டுப் பழம் வாங்கினார்கள். சிலர் அவள் படும் பாட்டைக் கண்டு இரக்கம் கொண்டு பழத்தை வாங்கினார்கள். சிலர் அலட்சியமாக இருந்தார்கள். அந்த அறிஞரும் இரண்டு கொய்யாப் பழங்களை வாங்கி அவற்றை அரிந்து கொடுக்கக் கேட்டார். அவளும் மகிழ்ச்சியுடன் அரிந்து கொடுத்தாள். வேறுசிலர் அவளிடம் விலையைக் குறைக்கக் கேட்டுப் பேரம் பேசினர். பச்சை நிறமும் மஞ்சள் நிறமும் உடைய அழகான கொய்யாப் பழங்களைச் சில குழந்தைகள் வாங்கி அப்படியே தின்றனர்.

இதற்கு இடையே தொடர் வண்டிப் பரிசோதகர் வந்து அப்பெண்ணிடம் வண்டியை விட்டு இறங்கும் படியாக வைதார். அவரைச் சமாளித்து இன்னும்

கொஞ்சம் தான் பழங்கள் இருக்கின்றன என்று கூறி அப்பால் நகர்ந்தாள். அந்த அறிஞர் தாம் செல்ல வேண்டிய காசிப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று அலுவலகப் பணிகளை முடித்தார். பின், ஓய்வெடுக்கும்போது அவருக்கு 'பழம், பழம்' என்று கூவி விற்ற அந்த எளிய பெண்ணின் நினைவு வந்தது. தொடர்வண்டியின் குலுங்கலையும், அங்கு இருந்த மக்களையும் அவள் தன்வயிற்றுப் பாட்டுக்காகச் சமாளித்த விதம் மிகவும் அவர் மனத்தில் பதிந்திருந்தது.

பழம் விற்பவள் சொல்லும் செய்தி

அந்தப் பழம் விற்பவள், அறிஞருக்கு ஒரு சிறந்த செய்தியையும் விட்டுச் சென்றாள். "கடமை உணர்வு, அர்ப்பணிப்பு, நெஞ்சுறுதி ஆகியவை இருக்குமானால் வெற்றியடைவதிலிருந்து உன்னை எதனாலும் தடைப்படுத்த முடியாது என்பதனை அந்தப்பழம் விற்பவளால் அந்த அறிஞர் உறுதிப் படுத்திக் கொண்டார். நகரத்தில் உள்ள பழ வியாபாரிகள் கடைத் தெருவின் மத்தியில் அலங்கரிக்கப்பட்ட கடையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று வாடிக்கையாளர்கள் இருக்கிறார்கள். கடைத்தெருவியல் இருப்பதால் பழங்களை விற்பதும் எளிதாக இருக்கிறது. அவர்கள் எங்கே? இந்தச் சாதாரணப் பெண் எங்கே?

அழகான செயலே அழியாத இன்பம்

தொடர் வண்டியில் பழம் விற்கும் பெண் குலுங்கிச் செல்லும் வண்டியின் இரைச்சலிலும், அங்கும் இங்கும் நடந்து போகும் ஆட்களுக்கு நடுவிலும் விற்கிறாள். அவள் தன் குடும்பத்தை நடத்திச் செல்வதற்கு இதனையே வாழ்க்கைக் கடமையாகச் செய்து கொண்டு இருக்கிறாள். அப்பழம் விற்கும் பெண்ணின் ஆளுமையின் மிக அழகான பகுதி எது எனில் அவள், "எதிலும் குறைகாணவில்லை" என்பதே. அவள் பழங்களை விற்பது ஒன்றையே முன்னிலைப் படுத்துகிறாள். அவள் வாழ்க்கையை ஏற்றுக் கொண்டிருக்கிற விதம் முழுவதும் இயற்கையாக இருக்கிறது. எந்தப் பணியாயினும் அதனைத் திருத்தமாகச் செய்தால் அது இன்பம், மகிழ்ச்சி, மனநிறைவு ஆகியவற்றைக் கொண்டு வருகிறது என்பதையும், வெளியிலிருந்து வருகிற

பாராட்டைக் காட்டிலும் நாம் பெறும் மகிழ்ச்சியும் ஆத்ம திருப்தியும் முக்கியமானவை என்பதையும் அந்த எளிய பெண் சொல்லாமல் சொல்லி அந்த அறிஞரின் மனத்தில் பதிய வைத்தாள்.

எழுத்தாளருக்கு ஒரு வினா

ஒரு முறை எழுத்தாளர் ஒருவரிடம் ஒரு வினாக் கேட்கப்பட்டது: "உலகிலேயே மிகவும் அழகான காட்சியாக நீங்கள் எதனை நினைக்கின்றீர்கள்?"

எழுத்தாளர் மிகவும் ஆழ்ந்து ஆலோசனை செய்து விட்டுப் பின்னர் கீழ்வருமாறு விவரித்தார்:

"ஒரு மாலை நேரம் பணிகளை முடித்து விட்டுப் பேருந்தில் வந்து கொண்டிருந்தேன். வெளிப்புறத்தைப் பார்ப்பதில் எனக்கு ஆர்வம் மிகவுண்டு.

வருகின்ற வழியில் தார்ச் சாலை போட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரு தள்ளுவண்டியில் கருங்கற்களை கொண்டு வந்து கொட்டிக் கொண்டிருந்தார்கள். ஒருபக்கம் தாரை நெருப்பில் இட்டு உருக்குகின்ற நெடி வீசிக் கொண்டிருந்தது. சாலையைப் பயன்படுத்தும் பெரிய வண்டியின் தடதட வென்ற ஓசை காதில் விழுந்தது. அந்த வண்டியை ஓட்டுபவர் அதனை மெல்ல இயக்கிக் கொண்டிருந்தார்.

பத்துப் பதினைந்து ஆட்கள் தார் கலந்த கருங்கல் சல்லியை எடுத்து வந்து கொட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் காலில் செருப்புக்குப் பதிலாகச் சாக்கைச் சுற்றிக் கொண்டிருந்தனர். அதில் தார் படிந்திருந்தது. அங்கே ஒரு பெண்மணி, சாலையில் உள்ள பள்ளத்தை நிரப்புவதற்காகப் போடப்பட்டு இருந்த கருங்கற்களை அடுக்கிக் கொண்டிருந்தாள். நாலாபுறமும் சிதறிக் கிடக்கும் கற்களை எடுத்து அந்தத் தார்ச்சாலை செவ்வனே அமையும் வகையில் அவள் சரிசெய்து கொண்டிருந்தாள். ஆட்கள் பெருங்கூச்சலுடன் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருப்பினும் அவளது கவனம் அந்தக் கற்களை அடுக்குவதிலேயே இருந்தது. அவள் அவ்விதம் செய்யும்போது அங்கும் இங்கும் பராக்குப் பார்க்கவில்லை. தன் வேலையிலேயே முழு கவனத்துடன் இருந்தாள். அவளது கைகள் கற்களை எடுப்பதிலும்

அடுக்குவதிலும் வேகமாகச் செயல்பட்டன. இத்தகையோரின் கை வண்ணம் எத்தனையோ வாகனங்கள் இயங்குவதற்கு உரிய தார்ச்சாலையாக மலர்கின்றது என்பதை எண்ணிப்பார்த்தேன். சாலை ஓரத்தில் கற்களை அடுக்கும் பெண்மணி, தொழிலில் காட்டிய அக்கறை என்னைப் பெரிதும் ஈர்த்தது. இதைத் தான் நான் உலகிலேயே மிகவும் அழகான காட்சியாகக் கருதுகிறேன்" என்றார் எழுத்தாளர்.

மேலே கூறப்பட்ட இரண்டு மனப் பதிவுகளிலும் ஓர் ஒற்றுமையைக் காணலாம். தொடர்வண்டியில் பழம் விற்கும் பெண்ணும், சாலையில் கற்களை அடுக்கும் பெண்ணும் தமது தொழிலிலேயே கவனமாக இருந்தனர். பணியிலேயே கவனம் செலுத்துதல் என்பது ஒரு வகையான அழகு என்பதால் தான் இவை பதிவு செய்யப்படுகின்றன.

கம்பன் மனப் பதிவுகளைப் பயன்படுத்தி இருக்கிறானா?

இவை அன்றாடம் நாம் காணும் பதிவுகள். இவற்றை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வதும், எழுத்து வடிவில் எழுதி வைப்பதும் முக்கிய மானவைஆகும்.

இத்தகைய மனப்பதிவுகளைக் கம்பன் பிரதிபலித்திருக்கிறானா என்ற வினாவுக்கு விடை தேடி ஆராயும் போது, அவன் நிச்சயமாகப் பல பதிவுகளைச் சமுதாயத்திலிருந்து எடுத்துக் கொண்டு தன் காப்பியத்தில் சொல்லி யிருக்கிறான் என்ற விடை கிடைக்கின்றது. அதற்குச் சான்றாக அவனது காப்பியத்தில் பல பாடல்கள் இருக்கின்றன.

"கம்பனின் இராமகாதை முழுவதும் வாழ்வியலைச் சார்ந்த அறிவியல் பொதுளுகிறது. கம்பன் கடவுளைப் பாடியது உண்மை. அது போலவே விண்ணையும் பாடியது உண்மை. ஆனால் கம்பன் மண்ணை – பூமியை மறக்கவில்லை. மண்ணிற் பிறந்து வாழும் மானுடத்தையும் அவன் பாடி யிருக்கிறான். மானுடம் வெற்றி பெற வேண்டும் என்பது அவனது கொள்ளை ஆசை! மாந்தரில் பலவகை. பலவகை மாந்தரையும் பாடியிருக்கிறான். கம்பனின் இராமகாதையில் ஒரு சமுதாயத்தைக் காணமுடிகிறது. இல்லை,

பல்வேறு நாடுகள், பல்வேறு சமுதாய அமைப்புக்களைக் காணமுடிகிறது."[1] என்று அடிகளார் கூறுகின்றார். இக்கருத்தை நன்கு ஆராயும் போது சாதாரண மனிதனிடம் காணக் கூடிய ஆளுமைத் திறத்தையும் கம்பன் தனது காப்பியத்தில் படைக்கத் தவறவில்லை என்பதை உணரமுடிகிறது.

திருவடி தொழுத படலத்தின் அமைப்பு

கம்பன் தன்வாழ்வில் இத்தகைய நிகழ்ச்சிகளைச் சந்தித்திருத்தல் கூடும். இத்தகு நிகழ்ச்சியின் பதிவையே திருவடி தொழுதபடலத்தில் அவன் காப்பியப் படுத்துகிறான்.

இப்படலத்தில் உள்ள மொத்தம் 52 செய்யுட்களையும், உற்று நோக்கும் போது, அப்படலம் கீழ்வருமாறு ஒன்பது பகுதிகளை உள்ளடக்கி இருப்பதைக் காண முடிகிறது. அவையாவன:

1. வான் வழியே வந்த அனுமன் மயேந்திர மலையில் குதித்தல்
2. வானர வீரர் அனைவரும் அனுமனைக் கண்டு பெருமகிழ்ச்சி கொள்ளுதல்.
3. வானர வீரர்களுக்கு இலங்கையில் நடந்த செய்திகளைக் கூறுதல்.
4. சீதையைத் தேடச் சென்ற வானர வீரர்கள் வந்து சேராமையால் இராமன் சோர்வு கொள்ளுதல்.
5. சுக்கிரீவன் இராமனுக்குத் தேறுதல் கூறுதல்.
6. அனுமன் இராமனை வந்து அடைதல்.
7. அனுமன் சிறையிருந்தாளின் ஏற்றம் கூறுதல்.
8. சீதை தந்த சூடாமணியை இராமனிடம் ஒப்படைத்தல்.
9. சூடாமணி பெற்ற இராமன் கண்ணீர் பொங்கி மகிழ்தல்.

இந்த ஒன்பது பகுதிகளில் உள்ள 52 செய்யுட்களை நன்கு கவனிக்கும் போது ஒரு இடத்திலாவது அனுமன் தனக்கு நேர்ந்த குறைகளையும், இடையூறுகளையும், இன்னல்களையும், பயணவழியில் ஏற்பட்ட தடைகளையும் அணுவளவும் தமது நண்பர்களாகிய வானர வீரர்களிடமோ, இராமனிடமோ

1. குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை, தொகுதி-5 ப.231

வெளிப்படுத்தவில்லை என்பது கம்பனின் மிக நுண்ணிய அறிவையும், தமிழ்மொழியின் சிகரம் ஏறிய பெருமையையும் உணர்த்துவதாக இருக்கிறது.

மேலே விவரிக்கப்பட்ட நிகழ்ச்சியில், பழம்விற்கும் அந்தச் சாதாரணப் பெண் யாரிடமும் குறைகாணவோ குறை கூறவோ இல்லை என்பதைக் கண்டோம். இரயிலின் பெருங் கூச்சலுக்கு இடையே பழங்களை விற்கும்போது, வாழ்க்கையை வணங்குகிற ஒரு திருப்தியை அந்தப் பழம் விற்பவளிடம் காணமுடிந்தது என்று அந்த அறிஞர் குறிப்பிட்டிருப்பதை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து கம்பராமாயண நிகழ்ச்சியையும், உலகியல் நிகழ்ச்சியையும் அருகருகே வைத்துப் பார்க்கும் போது இரண்டுக்கும் அவற்றின் அடிப்படை உணர்வில் வேறுபாடு எதுவும் இல்லை என்பதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

தொண்டனின் வடிவம்

தொண்டு ஒன்றே குறிக்கோளாகக் கொண்டவர்களுக்கு உலகின் ஆரவாரங்கள் காதில் விழுவதில்லை. இலக்கினை நோக்கி அவர்கள் செல்லுகிற போது எத்தகைய குறுக்கீடுகளையும் அவர்கள் எதிர்த்து முன்னேறி விடுவார்கள். கடமை ஆற்றுவதில் ஏற்படும் ஆத்ம திருப்தியை அவர்கள் ஆராதிக்கின்றார்கள். அவர்கள் கைதட்டலை எதிர்பார்ப்பது இல்லை. இத்தகைய குணங்கள் எல்லாம் அந்தச் சாமானியனுக்கும், இந்த அனுமனுக்கும் ஒன்று போலவே இருக்கின்றன. ஒரு தொண்டனின் உண்மையான வடிவத்தை, உலகியல் நிலையிலிருந்து ஒரு சிறிதும் கம்பன் பிறழாமல் வடித்துக் காட்டியிருப்பது 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்பதை முற்றிலும் மெய்ப்பிப்பதாக இருக்கிறது.

அனுமன் தன்னைப் பற்றிக் கூறாமை

இலங்கையிலிருந்து திரும்பி வந்த அனுமன், இலங்கையில் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறுவதாக அமைந்துள்ள 'திருவடி தொழுத படல'த்தில், பிறருக்கு நேர்ந்தனவற்றைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகின்றான். அதாவது இலங்கையில் சீதாப்பிராட்டி, கண்ணீர்க் கடலிடையே இருந்ததையும், ஆசி உரைத்தையும், வெந்திறல் அரக்கர்கள் அவனுக்கு ஏற்படுத்திய இன்னல்களையும், கொடிய வனான இராவணன் சீதையை இரந்துநின்றதனையும், இக்கொடுமையைப் பொறுக்க மாட்டாத தேவி கொடியொன்றை மணிக் கழுத்திலே சுற்றி இறக்கத் துணிந்தவாற்றையும், அந்நேரத்தில் கணையாழி தந்து அவள் உயிர்

காத்ததனையும், அவள் அடையாளமாகத் தந்த சூடாமணியினையும், அங்கதன் முதலானோர்க்கு எடுத்து இயம்பினானேயன்றி, தனக்கு அரக்கர்களாலும் மற்றையோராலும் ஏற்பட்ட கடல் அனைய இன்னல்களை ஒரு சிறிதும் கூறவில்லை.

இதனைக் கம்பன் மிக நயமாக எடுத்துரைத்து, அனுமன் தன்னலமில்லாத தூயதொண்டன் என்பதை உறுதி செய்கிறான்.

வானரர் கொண்ட மகிழ்ச்சி

அனுமனைக் கண்ட வானரர்கள் அடைந்த மகிழ்வுக்கு எல்லையே இல்லை. தங்களது மகிழ்ச்சியின் அடையாளமாகச் சிலர் அழுதனர். சிலர் அவனைத் தொழுதனர். சிலர் ஆரவாரம் செய்தனர். சிலர் ஆடிப்பாடித் துள்ளினர். அனுமனை அப்படியே அள்ளி விழுங்குபவர்களைப் போலே அவனை மொய்த்துக் கொண்டனர் சிலர். சிலர் முந்திச் சென்று அவனை முற்றிலுமாகத் தழுவிக் கொண்டனர். சிலர் அவனைக் கைகளிலே தாங்கித் தூக்கிப் பிடித்தனர். சிலர் கிடைத்தற்கு அரிய தேனொடு கிழங்கும் தேடி எடுத்து அனுமன் உண்பதற்காகக் கொண்டு தந்தனர்.

அனுமன் சொன்னவையும் சொல்லாதவையும்

வானர வீரர் இங்ஙனம் மகிழ்ச்சியால் விம்மியதாலே அவர்தம் நெஞ்சு எப்போதும் இல்லாத அளவுக்கு நிமிர்ந்தது. அவர்களிலே சிலர், "வலிமையாகப் போரிடும் ஆற்றல் படைத்த அனுமனே, நீ புறப்பட்டது முதலாக, மயேந்திர மலையில் வந்து குதித்தது ஈறாக அனைத்து நிகழ்ச்சிகளையும் எங்களுக்குச் சொல்லியே ஆக வேண்டும்" என்று கேட்டனர். அனுமன் இதற்கு விரிவான விடை தருவான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

> சென்றது முதலா, வந்தது இறுதியாகச்
> செப்பற்பாலை,
> வன்திறல் உரவோய் (திருவடி தொழுத படலம்-8)

என்பது கம்பன்வாக்கு. இவ்விதம் கேட்ட வானர வீரர்க்கு ஏமாற்றமே காத்திருந்தது.அனுமன் சொன்னவை என்ன, சொல்லாமல் விடுத்தவை என்ன என்பதனைக் கம்பன் வாய்மொழியிற் காண்போம்:

ஆண்தகை தேவி உள்ளத்து
அருந்தவம் அமையச் சொல்லி,
பூண்டபேர் அடையாளம் கைக்கொண்டதும்
புகன்று, போரில்
நீண்ட வாள் அரக்கரோடு நிகழ்ந்ததும்,
நெருப்புச் சிந்தி
மீண்டதும், விளம்பான் – தான்தன்
வென்றியை உரைப்ப வெள்கி

(திருவடிதொழுத படலம்-9)

அனுமன் சீதாப்பிராட்டி மேற்கொண்டிருந்த கற்புத் தவத்தையும், அப்பிராட்டியிடம் அடையாளமாகச் சூளாமணியினைக் கையிலே பெற்றுக் கொண்டதனை மட்டுமே வானர வீரர்க்குக் கூறினான். ஏனைய நிகழ்ச்சிகளைத் தற்பெருமையாகச் சொல்வதற்கு வெட்கப்பட்டு அவன் யாதொன்றையும் கூறவில்லை.

இலங்கை நிகழ்ச்சிகள்

இலங்கையில் நடந்த ஏனைய நிகழ்ச்சிகளை யெல்லாம், வானர வீரர்கள் எங்ஙனம் குறிப்பாலே உணர்ந்து கொண்டார்கள் என்பதனை,

பொருதமை புண்ணேசொல்ல,
வென்றமை போந்த தன்மை
உரைசெய, ஊர் தீ இட்டது
ஓங்கி டும் புகையே ஓத,
கருதலர் பெருமை தேவி
மீண்டிலாச் செயலே காட்ட
தெரிதர உணர்ந்தேம்

(திருவடி தொழுத படலம்-10)

(பொருதமை – போரிட்டமை; கருதலர் – அரக்கர்.)

என்று கம்பன் அவ்வானரர் கூற்றாக வைத்துக் கூறுகின்றான்.

"குறிப்பாக உணர்ந்து கொண்டாலன்றி அனுமன் எல்லாவற்றையும் கூற மாட்டான்; ஆகவே அதுபற்றி முயற்சிப்பதால் பலன் இல்லை" என்று வானரவீரர் முடிவு கட்டுகின்றனர்.

அனுமனுக்கு நேர்ந்த இன்னல்கள்

இனி இலங்கைக்குச் செல்லும்போதும் இலங்கையில் இருந்த போதும் அனுமனுக்கு நேர்ந்த பல்வேறு இன்னல்களைக் காண்போம்.

மைந்நாகமலை

1. இலங்கை நோக்கிச் சென்ற அனுமனைக் கடலின் மீது மேலே எழுந்து வந்த மைந்நாகம் என்னும் மலை தடுத்தது.

சுரசை

2. தேவர்களால் அனுப்பப்பட்டவள் சுரசை. அவள் அரக்கியின் வடிவம் கொண்டு கடலைத் தாவிச் சென்ற அனுமனைத் தடுத்து, நான் உன்னைத் தின்பேன் என்று அதட்டினாள். அனுமன் சிறிய உருவம் எடுத்து அவள் வாய்க்குள்ளே புகுந்து வெளியே வந்தான்.

அங்கார தாரை

3. அங்கார தானர என்பவள் கொடிய அரக்கி. அவள் கடல்மீது சென்ற அனுமனை அதட்டினாள். அவள் வாயின் உள்ளே புகுந்த அனுமன் அவள் வயிற்றைப் பிளந்து கொண்டு வெளியே வந்தான்.

இலங்காதேவி

4. இலங்கை நகரைக் காத்து வந்த இலங்காதேவி அனுமனைச் செல்ல வொட்டாமல் தடுத்தாள். அனுமன் அவளைப் போரிட்டு வீழ்த்தி இலங்கையினுள் புகுந்தான்.

அசோகவனத்தை அழித்தல்

5. அரக்கர்கள் மீது கொண்ட கோபத்தால் அனுமன், தான் இலங்கைக்கு வந்ததற்குரிய அடையாளமாகச் சீதை தங்கியிருந்த அசோக வனத்தின் ஒரு பகுதியை அழித்தான்.

சம்புமாலியுடன் போரிடல்

6. அதன்பின்னர் சம்புமாலி அனுமனுடன் போரிட அனுப்பப்பட்டான். அனுமன் அச்சம்புமாலியையும் அழித்தான்.

ஐம்பெரும் படைத்தலைவர்களுடன் போரிடல்

7. அனுமனை எதிர்க்க இராவணன் ஐம்பெரும் படைத்தலைவர்களை அனுப்பினான். அனுமன் பேருருவம் கொண்டு ஐம்பெரும் படைத் தலைவர்களுடன் போரிட்டு வென்றான்.

அனுமனுக்கும் அக்ககுமாரனுக்கும் இடையே நடைபெற்ற போர்

8. அக்ககுமாரன் இராவணனது மகன். அவன் அனுமனுடன் போரிட அடர்த்து எழுந்தான். இறுதியில் அனுமனே வென்றான்.

இந்திரசித்தனுடன் போரிடல்

9. நாற்படைகளுடன் வந்து இராவணனின் மகனாகிய இந்திரசித்தன் போரிட்டான். அப்படையை அனுமன் அழித்தான். இந்திர சித்து பிரம்மாத்திரத்தை அனுமன் மீது வீசினான். அதனால் மயக்கம் உற்று அனுமன் வீழ்ந்தான்.

அனுமனைத் தெருவில் இழுத்துச் செல்லுதல்

10. மயக்கம் உற்ற அனுமனை பிரம்மாத்திரத்தால் கட்டி இலங்கை நகரத்தின் தெருவின் வழியாக இழுத்துச் சென்று இராவணனின் அரண்மனையில் கொண்டு சேர்த்தனர்.

இராவணனுடன் வாதமிடல்

11. இராவணன் அனுமனை எள்ளி நகையாடினான். அவன் முன்னே அச்சம் இன்றி இராமனின் பெருமைகளை எல்லாம் எடுத்துக் கூறினான்.

அனுமனின் வாலைக்கொளுத்துதல்

12. இராவணன், குரங்காகிய அனுமனின் வாலைச்சுட்டு அனுப்பங்கள் என்று கூறினான். இந்திரசித்தன் அப்போது அனுமனைக் கட்டி வைத்திருந்த பிரம்மாத்திரத்தை அவிழ்த்து விட்டான். பின்னர் அனுமனை யானை, குதிரை

ஆகியவற்றைக் கட்டும் கயிற்றினால் கட்டினார்கள். அனுமனுடைய வாலில் துணிகளைச் சுற்றி நெய்யில் நனைத்து நெருப்பைக் கொளுத்தி விட்டனர்.

அனுமன் இலங்கையில் தீக்கொளுவச் செய்தல்

13. அனுமன் ஊரின் எல்லையில் கொண்டு வந்து விடப்பட்டான். தன் உடலை இறுக்கி இருந்த கயிறுகளை கட்டு அறுத்து மேலே எழுந்தான். நெருப்புடன் எரிந்து கொண்டிருந்த தன் வாலை இலங்கை நகரத்தின் மீது செலுத்தித் தீக்கொளுவச் செய்தான்.

மீண்டும் அரக்க வீரர் போருக்கு வருதல்

14. இலங்கையின் மீது தீக் கொளுவச் செய்த அனுமனைப் பிடிக்க, இராவணனின் கட்டளையின் பேரில் அரக்க வீரர் ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்டோர் ஓடி வந்தனர். அவர்களைத் தன் வாலால் சுற்றி வளைத்த அனுமன் ஒரு மரத்தைப் பிடுங்கி அவர்களை அழித்தான். இறுதியில் படைத் தலைவர்கள் எழுவர் வந்து அனுமனை எதிர்த்தனர். அனுமன் அவர்களையும் அழித்தான். அனுமன் எரிந்த தனது வாலைக் கடலில் தோய்த்ததனால் அந்நெருப்பு அணைந்தது.

இது காறும் கூறியவற்றால் அனுமன் தான் தாவி வந்த கடலிலும், இலங்கையிலும் பதினைந்து வகையான உயிர்ப் போராட்டத்தைச் சந்தித்தான் என்பது தெரியவருகிறது.

அனுமனது போராட்டங்களைக் கம்பன் பொழில் இறுத்த படலம், கிங்கரர் வதைப் படலம், சம்புமாலி வதைப் படலம், பஞ்ச சேனாபதிகள் வதைப் படலம், அக்க குமாரன் வதைப் படலம், பாசப்படலம், பிணிவீட்டு படலம், இலங்கை எரியூட்டு படலம் ஆகிய எட்டுப் படலங்களில் 577 பாடல்களில் பாடிக்காட்டுகிறான்.

இவ்வளவு நீண்டதாக அமைந்திருந்த கொடிய போராட்டத்தால் தனக்கு நேர்ந்த குறைபாடுகளை அனுமன் வெளிப்படுத்தவில்லை என்பது ஒரு மிகச் சிறந்த ஆளுமை (Personality) என்பது குறிப்பிடத்தக்கது.

அனுமனது போராட்டம் மிகவும் கொடுமையாக இருந்தது. தன்னை எதிர்த்து வந்தவர்களைப் பற்றியோ, தனது உடலுக்கு ஏற்படும் ஊறுகள் பற்றியோ, ஏனைய இலங்கையின் ஆரவாரங்கள் பற்றியோ அவன் கவலை கொள்ளாமல்

எங்கும் எதிலும் குறை காணாமல் தன் கடமை ஒன்றையே கண்ணும் கருத்துமாகச் செய்தான். இவை அனைத்திலும் காணப்படுகின்ற அனுமனின் ஆளுமைத் தன்மை குறைபாடு காணாமை என்பதே. குறைபாடுகளை வெளிப்படுத்தாத அனுமனின் ஆளுமை (Personality) மிகச்சிறந்தது எனலாம்.

❀

3. கம்பன் வழங்கும் அன்பு

ஈர்க்கும் தன்மை உடையது அன்பு

தன்னை நோக்கி இரும்பை ஈர்க்கும் தன்மையுடையது காந்தம். காந்தத்தை போன்ற இயல்பு 'அன்பு' என்ற குணத்துக்கு உண்டு. இந்த அன்பின் வெளிப்பாடு குரு, சீடன் ஆகிய இருவருக்கும் இடையே எங்ஙனம் நிகழ்ந்தது என்பதற்கு இராமகிருஷ்ண பரமஅம்சரின் வாழ்வியல் நெறி, மெய்சிலிர்க்க வைக்கும் உண்மைகளை உணர்த்துகிறது.

உலகில் பல சமயங்கள் இருக்கின்றன. இச்சமயங்களின் உட்பொதிவாகப் பல இலட்சியங்கள் இருக்கின்றன. இவ்விலட்சியங்களை விளக்கும் பெரும்பணியில் அவதரித்தவர் பரமஅம்சர் என்று கூறுவர் அறிஞர். 'ரொமா ரோலா' என்பவர் பிரெஞ்சு நாட்டு அறிஞர். அவர் பரம அம்சரைப் பற்றி, "மூவாயிரம் ஆண்டுகளாகப் பண்பாடு கண்ட உயர்குணங்களின் மொத்த உருவம்" என்று கூறுகின்றார்.[1] பாரதப் பண்பாட்டை வாழ்க்கையாக வாழ்ந்து காட்டியவர் பரமஅம்சர்.

கல்கத்தாவுக்கு அருகில் உள்ள இடம் தட்சிணேஸ்வரம். இங்கே காளிகோயில் அமைந்துள்ளது. இக்காளி கோயிலில் பூசாரியாகத் தொண்டாற்றிக் கொண்டிருந்தார் பரமஅம்சர். துறவின் மகோன்னத நிலையை அடைய விரும்பினார். விருப்பு, வெறுப்பு, அவமானம், குலப் பெருமை, புகழ், சாதி, ஆணவம், அகங்காரம் ஆகிய சங்கிலிப் பிணைப்பு களிலிருந்து கட்டறுத்துக் கொண்டு செல்பவனே துறவி என்பதைப் பரமஅம்சர் வலியுறுத்தினார். ஆகவே துறவுநிலைத் தியானத்தை மேற்கொண்டார். 'இறையருள் பெறுதல்' என்பது அவரது மாபெரும் இலட்சியமாகும்.

---

1. பா. தீனதயாளன், பரமஹம்சர் – 'பொழியும் கருணை மழை'.

அன்பின் உயர்நிலை

இராமகிருஷ்ணர் உடலாலும் உள்ளத்தாலும் பல துன்பங்களை ஏற்று பக்திச் சாதனையில் வெற்றி கண்டார்.

கல்லூரியில் பி.ஏ.கல்வி கற்றவர் நரேந்திரர்; பின்னாளில் விவேகானந்தர் என்ற பெயர் பெற்றார். கடவுளை அறிய வேண்டும் என்ற ஞானத்தேடல் அவர் உள்ளத்தில் இளமை முதலே ஒளிவிட்டது.

பரமஅம்சரைக் காண தட்சிணேஸ்வரம் நோக்கி வந்தார். இவ்விருவரது சந்திப்பு உலகச் சமய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க சிறப்பு உடையதாகும்.

நரேன், இராமகிருஷ்ணரைச் சந்திக்க உள்ளே நுழைந்தார். இராமகிருஷ்ணர் அவரை நன்கு கவனித்தார். நரேன் எளிமையாக உடை உடுத்தி இருந்தார். அவரது உள்ளம் தியானத்தில் மூழ்கிக்கிடப்பதனை பரமஅம்சர் கண்டு கொண்டார். ஆன்மிகத் தேடலில் அலைந்து கொண்டிருக்கும் நரேந்திரரைக் கண்டு வியப்புக் கொண்டார்.

நரேன் இறையருட் பாடல்களைப் பாடியதைக் கேட்டார். நரேனின் கைகளைப் பற்றிக்கொண்டு கண்ணீர் விட்டார். "நீ என்னைக் காண எவ்வளவு நாட்கள் கழித்து வந்திருக்கிறாய். என் உள்ளத்தில் பொங்கும் ஆன்மிகத்தைக் கூறுவதற்குப் பொருத்தமான ஒருவரைத் தேடிக்கொண்டு இருந்தேன். மானிட குலத்தின் துன்பம் போக்குவதற்கு என்றே பிறந்தவள் நீ" என்றார் இராமகிருஷ்ணர்.

இதைக் கேட்ட நரேனுக்குச் சற்று வேடிக்கையாகவே இருந்தது. பரம அம்சரின் பேச்சு இயல்பிலிருந்து வேறுபட்டதாகவே நரேனுக்குத் தோன்றியது.

இந்நிலையில் இராமகிருஷ்ணர் நரேனைத் தமது அறைக்கு அழைத்துச் சென்று கற்கண்டு, வெண்ணெய் மற்றும் இனிப்பு வகைகளை ஒரு குழந்தைக்கு ஊட்டுவதைப் போல வாயில் ஊட்டினார். "இறையருள் நிலை பெற என்னைச் சந்திக்க வருவதாகச் சத்தியம் செய்" என்று மனம் தழுதழுத்து நரேனிடம் கெஞ்சினார். இராமகிருஷ்ணரைப் பற்றிய ஐயங்கள் பல நரேனின் மனத்தில் எழுந்தன. "இவரை விரைவில் நம்பிவிடக் கூடாது;

ஆராய்ந்த பின்பே இவரைப் பற்றி முடிவுக்கு வரவேண்டும்" என்று நரேன் உள்ளத்துக்குள்ளே எண்ணிக்கொண்டார்.

அதன்பின்னர் இராமகிருஷ்ணரின் விருப்பத்துக்கு இணங்க நரேன் தட்சிணேசுவரம் வந்து வந்து சென்றார். கன்றினைக் காணத் தாய்ப்பசு உள்ளம் கசிந்து உருகுவதைப் போலவே பரமஅம்சரும் நரேனுக்காக உள்ளம் கசிந்து உருகினார்.

நரேனை நோக்கிச் சென்ற பரமஅம்சர்

சேர்ந்தாற் போல சில வாரங்கள் நரேன் பார்க்க வரவில்லை. எனவே பரமஅம்சர் கல்கத்தா நோக்கிப் புறப்பட்டுவிட்டார். கல்கத்தாவில், மாலை வேளைகளில் பிரம்ம சமாஜக் கூட்டத்தில்தான் நரேன் இருப்பார் என்று கருதி அங்கே சென்றார்.

எதிர்பாராமல் பரமஅம்சர் அங்கே சென்றதால் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. அனைவரும் எழுந்து நின்றனர். நரேன் பரம அம்சரை நோக்கி ஓடினார்.

அங்கிருந்த பிரம்ம சமாஜத் தலைவர்கள் பரமஅம்சரின் வருகையை விரும்பவில்லை. பரமஅம்சரைச் சற்றும் மதியாது வெறுத்தனர். பரமஅம்சர் நேராக மேடைக்குச் சென்று தியானத்தில் அமர்ந்து விட்டார். இதனால் கலவரமான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. கலவரத்தை அடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அங்கே விளக்குகள் அணைக்கப்பட்டன. இருள் காரணமாகக் கூச்சல் ஏற்பட்டது. அங்கிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு வெளியேற முற்பட்டனர்.

பிரம்ம சமாஜத்தில் பரமஅம்சருக்கு ஏற்பட்ட அவமானத்தால் நரேந்திரர் வேதனைப்பட்டார். பரமஅம்சருக்கு ஏதும் நேர்ந்து விடாதபடி நரேன் அவரைப் பின்புற வழியாக அழைத்துக் கொண்டு வந்தார். இந்நிகழ்ச்சி நரேனின் உள்ளத்தில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

குருவை ஆராய்ந்து ஆராய்ந்து ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சி நரேனின் வாழ்க்கையில் ஏற்பட்டது. அவ்வாறே தகுதி படைத்த சீடனைக் கண்டு ஏற்கும் வாய்ப்பு பரமஅம்சருக்குக் கிடைத்தது.

உலகளாவிய அன்பு

இதிலே குறிப்பிடத் தக்கது, நரேனிடம் பரமஅம்சர் தொடர்ந்து காட்டி வந்த அன்பு ஆகும்.

"தம்மை ஈன்று எடுத்த அன்னையும் சுடத் தம்மீது அத்தகைய அருள் நிறைந்த அன்பு பாராட்டியது இல்லை" என்று தம்மை ஆட்கொண்டவரைக் குறித்து நரேந்திரர் பிற்காலத்தில் சொல்லியது உண்டு"[1] என்று சுவாமி சித்பவானந்தர் தமது ஸ்ரீவிவேகானந்தர் ஜீவிதம் என்ற நூலில் கூறியுள்ளார்.

இறைவன் தம்மை ஈர்த்துக் கொண்ட விதத்தை மாணிக்கவாசகர் பாடுகின்றார்.

> இரும்பு தரு மனத்தேனை
> ஈர்த்து ஈர்த்து என் என்பு உருக்கி
> கரும்பு தரு சுவை
> எனக்குக் காட்டினை

என்னும் போது இறைவனை அண்மித்துச் செல்வது கரும்பின் சுவையாக அவருக்கு இனித்ததைக் காட்டுகிறது.

மாணிக்கவாசகரின் வாழ்வில் இறைவன் அவரை ஈர்த்துக்கொண்டான். விவேகானந்தரின் வாழ்வில் அவருடைய குருவாகிய பரமஅம்சர் அவரை ஈர்த்துக்கொண்டார்.

விவேகானந்தரின் அருள் வாழ்வில் பரமஅம்சர் காட்டிய அன்பு அவரைக் காந்தத்தை நோக்கிச் செல்லும் இரும்பைப் போல ஈர்த்தது. இந்த 'அன்பு' என்ற அடிப்படை அவரது சிகாகோ சொற்பொழிவில் எதிரொலித்தது. உலக அனைத்து மதப் பேரவையில் அவர் பேசும்போது "அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே! சகோதரர்களே!" என்று அன்பு பெருக அழைத்து, அனைத்து உலகத்தையும் கவர்ந்தார். உலகு அனைத்தையும் ஒரே குடும்பமாகக் காண்கின்ற விவேகானந்தரின் இரண்டு சொற்கள் உள்ளங்களை ஈர்க்கின்ற

---

1. ஸ்ரீவிவேகானந்தர் ஜீவிதம் ப.40
   (ஸ்ரீராமகிருஷ்ண தபோவன வெளியீடு)

மாபெரும் சக்தியாக அமைந்தது. உலகு அனைத்தையும் ஒன்றாக இணைக்க வல்லது அன்பு. அதற்கு நிகரான சக்தி வேறு ஒன்றும் இல்லை" என்பதை விவேகானந்தர் மெய்ப்பித்துள்ளார்.

வாழ்வியலில் காணப்படும் இத்தகைய அன்பு நெறியைக் கம்பன் பல கோணங்களில் பாடுகிறான்.

குருவுக்கும் சீடனுக்கும் இருந்த இதே அன்பின் ஈர்ப்பு வீடணனிடம் வெளிப்படக் காண்கிறோம்.

இராமகிருஷ்ணரிடம் இருந்த ஈர்ப்பு உணர்வை இராமனிடத்திலும் காண்கிறோம்.

விபீடணன் சரணாகதி

விபீடணன் சரணாகதி பண்ணும் போது, இராமனை தெய்வத்தின் திருஉருவமாகவே காண்கின்றான்.

அவன் இராமனைச் சந்திக்கும் போது இராமனின் திருவடித் தாமரைகளில் பலமுறை விழுந்து வணங்குகிறான். ஒவ்வொரு முறை வீழ்ந்து எழும்போதும், அருளாகிய கடலில் குளித்து எழுவதைப் போன்ற 'புதிய அனுபவம்' விபீடணனுக்கு ஏற்படுகின்றது.

கரங்கள் மீச் சுமந்து செல்லும்
  கதிர்மணி முடியன்; கல்லும்
மரங்களும் உருக நோக்கும்
  காதலன்; கருணை வள்ளல்
இரங்கினன் நோக்கும் தோறும்
  இருநிலத்து இறைஞ்சுகின்றான்;
'வரங்களின் வாரி' அன்ன
  தாள் இணை வந்து வீழ்ந்தான்

(விபீடணன் அடைக்கலப் படலம் - 140)

1. சுவாமிசித்பவானந்தர், 'ஸ்ரீவிவேகானந்தர் ஜீவிதம்'.

மணிவாசகரும் கம்பனும்

மணிவாசகப் பெருந்தகை இறையடியை வீழ்ந்து வணங்காதவரைக் கண்டு அஞ்சுகிறேன் என்று தமது அச்சத்தைத் தெரிவித்த அந்த உணர்வுகள், கம்பனில் இறையடியை வீழ்ந்து வீழ்ந்து வணங்குகிற சரணாகதித் தத்துவமாக மலர்ச்சி பெற்றிருக்கிறது.

'அறிஞர்களெல்லாம் ஒன்று போலவே சிந்திக்கிறார்கள்' என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்றைக் காட்ட முடியாது.

பிறவி நோய் போக்கும் மருந்து

இராமனைப் பிறவி நோய் போக்கும் கடவுளாகக் காண்பது விபீடணனின் மிகப்பெரிய வலிமையாகும்.

'பிறவி நோய்க்கு
மருந்து என நின்றான்'

(விபீடணன் அடைக்கலப் படலம் - 139)

என்று விபீடணன் மனத்திற்குள்ளேயே கருதிப் பார்ப்பது அவனது சரணாகதியில் மிகச் சிறப்பான உணர்வு ஆகும்.

மருந்தால் நோய் நீங்கும். அது போல இறைவனால் பிறவி நீங்கும்.

தெய்வப்புலவர் திருவள்ளுவரும்,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடி சேராதார்

என்று கூறுகின்றார். இறைவனின் திருவடிகளைப் பற்றி நின்றார்க்கே பிறவி நோய் நீங்கும் என்பதனை மேலே காட்டப்பட்ட குறள் அறுதியிட்டு உறுதியாக உரைக்கின்றது.

அரக்கர்கள் மீது இராமன் நேரே நின்று அம்பு விடுவது உறுதி. இவ்வாறு அம்பு விடும்போது வீழ்ந்து அழிகின்ற அரக்கர்கள் இராமனது பார்வை படுகின்றமையாலே, பிறப்பு நீங்கி வீடுபேறு பெறுவார்கள் என்பதும் உறுதி. எனவே அரக்கர்களுக்குக் கிடைக்க இருக்கிற பெரும்பேற்றை எண்ணி எண்ணி விபீடணன் இன்பம் எய்துகின்றான்.

இத்தகு இயல்பு கொண்ட இராமனாகிய கருணை வள்ளலின் பார்வை தன்மீதும் விழுவதைப் பார்க்கின்ற விபீடணன் கழிபேருவகை அடைகிறான். அப்பார்வை படும் போதெல்லாம் அவன் பாதங்களிலே வீழ்ந்து வணங்குவது என்பது அவனுக்கு வரங்கள் என்னும் கடலுக்குள் மூழ்கி எழுவதனைப் போன்ற தித்திப்பான அனுபவமாக அமைந்துவிடுகிறது. இராமனின் பாதங்களை "வரங்களின் வாரியன்ன தாள் இணை" (விபீடணன் அடைக்கலப் படலம் - 140) என்றே விபீடணன் கருதுகிறான்.

இராமனின் காரணமாகத் தனது பிறவிநோய் தீர்ந்தது என்ற எண்ணத்தால் விபீடணனின் கண்களில் கண்ணீர் வழிந்தது. அன்பின் உருக்கம் இங்கே கண்ணீராகப் பாய்வதைப் பார்க்கிறோம்.

அன்பு அழுக்கைக் கழுவும்

அன்பு உள்ள வாழ்க்கையே தழைக்கும். எனவே உயிர்வாழ்க்கைக்கு மிகத் தேவையான அரிய குணம் அன்பாகும்.

நெஞ்சம் அல்லது உள்ளம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதனை வள்ளுவர் 'உயிர்க் காதல் நெஞ்சு' (குறள் 1298) என்று சுட்டிக் காட்டுகிறார். இதற்கு விளக்கம் காணும் ஆய்வாளர் "நெஞ்சம் அன்பால் ஆட்கொளப்படும் பொழுது உள் அழுக்குகள் கரைகின்றன. அக அழகு ஒளிர்கின்றது; உயிர் பிறவிப் பயனை நுகர்கின்றது" என்று கூறுவர்.[1]

இதற்கு எடுத்துக்காட்டாக,

பால் நினைந்து ஊட்டும் தாயினும்
சாலப் பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி
உள்ளொளி பெருக்கி

என்ற திருவாசகப் பாடல் குறிப்பிடப்படுகிறது.

இப்பாடலுக்கு விளக்கம் அளிக்கும் ஆய்வாளர், "தாயின் அன்புப் பிணைப்பு போன்றதே இறைவன் தரும் கருணை. இத்தகு கருணையை

1. ச. சிவகாமி, திருக்குறள் முழக்கம், ப.50

உளம் நினையும் போது உடல் உருகுகின்றது. உருகும் இடத்தில் தீமைகள் விலகும். நன்மை ஊற்றெடுக்கும், அன்பு அழுக்கைக் கழுவும் என்பதற்கு இது எடுத்துக்காட்டு" என்றும் தெரிவிக்கின்றார்.[1]

மேலும் அன்பானது வானுலக இன்பத்தை மண்ணுலகத்திற்கு உரித்தாக்குகின்றது. உலகை நெறிப்படுத்த அறநூல் படைத்தவர் திருவள்ளுவர். அதற்கு அடிப்படையாக ஒவ்வொருவரிடமும் வேண்டுவது 'உயிர்க்காதல் நெஞ்சம்' என்றும் கூறுவர் அறிஞர்.[2]

மாணிக்க வாசகரின் இதயம்

ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கின்ற திருவாசகம் அன்பினைப் பெருக்குகின்ற ஆற்றல் மிக உடையது. என்பினை உருக்கும் திறம் வாய்ந்தது. நெக்கு நெக்கு உருகச் செய்யும் உயர்வு கொண்டது. மாணிக்க வாசகரின் இதயத்தின் அடி ஆழத்தில் 'அன்பு' என்ற குணத்தின் கரு முழுமைப் பட்டிருப்பதன் காரணமாகவே திருவாசகம் தித்திக்கும் தெள்ளமுதக் கனியாக மலர்ந்திருக்கறது. முத்திக் கனியாகவும் நம்மையெல்லாம் மூல முதல்வனாகிய இறைவனிடம் இட்டுச்செல்லும் பக்திக்கனியாகவும் திருவாசகம் அமைந்திருப்பதற்கு முழுமுதற்காரணம் ஊற்றெடுத்துப் பெருகுகிற அன்பே என்பதனைத் திட்டவட்டமாக அறிஞர் பெருமக்கள் சுட்டுவர்.

அச்சப் பத்து

அன்பு என்ற சொல்லை அல்+பு எனப்பிரிக்கலாம். 'அல்' என்பது, 'தான்' என்பது அற்றுப் போதலைக் குறிக்கின்றது. ஒரு உயிரின் மீதோ, ஒரு பொருளின் மீதோ நாம் அன்பு காட்டும் போது நம்மை மறந்து அந்தப் பொருளாகவோ, அந்த உயிராகவோ ஒன்றிவிடுகிறோம். தான் அறுதல் என்பது இதுவே ஆகும். இந்த அன்பின் திறத்தை மாணிக்க வாசகரின் வழியில் நின்று காண்பது மிகவும் பொருத்தமானதாகும்.

மாணிக்கவாசகர் 'அச்சப்பத்து' என்று ஒரு பாமாலையைப் பாடியுள்ளார்.

1. ச. சிவகாமி, திருக்குறள் முழக்கம், ப.50
2. மேலது. ப.50

வெளிப்புறத்தில் ஏற்படும் சீற்றங்களைக் காட்டிலும் ஒருவனது நெஞ்சத்தில் ஏற்படும் சீற்றமே அச்சத்தை மிகுவிக்கிறது என்று மாணிக்க வாசகர் பாடுகின்றார்.

மனிதனது நெஞ்சத்தில் இருக்க வேண்டுவனவாக மாணிக்க வாசகர் தெரிவிப்பன:

கடவுள் உண்டு என நினைத்து இறைவனைப் பற்றிக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இறைவனே மிக உயர்ந்தவன் என்று எண்ணி, மற்றைப் பொய்யான தேவர்கள் என்று கூறப்படுபவரை அருவருக்க வேண்டும்.

அம்பலத்து ஆடுகின்ற இறைவனை நினைத்து வழிபட வேண்டும். அங்ஙனம் வழிபடும் போது எலும்பு உருக வேண்டும். ஆண்டவனிடமிருந்து வருகின்ற அருள் அமுதத்தைப் போன்றது. அந்த அருளானது பருகப் பருகத் தெவிட்டாதது. அத்தகைய அருளைப் பருக வேண்டும் என்றால் அடிமனத்தில் 'அன்பு' இருக்க வேண்டும். அந்த 'அன்பு' இல்லாதவர்களைக் கண்டால் நான் பெரிதும் அஞ்சுகிறேன் என்கின்றார் மாணிக்க வாசகர்.

வன்புலால் வேலும் அஞ்சேன்;
  வளைக் கையார் கடைக்கண் அஞ்சேன்;
என்பு எலாம் உருகி, நோக்கி,
  அம்பலத்து ஆடுகின்ற
என்பொலா மணியை ஏத்தி
  இனிது அருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால்
  அம்ம நாம் அஞ்சுமாறே

(திருவாசகம், அச்சப் பத்து - 3)

அஞ்சுவனவும் அஞ்சாதனவும்

இறைவனைக் காணும் போது நெக்கு நெக்கு உள்ளம் உருக வேண்டும். அத்தகைய உள்ளம் தான் கருணையின் இருப்பிடம். 'கருணை இல்லாதவரைக் கண்டால் நான் அஞ்சுகிறேன்' என்பது மணிவாசகர் திருமொழி.

மேலும் அவர் கூறுவனவற்றைக் காண்பேம்: "நோய் வருவதைக் கண்டு நான் அஞ்சவில்லை. பிறப்பு இறப்பு ஆகியவற்றைக் கண்டு நான் அஞ்சவில்லை. ஆனால் உள்ளத்தில் பக்திவெள்ளம் பெருகத் திருவெண்ணீறு அணியாதவரைக் கண்டால் நான் அஞ்சுகிறேன்.

மலையே புரண்டு கீழே வந்து விழுந்தாலும் நான் அஞ்சவில்லை. இறைவனின் பாதத் தாமரைகளை நினைத்து உள்ளம் உருகாதவரைக் கண்டு நான் அஞ்சுகிறேன்.

பிறர் தவறாகச் சுமத்தும் பழிக்கு நான் அஞ்சவில்லை. சாதலைப் பற்றி எனக்கு ஒருபோதும் அச்சமில்லை. இறைவனின் பாதத்தை ஏத்தி உள்ளம் உருகாதவரைக் கண்டு நான் அஞ்சுகிறேன்.

யானையைக் கண்டு அஞ்சவில்லை. புலியைக் கண்டும் நான் அஞ்சவில்லை. இறைவனின் பாதத்தைப் போற்றி வழிபடும் வாழ்க்கையே சிறந்து இனிது இருக்கும் வாழ்க்கையாகும். இங்ஙனம் இருக்க, இறையடி தொழமாட்டாத அறிவு இலாதவரைக் கண்டு நான் அஞ்சுகின்றேன்.

இடியைக் கண்டு நான் அஞ்சவில்லை. பெரும்படையும், ஆட்சி ஆற்றலும் உடைய அரசரோடு உறவு வைத்துக் கொள்வதற்கு நான் அஞ்சவில்லை. இறைவனின் திருமேனிக்கு அடியவராக மாட்டாதவரைக் கண்டு நான் அஞ்சுகின்றேன்.

எமனைக் கண்டும் நான் அஞ்சவில்லை. இறைவனை நினைந்து நெக்குருகாதவரை நான் ஆணாக ஏற்பதற்கு இல்லை. அத்தகையவரைக் கண்டால் நான் அஞ்சுகிறேன்."

இப்படியெல்லாம் மணிவாசகர் பேசுவதிலே மிகுந்த பொருள் இருக்கிறது. அன்பினில் விளைந்த ஆரமுதாகவும், அன்பின் ஊற்றாகவுமே பக்தி நெறியை மாணிக்கவாசகப் பெருமான் காண்கின்றார். மாணிக்க வாசகரின் திருவாசகம், ஒருவாசகமாக உலகில் ஓங்கி இருப்பதற்குக் காரணம் இறையன்பில் திளைத்து அவர் பாடுகின்றமையே ஆகும். "இறைவன் மாட்டு இடையறா அன்பு" என்பதுவே மாணிக்கவாசகரின் மூலமொழி ஆகும். இவ்வன்பின் எழுச்சியாக உள்ளத்தில் உருவெடுக்கும் பக்திமை மன மாசுகளைக் கழுவிச் செல்கிறது. அப்போது உள்ளம் 'உண்மையான உள்ளம்' ஆகிறது.

அன்பு நெறியில் சைவ வைணவ சித்தாந்தங்கள்

ஆண்டவனிடம் அடியார் காட்டுகின்ற அன்பைப் பொருத்தவரை வைணவ சைவ சித்தாந்தங்களும், இச்சமயங்களைச் சார்ந்த இறையருட் பனுவல்களும் ஒன்று போலவே கருத்துக்களை எடுத்துரைக்கின்றன.

வைணவ சித்தாந்தத்தைக் கொண்டு காப்பிய ஓவியம் தீட்டுகிற கம்பன், பக்திமையானது மனவளத்தை வலுப்படுத்தும் என்பதை நன்கு உணர்ந்தவன். 'அன்பு செய்து இறைவனை அண்மித்தல்' என்பதிலே மாணிக்கவாசகருக்கும் கம்பருக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. இவ்விரு செம்மல்களும் 'அன்பு' என்பதைப் பற்றி ஒன்று போலவே சிந்தித்திருக்கிறார்கள் என்பதனை இவ்விருவரது பாடல்களையும் அடுத்து அடுத்து வைத்து ஒப்பியல் பார்வையுடன் நோக்கினால் நன்கு புரிந்து கொள்ள முடியும். அதனால் தான் கம்பன் சகோதர பாசத்தின் பின்புலத்தில் பக்திமை என்கிற அன்புக் கடலை மறவாமல் சுட்டிக்காட்டுகிறான்.

அன்பு கொண்ட பிரகலாதன்

விபீடணனின் சரணாகதிக்கு முன்னதாக பிரகலாதனின் கதை கம்பராமாயணத்திலே அமைக்கப் பட்டிருப்பது மிகுந்த பொருத்தப்பாடு உடையது ஆகும். பிரகலாதனைச் சொல்லியாவது இராவணனின் உள்ளத்தில் பக்தியை ஊட்டி அவனது ஆணவத்தை அழிக்கலாம் என்று விபீடணன் கடைசியாக முயற்சித்த முயற்சி இது.

பிரகலாதன் கதையில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியைக் காணவேண்டும்.

நரசிம்ம அவதாரம் எடுத்த திருமால், பிரகலாதனைப் பார்த்துப் பேசுகிறார்: "எனக்குத் தந்தையைப் போல இருக்கிற பிரகலாதனே! உன்னுடைய தந்தையை உன் முன்னாலே நான் என் கைந்நகங்களால் பிளந்து கொன்றேன். தருமநெறி தவறாமல் அப்போதும் கூட நீ என்மீது அன்பு வைத்தாய்! நீ என்மீது காட்டுகின்ற அன்பு எல்லை இல்லாதது. உனது அன்பைக் கண்டு என் உள்ளம் உருகுகின்றது. நீ என்மீது காட்டுகின்ற இந்தப் பேரன்புக்கு ஈடாக நான் உனக்குச் செய்யக்கூடிய உதவி என்ன இருக்கிறது!" என்றார் திருமால்.

உந்தையை உன்முன் கொன்று,
　　உடலைப் பிளந்து அளையச்
சிந்தை தளராது,
　　அறம் பிழையாச் செய்கையாய்
'அந்தம் இலா அன்பு'
　　என்மேல் வைத்தாய்! அளித்தாய்
எந்தை இனி இதற்குக்
　　கைம்மாறு யாது? என்றான்

(இரணியன் வதைப் படலம் - 296)

இறைவனின் வினா

அடியவன், இறைவனைப் பார்த்து எனக்கு இன்னதை அருள்புரிய வேண்டும் என்று கேட்பது இயற்கை. ஆனால் இறைவன் அடியவனைப் பார்த்து, "அப்பா உனக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?" என்று கேட்பது, அடியவனின் பெருமையை வானத்திலும் உயர்வாக ஆக்கிவிடுகிறது.

பிரகலாதன் கதையில் மிகவும் குறிப்பிடத் தக்க பாடலை மேலே கண்டோம். பிரகலாதனின் அன்பை, இறைவன், "அந்தம் இலா அன்பு" என்று போற்றி உரைக்கின்றான். பிரகலாதன் இறைவன் மீது கொண்ட அன்புக்கு எல்லை இல்லை. அன்பானது உள்ளத்தைக் கழுவிக் கழுவி மேலே உயர்த்துகிறது. "பஞ்ச பூதங்கள் எல்லாம் அழிந்தாலும் அழியாமல் நீ என்னைப் போலவே சிரஞ்சீவியாக இருப்பாயாக!" என்று சிங்க அவதாரம் எடுத்த இறைவனே கூறும்படியாகப் பிரகலாதனின் அன்பு அமைந்திருக்கிறது.

சீதை கொண்ட அன்பு

மணம் புரியவரும் இராமனைச் சீதை கண்டாள். அதுவும் கடைக் கண்களாலே கண்டாள். தனது கைகளின் வளையல்களைச் சரிசெய்பவள் போலே இராமனைப் பின்னர் முழுவதுமாகக் கண்டாள். அவனது உள்ளத்தின் அழகைக் கண்டாள். இராமனின் புற அழகையும் கண்டு உணர்ந்தாள்.

சீதையின் உள்ளம் காதலால் பெரிய கடலைப் போலத் தத்தளித்தது. அந்தக் கடலுக்குள் ஒரு ஆறு பாய்ந்தது. அந்த ஆறு அவளது கடைக்

கண்களின் வழியே புகுந்தது. அது என்ன ஆறு எனின் இராமனின் அகத்தழகும் புறத்தழகும் கலந்த ஒரு முழுமையான அழகுப் பேராறு. அது அவள் உள்ளக் கடலிலே புகுந்த போது, அவள் புதிய உயிர் பெற்றவளைப் போலத் தோன்றினாள். அப்படியெனில் இதுவரை இருந்த உயிர்? அந்த உயிர் பழையது. இப்போது இராமனைக் கண்ட இந்த உயிர் புத்தம் புதியது. காரணம் என்ன வென்றால் இந்தப் புதிய உயிருக்கு இப்போது மூச்சு விடுவது கூட மிக இனிமையாக இருக்கிறது. இராமன் மணமன்றலை நோக்கி வரவர, சீதைவிடும் மூச்சு ஒவ்வொன்றிலும் இனிமையும் மகிழ்வும் மேலும் மேலும் மிகுந்து கொண்டே செல்லுகிறது. கண்ணால் இராமனை நோக்கும் போது, அமுதத்தை உண்பதுபோல் அவள் உடல் பருத்தது.

இதனைக் கம்பன் பின்வருமாறு கூறுகிறான்:

கருங்கடை நெடுங்கண் ஒளிஆறு
நிறை கண்ணப்
பெருங்கடலின் மண்ட,
உயிர்பெற்று இனிது உயிர்க்கும்,
அருங்கலன் அணங்கு - அரசி
ஆர் அமிழ்து அனைத்தும்
ஒருங்குடன் அருந்தினரை ஒத்து
உடல் தடித்தாள்

(கோலங்காண் படலம் - 38)

இராமனைக் கண்ட மகிழ்ச்சியாலும் பூரிப்பாலும் சீதை உடல் பருத்தாள் என்று கோலங்காண் படலத்தில் கூறினான் கம்பன். பின்னர் இராவணனால் கவரப்பட்டு அவனது சிறையில் இருந்து போது உடல் மெலிந்தாள் என்பதை,

மென்மருங்குல் போல்
வேறு உள அங்கமும் மெலிந்தாள்

(காட்சிப் படலம் - 3)

என்று கூறுகின்றான். சிறையில் அவள் இடை மெலிந்தது. அந்த மெலிந்த இடையைப் போலவே அவள் உடல் உறுப்புக்கள் அத்தனையும் மெலிந்தன. செடி தழைக்க நீர் தேவை. மானுட உயிர் தழைக்க அன்பு தேவை.

இராமனைப் பிரிந்ததால், உயிருக்கான அன்பு என்னும் நீர் ஊற்று வரண்டு விட்ட செடியைப் போல அவள் ஆகி விட்டாள்.

இராமனைத் திருமண நாளில் பார்த்த போது உடல் 'தடித்தாள்' என்று 1154-ஆம் பாடலில் குறிப்பிட்ட கம்பன் 3917 பாடல்களுக்குப் பிறகு அதே சொல்லை நினைவு வைத்துக்கொண்டு, சுந்தரகாண்டத்தில் காட்சிப் படலத்தில், சீதை தனிமைச் சிறையில் வாடிய வாட்டத்தை 5071-ஆம் பாடலில் 'மெலிந்தாள்' என்று குறிப்பிடுகின்றான். மிகவும் பொருத்தமாக எதிர்ச்சொற்களாகிய 'தடித்தாள்', 'மெலிந்தாள்' என்பனவற்றை முரண்பட்ட காட்சிகளில் பயன்படுத்தியுள்ள கம்பனின் நினைவாற்றல் எண்ணுந்தோறும் வியப்பைத் தருகின்றது.

கணையாழியும் அன்பும்

சிறை இருந்த செல்வியிடம் அனுமன் அடையாளமாக இராமனது கணையாழியைக் கொடுத்தான். அப்போது சீதை கொண்ட உணர்வை,

துறந்த உயிர் வந்து
தொடர்ந்தது கொல் என்கோ? (உருக்காட்டு படலம் - 64)

என்று, போன உயிர் அன்பின் வடிவமாக மீண்டும் அவளை வந்து அடைந்தது என்று சொல்லும் படியான நிலையினைச் சீதை அடைந்தாள் என்று கம்பன் அற்புதமாகக் கூறுகின்றான்.

வீயும் உயிர் மீளும்
மருந்தும் எனலாகியது வாழி மணியாழி
(உருக்காட்டு படலம் - 69)

என இரண்டாம் முறையும் கணையாழி குறிப்பிடப்படுகிறது. சிறையில் சீதை உயிர்போகும் நிலையில் இருக்கிறாள். உயிரைப் போகாமல் தடுக்கும் மருந்து போல இராமனின் அன்பின் அடையாளச் சின்னமாகிய மோதிரம் பயன்படுகிறது.

உழந்து விழிபெற்றது
ஓர் உயிர்ப்பொறையும் ஒத்தாள் (உருக்காட்டு படலம் - 65)

எனவும் கணையாழி பெற்ற சீதையின் நிலை பேசப்படுகிறது.

அன்பின் அடையாளமானது, வாடிய உயிரைப் பிழைக்கச் செய்யும் இயல்புடையது என்பதையே மேற்காணும் பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அன்பைப் பொருள்களின் மூலம் வெளிப்படுத்துவது ஒருமுறை ஆகும். அன்புமிக்கவர்களுக்குப் பரிசுப் பொருள்களைக் கொடுத்துப் பூரிக்கின்றோம். காதலன், காதலிக்குத் தழையாடை முதலியவற்றைப் பரிசாக வழங்குவது பண்டு தொட்டு இருந்து வருகிறது. மழலையர்க்குப் பிறந்த நாள் பரிசு வழங்குகிறோம். பெற்ற தாயின் காலடிக்கு, எழுதிய நூலைக் காணிக்கை ஆக்குகிறோம். இறைவன் குடியிருக்கும் கோயிலுக்கு அன்பின் காணிக்கையாக அன்றலர்ந்த மலர்களை எடுத்துச் செல்கிறோம். இவையெல்லாம், பொருள்களின் மூலமாக அன்பு வெளிப்படுகிறது என்பதற்கு உலகியல் சார்ந்த எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன.

உயிருக்குப் பாதுகாப்பு

சிறை இருந்த சானகியின் முகத்தில் சிரிப்பு என்பதே இல்லை. மோதிரத்தைக் கண்ட போதே அவள் முகத்தில் புன்னகை தோன்றியது. அனுமன் கணையாழியைக் கொடுக்க, சீதை அதனைப் பெற்றுக் கொள்ள, தத்தளித்துக் கொண்டிருந்த அவளது உயிர் பாதுகாப்பினைப் பெற்றது. அது மட்டும் அல்லாமல் இருட்டுக்குள் கிடந்த அவள் உயிர் வெளிச்சத்துக்கு வந்ததால் ஒளிபெற்று விளக்கமும் பெற்றது.

கம்பன் இதனை,

'உயிர் ஏமுற விளங்கும்'

(உருக்காட்டு படலம் - 70)

எனப் படைக்கின்றான். ஏமுறுதல் என்றால் பாதுகாப்புப் பெறுதல் என்று பொருள். இதனால் இராமனது மோதிரம் சீதையின் உயிருக்குப் பாதுகாப்புக் கவசமாக ஆயிற்று என்பது புலனாகிறது. மேலும் நலம் இழந்த மங்கையின் அழுக்கு அடைந்த மேனிக்குள் கிடந்த உயிரும் ஒளிபெற்று விளக்கம் அடைந்தது.

இவ்வாறு உதவிய அனுமனைப் பார்த்துச் சீதை,

'உயிர் தந்தாய், உத்தம!'

(உருக்காட்டு படலம் - 70)

என்று பாராட்டுகிறாள். அவளால் பேச முடியவில்லை; குதலையில் பேசுகிறாள்.

உயிரும் அன்பும் ஒன்றாகக் கலக்கும் போது அங்குப் பேச்சு எழுவதும் கூட இயலாமல் போய்விடுகிறது. இதனைக் கம்பன், 'மென் குதலை தள்ள' என்று குறிக்கின்றான். அவள் பேச்சு மழலையாக இருக்கிறது. அவள் உள்ளம் அறிவார்ந்து இருக்கிறது. அந்த மழலை மொழியிலேயே அனுமனைப் பார்த்து, 'இன்று என இருத்தி' என்று சிரஞ்சீவிப் பட்டமும் தந்து வாழ்த்தும் கூறுகிறாள்.

உயிர்த்தல் என்னும் சொல்லாட்சி

திருமணம் புரிய இருந்த சீதை, இராமனின் வரவால் புத்துயிர் பெற்று மகிழ்ச்சியாகவும் இனிமையாகவும் இருந்தாள் என்பதைக் கோலங்காண் படலத்தில் 38-ஆம் செய்யுளில் 'உயிர் பெற்று இனிது உயிர்க்கும்' என்று பாடினான் கம்பன். இராமனின் கணையாழியைப் பெற்ற போது சென்ற உயிர் மீண்டதனைப் போல உணர்ந்தாள் என்று பாடினான். உயிர் வாடி இருப்பதனையும், பின் உணர்வால் அந்த உயிரின் வாட்டம் நீங்கிப் புத்துணர்வு பெற்று இருப்பதையும் இருவேறுபட்ட நிலைகளில் நின்று கம்பன் பாடுகிறான்.

வாங்கினள்; முலைக் குவையில் வைத்தனள்;
ஏங்கினள் உயிர்த்தனள்

என்று உருக்காட்டு படலம் 66-ஆம் செய்யுளில் பாடுகின்றான். உயிர்த்தல் என்ற சொல்லைக் கம்பன் நினைவில் வைத்துக்கொண்டு 4140 பாடல்களுக்குப் பிறகு அதே சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறான். முன்னது திருமணச் சூழல். பின்னது தனிமைச் சூழல். ஆனால் சூழ்நிலை வேறுபட்டு இருந்தாலும் 'சீதையின் உயிர் தழைத்தல்' என்ற கருத்து ஒன்றாகவே இருக்கிறது. அதற்கு ஏற்பவே கம்பன் மிகவும் நேர்த்தியாக 'உயிர்த்தல்' என்ற சொல்லை மீண்டும் கொண்டு வந்து சிறை இருந்த நிலையில் பயன்படுத்துகிறான். கம்பனின் நினைவாற்றலும், காப்பியக் கட்டுக்கோப்பும் (Architectonics) மிகவும் வியப்பை ஏற்படுத்துகின்றன.

4. கம்பன் வழங்கும் மனப்பயிற்சி

வாழ்க்கைக் கலைப் பயிற்சி

அன்றாட வாழ்க்கையில் பலவகைப் பயிற்சிகளைப் பார்க்கிறோம். இன்றைக்கு உலகம் எண்ணியல் தொழில் நுட்பக் (Digital age) காலமாக மலர்ந்து வருகிறது. வாழ்க்கைக் கலைப்பயிற்சி (Life skills) இன்றைக்கு மிகுதியும் தேவைப்படுகிறது. கணிணிப் பயிற்சி தொடங்கி, பல பயிற்சிகளைப் பெற்றாக வேண்டிய நிலையில் இருக்கிறோம். இருசக்கர வாகனப் பயிற்சி, மின்சார அடுப்பில் சமையல் செய்யப் பயிற்சி என வாழ்க்கையில் பலவற்றைச் சந்திக்கிறோம். ஏன்? நன்றாகப் பல் துலக்குவதற்குக் கூடப் பயிற்சி தேவைப்படுகிறது. இவைகள் எல்லாம் புறத்தே செய்யும் பயிற்சிகள்.

புலன் அடக்கம் வேண்டும், நேர்பட ஒழுக வேண்டும் என அறநூல்கள் அனைத்தும் கற்பிக்கின்றன. ஆனால் புலன் அடக்கம் என்பதனை ஒரே நாளில் நாம் பெற்று விட முடியாது. இதற்குச் சிறந்த பயிற்சி தேவைப்படுகிறது. மனத்தை ஒருமைப் படுத்துவதற்கு ஆழ்ந்த பயிற்சி வேண்டும்.

இளமைப் பருவப் பயிற்சி

இளமைப் பருவத்தில் குழந்தைகளுக்குத் தக்க பயிற்சிகளை வழங்க வேண்டும். ‘இளமையிற் கல்’ என்பது முன்னோர் பழமொழி. ‘இளமையில் கல்வி சிலையில் (கல்லில்) எழுத்து’ என்பது மற்றொரு பழமொழி. இளமையில் இடப்படும் கல்வி வித்து முதுமைவரை தொடர்கிறது.

உளவியல் அடிப்படையில் பார்க்கும்போது குழந்தைகளுக்குப் பல வகையான தேவைகள் இருக்கின்றன. அவற்றை நிறைவு செய்வது மிகவும் இன்றியமையாதது.

அவர்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள விரும்புகிறார்கள். தாமே எதையும் செய்ய வேண்டும் என்றும் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்றும் ஆசைப்படுகிறார்கள்; ஏங்குகிறார்கள்.

இத்தகைய ஆசைகளைப் பெற்றோர்களும் மற்றவர்களும் அதட்டி மிரட்டி முளையிலேயே அரும்ப விடாமல் அழித்து விடக்கூடாது. அத்தேவைகளுக்கு ஏற்ப அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.[1]

உருவாக்கும் விளையாட்டு

பேராசிரியர் தாம்சன் பின் வருமாறு கூறுகிறார்: "விலங்கைப் போலத் தான், தொடக்கத்தில் மனிதனும் இருந்தான். ஆனால் அவன் படிப்படியாக முன்னேறிக்கொண்டு வந்து விட்டான். விலங்கு உணர்வுப் போராட்டத்தில் 'மானுடம்' தழைத்து வெற்றி கண்டு விட்டது. இதற்குக் காரணம் அவனது குழந்தைப் "பருவ விளையாட்டே ஆகும்." குழந்தைகளின் உலகம் தனி உலகம். அவர்கள் எந்த நேரமும் விளையாடிக் கொண்டு இருக்கவே விரும்புகிறார்கள். அவர்களுடைய உலகத்தில் விளையாட்டு முதன்மையான இடம் வகிக்கிறது. இத்தகைய விளையாட்டு குழந்தைகளிடையே புதுமைகளை ஆக்கும் திறத்தை (Originality) வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது.

கம்பனும் குழந்தையும்

தரையில் கீறியும், மணலில் அளைந்தும், மண்வீடு கட்டியும் குழந்தைகள் இடையறாமல் விளையாட்டில் திளைத்து மகிழ்கிறார்கள்.

கம்பன் ஒரு தெருவின் வழியே சென்று கொண்டிருந்தான். அங்கே பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அது என்ன விளையாட்டு எனில், தரையில் மாட மாளிகைகளை வரைந்து காணும் விளையாட்டு –

---

1. Yogendra K. Sharma
'Psychological Philosophy of Education'
"They want to develop a power of self-confidence, initiative and independence in themselves, and for thus they crave for suitable opportunities."

ஒருவன் சொன்னான்: "இதோ என் வீட்டைப்பார்! இதில் எத்தனை அறைகளை நான் வைத்திருக்கிறேன்!" அதற்குள் மற்றொருத்தி இடைமறித்து, "உன்னுடைய வீடு என்ன பெரியதா? இங்கே பார்! நான் பெண்கள் நடனம் ஆடும் பெரிய நடன அரங்கத்தையே உருவாக்கி இருக்கிறேன்!" என்றாள். குழந்தைகளின் இந்த மழலை மொழிகள் கம்பனின் காதிலே விழுந்தது. அவன் குழந்தைகள் வரைந்த மாடமாளிகைகளையும் அரங்கங்களையும் அருகில் சென்று உற்றுப்பார்த்தான். கம்பன் குழந்தைகளிடம் "நன்று, நன்று! இப்படித்தான் விளையாட வேண்டும்! உங்கள் விளையாட்டு, எதிர்காலத்தில் நீங்கள் உயர்ந்து வருவீர்கள் என்பதற்கான எடுத்துக்காட்டு!" என்று பாராட்டினான். கம்பனின் அடி மனத்தில் ஓர் ஐயப்பாடு எழுந்தது. "இந்தக் குழந்தைகள் இப்படித் தரையிலே கீறி இருக்கும் வீடுகளையும் அரங்கங்களையும் 'சிற்ப சாத்திர வல்லுநர்' பார்த்தால் இவை சிற்ப சாத்திர நூலுடன் பொருத்தி வரவில்லை என்று கோபித்துக் கொள்வார்களோ?" என்று எண்ணிப்பார்த்தான். மறு கணம் அவன் உள்ளத்தில் மற்றொரு சிந்தனை எழுந்தது.

வல்லுநர்களின் மனம்

வல்லுநர்கள் எல்லோருமே உயர்ந்த மனம் படைத்தவர்களாகத் தான் இருக்கிறார்கள். அத்தகைய 'மனம்' தான் அவர்களை நிபுணர்களாக உயர்த்தி இருக்கிறது. எனவே அவர்கள் குழந்தைகள் மண்ணில் கீறி விளையாடு வதைப் பார்த்துக் கோபிக்க மாட்டார்கள். மாறாக குழந்தைகளின் இத்தகைய படைப்பாற்றல் எதிர்காலத்தில் அவர்களுக்கு உயர்வும் ஊக்கமும் அளிக்கும் என்று உள்ளத்திலே மகிழ்ச்சி பொங்குவார்கள்" என்று நினைத்தான் கம்பன்.

அறையும் ஆடுஅரங்கும் படப் பிள்ளைகள்
தறையில் கீறிடில் தச்சரும் காய்வரோ

(தற்சிறப்புப் பாயிரம்-9)

என்பது கம்பன் கவி. பிள்ளைகளின் விளையாட்டை உயர்த்திக் காண்கிற 'கனிந்த மனம் கம்பனுடைய மனம்' என்பதை இப்பாடலில் பார்க்கிறோம்.

குழந்தைகளுக்குச் சில வீடுகளில் அளவற்ற சுதந்திரம் அளிக்கிறார்கள். சில வீடுகளில் அவர்களைக் கட்டுத் திட்டத்தில் அடக்கி வைத்து சுதந்திரமே இல்லாமல் செய்து விடுகிறார்கள். இவை இரண்டுமே உளவியல் அடிப்படையில் பார்க்கும் போது ஆபத்தானவை.

எடிசனின் இளமை

தாமஸ் ஆல்வா எடிசன் மின்சாரத்தைக் கண்டு பிடித்து, இக் கண்டு பிடிப்பினால் உலகத்தையே வளப்படுத்தி விட்டார். இன்றைக்கு நாம் காணும் பல்லாயிரம் அலங்கார மின் விளக்குகளும், விளக்குக் கம்பங்களும், தோரணங்களும், ஒளியூட்டப்பட்ட விளையாட்டு அரங்குகளும், ஒளிப்பிழம்பைச் சிந்தும் விழா அரங்கங்களும் எடிசன் உலகிற்கு வழங்கிய நன்கொடை என்பதை நாம் மறந்துவிடலாகாது. எடிசனின் இளமைக் கால வாழ்வு எவ்வாறு இருந்தது என்பதைப் பார்க்க வேண்டும்.

எடிசனின் தாய் நான்சி என்பவர். எடிசன் பள்ளி செல்வதை வெறுத்தார். அவரது ஆசிரியர், குழந்தைகள் கேள்வி கேட்பதைத் தடுத்தார். கேள்வி கேட்டால் அடியும் உதையும் தான் பதிலாகக் கிடைக்கும். ஆனால் எடிசனோ கேள்வி கேட்கும் ஆர்வமும், புதியவற்றைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று ஆராய்ச்சி மனப்பான்மையும் உடைய குழந்தை. எனவே பள்ளிச் சூழ்நிலை அவருக்கு ஒத்து வரவில்லை. அவரது தாயே எடிசனுக்குக் கல்வி கற்பித்து வரலானார். அதுமட்டும் அன்றி எடிசனுக்காக ஒரு சிறிய 'பரிசோதனைக் கூடமும்' (Laboratory) வீட்டிலேயே அமைத்துக் கொடுத்தார்.

எடிசன் பரிசோதனைக் கூடத்தில் ஆபத்துகள் இன்றிப் பாதுகாப்பாக இயங்குவதைக் கண்காணித்தார். பின்னாளில் எடிசன் கூறும் போது, "என் தாய் எனக்குப் பரிசோதனைக் கூடம் அமைத்துத் தந்து என்னை ஊக்கப்படுத்தி இருக்காவிட்டால், நான் புதியவற்றைக் கண்டுபிடிப்பவனாக வளர்ந்திருக்க மாட்டேன்" என்று கூறியுள்ளார்.[1]

குழந்தைகளுக்கான சுதந்திரம்

குழந்தைகளுக்கு வழங்கப்படும் சுதந்திரம் அளவுடன் அமையவேண்டும். கண்காணிப்புக்கு உட்பட்ட சுதந்திரம் குழந்தைகளுக்கு அளிக்கப்படுமானால் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்தவர்களாக வளர்ச்சி பெறுவார்கள்.

---

1. Thomas Edison - A Life Story P.6

இராமனுக்கு வழங்கப்பட்ட இளமைப் பயிற்சி

இளமைக் காலத்தில் வழங்கப்படும் பயிற்சியைக் கம்பன் பெரிதும் வலியுறுத்துகிறான்.

விசுவாமித்தரர் அரச ரிசி என்று போற்றப்படுபவர். அவர் தயரதனின் அரண்மனையை அடைந்தார். கானகத்தில் அவர் செய்யும் வேள்விக்குத் 'தாடகை' என்னும் கொடிய அரக்கி பெருத்த இடையூறாக இருப்பதை தயரதனுக்குக் கூறினார். எனவே வேள்வியைக் காப்பதற்காக இராமனைத் தம்முடன் அனுப்பி வைக்கத் தயரதனை வேண்டினார்.

இராம இலக்குவரை விசுவாமித்திரருடன் அனுப்புதற்கு முதலில் தயரதன் தயக்கம் காட்டினான். இராமனைப் பிரிவதற்கு அவனுக்கு மனம் இல்லை. 'இராமன் போர்க்கள வலிமை போதாதவன்; நானே வேள்வி காக்கப் புறப்பட்டு வருகிறேன்! என்றான் தயரதன்.

"அங்கே இருந்த குல குருவாகிய வகிட்டர், இராம இலக்குவர் விசுவாமித்திரருடன் செல்வதால் பல விதமான விற்பயிற்சிகளைப் பெற முடியும். வில்வித்தை கைகூடுவதற்குரிய வாய்ப்பு இதுவே. வெள்ளமானது ஆறாகப் பெருக்கெடுத்துக் கடலில் சென்று சேர்வதைப் போல இராம இலக்குவர்க்கு உறுதியான கல்வி கிடைக்கின்ற வாய்ப்பை, தயரதனே! நீ மறுக்கலாமா?" என்றார் வகிட்டர்.

'நின் மகற்கு
உறுத்தல் ஆகலா உறுதி எய்தும் நாள்
மறுத்தியோ எனா?' என்பது கம்பர் வாக்கு.

(கையடைப் படலம்-14)

பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம் போய்
மொய் கொள் வேலைவாய் முடுகும் ஆறுபோல்
ஐய! நின் மகற்கு அளவு இல் விஞ்சை வந்து
எய்துகாலம் இன்று எதிர்ந்தது

(கையடைப் படலம்-15)

குருவின் வாசகத்தை தயரதன் உளமார நம்பினான். அதன் பயனாக இராம இலக்குவர்கள் விசுவாமித்திரரைத் தொடர்ந்து சென்றார்கள்.

பாலை நிலத்தின் வெப்பம்

அங்ஙனம் சென்று கொண்டிருக்கும் போது அவர்கள் ஒரு பாலை நிலத்தின் வழியாகச் சென்றனர். இராமன் விசுவாமித்திரரிடம் "இந்தப் பாலைநிலத்தில் வெப்பம் மிகவும் கொடுமையாக இருக்கிறதே! இதற்கு யாது காரணம்?" என்று கேட்டான்.

விசுவாமித்திரர் பதில் உரைத்தார்: தாடகை என்பவள் கொடிய அரக்கி. பிறர் உயிரைக் கொன்று தின்பதுதான் அவள் வேலை. அவள் கணவனின் பெயர் சுந்தன். காட்டில் அகத்தியர் ஆசிரமம் அமைத்து அங்கே வழிபாடுகள் செய்து கொண்டு இருந்தார். சுந்தனாகிய அரக்கன் காட்டில் உள்ள மரங்களைப் பிடுங்கி அகத்தியரின் ஆசிரமத்தின் மீது வீசினான். அகத்தியருக்குக் கடுங்கோபம் வந்தது. அதன் காரணமாகச் "சுந்தன் சாம்பலாகக் கடவது" என்று சாபம் இட்டார். அந்தச் சாபத்தின் காரணமாகச் சுந்தன் சாம்பலாகி அழிந்தான். சுந்தனுக்கு நேர்ந்ததனை அவன் மனைவி தாடகை அறிந்தாள். தாடகை கோபமுற்றாள். அகத்திய முனிவரை அழிக்க முற்பட்டாள்; அவளால் இயலவில்லை. தாடகை இந்த இடத்திலேயே வாழ்ந்து வருகிறாள். இந்த இடம் முன்பு குளிர்ச்சி நிறைந்த பண்ணைகளும், வயலும் சூழ்ந்த மருத நிலமாக இருந்தது. தாடகை அங்க இங்கு மரங்களை எல்லாம் அழித்து விட்டாள். மேலும் அவள் இந்த நிலத்தைக் கெடுத்து விட்டாள். எனவே தாடகையின் கொடுமை காரணமாக மருதநிலமும் பாலை நிலமாக ஆகிவிட்டது. பாலை நிலமாக ஆனதால் வெப்பமும் இங்கே குடிகொண்டு விட்டது. இந்தப் பகுதியில் சூரியன் வரும்போது சூரியனின் உள்ளமும் வேகும். இங்ஙனம் கொடுமைகள் செய்வது ஒன்றே தாடகையின் இலட்சியம்" என்று விசுவாமித்திரர் இராமனுக்கு எடுத்துக் கூறினார்.

பாலையும் மருதம் ஆகலாம்

இந்த இடத்தில் மற்றொரு உண்மையையும் ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் பொருத்தம் உடையதாக இருக்கும். மனிதர்கள் செம்மையாக வாழ்ந்தால் பாலை நிலத்தைக் கூட மருதநிலமாக மாற்ற முடியும். இஸ்ரேல் என்ற நாட்டின் சில பாலை நிலப்பகுதிகள் அங்கு உள்ள மனிதர்களின் கடும் உழைப்பாலும் முயற்சியாலும் மருதநிலம் போலப் பசுமைக் காட்சியுடையதாகச் சீர்திருத்தப் பட்டிருக்கின்றன. இங்ஙனம் ஆங்காங்கே வாழும் மனிதர்கள் நிலத்தைப் பூமி

தேவியாக வழிபட்டால் அந்த நிலம் நெடிது தழைத்து அனைவர்க்கும் பயன் தரும். குஜராத்தில், பழுதாகிப்போன கப்பல்களை உடைக்கும் இடத்தில், கடல் மாசுபட்டு அந்தப் பகுதி கொடுமையான சுற்றுச்சூழல் மாசுபாட்டுக்கு ஆளாகி இருப்பதைப் பார்க்கிறோம். உலகில் மிகுதியான மழை பெறும் பகுதியாகிய சிரபுஞ்சி இந்தியாவில் இருக்கிறது. இப்போது அங்கே உள்ள மரங்கள் வெட்டப்பட்டு குடிப்பதற்கும் கூடத் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. நிலத்தின் தன்மை அங்கே வாழும் மக்களால் திரிந்து விடுகிறது என்பதற்குக் கம்பராமாயணம் முதல், தற்காலம் வரை பல சான்றுகளைக் காண்கிறோம். இதனாலேயே,

அவலாகு ஒன்றோ மிசையாகு ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!

என்று பாடினார் சங்கப்புலவர் ஔவையார்.

அவல் என்பது பள்ளமான நிலப்பகுதி. மிசை என்பது மேடான நிலப்பகுதி. நிலமானது பள்ளமோ, மேடோ, வளமோ வளம் குன்றியதோ, எப்படி இருப்பினும் அந்த நிலத்துக்குப் பெருமை அங்கு வாழும் மக்களாலேயே ஏற்படுகிறது. தாழ்ந்தும் உயர்ந்தும் இருப்பது நிலத்தின் இயற்கை. அதனைப் பயன்கொள்ளும் மனிதன் அதனை வளப்படுத்த வேண்டிய பொறுப்பில் இருக்கிறான். இன்னும் சொல்லப் போனால் நிலத்தை வளப்படுத்த வில்லை என்றாலும் பரவாயில்லை; அதைச் சீரழிக்காமல் இருந்தால் போதும் என்ற நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

தாடகையால், மருதநிலம் கொடும் பாலைநிலமாக மாறியது என்ற கம்பராமாயணக் குறிப்பு ஒருவகையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்கு உதவியாக இருக்கிறது எனலாம்.

இராமன் பெற்ற விற்பயிற்சி

இனி, இளமைக் காலத்தில் இராமன் எங்ஙனம் முயன்று விற்பயிற்சியைப் பெற்றான் என்பதைக் காணலாம்.

வில்லைப் பயிற்றுவிக்கும் போது; அம்பை மிகவும் வேகமாக விடுவதற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அந்த அம்பு கடிய வேகம்

உடையதாக இருக்க வேண்டும். அம்பில் வெப்பம் கனன்று செல்ல வேண்டும். விடுகின்ற அம்பு குறிப்பிட்ட இலக்கைத் துளைத்துக் கொண்டு வெளியே வரவேண்டும். அந்த இலக்கைக் குத்தி நின்றுவிடக் கூடாது. "அப்புறம் கழலுதல்" (தாடகை வதைப் படலம்-50) என்று இதற்குக் கம்பராமாயணம் இலக்கணம் வகுக்கிறது.

ஆற்றல் வாய்ந்த எப்படையையும் வில்லால் எதிர்கொண்டு அழித்துவிட முடியும். எதிர்வரும் படையைத் துண்டதுண்டமாக ஆக்குவதற்குப் பயிற்சி மிகவும் தேவையாக இருக்கிறது.

தாடகை திரிசூலப் படையை வீசினாள். அது துண்டமாக அழியும் படியாக வில் எய்யும் பயிற்சியை இராமன் பெற்றிருந்தான். பகைவர் எளிமையாக வீசி எறிவது கல்மழை. இந்தக் கல் மழையை வில்லால் தடுப்பதற்கும் கடும்பயிற்சி வேண்டும். கல்மழை பகைவரிடமிருந்து வந்தால், அதை வில்மழையால் எங்ஙனம் தடுப்பது என்ற பயிற்சியை விசுவாமித்திரர் இராமனுக்குக் கற்பித்திருந்தார். கன்னிப் போரிலேயே இராமன் இத்தகைய கல்மழையைத் தடுத்து வெற்றி கண்டான்.

விசுவாமித்திரர் பாராட்டிய வெற்றி

தாடகையை வீழ்த்திய இராமனின் கன்னிப்போர் அவனது விற் பயிற்சிக்குக் கிடைத்த நற்சான்றாக அமைந்தது. இராமனது அம்பு பேராற்றலுடன் தாடகையின் மார்பில் புகுந்து வெளிவந்து மலையையும் மரத்தையும் உருவிச் சென்றது மட்டும் அல்லாமல் இப்பூமியின் மீதும் உருவிச் சென்றது. இதனை,

> தாடகை தன் உரம் உருவி,
> மலை உருவி, மரம் உருவி,
> மண் உருவிற்று ஒருவாளி
>
> (கார்முகப் படலம்-26)

(உரம்-மார்பு; ஒருவாளி - தனக்கு நிகர் இல்லாத ஒப்பற்ற அம்பு)

என்று விசுவாமித்திரர் குறிப்பிடுகின்றார்.

விசுவாமித்திரரே வியக்கும் வண்ணம் விற்பயிற்சி அமைந்தது இதனால் இராம இலக்குவர் யாரையும் எதிர் கொள்ளத் தக்க ஆற்றல் மேம்பாடு எய்தினர்.

வாழ்வாங்கு வாழப் பயிற்சி தேவை

பாவத்தை அழித்து அறத்தை நிலைநாட்டுவதற்கு வில்லைப் பயன்படுத்த வேண்டும் என்ற செய்தி, விசுவாமித்திரரால் இராம இலக்குவரின் இளம் உள்ளங்களில் பதிவு செய்யப்படுகிறது. இப்பயிற்சியே இராமன் பின்னாளில் வேலைக்கொண்டு பல வெற்றிகளைப் பெறுவதற்கு அடித்தளமாக அமைந்தது. விசுவாமித்திரர் அளித்த பயிற்சி வேலின் வெற்றியாகப் பின்னாளில் மாற்றம் பெற்றது. இதனை உளவியலார் 'பயிற்சி மாற்றம்' (Transfer of Training) என்று கூறுகின்றனர்.

இளைஞர்களுக்குப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கொடுக்கின்ற பயிற்சியானது பின்னாளில் அவர்கள் வாழ்க்கையைச் செம்மையாக நடத்துவதற்குப் பலன் தருவதாக இருக்க வேண்டும்.

தாடகையை வீழ்த்த உதவிய பயிற்சி சனகர் அவையில் இருந்தவில்லை வளைத்து சீதையை மணம் புரிய இராமனுக்கு உதவியது.

சுக்கிரீவனைச் சந்தித்த போது அவன் 'மராமரங்களின் மீது அம்பைச் செலுத்துக' என்று கூற, ஏழு மராமரங்களை வீழ்த்துவதற்கு உதவியது.

இறுதியில் தீயனாகிய இராவணனின் அகங்காரத்தை ஒழித்துச் சீதையை மீட்டு அறத்தை இப்புவி எங்கும் நிலை நிறுத்தவும் உதவியது.

இளமையில் பெறும் பயிற்சி, வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ உதவும் என்பது கம்பராமாயணத்தால் உறுதிப்படுத்தப்படுகிறது.

தவம் புரிதல்

உள்ளத்தை ஒரு முகப்படுத்தி உடலை வசப்படுத்தும் தவம் புரிதலைக் கம்பராமாயணம் வலியுறுத்துகிறது.

விசுவாமித்திரர் பல பருவங்கள் கடுந்தவம் புரிந்ததைக் கம்பன் மிக அழகாக எடுத்துப் பேசுகிறான்.

விசுவாமித்திரர் வடக்குத் திசையை அடைந்தார். அங்கே ஓரிடத்தில் அமர்ந்தார். தமது மலர் போன்ற கை விரல்களை மூக்கின் மேல் வைத்தார். இடை கலையால் - இடது மூக்கால் - வாயுவை உள்ளே இழுத்தார். அவ்வாறு செய்த பிராணாயாம முறை பின்வருமாறு: சுவாசத்தை உள்ளே இழுத்து பதினாறு மாத்திரை (கண் சிமிட்டும் நேரம் - 1 மாத்திரை) அளவு காலம் பூரித்தல் அதாவது உள்வாங்குதல் வேண்டும். பின்னர் அறுபத்து நான்கு மாத்திரை அளவு காலம் கும்பகம் அதாவது பிராண வாயுவைச் சமப்படுத்தி அடக்குதல் வேண்டும். பின்னர் முப்பத்திரண்டு மாத்திரை அளவு காலம் இரேசகம் அதாவது வாயுவை வெளியிடுதல் வேண்டும். இடைகலை என்பது, இடைகலை என்னும் நாடியிலிருந்து இடப்புற மூக்கால் வரும் சுவாசம் ஆகும். பிங்கலை என்பது பிங்கலை என்றும் நாடியிலிருந்து வலப்புற மூக்கால் வரும் சுவாசம் ஆகும். இத்தகு பிராணாயாமம் அனைத்தையும் விசுவாமித்திரர் மேற்கொண்டார். இவ்வாறு செய்த காரணத்தால் அவரது மூக்கின் துவாரங்கள் வருந்தின. இதனைக் கம்பன் 'இடாவு பிங்கலையான் நைய' என்று குறிப்பிட்டுள்ளான்.

விசுவாமித்திரர், இதயத்து ஊடு எழுத்து ஒன்று எண்ணித் தவம் புரிந்தார் என்றும் கம்பனில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பொருள் யாது எனில் விசுவாமித்திரர் மனத்திலே 'ஓம்' என்றும் பிரணவ மந்திரத்தைத் தியானம் செய்தார் என்பதாம். இவ்வாறு தியானத்தில் பல ஆண்டுகள் ஈடுபட்டு தவ ஒழுக்கத்தில் நீங்காமல் நிலை நின்றார்.

இதன் காரணமாக மூலாக்கினியால் கபாலம் வெடித்து விரிந்தது. கரும்புகைத்திரள் தாவி மேல் எழுந்தது. இதனால் எல்லா உலகமும் நடுங்கிற்று. விசுவாமித்திரரின் தவம் பற்றிக் கம்பன் கூறும் பாடல் வருமாறு:

வடாதிசை முனியும் நண்ணி, மலர்க் கரம்
நாசி வைத்து, ஆங்கு
இடாவு பிங்கலையான் நைய, இதயத்து
ஊடு எழுத்து ஒன்று எண்ணி,
விடாது பல்பருவம் நிற்ப,
மூலமா முகடு விண்டு
தடாது இருள்படலை மூடச்
சலித்தது எத்தலமும் தாவி (மிதிலைக் காட்சிப் படலம்-130)

என வரும் இப்பாடல் விசுவாமித்திரரின் தவத்தை உயர்வு நவிற்சியாகக் கூறினாலும் 'தவ வலிமையால் உலகை வசப்படுத்திக் கொள்ள முடியும்' என்ற உண்மையைப் புரிந்துக் கொள்ள முடிகிறது.

திருமூலர் தந்த பிராணாயாமம்

மேலும் பிராணாயாமம் பற்றி திருமூலர் கூறும் கருத்துகளை ஒப்பு நோக்குதல் வேண்டும்.

பிராணாயமம் என்பது பிராணனைக் கட்டுப்படுத்துதல் ஆகும். யோகாசனத்தில் இருப்பவர்கள் மூச்சுக் காற்றைக் கட்டுப் படுத்துதலே பிராணாயமம்.

பிராணாயாமத்தை முறைப்படி கைக்கொண்டு ஒழுகுபவர்களுக்கு, மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பஞ்சேந்திரியங்கள் அவர்கள் வயப்பட்டு அவர்களது விருப்பம் போல இயங்கும் என்று திருமந்திரம் கூறுகிறது. பிராணாயாமத்தைச் செய்யாது போனால், பஞ்சேந்திரியங்கள் அடங்காத குதிரையைப் போல வீழ்ந்துபட்டு அழியும்.

பிராணாயாமத்தைச் சரியாகச் செய்பவர்கள் மனம் மகிழும். சுறுசுறுப்பு உண்டாகும். உடல் வலிமை அடையும். இதனைத் திருமூலர்,

கள்ளுண்ண வேண்டாம்; தானே களிதரும்;
துள்ளி நடப்பிக்கும்; சோம்பு தவிர்ப்பிக்கும்;
உள்ளது சொன்னோம், உணர்வு உடையோருக்கே
(திருமந்திரம் - மூன்றாம் தந்திரம்-566)

என்று தெளிவுபடுத்துகிறார். கள்ளுண்டால் தான் களிப்பு வரும் என்று சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அக்கள்ளின் மகிழ்ச்சியைப் பிராணாயாமம் கொடுக்கும் என்பது திருமூலர் குறிப்பு.

பிராணாயாமத்தில் இடகலையால் மூச்சை இழுத்துப் பிங்கலையால் (வலது மூக்கால்) வெளி விட வேண்டும்.

இவ்வாறு பிராணாயாமம் செய்வதால் என்ன பயன் என்று பார்க்க வேண்டும். காற்றை இழுத்து வசப்படுத்தி அடக்கினால் உடல் பளிங்கைப்

போல மாசுமறுவின்றித் தூய்மை உடையதாகும். உடல் முதுமை அடைந்தாலும் இளமையான தோற்றத்தைக் கொடுக்கும்.

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கு ஒத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்

(மூன்றாம் தந்திரம்-569)

(பழுக்கினும் - முதுமை அடைந்தாலும்
பிஞ்சாம் - இளமை உடையதாகவே இருக்கும்)

இது திருமூலர் வாக்கு.

இவ்வாறு பிராணாயபாமம் செய்பவர்களுக்கு யமனையும் உதைக்கும் ஆற்றல் உண்டாகிவிடும்.

காற்றைப் பிடிக்கும் கணக்கு
அறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறி
அதுவாமே

(மூன்றாம் தந்திரம்-571)

என்பது திருமூலர் தவமொழி.

பிராணாயமத்தால் ஆன்மாவிடம் சிவம் பிரகாசிக்கும் என்று தெரிவிக்கப் பெற்றுள்ளது. வாயுவை நாடி சுத்தி செய்தால் உறுப்புகள் எல்லாம் சிவக்கும்; உரோமம் மிகவும் கருப்பு ஆகும். அத்தகையோரிடம் இறைவன் வெளிப்பட்டு நிற்பான் எனவும் திருமூலர் கூறுகின்றார்.

தியானம் என்பது யாது எனில் "ஒன்றிலேயே உள்ளம் நிலையாக இருப்பது" ஆகும்.

மனத்து விளக்கினை மான்பட எற்றிச்
சினத்து விளக்கனைச் செல்ல நெருக்கி,
அனைத்து விளக்கும் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே

(மூன்றாம் தந்திரம்-602)

மான் என்பது ஆணவம் என்னும் தீய குணமாகும். இத்தீய குணத்தை மனத்தை விட்டு வெளியேற்ற வேண்டும். சினம் என்னும் விளக்கையும்

அகற்ற வேண்டும். மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பொறிகளாகிய ஐந்து விளக்குகளை ஒரு சேரத் தூண்ட வேண்டும். இவ்வாறு செய்தால் மனத்துக்குள்ளே இருக்கின்ற 'சிவம்', என்றும் நீங்காத விளக்காக நிற்கும். விளக்கை வைத்தால் இருள் அழிந்து விடும். ஆணவம் என்றும் இருள் அழிந்தால் சிவமானது பிரகாசிக்கத் தொடங்கும். இவைகளே தியானத்தின் படிகளாகும்.

திருமூலர் கூறுகின்ற தியான நிலைகளையே கம்பன் தனது காப்பியத்தில் சுருக்கமாக விசுவாமித்திரரின் மூலமாகக் கூறி இருக்கின்றான்.

மூவகை உணர்வுகள்

காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று உணர்வுகளும் வரைமுறை கடந்து செல்லக் கூடாது. காமம் அளவுடன் அமைய வேண்டும்.

அலுவலகத்தில் நிருவாகத் தலைவர்கள் உண்டு. நிருவாகப் பொறுப்பில் இருப்பவர்கள் தமக்குக் கீழே வேலை செய்பவர்களை பணியின் நிமித்தமாகச் சற்றே கடிந்து பேசுவதில் தவறு இல்லை. அத்தகைய கோபத்தை யாரும் ஏற்றுக் கொள்வார்கள். மற்றவர்களை அச்சுறுத்துவதற்கான கருவியாகக் கோபத்தைக் கொண்டால் வெற்றி கிடைக்காது. அதனாலேயே "வெல்வது வேண்டின் வெகுளி விடல்" என்ற முன்னோர் மொழி தோன்றியது.

'மயக்கம்' என்பது ஒன்றைச் சரியாகப் புரிந்து கொள்ளாத தன்மையைக் குறிப்பிடுவதாகும்.

கற்று அறிந்தவர்களும் சில நேரங்களில் அறிவு மயங்கித் தவறாகப் புரிந்து கொண்டு விடுகின்றனர். இது இயல்பாக நிகழும் பிழையாகும். இதனை யாரும் ஏற்றுக்கொள்வர். எதனையும் எதிர்மறையாகக் காணும் மயக்கம் நன்மை தாராது.

காமம் வரையறை கடந்து செல்வதன் காரணமாக அகவாழ்வில் பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன. 'அது பெருந்தீமையான விளைவுகட்கு அடி கோலுவதையும் கதைகளும் காப்பியங்களும் வாழ்வியலை ஒட்டிக் காட்டுகின்றன' என்பர் ச.வே. சுப்பிரமணியன்.'

காமத்தைக் கடப்பதற்க ஞானமும் கல்வியும் மிகுதியும் தேவை என்பது கம்பனது தீர்ப்பு ஆகும்.

கற்றனர் ஞானம் இன்றேல்
காமத்தைக் கடக்கல் ஆமோ (3156)

என்ற கம்பனின் மொழியை நன்கு காணவேண்டும். காமம் என்பது கடல். அக்கடலைக் கடக்க உதவும் பாதுகாப்பான படகு கல்வியும் ஞானமும் ஆகும்.

'கல்வியால் காமத்தை வெல்லல் போலப்
பண்பாலும் வெல்லலாம்' [1]

என்பர் அறிஞர். [2]

காமம் என்பது மனிதனை ஆட்டிப்படைக்கிறது. இக்காமம், மனிதன் திசை தடுமாறப் பல வகைகளிலும் உந்துகிறது.

மெய்வாய் கண்முக்குச் செவி என்ற ஐந்து பொறிகளும் உள்ளத்தின் அடிப்படையில் தான் இயங்குகின்றன. மனமாசுகளை நீக்குகிற பயிற்சியை ஒருவனுக்கு 'ஞானம்' மட்டுமே தர முடியும். ஐந்து பொறிகளையும் அவற்றின் வழியே சென்றுவிடாமல் தடுத்து நிறுத்துகின்ற கலையை ஒவ்வொருவரும் மனப் பயிற்சியின் மூலம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒருவனுக்கு ஞானம் நிலைபெறும் போது, அவன் தவ வழியை மேற்கொள்ளத் தொடங்குகிறான்.

இந்தத் தவ வழியை உலகிற்குக் கற்றுத் தந்த பெருமை பாரதத்திற்கு உரியதாகும். கதைப் பாடல் வழியாக இக்கருத்தைப் போதிப்பதில் இராமாயணம் வெற்றி கண்டுள்ளது.

காமத்தை அடக்கத் தெரியாத இராவணனை, காமத்தை வென்ற இராமன் அடக்கி ஒழிப்பதே இராமாயணத்தின் சாரம்.

இராமாயணம் இன்றைக்கும் என்றைக்கும் பேசப்படும் கதையாக இருப்பதற்கு இதுவே மூல காரணம் 'புலன் அடக்கம்' என்பது பாரத நாடு உலகிற்கு வழங்கிய 'கொடை'யாகும்.

1. இளங்கோவும் கம்பனும்-ப-128
2. டாக்டர் ச.வே.சுப்பிரமணியன், இளங்கோவும் கம்பனும் ப.130

காமத்தால் கனலும் வெந்தீ
சீலத்தால் அழிவது (3170)

என்ற கம்பராமாயண வரிகளை பேருந்துகள், பள்ளிகள், கல்லூரிகள், அலுவலகங்கள், மக்கள் மன்றங்கள், பொது இடங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் எழுதி வைப்பது இன்றைய தேவையாக இருக்கிறது.

சூர்ப்பணகையின் காமக் கோலம்

இராமாயணத்தில் காமத்தால் ஏற்படும் மனத்திரிபைச் சூர்ப்பணகையின் கதை நமக்குக் காட்டுகிறது. சூர்ப்பணகையின் கதை காமத்தால் ஏற்படும் இரண்டு எதிர்மாறான விளைவுகளின் களமாக இருக்கிறது. ஒன்று காமம் கடிந்த தவ வாழ்க்கை மேற்கொண்டவர்களான இராம இலக்குவர்கள், காமத்தைத் தூண்டும் சூர்ப்ணகையைக் கண்டித்துத் தண்டிக்கிறார்கள். மற்றொன்று தனக்கு ஏற்பட்ட இழிவைத் தன் அண்ணனாகிய இராவணனிடம் மறைத்து, சீதையின் தோற்ற அழகை வருணித்து இராவணனின் உள்ளத்தில் காம வெப்பத்தை ஏற்படுத்தி அவன் மூலநாசம் அடைய வித்திட்டு அதில் வெற்றியும் காண்கிறாள்.

ஒரு நிகழ்ச்சியில் காமம் துரத்தப்படுகிறது. மற்றொரு நிகழ்ச்சியில் காமம் வரவேற்கப்படுகிறது. காமத்தை விரட்டியடித்த இராம இலக்குவர், காமம் கொண்ட இராவணனுடன் போராட வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் எதிரெதிர் திசையில் செல்லும் முரண் பாடான (Contrast) காட்சிகளாகக் கம்பராமாயணத்தில், கம்பசித்திரமாகத் தீட்டப்பட்டுள்ளன. இக்காட்சிகளைக் கம்பன் கைதேர்ந்த உளவியல் நுட்பத்தின பின்னணியில் படைத்திருக்கிறான் என்பது தான் குறிப்பிடத்தக்கது. இவ்விரண்டையும் தனித்தனி நாடகங்களைப் போலக் கம்பன் ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து வைத்து இக்காட்சிகளின் முரண்பாட்டை காப்பியத்தின் மையமாக ஆக்கியிருக்கிறான்.

இவற்றில் உள்ள முரண்பாட்டு நிலையை ஆராய்ந்து காணும் போது காமக் கொதிப்பு எத்தகைய தீய விளைவுகளுக்கு அடிப்படையாக அமைந்து விடுகிறது என்பதை மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

சூர்பணகையின் வரலாறு

சூர்ப்பணகை என்பவள் இராவணனின் தங்கை. இவள் இராண வனுக்கும் கும்பகர்ணனுக்கும் பின்னாலும், வீடணனுக்கும் முன்னாலும் பிறந்தவள். இவளது தாய் கேகசி என்பவள்.

இவளை இராவணன் வித்தியுச்சிகுவன் என்பவனுக்கு மணம் செய்து வைத்தான். ஒருமுறை இராவணன் திக்கு விசயம் செய்தான். அப்போது அசும நகரத்தினுள் புகுந்தான். இராவணன் போரிட்டு அழிக்கும் போது வித்தியுச்சிகுவனும் இராவணனால் அழிக்கப்பட்டான். தன் மைத்துனனை அழித்த பெரும்பாவம் செய்தான் இராவணன். இதன் காரணமாக சூர்ப்பணகையின் நெஞ்சத்தில் அழிக்கமுடியாத வடு ஒன்றை ஏற்படுத்தி விட்டான். தன் கணவன் இராவணனால், கொல்லப்பட்டமையால் சூர்ப்பணகை உள்ளம் நொந்தாள். அந்த நோக்காட்டின் விளைவாக இராவணனின் மீது அவளது அடித்தள மனத்தில் சொல்ல வொண்ணாத வெறுப்பு உணர்ச்சி ஏற்பட்டது.

நனவிலிமனம்

வியன்னாவைச் சார்ந்த உளவியல் மருத்துவராகிய சிக்மண்ட் பிராய்ட் (1856-1939) கூறுவதைப் போல, மேற்கூறப்பட்ட வெறுப்பு உணர்ச்சியானது சூர்ப்பணகையின் அடிமன ஆழத்தில் நனவிலி மனத்தில் (Unconcious mind) நசுக்கப்பட்டது. இதன் வெடிப்பாகவே சூர்ப்பணகை, இராவணன் மூலநாசம் பெற, அவன் மனத்தில் சீதையைச் சிறை வைக்குமாறு தூண்டுகிறாள் என்பதைப் பின்னர்க் காண்போம்.

சூர்ப்பணகை இராவணனிடம் முறையிடல்

இந்த வெறுப்புணர்ச்சி அவள் உள்ளத்தில் புதைந்து கிடந்தது. அவள் இராவணனிடம் ஓடினாள். அவன் காலில் விழுந்து கணவன் அழிந்த அவலத்தை முறையிட்டாள். இராவணன் அவளுக்கு ஆறுதலும் அமைதி மொழிகளும் கூறினான். அவளுடைய கோபம் தணியுமாறு அவளுக்கு ஒரு இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொடுத்தான்.

சூர்ப்பணகையின் இராச்சியம்

தண்டகாரணியம் என்பது ஒரு மாபெரும் காடு. அங்கே சனத்தானம் என்றோர் இடம் இருக்கிறது. அங்கு ஓர் இராச்சியத்தைச் சூர்ப்பணகைக்காக உருவாக்கினான். சூர்ப்பணகையிடம் இராவணன், "தங்கையே! நீ, இந்த இராச்சியத்தில் மிகுந்த மேன்மையுடன் வாழலாம்" என்று கூறினான். சூர்ப் பணகைக்கு உதவியாக தூடணன் என்னும் சேனாதிபதியின் தலைமையில் பெரும் படையை அனுப்பி வைத்தான். இராவணனின் தாயினுடன் பிறந்தவளின் மகன் கரன். சூர்ப்பணகை இடும் கட்டளைகளுக்கு ஏற்பச் செயல்படுவதற்காகவும், அவளுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்காகவும் கரன் என்பவனையும் அனுப்பினான்.

பஞ்சவடியில் இராமனைக் காணுதல்

சூர்ப்பணகை சனத்தானம் என்ற இடத்தில் குடியேறினாள். அவள் அவ்வாறு அங்கே குடியேறியதால் காட்டில் வாழ்பவர்களுக்குப் பெருத்த இடையூறு ஏற்பட்டது. அங்கே அவள் அங்கும் இங்கும் திரிந்தாள்.

அப்போது இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூவரும் கோதாவரி ஆற்றங்கரையில் உள்ள பஞ்சவடி என்னும் ஆசிரமத்தில் தங்கி இருந்தனர். பஞ்சவடி என்பது ஆலமரம், அரசமரம், வில்வமரம், நெல்லிமரம், அசோகமரம் என்னும் மரங்கள் சூழ்ந்த தொரு பூஞ்சோலையாகும்.

அந்தப் பூஞ்சோலை அருகே சூர்ப்பணகை வந்தாள். இராமபிரானது திருமேனி அழகைக் கண்டு வியந்தாள். அவன் மீது ஏற்பட்ட காமம் காரணமாகத் தனது உருவத்தை மாற்றிக் கொண்டு பேரழகு வாய்ந்த உருவத்துடன் சென்று இராமனிடம் காமத்தைத் தூண்டும் பல சொற்களைக் கூறினாள். சூர்ப்பணகையின் அழகுக் கோலத்தால் இராமபிரானுக்கு எவ்வித மயக்கமும் ஏற்படவில்லை. சூர்ப்பணகையின் சொற்களுக்கு உடன்படாமல் இராமன் மறுத்தான். இராமன் அருகிலே சீதை இருப்பதைக் கண்டாள். அழகின் திருவுருவமான சீதை என்னும் மனைவியைப் பெற்றுள்ள காரணத்தாலேயே இராமன் நம்மை மறுக்கின்றான் என் நினைத்தாள். எனவே சீதையைத் தூக்கிச் செல்லத் துணிந்தாள்.

சீதையைத் தூக்கிச் செல்ல முயற்சித்தல்

மறுநாள் பஞ்சவடி அருகே வந்தாள். இராமன் விடியற் போதில் நீராடச் சென்ற நேரம் பார்த்து சீதையைத் தூக்கத் தொடங்கினாள். வில்லைக் கையில் ஏந்தி அங்கே காவல் காத்து நின்ற இலக்குவன் சூர்ப்பணகையின் அபாத செயலைக் கண்டு விரைந்து ஓடினான். அவள் கூந்தலைப் பற்றி இழுத்தான்; உடை வாளை எடுத்தான். பெண்கொலை செய்வது இழுக்கு என்று கருதினான். எனவே உடைவாளால் அவள் காதுகளையும் மூக்கையும் அரிந்தான்.

இராமனிடம் மணம் செய்து கொள்ள வேண்டுதல்

அதனால் சூர்ப்பணகை அரற்றினாள்; அழுதாள்; மீண்டும் இராமனிடம் ஓடினாள். தன்னை மணம் செய்து கொள்ள வேண்டும் என்று மன்றாடினாள். இராமன் மணம் செய்து கொள்ளவில்லை யானால் இலக்குவனுக்காவது மணம் செய்து கொடுக்க வேண்டும் என்று வேண்டினாள். இராமன் இவற்றுக்கெல்லாம் செவிசாய்க்காது அவளை விரட்டியடித்தான்.

கரன் போருக்கு எழுதல்

சூர்ப்பணகை ஓடிச்சென்று கரன் என்பவனின் காலில் விழுந்து முறையிட்டாள். இராவணனுக்காக நான் சீதையைத் தூக்கிச்செல்ல முற்பட்ட போது இரண்டு மானுடர்கள் என்னை அங்க பங்கப் படுத்திவிட்டார்கள் என்று அழுதாள். கரன் பெரும் படையுடன் புறப்பட்டான். போரில் கரனையும் மற்றும் பல அரக்கர்களையும் இராமன் வெற்றி கொண்டான். இராவணனுக்கு இச்செய்தியைச் சொல்ல சூர்ப்பணகை ஓடினாள். அங்கே இராவணனின் பாதங்களில் விழுந்து புரண்டாள். சீதை என்னும் பேரழகியை உனக்குத் தருவதற்காகத் தூக்கிய போது என் மூக்கும் முகமும் அறுபட்டேன் என்று பொய் கூறினாள்.

காம வலைப் பின்னல்

சூர்ப்பணகையின் வரலாறு இவ்வாறு இருக்க, அவளது காமவலைப் பின்னலைக் கம்பன் எங்ஙனம் நுட்பத்துடன் பின்னுகிறான் என்பதைக் காண வேண்டும்.

தசரதச் சக்கரவர்த்தியின் கட்டளையைத் தலைமேல் ஏற்றவன் இராமபிரான். அக்கட்டளையின் காரணமாகக் காட்டுக்கு வந்துள்ளான். தந்தை சொல் மிக்க மந்திர மில்லை என்பதற்கு ஏற்ப அவன் தம்பியொடும் கானகம் போந்து தவ முனிவர்களைச் சந்தித்து, தவ வாழ்க்கையை மேற்கொண்டுள்ளான்.

இராமனின் இத்தகைய தவ வாழ்க்கையும் சூர்ப்பணகையின் கண்களுக்கு அழகாகவே தோன்றுகிறது. ஆனால் இராமன் தவம் செய்வது குறித்து அவள் வருத்தம் கொண்டாள். ஏனெனில் இத்தவத்தால் இராமனின் உருவ அழகு வீண்பட்டுப் போகுமே என்பதே அவளது வருத்தத்திற்குக் காரணம் ஆகும். மேலும் அவள் "தவம்" என்கிற பண்பு மிகுந்த தவம் செய்திருக்க வேண்டும்; அதனால் தான் இராமன் தவம் செய்யும்படியாக வாய்த்திருக்கிறது" என்றும் எண்ணுகிறாள்.

'நளின நட்டாத்தான்
தவஞ்செயத் தவம்செய்த தவம் என்? என்கின்றாள்'
(சூர்ப்பணகைப் படலம்-18)

என்றமையால் தவத்தின் காரணமாக இராமபிரானுக்கு ஏற்பட்ட ஒளியைச் சூர்ப்பணகை தவறாக எடை போட்டு விட்டாள் என்பது தெரிய வருகிறது.

சூர்ப்பணகை காமவல்லி ஆதல்

இராமனது அழகில் ஈடுபட ஈடுபட அவன் மார்பைத் தழுவ வேண்டும் என்ற துடிப்பு அவளுக்கு மேலிட்டது. எனவே இராமன் எதிரே சென்று நிற்கத் துணிந்தாள்.

அரக்கர்கள் தமது வடிவத்தை மாற்றிக்கொண்டு வேறு வடிவம் எய்தும் ஆற்றல் உடையவர்கள். எனவே சூர்ப்பணகை மெல்லிய இடையினை உடைய மிகவும் அழகு வாய்ந்த பெண்ணாகத் தன்னை உருமாற்றம் செய்து கொண்டாள்.

கற்பகமரம் ஈன்று எடுத்த காமவல்லிக் கொடி போன்ற தொரு பெண் வடிவம் பெற்றாள். உடல்தான் பூங்கொடி. ஆனால் உள்ளமோ காமத்தின் விளநிலமாகவே இருந்தது. வாசம் நிறைந்த தேனால் ஆக்கப்பெற்ற

சொற்களைக் கொண்டாள். சாயலும் நடையும் மயில் போல் ஆனாள். அவள் நடையைக் கம்பன் வருணிக்கும் விதத்தைச் சுவைக்க ஆயிரம் உள்ளங்கள் வேண்டும்.

கானில் உயர் கற்பகம் உயிர்த்த கதிர்வல்லி
மேனி நனி பெற்று, விளைகாமம் நிறை வாசத்
தேனின் மொழியுற்று இனிய செவ்வி
நனி கொண்டு ஓர்
மானின் விழி பெற்று மயில் வந்தது என வந்தாள்
(சூர்பணகைப் படலம்-33)

இராமன் எதிரே நின்ற அவளைப் பார்த்து, 'என்ன காரியமாக வந்திருக்கிறாய்?' என்று கேட்டான்.

மரபு முரண்பாடு

சூர்ப்பணகை தான் வந்த காரியத்தை இராமன் முன்னாலே எடுத்து உரைப்பது மரபுகளுக்கு முற்றிலும் முரண்பாடாக இருக்கிறது. அதனைச் சூர்ப்பணகை உணர்ந்தே கூறுகிறாள். "தாம் உற்ற காமத்தைத் தாமே கூறுவது என்பது அருங்குல மகளிர்க்கு உரியது அன்று. இருப்பினும் நான் என் செய்வேன்? மன்மதனின் கொடுமையைத் தடுத்து என்னை நீயே பாதுகாக்க வேண்டும்" என்றாள் அவள்.

சூர்ப்பணகையின் பேச்சு இராமனின் உள்ளத்தில் ஐயம் ஏற்படச் செய்தது. அவள் பேரழகு படைத்திருப்பினும் இராமனுக்குக் காமம் ஏற்படாமல் பரிகாசமே ஏற்படுகிறது. எனவே அவளுடன் பலவாறாகப் பரிகசித்துப் பேசுகிறான்.

சூர்ப்பணகை எழுப்பிய காமக்கனல் இராமனை ஏதும் செய்யவில்லை. அக்கனல் பரிகாசப் பேச்சாகவே அவிந்தது. சூர்ப்பணகையின் மனத்தைக் 'கல்நெடு மனம்' எனவும், அவளது பேச்சைக் 'கள்ளவாசகம்' (சூர்ப்பணகைப்படலம்-69) எனவும் இராமன் கடிந்து ஒதுக்குகிறான்.

இலக்குவனால் அங்க பங்கப்பட்ட பின்னரும் தன்னைக் காண வந்த இராமனிடம் சூர்ப்பணகை, "எனது மூக்கு அறுபட்டாலும் நான் உம்மிடம்

கொண்ட காதல் குறையவில்லை; எனவே இந்தப் பழியைத் துடைக்க என்னுடனே கூடி வாழ்வீர்!" என்று பலவாறு புகன்று வேண்டினாள். அவள் காதும் மூக்கும் தொலைந்தனவே அன்றி அவளது காமம் சிறிதும் குறையவில்லை.

மனிதர்கள் என்று கருத வேண்டாம்

சூர்ப்பணகையின் காமச் சொற்களுக்கு எதிர்மாறக இராமன் பேசினான்: "உனது தாயைப் பெற்றவள் தாடகை. அத்தாடகையின் உயிர் கவர்ந்த அம்பு என்னிடம் உண்டு! எனவே பெண்கொலை செய்யமாட்டேன் என்று கருதவேண்டா! அது மட்டும் அன்றி நான் இப்போது தவ வாழ்க்கையை மேற் கொண்டு இருக்கின்றேன். நான் தோன்றி இருப்பதன் இன்றியமையாகக் குறிக்கோள் அரக்கரது குலத்தை அழிப்பதே ஆகும்" என்று சூர்ப்பணகை அஞ்சும்படியாகக் கூறினான்.

'இகல் அரக்கர்
குலம் தொலைப்பான் தோன்றி நின்றேன்'

(சூர்ப்பணகைப் படலம்-135)

என்று தனது அவதார நோக்கத்தை இராமன் கொடும் அரக்கியிடம் கூறினான்.

மேலும் இராமன் கூறினான்:

"நாங்கள் தசரதத் சக்கரவர்த்தியின் புதல்வர். எங்கள் தாயருள் ஒருத்தி கைகேயி. அவளது கட்டளைக்கு இணங்க, காட்டை வந்து அடைந்தோம். வேதியரும் மாதவரும் கேட்டுக் கொண்டமையால் பெரும் படையை உடைய அரக்கர் குலத்தை முற்றும் அழித்த பின்பே, எங்களது நகரமாகிய அயோத்தியை அடைவோம். இதை நீ நன்கு புரிந்து கொள்வாயாக!

இராக்கதருக்கு எதிராக நிற்க மாட்டாமல், தேவர்கள் தோற்றுப் போனார்கள். எங்கள் இருவரையும் சாதாரண மனிதர்கள் என்று நீ கருதிவிடாதே! இராக்கதர், இயக்கர், மிடலோர் என்று நீ குறித்துக் கூறிய யாவரையும் எங்கள் எதிரே கொண்டு வருவாயானல், உன் முன்னிலை யிலேயே அவர்களை எல்லாம் கொன்றிடுவோம்!" என்று இராமன் காட்டுக்கு வந்த குறிக்கோள் பற்றித் தெளிவாகக் கூறி அவளை விரட்ட முயன்றான்.

அவ்வரக்கி இராம இலக்குவர்பால் காமக் கனலை எழுப்ப எவ்வளவு முயன்றும் அது நடைபெறவில்லை என்பதும், அதற்கு எதிர்மாறாக வஞ்சக அரக்கரின் கொடுமையைக் களைந்து எறிவதே தமது கானக வாழ்க்கையின் நோக்கம் என இராமன் கூறியதும் இங்கே மிகவும் கவனிக்கத் தக்கவை ஆகும்.

காமப்புதை சேறு

காமம் என்பது எல்லாவற்றையும் மறைத்து விடும் என்பதற்குச் சூர்ப்பணகையின் பேச்சு சிறந்த எடுத்துக்காட்டு.

இராவணனை வஞ்சம் தீர்க்க வேண்டும் என்ற அவளது அடிமன ஆழத்தில் உள்ள உணர்வு இங்கே வெளிப்படுவதையும் காண்கின்றோம்.

அவள் இராமனிடம் தன் காமப்பசி தீரத் தன்னை மணம் செய்து கொள்ள வேண்டியது போது, இராமன் அரக்கர் குலத்தை அழிக்கப் புறப்பட்ட ◦◦ன்னை 'நீ மணம் செய்து கொள்ள வேண்டுவது வேடிக்கையாக இருக்கிறது' என்று கடுஞ்சொற்களால் அதட்டினான் என்பதை மேலே கண்டோம். அப்போது அவள் இராமனிடம், "அரக்கர்கள் கள்ளத் தன்மை உடையவர்கள்; நல்லறிவு இல்லாதவர்கள். அவர்களுடனே போருக்குத் தயாராக இருப்பதாகக் கூறுகின்றீர். நம் உடலில் உள்ள ஐந்து பொறிகளும் பல மாயங்களைச் செய்வது போல அவர்களும் போர்க்களத்தில் பல மாயங்களைச் செய்யும் இயல்பு கொண்டவர்கள். மாயத்தை மாயத்தால் தான் அழிக்க முடியும். எனவே அரக்கர் தந்திரங்களை நான் போர்க்களத்தில் தடுத்து நிறுத்தி உங்களுக்கு வெற்றியை ஈட்டித் தருவேன். என்னை மணம் செய்து கொள்வீரானால் உங்களுக்குப் போர்க்கள வெற்றியும் எளிது ஆகும்' என்று புகன்றாள்.

பல மாயங்கள் தரும் பொறிகள்
அறிந்து அவற்றைத் தடுப்பேன்

(சூர்ப்பணகைப் படலம்-139)

என்பதால், சூர்ப்பணகை காமத்திற்காக எதையும் செய்யத் துணிந்தவள் என்பதும், அரக்கர் குலம் மூலநாசம் பெறுதல் என்பதே அவள் அடிமன ஆழத்தில் புதைந்து கிடப்பது என்பதும் புலப்படுத்தப்படுகின்றன. காமம்

கிட்டாத விடத்து அது எத்தகைய பின்விளைவுகளை மனத்தில் உண்டு பண்ணும் என்பதற்குக் கம்பனின் இவ்வரிகள் சான்றாக நிற்கின்றன.

காமத்தின் எதிர்மறை விளைவு

சூர்ப்பணகையின் காமச் சொற்கள் இவ்வாறு இருக்க, இளையவனாம் இலக்குவன், இராமனிடம், 'இவளை இப்போது நாம் கொல்லாது விடுவோமானால் இவள் மேலும் மேலும் நம்மை அலைக்கழிப்பாள். எனவே இவளைக் கொல்வதற்குக் கட்டளை இட வேண்டும்' என்று கேட்டான். அதற்கு இராமபிரான், இவள் தானாகவே செல்லவில்லை யானால் இவளைக் கொன்றிடுக' என்று கூறினான். அதனைக் கேட்ட சூர்ப்பணகைக்கு இங்கே இன்னும் சிறிது நேரம் நின்றிருந்தால் இவர்கள் தன்னைக் கொன்றிடு வார்கள் என்ற அச்சம் ஏற்பட்டது. அப்போது அவளது காமம் முற்றிப் போன வஞ்சகமாக மாறியது. 'உங்களுக்குக் கூற்றுவனாகக் கரனை அழைத்து வருவேன்' என்று சென்று கரனின் பாதங்களில் வீழ்ந்து அரற்றினாள்.

கரன் இராமனுடன் செய்த போரில் தன் படைகளுடன் வீழ்ச்சியுற்றான். அதனால் சூர்ப்பணகை வேறு வழியின்றி இராவணனின் அவைக் களத்தை அடைந்தாள்.

மண்டபம் உண்டு, சுதந்திரம் இல்லை

இராவணனின் அவைக் களச் சிறப்பைக் கம்பன் இருபத்து மூன்று பாடல்களால் மிகவும் விரிவாகக் கூறுகிறான்.

இராவணன் அரசு வீற்றிருந்த மணிமண்டபம் தெய்வத் தச்சனாலே சிற்ப நூலறிவு முழுமையும் வெளிப்படுமாறு கட்டப்பட்டதாகும். அவனுடைய வீரக் கழலில் இராக்கதர் முதலானோரின் நாயகர்கள் வீழ்ந்து வணங்கினார்கள். தேவர் அசுரர் முதலியோர் மலர் சொரிந்து அவனை வரவேற்றனர். வித்தியாதரர் உள்ளிட்ட அரசர் அனைவரும் கைகளைத் தலையின் மீது கூப்பி, எந்த நேரத்தில் தங்களை இராவணன் பார்ப்பானோ என்ற அச்சத்தால் தவித்தனர். அங்கே தேவர்கள் அடிமை செய்தனர். யாருக்கும் எவ்விதச் சுதந்திரமும் இல்லை.

இவை மட்டும் அன்றி அந்த அவைக்களத்தில் ஏராளமான பல்வகைப் பெண்கள் குழுமி இருந்தனா். அவர்கள் கரிய பெரிய கண்கள் படைத்த வர்கள். அவர்களது பார்வையின் பரப்பு, வெள்ளம் போல இருந்தது. அந்த வெள்ளத்துக்கு இடையில்தான் இராவணன் இருந்தான் எனக் கம்பன் இராவணனின் அவைக்கள வருணனையை முடிக்கின்றான்.

'இருந்தனன்
கருந்தடங் கண்ணியர் கண்ணின்
வெள்ளத்தே'

(மாரீசன் வதைப் படலம்-23)

என்ற கம்பனின் குறிப்பு, காமத்தின் கீற்று அந்த அவைக்களத்தில் படிந்திருப்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

அறிவின் நிறைவு அவையில் இல்லை

தும்புரு, நாரதன் முதலானவர்கள் அந்த அவையில் ஏவல் செய்கின்றார்களே தவிர அறிவு நிறைந்த பேச்சுக்களைப் பேசி அந்த அவையை அவர்கள் அலங்கரிக்கவில்லை என்பது மேற்கண்ட வருணனையால் தெரியவருகிறது.

அந்த அவையில் இரத்தம் சொரிய சூர்ப்பணகை வடக்குத் திசை வாயிலின் வழியாக உள்ளே நுழைந்தாள். இராவணனின் பாதத்தில் விழுந்து புரண்டாள். இலக்குவனால் தான் அங்க பங்கப்பட்டதைக் கூறி ஓலமிட்டாள். அப்போது இராவணன் உன் மூக்கு முதலானவற்றை அவர்கள் அரியும் அளவுக்கு 'நீ இடை இழைத்த குற்றம் என்னை கொல்?' (மாரீசன் வதைப்படலம்-66) என்று வினவினான். இவ்வினாவைத் தொடுக்கும் வரை அவன் அரசனாகத்தான் இருந்துள்ளான். அதற்குப் பின்னால் வரும் சூர்ப்பணகையின் பதிலால் அவன் காமக் கனல் ஏறப் பெறுகின்றான்.

என்வயின் உற்ற குற்றம்,
'யாவர்க்கும் எழுத ஒணாத
தன்மையன் இராமனோடும்
தாமரை தவிரப் போந்தாள்

மின்வயின் மருங்குல் கொண்டாள்,
வேய்வயின் மென்தோள் கொண்டாள்
பொன்வயின் மேனி கொண்டாள்,
பொருட்டினால் புகுந்தது' என்றாள்

(மாரீசன் வதைப்படலம்-67)

என வரும் பாடலால் சூர்ப்பணகை தனக்கு ஏற்பட்ட துன்பம் ஒரு பெண்ணால் ஏற்பட்டது, அதுவும் பேரழகு கொண்ட பொன்போன்ற மேனி கொண்ட ஒருத்தியால் நேர்ந்தது என்று கூறி அதை ஒரு புதிர் போல இராவணனின் நெஞ்சத்தில் பதிய வைக்கின்றாள்.

புதிரின் விளக்கம்

அவள் போட்ட புதிருக்கு விளக்கமாக சீதையின் அங்கங்களை வருணிக்கின்றாள். தனக்கு நேர்ந்த அவலத்தை விடுத்து, இராவணனுக்கு அவலம் சூழ்பவளான அவ்வரக்கி,

தோளையே சொல்லுகேனோ,
சுடர் முகத்து உலவுகின்ற
வாளையே சொல்லுகேனோ

(மாரீசன் வதைப் படலம்-73)

என்று சீதையின் வடிவ அழகை இராவணனின் உள்ளத்தின் அடி ஆழத்திற்குக் கொண்டு செல்வதிலேயே குறியாக இருந்தாள். இறுதியாக

அன்னவள் தன்னை உன்பால்
உய்ப்பல் என்று அணுகலுற்ற
என்னை அவ்விராமன் தம்பி
இடைபுகுந்து இலங்கு வாளால்
முன்னை மூக்கு அரிந்து விட்டான்
முடிந்தது என் வாழ்வு

(மாரீசன் வதைப்படலம்-80)

என்று துணிந்து பொய் கூறினாள்.

நீரும் நெருப்பும்

சூர்ப்பணகை மூக்கு அறுபட்டேன் என்று கூறியபோது, தீப்புறப்பட்ட தனது கண்களால் சிவந்தான். அவ்வரக்கியிடம் கேட்டான்: "தண்ட காரணியத்தில் உனக்குத் துணையாக நான் அனுப்பிய கரன் முதலானவர்கள் என்ன செய்தார்கள். எவ்வித வலிமையான துணையும் இல்லாத இராமன் இலக்குவன் என்ற அந்த இரண்டு மனிதர்களை வாளால் கொல்லாமல் என்ன செய்தார்கள்?" என்பது இராவணனின் வினா.

வன் துணை இலா இருவர்
மானிடரை, வாளால்
கொன்றிலர்களா நெடிய
குன்றுடைய கானின்
நின்ற கரனே முதலினோர்?

(மாரீசன் வதைப் படலம்-62)

என்ற வினாவின் போது இராவணன் அரசனாகக் காட்சி தருகின்றான். மேலும் சூர்ப்பணகை, 'கரன் முதலானோர் இராமனின் அம்பால் மூன்று நாழிகைக்குள் வீர சுவர்க்கம் புகுந்தனர்' என்று கூறிய விடையால் கோபம் உற்றான். அதுமட்டும் அன்றி, கார் மழைமேகம் போலச் சோகத்தால் கண்ணீர் வடித்தான். இக்காட்சியைக் கம்பன் மிகுந்த இலக்கிய நுட்பத்துடன் படைத்திருக்கிறான். கரன் முதலான தம்பியர், இராமன் தனியாக நின்று செய்த போரில் மடிந்தனர் என்ற செய்தி செவியில் புகும் முன்னர் கண்களினின்று சோகத்தால் கண்ணீர் சொரிந்தான். உடனே பெருங்கோபம் அவன் உள்ளத்தில் மூண்டது. அதன் வெளிப்பாடாக அவன் கண்களில் நீரும் நெருப்பும் தோன்றின என்பது மிகவும் அரியதொரு இலக்கிய வழக்கு.

நீரொடு நெருப்புக் கான்ற
நிறை நெடுங் கண்கள் எல்லாம்

(மாரீசன் வதைப்படலம்-65)

என்ற பாடல் கம்பனின் இலக்கிய மகுடத்திற்கோர் முத்தாய்ப்பு.

மன்னனுக்குரிய இத்தகைய உணர்வுகளை வெளிப்படுத்திய இராவணன் சூர்ப்பணகையின் சொற்களால் மனம் திரிந்து 'காமுகனாக' மாற்றம் பெறுகின்றான்.

காமக்கனல்

மனத்தின் அடிப்படையில் தீமை உருவாகிறது என்பதற்கு இக்காட்சி மாற்றம் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது. இந்த இடத்தில் கம்பன் கூறும் பாடல் பல்வேறு கருத்துகளை உள்ளடக்கிய 'தத்துவப் புதைய'லாக அமைந்திருக்கிறது.

கோபமும் மறனும் மானக்
கொதிப்பும் என்ற இனைய வெல்லாம்,
பாபம் நின்ற இடத்து நில்லாத்
தன்மம் போல் பற்று விட்ட;
தீபம் ஒன்றை ஒன்று
உற்றால் என்னலாம் செயலிற்புக்க
தாபமும் காம நோயும்
ஆருயிர் கலந்த வன்றே

(மாரீசன் வதைப் படலம்-82)

(தன்மம்-தருமம்; தாபம்-காமத்தவிப்பு)

என்ற பாடலைக் கம்பன், இராவணனின் மனமாற்றம் குறித்துச் சொல்ல வேண்டியவற்றை எல்லாம் தொகுத்து ஒரு பொதிவாக நமக்குத் தந்திருக்கிறான். ஆழமாகச் சிந்திக்கத்தக்க அருமையான பொருள்கள் பல இதிலே நிறைந்திருக்கின்றன.

முறை துறந்த மன்னன்

மன்னவனின் பணி, தன்னிடம் முறையிடுபவரின் குறைகளைக் கேட்டு அக்குறைகளை நீக்குவதே ஆகும்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்
மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்

(இறைமாட்சி-குறள் எண்:388)

என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவர். முறை செய்தல் என்பது நீதியை நிலைநாட்டுவது ஆகும். நீதியை நிலைநாட்டும் போது தன உயிர் போகினும்

அதற்கு அஞ்சாது பிறர் குறை கள்ளவதே அரசனுக்கு மாட்சி ஆகும். சிபி என்ற மன்னன் ஒரு புறாவுக்காகத் தன்னுயிர் ஈந்தான் என்பது பண்டைய வரலாறு. காற்றில் அசைந்து ஆடிய கொடிக்காகத் தனது பெற்றேரையே பாரி மன்னன் கொடுக்கவில்லையா? மன்னனுக்கு அழகு நீதியை ஆராய்வதே ஆகும்.

ஆனால் இராவணன் மூக்கு அறுபட்ட சூர்ப்பணகையால் தனது குல மானம் அழிந்ததை மறந்து விட்டான்.

தீயவினை நிலை கொள்ளும் இடத்தில் தருமம் நிலைத்து நிற்பது இல்லை. அதுபோல காமம் நிலை நின்ற இடத்தில் கோபம், வீரம், மானத்தால் உண்டாகும் கொதிப்பு ஆகியவை நிற்பது இல்லை. ஒரு தீபத்தை மற்றொரு தீபம் ஏற்றும் போது அந்நெருப்பு மற்றொன்றையும் பற்றிக்கொள்ளும். அது போல காமத்தால் உண்டாகிய தவிப்பு என்ற நெருப்பால் காம நோய் என்ற பெரு நெருப்பு தூண்டி விடப்பட்டது. காமத் தவிப்பும் காம நோயும் இராவணனின் உயிரில் ஒன்றிக் கலந்து விட்டன.

தாபமும் காம நோயும்
ஆருயிர் கலந்த அன்றே

(மாரீசன் வதைப் படலம்-82)

என்ற பாடலில் 'உயிர் கலத்தல்' என்ற தொடர் முக்கியத்துவம் பெறுகிறது.

என்றும் நிலைப்பது மனம்

உயிருடன் கலக்கும் ஒரு பண்பு பல பிறவிகளுக்குத் தொடரும் என்பது இங்கு ஆராய்வதற்கு உரியதாகும்.

"உயிர் தங்குவதற்கு உடல் தேவை. உயிரை முழுநிலைப் படுத்துவதற்கு மனம் தேவை.

கற்று அறிந்தவர்களும் சில நேரங்களில் அறிவு மயங்கித் தவறாகப் புரிந்து கொண்டு விடுகின்றனர். இது இயல்பாக நிகழும் பிழையாகும். இதனை யாரும் ஏற்றுக்கொள்வர். எதனையும் எதிர்மறையாகக் காணும் மயக்கம் நன்மை தாராது.

காமம் வரையறை கடந்து செல்வதன் காரணமாக அகவாழ்வில் பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன. 'அது பெருந்தீமையான விளைவுகட்கு அடி கோலுவதையும் கதைகளும் காப்பியங்களும் வாழ்வியலை ஒட்டிக் காட்டுகின்றன' என்பர் ச.வே. சுப்பிரமணியன்.

உயிரைக் காட்டிலும் உடலைக் காட்டிலும் மனத்திற்குத் தான் முதலிடம் தரவேண்டியவர்களாக இருக்கிறோம். உலக உயிர்கள் அனைத்திற்கும் உடலும் உயிரும் உண்டு. ஆனால் மனிதத்திற்குத் தான் சிறப்பு நிலையாக மனம் உள்ளது. இன்று நாம் திருவள்ளுவரின் மனத்தோடுதான் பேசிக் கொண்டு இருக்கிறோம். திருக்குறள் என்ற நூல் திருவள்ளுவரின் மனத்தின் வெளிப்பாடு. அந்த மனத்தின் வெளிப்பாட்டைத் தருவதற்கு அவருடைய உயிரும் உடலும் உதவின. வள்ளுவர் உயிராலோ, உடலாலோ அத்திருக் குறளை எழுதவில்லை. மனத்தால் எழுதினார். இதில் இருந்து நாம் தெரிவது, மனம் என்றும் நிலைபெறுகின்ற ஒன்று. அவர் உடலும் உயிரும் இன்று இல்லை. அவர் மனம், குறள் காரணமாக என்றும் வாழ்ந்து கொண்டு இருக்கிறது. இதனைத் தான்,

> ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
> எழுமையும் ஏமாப்பு உடைத்து (குறள் 398)

என்று வள்ளுவர் கூறுகிறார்.

கற்ற கல்வியானது உயிரோடு கலந்து விடுகிறது. அநத உயிர் எத்தனை பிறவி எடுத்தாலும், அக்கல்வியும் உயிரோடு கலந்து விட்டதால் எல்லாப் பிறவிகளலும் அக்கல்வி தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. என்று கூறுவர் அறிஞர்.[1]

கல்வி உயிருடன் கலப்பதால் ஏழு பிறவிகளுக்கும் தொடரும் என்ற கருத்தை மேற்கூறிய விளக்கத்தால் அறிகின்றோம்.

உயிரில் கலந்த திருவாசகம்

அருட்பிரகாச வள்ளலார் மாணிக்க வாசகரின் திருவாசகத்தைப் பற்றிப் பாடும்போது,

1. திருக்குறள் முழக்கம், ப.12

வான் கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால், நற்கருப்பஞ் சாற்றினிலே,
தேன் கலந்து, பால்கலந்து, செழுங்கனித்
தீஞ் சுவை கலந்து என்
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல்
இனிப்பதுவே

என்று கூறுகின்றார்.

திருவாசகத்தின் தித்திப்பு தமது உடலிலும் உயிரிலும் கலந்தது என்று வள்ளலார் குறிப்பிடுகின்றார். உயிரில் கலந்த அந்த இனிமை அவர் பாடிய திருவருட்பாவில் கலந்திருந்தமையை,

'வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்
மயில் குயில் ஆச்சுதடி'

என்று அவர்தம் வாயாலேயே தெரிவிக்கின்றார். மயில் போன்ற நடராசப் பெருமான் அவர் உள்ளத்தில் புகுந்து, குயில் போல இனிய பாடல்களாக வெளிவந்தார் என்பது இப்பாடலின் உட்கிடக்கை ஆகும். அந்தக் குயிலின் குரலில் மாணிக்கவாசகரின் இனிமை கலந்திருக்கிறது என்பதிலே எவ்வித ஐயப்பாடும் இல்லை.

மேற்காணப்படும் ஆய்வு உரையும், திருவருட்பா விளக்கமும் கம்பனுக்கு மிகவும் பொருந்துவதாக இருக்கிறது.

'உயிரில் கலத்தல்' என்ற பண்பைக் கம்பன் தக்க இடத்தில், வள்ளுவரைப் பின்பற்றிப் பயன்படுத்தியுள்ளான் என்றே தோன்றுகிறது.

உயிரில் கலந்த பண்பின் நிலை

ஆருயிரில் கலந்த ஒன்று, நன்மையோ தீமையோ, அது தொடரும் என்பதையே மேற்காணும் ஆய்வு நிலைநாட்டுகிறது. இராவணனைப் பொருத்தவரை, அவன் ஆருயிரில் கலந்த காமம் அவனை இறுதிவரை ஆட்டிப் படைத்தது என்பதே காப்பியம் காட்டும் உண்மை. பல்வகை உபதேச மொழிகளும் அறிவுரைகளும் அவன் உயிரில் கலந்த காமத்தை ஒன்றும் செய்ய இயலவில்லை.

குலப்பழி முதலானவற்றை மறத்தல்

சூர்ப்பணகை செய்த காமச் சூழ்ச்சியின் காரணமாக அவ்வரக்கியால் கூறப்பட்ட சீதையை மட்டும் மறவாமல் உள்ளத்திலே தேக்கி வைத்துக் கொண்டான். மற்றைய வெல்லாம் அவனுக்கு மறந்து போயின. தன் தம்பியாகிய கரன், சூர்ப்பணகையைக் காப்பதற்காக இராமனோடு செய்த போரில் மடிந்தது குறித்துக் கண்ணீர்விட்டு, அதே கண்களில் கோபத்தால் தீ எழ வெகுண்டவன், இப்போது அச்சோக நிகழ்ச்சியை முற்றிலும் மறந்தான். தன் தங்கையின் மூக்கை அரிந்தவன் இலக்குவன் என்பதைத் அறிந் திருந்தும் குலமானம் காக்க, கரன் தூடணன் ஆகியவரைப் போல அவன் போருக்கு எழவில்லை. பெரும் படையுடன் கரன் சென்றிருந்தும் அவனை அழிக்கும் பேராற்றல் இராம இலக்குவர்களாகிய மானுடர்க்கு உண்டு என்பதையும், அதனால் ஏற்பட இருக்கும் பின் விளைவுகளையும் முற்றிலும் மறந்து போனான். தம்பியர் உயிரையும் தங்கையின் மூக்கையும் அழியச் செய்தவரை ஒழித்து அழிக்காமல் வீணே கிடப்பது தனக்குப் பழியாகும் என்பதையும் மறந்தான்.

இனிப் பழிசுமக்கப்
பத்துள தலைப்பகுதி தோள்கள் பல வன்றே

(மாரீசன் வதைப்படலம்-61)

என முன்பு கூறிய வீரவாசகத்தை அவன் முற்றிலும் மறந்தான்.

தன்னைத் தவத்தின் பால் ஊக்குவிப்பதற்காகத் தான் முன்னாளில் பெற்ற வரங்களையும் மறந்தான்.

கரனையும் மறந்தான்; தங்கை
மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான்; உற்ற
பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன்
அம்பினால் முன்பு பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட
மங்கையை மறந்திலா தான் (மாரீசன் வதைப்படலம்-83)

(அரன் - சிவபெருமாள்; சிவனையும் மன்மதன் வெற்றி கொண்டான்)

என்ற பாடல் கம்பராமாயணத்தின் மிகப்பெரிய திருப்பு முனையாகும். இப்பாடலில் கம்பன் வழங்கும் கருத்துகள் 'மனவியல் நுட்பத்தின் மாபெரும் சிகரம்' என்று கூறலாம். 'கம்பனின் தத்துவச் சிந்தனையும், நுண்மாண் நுழை புலமும் இப்பாடலில் பளிச்சிடுகின்றன.

"பாத்திரங்களை உருவாக்குவதிலும், நாடகச் சூழ்நிலைகளைக் கையாளுவதிலும் கம்பன் போன்ற கவிஞர்களின் உளவியல் உள்நோக்கு ஆச்சரியகரமான ஆழத்தை உடையதாக இருக்கிறது" என்பர் வை. சச்சிதானந்தன்.[1]

மனவெழுச்சி

இந்த இடத்தில் மனவெழுச்சி (Emotion) என்பது பற்றி மனவியல் வல்லுநர்களின் கருத்தை இணைத்து ஆராய்வது முக்கியவத்துவம் பெறுகிறது.

மனவெழுச்சியைத் தமிழில் மெய்ப்பாடு என்று கூறலாம்.

மனவெழுச்சி என்பதை நாம் அனுபவித்தே அறிய முடியும். இது குறித்து உளவியல் அறிஞர் கூறும் விளக்கம் வருமாறு:

மனவெழுச்சி என்பது உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலை ஆகும். மனவெழுச்சிகள் நம்மிடம் இயல்பாகத் தோன்றுகின்றன. நம்மைப் பாதிக்கும் நிகழ்ச்சியிலோ நாம் மிக்க ஆர்வம் கொண்டுள்ள சூழ்நிலையிலோ இவை தோன்றுகின்றன. இவை அவசர நிலைகளிலேயே (emergencey) தோன்றுவனவாம். இம்மன வெழுச்சிகளுக்கு உட்பட்ட ஒருவனின் உடலும் மனமும் கிளர்ச்சியுறும். மனவெழுச்சி என்பது மனவுணர்ச்சிகளும், இதயம், வயிறு, நுரையீரல், குடல் போன்ற உள் உறுப்புகளினின்றும் (visceral organs) எழும் புலன் உணர்ச்சிகளும் (sensations) இணைந்த ஒரு கலப்பு அனுபவமாகும். அவற்றைத் தோற்றுவித்த நிலையினை வரவேற்று எதிர்நோக்கிச் செல்லவோ, எதிர்த்துப் போராடவோ, அந்நிலையினின்றும் விடுபட்டு ஓடி ஒளியவோ மனவெழுச்சிகள் ஒருவரைத் தூண்டுகின்றன. மனவெழுச்சிகளைத் தோற்றுவிக்கும் பல்வேறு நிலைமைகளை எதிர் கொள்வதில் ஒவ்வொருவரிடையேயும் வேற்றுமைகள் காணப்படுகின்றன.

---

1. இளங்கோவும், கம்பனும், ப.417

வெற்றிக்கு அடிப்படை மனவெழுச்சி

வாழ்க்கையில் நாம் காணும் வெற்றியின் அளவு நமது அறிவுத் திறனைக் காட்டிலும் நம் மனவெழுச்ச முதிர்ச்சி, மனவெழுச்சிகளின் சமநிலை ஆகியவற்றைப் பெரிதும் பொறுத்திருக்கின்றது. 'மனிதன், பரந்த மனவெழுச்சிக் கடலில் மிதக்கும் ஒரு சிறு அறிவுத் துரும்பாகும்' என்பது ஒரு ஆங்கிலக் கூற்று ஆகும்." இவ்வாறு உளவியல் அறிஞர் கூறுவர்.[1]

மனவெழுச்சி என்பது இரு முனைகளைக் (Bipolar) கொண்டதாக இருக்கிறது. (i) மகிழ்ச்சி - மகிழ்ச்சியின்மை; (ii) கவனித்தல் - புறக் கணித்தல் (iii) செயலற்ற நிலை - மிக்க செயல் நிலை (iv) எளிமை - சிக்கல் என இதன் பரிமாணங்கள் அமைகின்றன.

குறிப்பிட்ட ஒரு மனவெழுச்சிக்கு உட்பட்ட ஒருவன் அவ்வெழுச்சி தோன்றக் காரணமாக இருந்த நிலை மாறிய பின்பும் அம்மன நிலையிலேயே தொடர்ந்து சிறிது காலம் இருப்பான். இது மனவெழுச்சி நீட்சி (Mood) எனப்படுகிறது.[2]

ஆய்ந்து சிந்திக்கக் கூடிய திறனை மனவெழுச்சிகள் குறைக்கக் கூடியவை.

மனவெழுச்சியும் உடல்நிலை மாற்றமும்

மனவெழுச்சியின் காரணமாக உடல் நிலையில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதனை முன்னர்க் கண்டோம். ஒரு கரடியைப் பார்க்கிறோம்; அச்சம் ஏற்படுகிறது உடல் நடுங்குகிறது. ஒருவன் நம்மைத் துரத்துகிறான்; சினம் பொங்குகிறது; அவனை அடிக்கிறோம். உடல் நடுங்குதல், துரத்துபவனை அடித்தல் என்பவை நம் உடலில் ஏற்படும் மாற்றங்கள்.

உடல்நிலை மாறுபாடுகள் மனவெழுச்சிகளுடன் இணைந்து நிகழ்வன என்பதனை ஆராய்ச்சிகளின் வாயிலாக மனவியல் வல்லுநர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

---

1. பேராசிரியர் எஸ். சந்தானம், கல்வியல் மனவியல் ப.159,160.
2. மேலது ப.163

தற்கால அறிவியல் வளர்ச்சியாகிய மேற்கண்ட உளவியல் உண்மை கம்பராமாயணத்தில் எங்ஙனம் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது என்பதைக் காண்பது புதிய ஒளி தருவதாக இருக்கிறது.

மயில் போன்ற சாயலை உடைய சீதையை, இலங்கை வேந்தன் வஞ்சித்துக் கவர்ந்து கொள்வதற்கு முன்பாகவே தன் மனமாகிய சிறைக்களத்தில் அகப்படுத்தி வைத்தான். அப்போது அந்தக் அரக்கனின் உள்ளம் காம வெப்பத்தால் வெதும்பிற்று. கடும் வெயிலில் வெண்ணெயை வைத்தால் அது எவ்வாறு உருகுமோ அது போல அவன் உள்ளம் உருகியது.

அரக்கன் உள்ளம் அவ்வழி மெல்லமெல்ல
வெயிலுடை நாளில் உற்ற வெண்ணெய் போல்
(மாரீசன் வதைப்படலம்-85)

என்பது கம்பன்மொழி

“ஒவ்வொரு மனவெழுச்சியிலும் ஒரு பொருளையோ, ஒரு நிலைமையையோ பற்றித் தீவிர உணர்ச்சி மேம்பட்டிருக்கும். இவ்வுணர்ச்சி இன்ப (Love) உணர்ச்சியாகவோ வெறுப்பு உணர்ச்சியாகவோ இருக்கலாம். மகிழ்ச்சியில் இன்பவுணர்ச்சியும், சினம், அச்சம் போன்ற மனவெழுச்சிகளில் வெறுப்புணர்ச்சி மிகுந்திருத்தலை நாம் காணலாம்” எனவும் உளவியல் அறிஞர் குறிப்பிடுவர்.[1]

மனவெழுச்சி அனுபவங்களுடன் சில உடல்நிலை மாற்றங்களும் நிகழ்கின்றன என்பதும் உளவியல் அடிப்படையில் நிறுவப் பெற்றிருக்கிறது. “மனவெழுச்சிக்கு உட்பட்ட நிலையில் உமிழ் நீர் சுரத்தல் குறைந்து நின்று போகும்; உண்ட உணவைச் செரிக்கும் வேலையும் நிறுத்தப்படும். இந்நிலையில் அட்ரினல் சுரப்பியைத் தூண்டி, பெருமளவு அட்ரினலைச் சுரக்கச் செய்து இரத்தத்துடன் கலக்கச் செய்யும். இதனால் இதயத் துடிப்பு அதிகமாகும்” [2] என்பது அறிவியல் அடிப்படையிலான உளவியல் உண்மை ஆகும். மனவெழுச்சிகள் உடல்நலனைப் பாதிக்கும் என்பது மேற்கண்ட வற்றால் தெளிவாகிறது. கம்பராமாயணத்தில் இராவணனின் உள்ளத்தில்

---

1. பேராசிரியர் எஸ். சந்தானம், கல்வியல் மனவியல் ப.159,160.
2. மேலது ப.163

ஏற்பட்ட மனஎழுச்சியானது வெளியில் தெரியும் படியாக இருந்தது என்று கூறப்பட்டுள்ளது.

அவன் உடலிலே தடவுவதற்காகச் சந்தானம், மென்தளிர், மலர்கள் ஆகியவற்றை மகளிர் எடுத்துச் சென்ற போது, நெருப்பை ஊதும் துருத்தி போல அவன் உடல் வெப்பத்தால் காந்தியது.

பனிக்காலமும் அவனுக்கு வெப்பம் உடையதாக இருந்தது.

நிலாச் சுடரின் பனி மென் கற்றையானது இராவணனுக்கு உருகிய வெள்ளியை எடுத்து வீசியதைப் போன்று இருந்தது. இதனைக் கம்பன்,

அருகுறு பாலின் வேலை அமுதுஎலாம்
அளைந்து வாரிப்
பருகினன் பரந்து பாய்ந்த நிலாச்சுடர்ப்
பனிமென் கற்றை
நெரியுறு புருவச் செங்கண்
அரக்கற்கு நெருப்பின் நாப்பண்
உருகிய வெள்ளி, அள்ளி
வீசினால் ஒத்தது அன்றே

(மாரீசன் வதைப் படலம் - 109)

என்று பாடுகின்றான்.

இராவணன், சூர்ப்பணகை ஆகியோரின் உடல்மாற்றம்

இங்ஙனம் இராவணன் உடலில் ஏற்படும் மாற்றங்களைக் கம்பன் மிகவும் துல்லியமாகப் பாடுகின்றான்.

மனவெழுச்சிகளில் முதலிடம் பெறுவது உடல்நிலை மாற்றங்களே என்று மனவெழுச்சி பற்றிய ஜேம்ஸ் லேங் கொள்கை (James - Lange Theory of Emotions) தெரிவிக்கிறது.[1]

தற்காலத்தில் உருவாகியுள்ள உளவியல் கொள்கை கம்பனுக்குப் பொருந்துகிறதா என்று ஆய்ந்து பார்க்கும்போது அது முற்றிலும் பொருந்தி

1. பேராசிரியர் எஸ். சந்தானம், கல்வி மனவியல்-ப.166

இருப்பதை நன்கு காணமுடிகிறது. இவ்வுளவியற் கொள்கையைக் கம்பன் மிகவும் நேர்த்தியாகத் தக்க இடத்தில் கையாண்டிருப்பது அவன் பேரறிவாளன் என்பதை மெய்ப்பிக்கிறது.

இவ்வாறே கம்பன் உடலில் ஏற்படும் மாற்றங்களைப் பல்வேறு இடங்களில் மெய்ப்பாடுகளாக மிக விரிவாக எடுத்துக் கூறுகிறான்.

சூர்ப்பணகை இராமனைக் கண்டு அவன் அழகில் மயங்கி விரகதாபம் கொண்டதனைக் கம்பன் வருணிக்கின்றான். அவ்வருணனையில் அவள் உடலில் வெளியே தெரியக் கூடியவான உடல்மாற்றங்களை மிக அற்புதமாகப் படைக்கின்றான்.

சூர்ப்பணகை தன் உடலில் குளிர்ந்த பனிக்கட்டியை அப்பினாள். நெருப்பிலே வெந்து போன ஒரு பாறையில் வைத்த வெண்ணெய் போல அந்த பனிக்கட்டி உருகிப் போயிற்று. அவளது உடலின் வெப்பம் மிகவும் கொடியதாக இருந்தது.

மொய்கொள் தீயிடை வெந்து முருங்கிய
வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்குமால்

(சூர்ப்பணகைப் படலம்-78)

என்ற கம்பன் பாடல் இம் மெய்ப்பாட்டை நுட்பமாகக் கூறுகிறது.

இங்ஙனம் கம்பன், மனத்தில் ஏற்படும் எழுச்சி காரணமாக உடலில் ஏற்படும் மாற்றங்களைப் பல இடங்களில் பாடிச் செல்கிறான். கம்பன் காட்டும் மெய்ப்பாடுகளை இன்றைய அறிவியலுடன் பொருத்தி தனியொரு ஆய்வு செய்தால் அது புதிய வெளிச்சங்களைக் கொண்டு வரும்.

அவைக்களமா? காமஅரங்கமா?

சூர்ப்பணகை சீதையின் உருவ அழகை வருணித்ததும், அதன் காரணமாக இராவணன் அவ்வழகில் மயங்கியதும் முன்னர் விவாதிக்கப் பெற்றன.

மூக்கு அறுபட்ட சூர்ப்பணகை அவைக்குள்ளே புகுந்தது முதல் இறுதி வரை அன்றைய அவைக்களத்தைக் காமமே ஆட்சி செய்தது. நாரதர் தும்புரு

முதலான ஞானிகள் அந்த அவைக்களத்தில் இருந்தும் அவர்களுடைய அறிவும் ஆற்றலும் அங்கே பயன்படவில்லை. ஒரு மனிதன் தேவைக்கே ஆட்சி என்ற நிலையில் அந்த அவைக்களம் தனது சிறப்பும் உயர்வும் குன்றி மன்மதனின் அரங்கமாக மாற்றம் பெற்றது.

நெடுஞ்செழியனின் அவை

பாண்டியன் நெடுஞ்செழியன் அவைக்களத்தில் வீற்றிருந்த சிறப்பை இளங்கோவடிகள் பின்வருமாறு கூறுகின்றார்:

அரிமான் ஏந்திய அமளி மிசை இருந்தனன்
திருவீழ் மார்பின் தென்னவர் கோவே
(சிலம்பு, வழக்குரைகாதை-வரிகள் 22,23)

என்பது அப்பாடல்.

இலக்குமியும் விரும்பத் தக்க அகன்ற மார்பு படைத்தவன் பாண்டியன் நெடுஞ்செழியன் என்பது ஒரு குறியீடாக அமைந்துள்ளது. திருவும் விரும்புதல் அவனது கொடை, கருணை, செங்கோல் ஆகிய உயர்ந்த பண்புகளின் வெளிப்பாடாகும். வாயிலோன் கண்ணகியின் குறையைப் பாண்டியனிடம் தெரிவிக்கும் போது,

பழியொடு படராப் பஞ்சவ வாழி (வழக்குரை காதை-வரி 33)

என்று போற்றுகிறான். எப்பழியையும் செய்யாத சான்றாண்மை மிக்க பாண்டியனின் அவைக்களத்தை அந்த வாயிலோன் பெருமைப்படுத்த இம்மொழிகளைக் கூறுகிறான்.

மனுநீதிச் சோழரின் அவை

பெரிய புராணத்தில் மனுநீதிச் சோழர் வரலாற்றைச் சேக்கிழார் பெருமான் கூறுகின்றார். தன் மைந்தனால் பசுவின் கன்று இறந்த வழக்கில் நீதி காணும் முயற்சியில் மனுநீதிச் சோழர் பின்வருமாறு கூறுகிறார்:

மாநிலம் காவலன் ஆவான்,
மன்உயிர் காக்கும் காலைத்

தான் அதனுக்கு இடையூறு
தன்னால் தன்பரிசனத்தால்
ஊனமிகு பகைத் திறத்தால்
கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து
அறம் காப்பான் அல்லனோ

(திருத்தொண்டர் புராணம், திருநகரச் சிறப்பு-36)

இப்பாடல் மனுநீதிச் சோழரின் அவையில் உணர்வு அலையை எழுப்பும் சிக்கலான வழக்கில் மன்னன் அறிவு வழியில் நின்று விவாதிக்கும் விவாதமாக அமைந்திருக்கிறது.

இப்பாடலில் நாட்டில் உள்ள உயிர்களுக்கு ஐந்து வகையால் எவ்வித ஊறுபாடும் ஏற்படக் கூடாது என்பதனை மனுநீதிச் சோழர் வலியுறுத்துகின்றார். இதில் முதலிலே காணப்படுவது 'அரசன் தன்னால் உயிர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை அகற்ற வேண்டும்' என்பதாகும். ஏனெனில் அரசன் அனைத்து வல்லமையும் பொருந்தியவனாக இருப்பதால் அவ்வரசனால் உயிர்களுக்குத் தீங்கு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் ஏராளம் உண்டு. அதனை முதலில் தவிர்க்க வேண்டும் என்பது பெரிய புராணம் காட்டும் அவைக்களப் பேச்சு ஆகும்.

சிலப்பதிகாரம், பெரிபுராணம் ஆகியவற்றின் அவைக்களக் காட்சிகளுடன் இராவணனின் அவைக்களத்தை ஒப்பீட்டு முறையில் ஆராயும் போது, அங்கு அரசனே உயிர்களுக்கு ஊறு செய்வதில் முதல்வனாக இருக்கும் காட்சியே தோன்றுகிறது.

அவைக்களத்தின் ஒருநாள் நிகழ்ச்சி

இராவணன் அவைக்களத்தில் தேவர்கள் அடிமை செய்தார்கள் எனவும், பெண்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்தார்கள் எனவும் கம்பன் காட்டுகிறான். அந்த அவைக்களத்தில் 'அறிவுப்புலம்' வேலை செய்யவில்லை. அறிவுப்புலமாக இருக்க வேண்டிய அவை, 'உணர்வுப் புலமாக' மாறுகிறது. காமம் என்னும் புதைசேறு அந்த அவைக்களத்திலும் கூடப் புரள்கிறது. எனவே இராவணன் தன் விருப்பம் போலக் காமக்கோட்டை ஒன்றைத்

தன்மனத்திற்குள்ளே உருவாக்கி விடுகின்றான். அந்தக் கோட்டைக்குள் சீதையைச் சிறைப்பிடித்து வைக்கின்றான்.

ஆகவே சூர்ப்பணகை வந்த அந்த நாளின் அவையரங்கம், காம அரங்கமாகிறது. இராவணன் எவ்விதச் செயலையும் ஆற்றவில்லை. அங்கே சீதையின் நினைப்பு ஒன்றே மிஞ்சுகிறது.

இந்நிலையில் இருக்கையிலிருந்து இராவணன் எழுந்தான். ஏழு உலகங்களில் உள்ளவர்களும் அச்சத்தால் வாழ்த்துரைத்தார்களே யன்றி ஆசையால் வாழ்த்து உரைக்கவில்லை. சங்கின் பேரொலி முழங்கிற்று. மலர்மழை அவன் மீது சொரிந்தன. பக்கத்தில் இருப்பவர்கள் எல்லாம் இராவணனுக்கு வழி விட்டு விலகிச் சென்றார்கள். அவன் மனமோ காமத்தால் அழிந்து கொண்டு இருந்தது. அவன் தனது மாளிகையில் போய்ப் புகுந்தான். இவ்வாறு அன்றைய நாள் நிகழ்ச்சி முடிவடைகிறது. கம்பன் இதனை,

எழுந்தனன் இருக்கை நின்று, ஆண்டு
ஏழ் உலகத்துளோரும்
மொழிந்தனர் ஆசி; ஓசை முழங்கின
சங்கம் எங்கும்;
பொழிந்தன பூவின் மாரி; போயினர்
புறத்தோர் எல்லாம்;
அழிந்து அழி சிந்தையோடும்
ஆடகக் கோயில் புக்கான்

(மாரீசன் வதைப்படலம்-88)

என்று கூறுகிறான்.

அன்றையநாள் நிகழ்ச்சி சிறப்பாக இருந்திருந்தால், ஏழ் உலகத்தவர் வாழ்த்துரைக்கும், சங்கின் முழக்கத்திற்கும், மலர் மழைக்கும் பொருள் இருந்திருக்கும். அன்றைய நாள் நிகழ்ச்சியில் மேற் கண்ட வழக்கமான உபசரிப்புகள் கேலிக்கூத்தாக இருக்கின்றன என்பதையே கம்பன் சொல்லாமல் சொல்கிறான். இராவணனின் ஆற்றலுக்கு எவ்வித பொருளும் இல்லை என்பதைக் கம்பன் இப்பாடலுக்கு முன் அமைந்துள்ள பாடலில்,

வன்மையை மாற்றும் ஆற்றல்
காமத்தே வதிந்தது அன்றே
(மாரீசன் வதைப்படலம்-87)

என்று தெரிவித்து விட்டான். எத்தகைய வலிமையையும் புரட்டிப்போடும் ஆற்றல் காம உணர்வுக்கு உண்டு என்பதை அழகுறக் கூறியுள்ளான் கம்பன்.

பொய்யை மெய்யெனத் தெரிதல்

சூர்ப்பணகை வந்த போது அவளது அழகில் மயங்காது, தவ வாழ்க்கையில் ஈடுபட்டு இருக்கிறோம் என்று கூறி காமத்தைப் புறந்தள்ளிய நிலையை இராம இலக்குவரிடம் காண்கிறோம். சூர்ப்பணகையிடம் உள்ள அழமை மட்டுமே கண்டு உணர்வு கொண்டு விடாமல், அவளைப் பற்றிய உண்மைகளை அலசி ஆராய்ந்து அவ்விருவரும் இவளால் தீமையே உண்டாகும் என்ற முடிவுக்கு வருகின்றனர், இதனால் அச்சம் என்பது சிறிதும் இல்லாத கொடிய சூர்ப்பணகையின் உள்ளத்தில் அச்சம் தோன்றியதால் தான் அவள் தன் பாதுகாவலனான கரனை நோக்கித் தன்னை காப்பாற்ற வேண்டி ஓடினாள்.

இராவணன், சூர்ப்பணகையின் கூற்றை அலசி ஆராயாமல் அப்படியே ஏற்றுக்கொண்டான். அவள் கூறிய முழுப்பொய்யை மெய்யெனத் துணிந்தான்.

"பூமான் குழலாள் தனை வவ்வுதி;
போதி!" (மாரீசன் வதைப்படலம்-153)

என்ற சூர்ப்பணகையின் கட்டளையையும் ஏற்றுக் கொண்டான். காமத்துக்கு ஆட்பட்டு அடிமைப்படும் மனநிலைக்கு இராவணன் உந்தப்படுகிறான்.

சூர்ப்பணகையின் உணர்வைக் கடிந்து ஒதுக்குகிற இராமனின் உணர்வும், அவள் எழுப்பிய காமத்துக்கு ஆட்பட்டு அடிமையாகும் இராவணனின் உணர்வும் இருவேறுபட்ட முரண்பாடுகளாகக் காப்பியத்தில் படம் பிடிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் தனித்தனி நாடகங்களாக அமைந்திருக்கின்றன.

மனவெழுச்சிகளை மடைமாற்றம் செய்தல்

இவற்றின் அடிப்படையில் இராவணனின் பண்பு நலனை ஆய்வு செய்யும்போது, அவன் மனவெழுச்சி முதிர்ச்சி (Emotional Maturity) பெறாதவன் என்ற உளவியல் உண்மையைக் கம்பன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தன் காப்பியத்தின் வாயிலாகப் பதிவு செய்துள்ளான்.

மனவெழுச்சி காரணமாக, நரம்புத் தொகுதியின் சிம்பதெடிக் பிரிவு தொடர்ந்து செயற்பட்டு, உடல் மாற்றங்களைத் தோற்றுவித்த வண்ணம் உள்ளது. இது உடல் நலனையும் பாதிக்கும். இதனைத் தடுக்க இன்று, 'தியானம்', 'யோகப் பயிற்சி' போன்றன பயன்படுகின்றன என்று தற்கால உளவியல் வல்லுநர் குறிப்பிடுகின்றனர்.[1]

மனவெழுச்சி முதிர்ச்சி பற்றிய உளவியல் கருத்துக்களை அறிந்து கொள்ளுவது என்பது மிகவும் இன்றியமையாததாகும்.

மனவெழுச்சி முதிர்ச்சி பெற்ற ஒருவனால் மனவெழுச்சியை ஒத்திப் போடவும், கட்டுப்படுத்தவும் முடியும், தன்னிடமே இவன் (Self-Pity) பரிதாபம் கொள்வதில்லை. நெருக்கடி நிலையிலும் இவன் அமைதியுடன் நடந்து கொள்ளக் கூடியவன். தனக்கும் பிறருக்கும் நன்மை தரக்கூடிய பரிவு அன்பு ஆகியவற்றில் இவன் தன் மனவெழுச்சிகளைச் செலுத்துவான். பிறரிடமிருந்து பெறுவதைக் காட்டிலும் பிறர்க்கு உதவுதலை விரும்புவான். பிறருடன் சேர்ந்து ஒத்துழைப்பதில் மகிழ்வு கொள்வான்.

தனது குடும்பம், பள்ளி, சமுதாயம் ஆகியவற்றுக்குத் தன்னால் ஆனதைச் செய்வான். தனது பிழைகளினின்றும் உண்மையை உணர்வான். தனக்கும் பிறருக்கும் பயனுள்ள வழிகளில் தன ஓய்வு நேரத்தைச் செலவிடுவான். இத்தகையோனிடம் வீணான கவலைகள், அச்சங்கள் போன்றவை காணப்படமாட்டா. மனவெழுச்சிச் சமநிலையும் உடல் நலத்தைப் போலவே ஒருவனுடைய நல் வாழ்வுக்கு இன்றியமையாதது. இந்நிலையை ஒருவன் அடைவதற்குக் குறுக்கு வழிகள் கிடையாது. இளமை தொட்டுப் பயிற்சி செய்வது ஒன்றே இதனை அடையும் வழியாகும்"[2] என்பது உளநூல் அறிஞரின் அறுதியான முடிவாகும்.

1. பேராசிரியர் எஸ். சந்தானம், கல்வி மனவியல்-ப.165
2. பேராசிரியர் எஸ். சந்தானம், கல்வி மனவியல்-ப.174

மனநலம் பேணுதல்

சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளத் தக்கதும் தனக்குத் திருப்தி அளிப்பதுமான இயல்பான சிறந்த நிலையே மனநலம் ஆகும்.[1]

கோல்மேன் என்ற அறிஞர் மனநலத்தைப் பின்வருமாறு விளக்கு கின்றார்; "மனநலம் என்பது உணர்வுகள், ஆசைகள், விருப்பங்கள், இலட்சியங்கள் ஆகியவற்றை அன்றாட வாழ்க்கையில் சமநிலைப் படுத்தி சரிசெய்து கொள்ளுதலாகும். மேலும் இயல்பான நிகழ்வுகளை எதிர் கொண்டு ஏற்றுக் கொள்வதும் மனநலம் ஆகும். தனியொருவனுக்கு அவன் மேற்கொள்ளும் பழக்கங்களிலும் பணிகளிலும் மனமகிழ்வைத் தருவதே மனநலம் ஆகும்.

மனநலத்தைப் பேணுதல் (Mental hygiene) என்பது ஒரு அறிவியல் ஆகும்.

மனநலத்தைப் பேணி வளர்ப்பவர்கள் கவலைகள், பொருத்தப்பாடின்மை ஆகியவற்றை தவிர்ப்பதன் மூலம் மக்கள் மன நிறைவுடன் இருக்கவும் புத்தாக்கப் பணிகளில் ஈடுபட உதவி புரிவதும் மனநலம் பேணும் பயிற்சியின் பயன் என்று போரிங் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார்.

உளநலம் பெற்றவனின் பண்பு நலன்கள்

உளநலம் பெற்றவனின் பண்பு நலன்களை உளவியல் அறிஞர்கள் பின்வருமாறு கூறுகின்றனர்:

1. சிறந்த உளநலம் பெற்றவன் சூழ்நிலையுடன் ஒத்துச் செல்கிறான்; பிறருடன் நல்லுறவு கொள்கிறான்; தனக்கு என்று ஒரு இலட்சியத்தைக் கொண்டிருக்கிறான்.
2. அவன் தனது எல்லைகளை உணர்ந்திருக்கிறான். தனது குறைபாடுகளுக்காக அவன் மற்றவர்களைக் குறை கூறுவது இல்லை.

1. B.N. Panda, Advanced Educational Psychology P.262. Mental health is a normal state of well-being and defined as a condition and level of social functioning which is socially acceptable and personally satisfying.

சவால்களை விட்டு அவன் ஓடிப்போவது இல்லை. அவன் தன்னம்பிக்கை உடையவன்.

3. உளநலம் உடையவன் ஒரு நெருக்கடி வரும்போது அதனை அறிவு பூர்வமாகத் தீர்த்து வைக்க முயல்கிறான். மனவெழுச்சிகளைப் பொறுத்துக் கொள்ளும் மன நிலையை அவன் வளர்த்துக் கொள்கிறான். துன்ப நிலையில் அவன் மனம் சஞ்சலப்படுவதில்லை.

4. இன்பதுன்பம், வெற்றி தோல்வி ஆகியவற்றைத் தனது நன்மைக்குப் பயன்கொள்பவனாக அவன் திகழ்கிறான். அவனைப் பொருத்தவரை மனநலம் என்பதும், பொருத்தப்பாடு (Mental adjustment) என்பதும், ஒன்றேயாகும். அவன் மகிழ்ச்சியாகவும் இன்பமாகவும் இருக்கிறான்.

5. அவன் தனது திறமைகள், ஊக்கங்கள், விருப்பங்கள் ஆகியவற்றைத் புரிந்து கொண்டு அவற்றுக்கு ஏற்பச் செயலாற்றுகின்றான். எதையும் அவன் சரியாக உணர்ந்து கொள்கிறான்.

6. மனநலம் வாய்ந்தவன் ஆக்கபூர்வமான பணிகளிலும், உருவாக்கம் தருகின்ற பணிகளலும் பங்காற்றுகிறான். அவனது வாழ்க்கைப் பாதை சமுதாயத்துடன் மிகவும் இனிமையாக இணைந்து செல்கிறது.

7. இயல்பு வாழ்க்கையுடன் அவன் தொடர்பு கொண்டு திகழ்கிறான்; அவனது மனவெழுச்சிகள் அவனது கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

8. அவன் தனக்கென்று ஒரு வாழ்க்கைத் தத்துவத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறான். அத்தத்துவம் அவனது வாழ்க்கைக்கு அர்த்தத் தையும், அன்றாடச் செயல்பாடுகளுக்கான காரணங்களையும் அவனுக்கு வழங்குகின்றது.

9. தனது திறமையின் மூலம் வெற்றி பெற முடியும் என்ற முழு நம்பிக்கை அவனிடம் இருக்கிறது. எந்தப் பணியை மேற்கொண்டாலும் அதைத் திருப்தியாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையும் அவனிடம் இருக்கிறது. இயல்பான நிகழ்வுகளைப் பகுத்தறியும் ஆற்றலும், அந்நிகழ்வுகளைப் பயன்படும் வகையில் ஆக்கிக் கொள்ளும் திறமையும் அவனிடம் உண்டு.

10. பிரச்சனைகளைத் தெளிவாக ஆலோசித்து, அவற்றை ஆக்க பூர்வமாகத் தீர்த்து வைக்கும் ஆற்றல் அவனிடம் உண்டு.

11. மாறி வரும் சமுதாயச் சூழலுக்கு ஏற்ப அவன் சமுதாயத்துடன் இணைந்து செல்கிறான். மனவெழுச்சிச் சமநிலை பெற்று மகிழ்ச்சியுடன் இருக்கிறான்.

தனது நடத்தைகளைத் தானே சீர்தூக்கிப் பார்க்கும் திறமை அவனிடம் உண்டு. ஆர்வத்துடனும், காரண காரியங்களை ஆராயும் திறனும், நற்பழக்கங்களும், சமுதாய விழிப்புணர்வும் அவனிடம் உண்டு.

இவ்வாறு மனநலம் மற்றும் மனநலத்தை வளர்த்தல் ஆகியவற்றைப் பற்றிய கருத்துகள் உளவியல் நூலில் காணப்படுகின்றன. உளநலம் பற்றி மேற்கூறப்பட்ட பதினொரு இயல்புகளும் கம்பராமாணத்தில் பல்வேறு இடங்களில் பளிச்சிடுகின்றன. இவற்றின் உட்பொதிவாகவே கம்பராமாயணம் படைக்கப்பட்டிருக்கிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இந்தப் பின்னணியில இராவணனின் பாத்திரப் படைப்பை ஆராயும் போது அவன் மனவெழுச்சிச் சமநிலை (Mental Maturity) பெறாத பாத்திரமாகவே கம்பனால் படைக்கப்பட்டிருப்பது புலனாகிறது.

மேலும் கம்பரா ாயணத்தை ஆய்ந்து பார்க்கும் போது மனநலத்தை வளர்க்கும் (Mental Hygiene) பல பயிற்சிகளை இக்காப்பியத்தில் காண முடிகிறது.

சூர்ப்பணகை, இராவணன் ஆகிய இருவரின் காம மனவெழுச்சிகளைக் கம்பன் மிகவும் விரிவாகத் தனது காப்பியத்தில் கூறியுள்ளான்.

கம்பராமாயணத்தைப் 'புலனடக்கக் காப்பியம்' என்றே கூறலாம். புலனடக்கத்திற்கான பல்வேறு பயிற்சிகளைக் கம்பன் தனது காப்பியத்தில் ஆங்காங்கே கதையுடன் இணைத்துக் கூறிச் செல்கிறான்.

கல்வியால் காமத்தை வெல்லலாம்

வரையறை கடந்து காமம் சென்றுவிடாமல் அதனைத் தக்க புலனடக்கப் பயிற்சியால் கட்டுப்படுத்த முடியும் என்ற தீர்ப்பு உரையையும் கம்பன் தனது காப்பியத்தில் வழங்கத் தவறவில்லை.

காமத்தைக் கடப்பதற்கு ஞானமும் கல்வியும் மிகுதியும் தேவை என்பது கம்பனது ஆய்வுரை ஆகும்.

கற்றனர் ஞானம் இன்றேல்
காமத்தைக் கடக்கலாமோ?
(மாரீசன் வதைப்படலம்-84)

என்ற கம்பனின் மொழியை நன்கு காண வேண்டும். காமம் என்பது கடல். அக்கடலைக் கடக்க உதவும் பாதுகாப்பான படகு கல்வியும் ஞானமும் ஆகும். அதனைப் பெறுவதற்குக் கல்விப் பயிற்சி தேவைப்படுகிறது. காம எழுச்சியை சமநிலைப்படுத்திக் கொள்ள கம்பன் காணும் உத்தி, உளவியலுடன் ஒன்றிச் செல்கிறது. கல்வியால் காமத்தை வெல்லல் போலப் பண்பாலும் வெல்லலாம் என்பர் அறிஞர்.[1]

காமம் என்பது மனிதனை ஆட்டிப்படைக்கிறது. இக்காமம் மனிதன் திசை தடுமாறப் பல வகைகளிலும் உந்துகிறது.

மெய்வாய் கண்முக்குச் செவி என்ற ஐந்து பொறிகளும் உள்ளத்தின் அடிப்படையில் தான் இயங்குகின்றன. மனமாசுகளை நீக்குகிற பயிற்சியை ஒருவனுக்கு ஞானம் மட்டுமே தர முடியும். ஐந்து பொறிகளையும் அவற்றின் வழியே சென்றுவிடாமல் தடுத்து நிறுத்துகின்ற கலையை ஒவ்வொருவரும் மனப் பயிற்சியின் மூலம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒருவனுக்கு ஞானம் நிலைபெறும் போது, அவன் தவ வழியை மேற்கொள்ளத் தொடங்குகிறான்.

இந்தத் தவ வழியை உலகிற்குக் கற்றுத் தந்த பெருமை பாரதத்திற்கு உரியதாகும். கதைப் பாடல் வழியாக இக்கருத்தைப் போதிப்பதில் இரா மாயணம் வெற்றி கண்டுள்ளது.

காமத்தை அடக்கத் தெரியாத இராவணனை, காமத்தை வென்ற இராமன் அடக்கி ஒழிப்பதே இராமாயணத்தின் சாரம்.

இராமாயணம் இன்றைக்கும் என்றைக்கும் பேசப்படும் கதையாக இருப்பதற்கு இதுவே மூல காரணம். 'புலன் அடக்கம்' என்பது பாரத நாடு உலகிற்கு வழங்கிய 'கொடை' யாகும்.

---

1. டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், இளங்கோவும் கம்பனும், ப.130

காமத்தால் கனலும் வெந்தீ
சீலத்தால் அவது

(சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம்-104)

என்ற கம்பராமாயண வரிகளை பேருந்துகள், பள்ளிகள், கல்லூரிகள், அலுவலகங்கள், மக்கள் மன்றங்கள், பொது இடங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் எழுதி வைப்பது இன்றைய தேவையாக இருக்கிறது.

விசித்திரமான உள்ளம்

இராவணனின் இயல்பைக் கம்பன் ஒரு பாடலில் சுருக்கமாகக் கூறுகின்றான்.

ஊறு ஓசை முதல் பொறியாவையும்
ஒன்றின் ஒன்று
தேறா நிலை உற்றதொர் சிந்தையன்
செய்கை ஒரான் (மாரீசன் வதைப்படலம்-161)

என்று வரும் இப்பாடலை அறிஞர் இராவணனின் மனத் திரிபுக்கு உற்ற எடுத்துக்காட்டாக உரைக்கின்றனர்.

'ஊறு' என்பது தொடு உணர்வு. 'ஓசை' என்பது காதால் கேட்டு அறியும் உணர்வு. உளநலம் வாய்ந்தவர்களுக்கு இத்தகைய புலன்கள் ஐந்தும் தெளிவான நிலையில் இருக்கும். ஒரு புலனைப் போலவே மற்று எல்லாப் புலன்களும் தெளிவு அடையாத குழப்பமான நிலையிலேயே இராவணனின் மனநிலை இருந்தது. எல்லோருடைய மனத்தைப் போல அல்லாமல் அவன் மனம் ஒருவகையான விசித்திரமானது என்பதையே கம்பன் 'ஓர் சிந்தையன்' என்று புலப்படுத்துகிறான். தமிழில் 'ஓர்' என்பது, இலக்கிய வழக்கில் ஒப்பற்ற என்ற பொருள் தரும். இங்கேயும் அப்பொருளில் வந்தாலும், இராவணனின் மனத்துக்கு மற்றொருவருடைய மனத்தை ஒப்புமை சொல்ல முடியாத விசித்திரமானது என்று பொருள் தருகிறது.

'காமம் காரணமாகப் பெருந்தலைமை வீழ்ந்துபடுகின்றது. அடிபணியா மனம் காமத்தின் முன் உடைகின்றது; ஆற்றல் அழிகின்றது; காமன் சரம் இராமனின் சரத்தை முந்துகிறது' என்பர் ச.வே. சுப்பிரமணியன்.[1]

1. கம்பனும் இளங்கோவும், ப.130

"காம வயப்பட்ட ஒருவன் மேல் எழ முடியாமல் அவனை வீழ்த்துதல் என்பதே காமத்தின் உள்ளீடு; காமத்தின் உட்பொருள்" என்பர் அறிஞர்.

இதற்கு எடுத்துக்காட்டாக

வன்மையை மாற்றும் ஆற்றல்
காமத்தில் வதிந்தது அன்றே

என்ற கம்பனின் பாடல் அமைந்திருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுளளது.

காப்பியத்தின் உயிர்நாடி

கம்பனின் புலனடக்கம் பற்றி விரிவாக ஆய்ந்து கூறும் அறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:

இலங்கை நகரமும், அந்த நாகரிகமும் இரண்டு மனிதர்களாலும், குரங்குகளாலும் அழிந்தன ஏன்? இராவணன் மட்டும் தவறுடையவன் எனின் அவன் மட்டும் தானே அழிய வேண்டும்? பின்னர் ஏன் இலங்கை முழுவதும் அழிய வேண்டும்?

ஐம்பொறிகளும் தத்தம் எல்லை மீறி ஆடத் தொடங்கின அரக்கர்கட்கு! வரபலம், படைபலம், வெற்றி எக்களிப்பு என்பவை தலைக்கேறி விட்டன. அதன் பயனாகப் புலனடக்கத்தைக் கைவிட்டனர்; வீழ்ந்தனர்.

இராவணன் புலனடக்கத்தைக் கைவிட்டான்; ஆசை வளர்ந்தது. அவனுக்குச் சற்றும் சளைக்காதவர்கள் இலங்கை வாழ் மாந்தர் (அரக்கர்). எனவே அவர்கள் அழிவும் உறுதிப் படுத்தப்பட்டு விட்டது.[1]

மேலும் அறிஞர் அ.ச.ஞானசம்பந்தன் இக்காப்பியத்தின் உயிர்நாடியாக விளங்குவது புலனடக்கத்தின் இன்றியமையாமையே என்றும் வலியுறுத்தியுள்ளார்.[2]

1. கம்பன் புதிய பார்வை, ப.143, 144
2. மேலது.

காமத்தைக் கடந்தேறும் பயிற்சி

காமத்தைக் கடந்து வென்றேறுகிற ஈடுஇணையற்ற பயிற்சியை தியானமும் யோகமும் வழங்குகின்றன. இவற்றை உலகிற்கு அறிமுகம் செய்து வைத்த நாடு இந்தியா. எனவேதான் இந்தியபூமி, புண்ணிய பூமி என்று அழைக்கப்படுகிறது. அண்ணல் காந்தியும் புலனடக்கத்தை நினைவூட்டும் வகையில் மூன்று குரங்குப் பொம்மைகளை வைத்திருந்தார் என்பதை அறிகின்றோம்.

புலன் அடக்கத்தைக் கைக்கொண்டு தமது மனத்தை ஞானத்தின் திசை நோக்கிச் செலுத்திய எண்ணற்ற ஞானிகள் வாழ்ந்த நாடு பாரதம்.

பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வரும் பாரதப் பாரம்பரியத்தின் சின்னமாகத் திகழ்பவர் இராமகிருஷ்ண பரம அம்சர். பாரதப் பண்பாட்டை வாழ்க்கையாக வாழ்ந்து காட்டியவர் அவர்.

பரம அம்சருக்கு அத்வைத ஞானத்தை உபதேசித்து துறவு தீட்சை வழங்கியவர் தோதாபுரி என்ற ஞானி. அவரிடம் பரமஅம்சர் கேள்வி யொன்றைக் கேட்டார்: "தியானத்தின் எல்லை பிரும்ம ஞானம் என்று சொல்லப்படுகிறது. அதனை நீங்கள் அடைந்து விட்ஈர்கள். பிறகு ஏன் நாள் தோறும் தியானம் செய்கிறீர்கள்?"என்றார்

அதற்கு விடையாக அந்த ஞானி தமது கையில் இருந்த பித்தளைக் கமண்டலத்தைப் பரமஅம்சரிடம் காட்டினார். "இதோ பாருங்கள்; இந்தப் பித்தளைப் பாத்திரம் எவ்வளவு பளபளப்பாக உள்ளது. தினந்தோறும் இதைத் துலக்கித் தூய்மை செய்யாவிட்டால் இப்படி இருக்குமா? மனமும் அது போலத்தான். தியானத்தின் மூலம் தினந்தோறும் மனத்தைத் துலக்க வேண்டும். இல்லை என்றால் அது அழுக்காகி விடும்" என்றார். அதனைப் பின்பற்றியே ஆழ்ந்த தியானப் பயிற்சியைப் பரமஅம்சர் மேற்கொண்டார். சாதனை படைக்க விரும்புபவர்களுக்கு பரமஅம்சர் இடைவிடாது மேற்கொண்ட வழிபாட்டு முறைகளும், பக்திச் சாதனைகளும் படிக்கட்டுகளாக அமைந்திருக்கின்றன.

'உண்மையான வீரன் யார்?' என்ற வினாவுககுப் பரமஅம்சர் விடை தந்துள்ளார்: "உலக ஆசைகளின் நடுவில் இருந்து கொண்டே, சாதனைகள்

செய்து, மனத்தை அடக்கி ஆளும் மனிதன் உலகத்தில் செய்ய வேண்டிய கடமைகளால் சூழப்பட்டிருந்தாலும், தன் நோக்கத்தைக் கடவுளின் மீதே வைத்திருக்கிறான்" என்பது இராமகிருஷ்ண பரம அம்சரின் தத்துவம்.

மனத்தை ஒருமுகப்படுத்துதல் மனத்தை அடக்கி ஆளுதல் ஆகிய இரண்டும் தியானத்தால் ஏற்படும் விளைவுகள் ஆகும். புலனடக்கம் என்பது வெறும் வாயுரையாக இல்லாமல் அதனை நடைமுறைப் படுத்திக் காட்டிய பெருமை பரமஅம்சருக்கு உண்டு.

ஞானத்தேடல்

"நீ எதைத் தேடுகிறாயே அதையே அடைவாய்" என்பது பரமஅம்சரின் போதனைகளில் தலைசிறந்ததாகும். நாம் எதனைத் தேடிச் செல்கிறோமோ அதன் மீது பற்றும் உறுதியும் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்றார் பரமஅம்சர். அதற்கு எடுத்துக்காட்டாக நீரில் கிடக்கும் கற்பாறையைக் காட்டுகிறார். கற்பாறை நீரில் பல ஆண்டுகள் கிடந்தாலும், அந்த நீர் கற்பாறையின் உள்ளே ஊறிப் போவது கிடையாது. ஆனால் களிமண் நீரில் போட்ட உடனேயே ஊறிப்போய்விடுகிறது. நீருடன் கலந்து விடுகிறது. ஞானத்தேடலில் ஈடுபட்டிருப்பவன், நீரில் கிடக்கும் கற்பாறையைப் போல இருக்கவேண்டும். கற்பாறையைப் போன்றவன், பல துன்பங்களுக்கு இடையிலும் மனம் கலங்குவது இல்லை. உறுதியான மனம் சாதனைகளை நோக்கி அழைத்துச் செல்கிறது. நம்பிக்கை குறைந்தவனோ அற்பமான, சாதாரணமான துன்பங்களுக்காகக் சுவடக் களிமண்ணைப் போலக் கலங்கி விடுகின்றான்.

வாழ்வும் பக்திமையும் வெவ்வேறு அல்ல

ஒவ்வொரு வரும் தமது கடமைகளைச் செய்து கொண்டே பக்திமையில் ஈடுபடமுடியும் என்பது பரமஅம்சர் வகுத்துத் தந்துள்ள உயர்நெறியாகும். பெண்மணிகள் மூன்று நான்கு குடங்களில் தலையில் நீரைச் சுமந்து கொண்டு வருகிறபோது தமது அன்றாட நிகழ்ச்சிகளயும் இன்பதுன்பங் களையும் தோழியருடன் பேசிக் கொண்டே வருவார்கள். இருப்பினும் அவர்களது கவனம் நீர்நிரம்பிய குடத்தின்மீதே இருக்கும். அது போலவே

நாம் நமது அன்றாடக் கடமைளிலும் பணிகளிலும் ஈடுபட்டு இருக்கும் நேரத்திலும் இறையருள் தியானத்தைத் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு செய்வது மன ஒருமைப் பாட்டினை வழங்குவதோடு செய்யும் பணிகள் சிறக்கவும் உதவும். வாழ்க்கை வேறு பக்திவேறு என்று தனித்தனியே பிரித்துப் பார்க்காமல், வாழ்க்கைப் பாதையில் பக்தியை இணைத்துச் செல்லுகிற பாண்மையே பரமஅம்சர் காட்டிய இறையருள் நெறியாகும்.

உலகில் பரவிய ஆன்ம ஒளி

துய வாழ்வுககுச் சான்று கூற வேண்டும் என்றால் அதற்குப் பரமஅம்சரின் வாழ்க்கையைக் கூறலாம். அவரது வாழ்வின் தூய்மை எங்கிருந்து வந்தது என்பதைப் பார்க்கின்ற போது, அது அவர் கொண்டிருந்த அற்புதமான குணங்களிலிருந்து வந்தது என்றே கூற வேண்டும். அறிவு, வைராக்கியம் ஆகிய இரண்டும் அவரது அடிப்படைக் குணங்கள்.

வங்காளத்தில் கொல்கத்தாவுக்கு அருகில் உள்ளது தட்சிணேஸ்வரம் என்ற இடம். அங்கு அமைக்கப்பட்ட காளியின் ஆலயத்திற்குத் தமது அன்பாலும் தொண்டாலும் தனிப்பெருமையை ஈட்டித் தந்தவர் பரமஅம்சர். ஒரு தொண்டு மற்றொரு தொண்டாகத் தழைக்கும் என்பதற்குப் பரமஅம்சரின் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு. காளிக்கு அவர் செய்த தொண்டானது அவரை, பாரதத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வருகின்ற ஆன்மிக நாகரிகத்தின் வடிவமாக உயர்த்தியது. அம்மட்டோடு அல்லாமல், "ஆன்மிகமே பாரதத்தின் ஆன்மா" என்று சிகாகோவில் குரல் கொடுத்த சுவாமி விவேகானந்தரை அவருடைய சீடராக ஆக்கி உலகெங்கும் ஆன்மிக ஒளிபரவுவதற்கான ஆற்றலையும் தந்தது.

பெண்ணைத் தெய்வமாக வழிபடுதல்

பரம அம்சர் சாரதா தேவியுடன் வாழ்ந்த வாழ்க்கை, ஆன்மிக சோதனையின் மகுடம் எனலாம். சாரதாதேவியுடன் ஒரே படுக்கையில் இருந்த போதும், 'மன்மதனின் அழைப்பு பரமஅம்சருக்கு ஏற்படவே இல்லை'

---

1. பா. தீனதயாளன் - பரமஹம்ஸர் பொழியும் கருணை மழை ப.86

என்பதனை பரமஅம்சரின் வாழ்க்கையை ஆய்வு செய்தவர்கள் குறிப்பிட்டுக் கூறுகின்றனர்.

பவுர்ணமி நாளில் கருணை பொங்கும் நிலவொளியில் காளிதேவியை வணங்குவது வங்காளத்தில் வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் பரமஅம்சர் ஒரு பவுர்ணமி நாளில் காளிக்காகப் போட்ப்பட்டிருந்த ஆசனத்தில் அன்னை சாரதாதேவியை அமரச் செய்து அவரைக் காளியாகக் கருதிப் பூசைகள் செய்தார். பெண்ணைத் தெய்வமாக ஏற்று வழிபாடுசெய்வது வங்காளத்தில் 'சோடசிபூஜை' என்று சொல்லப்படுகிறது. இத்தகைய சோடசி பூஜையின் மூலம் ஒவ்வொரு பொருளையும் இறைவனது உருவமாக பார்க்கின்ற இயல்பைப் பரமஅம்சர் தமது வாழ்க்கையில் காட்டினார்.

"காணும் பெண்களைக் காளியாகவே துதித்த பெருமையும் வல்லமையும் ஆண்மையும் பரம அம்சரைத் தவிர வேறு யாருக்கும் வாய்க்கவில்லை. மனைவியைக் காளியாகவே நடத்தி, தானும் காளியாகவே வாழ்ந்தவர் பரமஅம்சர். உயிர்களைப் படைத்த அன்னை பராசக்தியை நேசித்ததைப் போல் தன் மனைவி சாரதாதேவியையும் நேசித்தார் பரமஅம்சர்" என்பர் அறிஞர்.[1] தாம் கற்ற தெய்வீக அனுபவங்களைச் சாரதா தேவியாருக்குக் கற்றுத் தந்தார். அவரை 'அன்னை' என்று அழைத்து அவரைத் தமது முதல் சீடராக ஏற்றுக்கொண்டார்.

இங்ஙனம், கம்பன் சொல்லுகிற கல்வி ஞானம் என்பவற்றின் விளக்க மாகவும், மனப்பயிற்சியின் வழிகாட்டியாகவும் நாம் நேரிடையாகக் காணக் கூடிய வாழ்க்கை அனுபவமாக பரமஅம்சரின் இயல்பு அமைந்திருக்கிறது.

5. கம்பன் காட்டும் இலட்சியத்தொடர்ச்சி

இலட்சியத்தைத் தொடராவிடின் அது வீழ்ச்சியில் முடியும்

இலட்சியம் என்பது சக்திகளின் மையப்புள்ளி எனவும், அந்த இலட்சிய சக்தி ஊற்றைப்போலப் பெருக்கெடுக்கும் எனவும் முன்னர்க் குறிப்பிட்டோம். அந்த இலட்சிய சக்தி அவிந்தால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதைக் கம்பராமாயணம் மிகவும் விரிவாக நம் கண் முன்னே கொண்டு வந்து காட்டுகிறது.

இலட்சியத்தைத் தொடராவிடின், அது வீழ்ச்சியில் போய் முடியும் என்பதை இராவணனின் கதையைக் கொண்டு கம்பன் நம் மனங்களில் நிலை நாட்டுகிறான்.

இராவணனின் தொடக்க கால வாழ்வும் அவனது பிற்கால வாழ்வும் முற்றிலும் முரண்பட்டவையாக இருக்கின்றன. தொடக்க காலத்தில் அவன் அரக்கர் குலத்தை உயர்த்தும் உயர்ந்த நோக்கம் உள்ளவனாகத் திகழ்ந்தான். அரக்கர் குலம் இழந்த மானத்தை மீட்டு எடுக்க முழு முயற்சி மேற்கொண்டான். அதிலே வெற்றி கண்டு அரக்கர் குலத்தை மிகவும் உயர்த்தி இலங்கையை மீட்டான். இலங்கையை மீட்டு எடுக்க உடல் வலிமை மட்டும் போதாது என்று உணர்ந்தான். ஆகவே கொன்றை வனத்தில் தவம் இருந்தான். கடும் தவத்தின் இறுதியில் இறைவன் அருளால் 'முக்கோடி வாழ் நாள்' பெற்றான். தான் யாராலும் வெல்லப் படக் கூடாது என்ற வரத்தையும் பெற்றான். இலங்கையை இந்திரன் உலகத்தை விட மிக உயர்ந்ததாக ஆக்கினான்.

அவன் ஆக்கிய - அவன் நிருமாணித்த - அந்த இலங்கை அவன் கண்முன்னாலேயே வீழ்வதனையும் கண்டான்.

இலங்கையின் எழுச்சி

இலங்கையின் வாழ்ந்த அரக்கர் குலத்தைத் திருமால் எதிர்த்தான். அரக்கர் குலம் பாதாளத்தில் போய் வீழுமாறு செய்தான். தெய்வத் தச்சனால் அழகு படுத்தப்பட்ட இலங்கையில் இனிமையாக வாழ்ந்த அரக்கர்கள் பாதாள உலகில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டதை நினைந்து நினைந்து இராவணன் மனம் உளைந்தான். தன் மன உளைச்சலுக்கு ஒரு தீர்வு கண்டான். தன் குலப்பெருமையை நிலை நிறுத்தவும், அழகு இழந்த இலங்கையை மீண்டும் புத்தாக்கம் செய்து நிருமாணிக்கவும் 'கடுந்தவம்' ஒன்றே வழியென்று உறுதிகொண்டான்.

குலப்பெருமையை நிலை நாட்டுவதே இராவணனது இளமைக் காலத்து இலட்சியம் ஆகும். அந்த இலட்சியத்துக்கு ஏற்பக் கடுந்தவம் மேற்கொண்டான்.

குறிக்கோளில் தொய்வு கூடாது

வாழ்க்கை என்பது ஒரு மாலை போல அமையவேண்டும். அதன் ஏற்ற இறக்கங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு உடையனவாக இருக்க வேண்டும். அந்தத் தொடர்புகள வெற்றி என்ற பின்னலால் பின்னப்பட வேண்டும். வாழ்வில் எடுத்துக்கொண்ட முயற்சி, நம்பிக்கை, குறிக்கோள் ஆகியவை 'உயிர் ஊட்டம்' உடையனவாக வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து செல்ல வேண்டும். அவ்வாறு தொடராவிட்டால் வீழ்ச்சி வந்து சேரும் என்பதைக் கம்பராமாயணம் மிகவும் அற்புதமாக வலியுறுத்துகிறது.

குறிக்கோளுக்குத் தொய்வு ஏற்பட்டு விடக்கூடாது. குறிக்கோளின் தொடர்ச்சி என்பது வாழ்வின் அடிநாதமாக அமையவேண்டும். எந்த ஒன்றையும் தொடரத்தொடரப் பயிற்சியும் வன்மையும் ஏற்பட்டு அது வெற்றிக்கனியாக மலரும் என்பது வரலாறு காட்டும் உண்மை. தொடருதல் (sastainability) என்பதைக் குலைப்பதற்குப் பல்வேறு சக்திகள் வந்து சேரும்.

இராவணன் இளமையில் மேற்கொண்ட தவத்தைக் கடைசிவரை தொடரவில்லை என்பதும் அதன் காரணமாகவே அவனுக்கு வீழ்ச்சி ஏற்பட்டது எனபதும் இராம காதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லும் உண்மை யாகும்.

தேவர் உலகமோ என்று வியக்கத் தக்க வகையில் உருவாக்கப்பட்ட இலங்கையின் கிணறுகளில் இரத்தம் ஊறியது. இவ்வாறு இரத்தம் ஊற்றெடுக்கக் காரணமாக அமைந்தவன் அனுமன். அனுமன் அரக்கர்களோடு போரிட்டு அவ்வரக்கர்களை வீழ்த்தியபோது பெருகிய இரத்த ஆறு அவர்தம் கிணறுகளிலே ஊற்றாகிப் போனது. அனுமன் இட்ட நெருப்பு பல நாட்கள் அனல்குன்றாமல், அத்தீக்கங்குகளின் காரணமாக இலங்கை நகரம் முதல் வீழ்ச்சியை எய்தியது. இவ்வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தவன் இராவணனே.

திசையானையை வென்ற மார்பு

இராவணன் இலங்கையின் மன்னன் ஆனதும் வானவரை வென்றான்; தானவரை வென்றான்; மூன்று உலகங்களையும் வென்றான். எட்டுத்திசை யானைகளை எதிர்த்தான். ஒரு திசையானையின் கொம்பு அவன் மார்பில் புகுந்தது. அந்தக் கொம்பு அவன் மார்பில் மேலும் செல்ல முடியாமல் ஒடிந்து போனது. இதனைக் கம்பன் 'கோடு உழுத மார்பு' (இராவணன் வதைப்படலம்-205) என்று பேசுகின்றான்.

தழும்பேறிய பாதங்கள்

இராவணனின் பாதங்களில் ஏராளமான தழும்புகள் இருந்தன. அந்தத் தழும்புகள் எவ்வாறு ஏற்பட்டன? இராவணன் மூவுலகிற்கும் மன்னன் அல்லனோ? எனவே பகைவேந்தர்கள் இராவணனின் கூரிய வேலுக்கு அஞ்சினர். அதனாலே அவன் பாதங்களிலே வீழ்ந்து வணங்கினர். வேந்தர் பலரும் வீழ்ந்து வணங்கிய காரணத்தால், அவ்வேந்தரின் முடிகள் அவனது பாதங்களை அழுத்தின. அதனால் அவன் பாதங்களில் தழும்புகள் பல தோன்றின. இதனைக் கம்பன்,

'முடி உழுத தழும்பு இருந்த சரணத்தான்'
(இராவணன் வதைப்படலம்-205) என்று குறிக்கின்றான்.

இராவணனின் மமகாரம்

இராவணன் சிவன் உறையும் வெள்ளியங்கிரியைத் தனது தோளால் அசைத்தவன் என்பது அவனது பெரும் வலிமையைக் குறிப்பிடும் மற்றொரு

செயலாகும். இராவணன் விண்ணின் வழியே சென்றபோது வெள்ளிமலை அவனைத் தடுத்தது. அவ்வெள்ளி மலை, சிவபெருமான் இருக்கும் இடம் என்பதை அவன் மறந்தான். அம்மலையும் தன் தோளின் வலிமைக்கு முன்னாலே நிற்காது என்று இறுமாப்புடன் அதையும் அசைத்தான். இது இராவணனின் மமகாரத்தைக் காட்டுகிறது. இதனைத் தேவாரம் பல இடங்களில் சுட்டிக் காட்டுகிறது.

குருவைச் சேவகம் செய்யச் சொல்லுதல்

இராவணன் தனது பின்னாளில் மற்றொரு பாதகச் செயலையும் செய்தான். குருவைச் சேவகம் செய்யச் சொல்லுவது என்பது மாபாதங்களுள் ஒன்று ஆகும். இராவணனின் அவையில் வானவர், விஞ்சையர், சித்தர், கின்னரர், நாகர் ஆகியோர் சேவகம் புரிந்தனர் என்பதிலே வியப்பு ஒன்றும் இல்லை. ஆனால் குருவை – ஆசான்மாரைச் சேவகம் செய்யச் சொல்லுவது என்பது மாபாதகம் ஆகும். அந்தப் பாதகத்தையும் இராவணன் செய்துள்ளான்.

தேவர்களின் குரு பிரகஸ்பதி. அசுரர்களுக்குக் குரு சுக்கிரன். இவ்விருவரும் கையில் பொன்னால் செய்யப்பட்ட பிரம்பை ஏந்தி, இராவணனின் அவைக்கு வரும் தேவர்களை, அவரவர்கள் இருக்க வேண்டிய இருக்கைக்கு அழைத்துச் செல்லும் சேவகத்தைச் செய்துள்ளனர்.

இராவணனுக்கு அஞ்சாதவர் யாருமே இல்லை என்பதைத்தான் இவை அனைத்தும் காட்டுகின்றன.

தவத்தின் உருவம்

தவம் செய்பவர்கள் தமக்கு வரும் தீமையைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்தல் கூடாது. இவ்விரு ஒழுக்கமே தவத்தின் 'உருவம்' என்று வள்ளுவர் தெளிவுபட உரைக்கின்றார்.

தவம் செய்யத் தொடங்கும் போது அகத்திலும் புறத்திலும் பல மாற்றங்கள் ஏற்படும். முதற்கட்டமாக மனத்தை அடக்கும் போது மனம் அலை பாயத் தொடங்கும். அடுத்து உடலுக்குத் தேவையான நலங்களைத் துறக்க வேண்டும். தவம் செய்பவர்களுக்கு வெளியிலிருந்து பல இடையூறுகள்

தோன்றும். இவற்றை எல்லாம் தாண்டியே தவத்தை வெற்றியுடையதாக ஆக்க முடியும். இந்தப் படிநிலைகளைக் கடந்தவன் தான் இராவணன். தனது தவத்தை தனது இலட்சியத்துக்குப் பயன்தருவதாக ஆக்காமல், இராவணன் தனது விருப்பங்களுக்கத் தவத்தைப் பலியாக்கிவிட்டான்.

அருந்தவத்தின் பெருங்கடல்

"வரம் எல்லோருக்கும் கிடைத்து விடுவது இல்லை. தவம் உடையவர்களுக்குத் தான் தேவர் வரம் கொடுப்பர். இதனை நாம் சிலப்பதிகாரத்தில் பார்க்கிறோம். இக்காப்பியத்தில் 'மாலதி' என்ற பெண்ணின் கதை வருகிறது. இக்கதையில் 'செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கொடார்' என்று இளங்கோவடிகள் குறிப்பிடும் போது இக்கருத்துப் பொருந்துகிறது" என ச.வே. சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார்.[1]

இராவணன் தவத்தின் காரணமாகவே பல வரங்களைப் பெற்றான் என்பதைக் கம்பராமாயணமும் வலியுறுத்திகிறது. அவ்வாறு பெற்ற வரங்கள் அவனது உயிருக்கு எப்போதும் காவலாக இருக்கும் என்ற இறுமாப்பில் இருந்தாள் மண்டோதரி. இறைவன் வரம் கொடுத்தாலும், தவமானது தொடர்ந்தால்தான் அந்த வரமும் நிலைத்திருக்கும் என்பதனை மண்டோதரி மறந்தாள். இராவணனும் அதனை மறந்தான். அவன் உயிர் மானுட வடிவத்தில் வந்த இராமனின் அம்புக்கு இரையாகும் என்று மண்டோதரி நினைக்கவில்லை. இராவணன் மேற்கொண்ட தவத்தை மண்டோதரி 'அருந்தவத்தின் பெருங்கடல்' (இராவணன் வதைப்படலம்-24) என்ற குறிப்பிடுகின்றாள்.

தவத்தால் பெற்ற வரமும், அந்தத் தவம் தொடராத போது வீழ்ச்சியுறும் என்பதற்கு இராவணனின் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு.

காமத்தால் கடலும் வற்றும்

இராமனது அம்பு, இராவணன் தன் வரபலத்தால் பெற்ற முக்கோடி வாழ் நாளுக்கு முடிவு கட்டியது. அதற்குக் காரணமாக சீதைபால் அவன் வைத்த

1. இளங்கோவும் கம்பனும், ப.230

காமம் அமைந்தது. காமம் என்ற கொடிய குணத்தால் 'வரம்' என்ற கடல் சுவட வற்றிப்போகும் என்பதை மண்டோதரி உலகிற்குத் தெரியப்படுத்துகிறாள்.

இராவணனுடனேயே இருந்த அவன் மனைவியாகிய மண்டோதரி அவனைப் பற்றிக் குறிப்பிடுவது உற்று நோக்கத் தக்கதாகும்.

வரம் கடைச்சரக்கு அன்று

இராவணனின் வாழ்வில் வரம் என்பது வாழ்வைச் செம்மைப்படுத்துவதாக இல்லை. 'வரம்' என்பது வாழ்வின் அன்றாட நடைமுறைகளுடன் இணைந்து தொடர்ந்து செல்ல வேண்டும். 'வாங்கினோம்; முடிந்து விட்டது' என்று கருதிக்கொள்வதற்கு 'வரம்' என்பது கடைச் சரக்கு அன்று என்பதைக் கம்பராமாயணம் இராவணன் வழி நின்று வலியறுத்துகிறது. இதனை, முப்பால் மொழிந்த வள்ளுவப் பெருந்தகை,

தவமும் தவம் உடையார்க்கு ஆகும்;
அவம் அதனை
அஃது இலார்மேற் கொள் வது

(அதிகாரம் : தவம். குறள் எண் 262)

என்று மிகுதியும் தெளிவு படுத்துகிறார்.

உடைமை என்ற சொல்லாட்சி

'உடைமை' என்ற செல்லை வள்ளுவர் மிகுந்த பொருட்பொருத்தத்துடன் பல்வேறு இடங்களில் கையாளுகிறார். 'உள்ளம் உடைமை உடைமை' என்ற குறளுக்கு உரை வரையும் பரிமேலழகர் "ஊக்கம் உடைமையே ஒருவனுக்கு நிலைநின்ற உடைமையானது" என்றார். அவ்வாறே 'தவம் உடையார்க்கு' என்ற குறளுக்கு, தவத்தை நிலை நின்ற உடைமையாகக் கைக் கொண்போர்க்கு என்று பொருள் காண்பதே சாலச்சிறப்பு உடையதாகும். தவம் நிலையாகக் கைக்கொள்ளப்படாத விடத்து, அது அவமாக மாறிவிடும் என்பதே மேற்கண்ட தவம் என்ற அதிகாரத்தில் உள்ள குறளுக்கு உரிய உண்மைப் பொருள் ஆகும். தவத்தை உடைமையாகக் கைக்கொள்பவர்க்கே, தவம் ஆக்கமாகப் பயன்நல்கும் எனவும், அங்ஙனம் மேற்கொள்ளாதவர்க்கு அது எதிர்மறை விளைவை ஏற்படுத்தும் எனவும் உணரமுடிகிறது. இத்தகைய

உரை வெளிச்சத்தின் அடிப்படையில் கம்பனை நன்கு ஆழ்ந்து காணும் போது, தவத்தை இராவணன் நிலை நின்ற உடைமையாகக் கொள்ளவில்லை என்பது வெள்ளிடை மலையாகும்.

தவம் என்ற அதிகாரத்தில் நன்கு தோய்ந்த கம்பன், தவம் எவ்வாறு அவமாக மாறி அலங்கோலப் பட்டது என்பதனை மண்டோதரியின் வாயிலாகப் பின்வருமாறு மொழிகின்றான்:

அரை கடையிட்டு அமைவுற்ற முக்கோடி
ஆயுவம்; பேரறிஞர்க் கேயும்
உரைகடையிட்டு அளப்பரிய பேராற்றல்
தோள் ஆற்றற்கு உலப்போ இல்லை;
திரை கடையிட்டு அளப்பு அரிய வரம் என்னும்
பாற்கடலைச் சீதை என்னும்
பிரை கடையிட்டு அழிப்ப அறிந்தேனோ
தவப்பயனின் பெருமை பார்ப்பேன்
(இராவணன் வதைப்படலம்-243)

கல்லா குத்தியது?

இப்பாடலில் மண்டோதரியின் கூற்று வாழ்வியலின் அனுபவத்தை உலகு அறியக் காட்டுகிறது. "வரபலத்தைச் சீதாப்பிராட்டி அழித்து விட்டாள்' என்று மண்டோதரி புலம்புவது பெண்களுக்கே உரித்தான கூற்றாக, நாம் அன்றாடம் வாழ்வியலில் காண கூடிய ஒரு கூற்றாக அமைந்துள்ளது. 'வரபலம்' அழிவதற்குச் சீதாப்பிராட்டி காரணமாக ஆக முடியாது என்பதை மண்டோதரி உணரவில்லை என்றே தோன்றுகிறது. வரபலத்தைக் கைக்கொள்ளாத இராவணனின் நடைமுறை வாழ்வே அந்த வரபலம் அழிவதற்குக் காரணம் ஆயிற்று. 'கல்குத்திற்று' என்ற உலகியல் வழக்கைப் போன்றே மண்டோதரியின் கூற்றும் அமைந்துள்ளது. கல்லை நாம் குத்தினாமே யொழியக் கல் நம்மைக் குத்தவில்லை. அங்ஙனமே வரபலம் இராவணனின் செய்கையால் கெட்டதே யன்றி, சீதை கெடுக்கவில்லை.

சாதாரண நடைமுறைப் பேச்சில் இருக்கின்ற மனமயக்கத்தைக் கம்பன் மேற்காண் மண்டோதரியின் புலம்பலில் படம்பிடித்திருக்கின்றான்.

'வரபலம் இருக்கிறது; எனவே இராவணனை எதுவும் அழிக்க இயலாது' என்று வரத்தின் பெருமை ஒன்றையே மனத்தில் கொண்டிருந்தாள் மண்டோதரி.

வாழ்வில் வரத்தின் பலன் தொடரவேண்டும் என்றால், அவ்வரத்திற்கு மாறாக நடக்கக் கூடாது என்ற உண்மையை மண்டோதரி மறந்தாள் என்பதை மேற்கண்ட பாடல் காட்டுகிறது.

வரத்தை வரம் அழித்த வரலாறு

வர பலத்தை அழிப்பதற்கு மற்றொரு வரபலம் தோன்றுவது உண்டு என்பதனை,

'மனித்தனார் அழித்தனரே வரத்தினாலே'

(இராவணன் வதைப் படலம்-244)

என்ற பாடலில் மண்டோதரி கூற்றாகக் கம்பன் காட்டுகிறான். மனித்தனார் என்பதற்கு மனித உருவில் வந்த இராமன் என்பது பொருளாகும்.

இராமனால், இராவணன் அழிவான் என்பது, தேவர் இராமனுக்கு அளித்த வரமாகும். இவ்வாறு இராமன் பெற்ற வரம், இராவணன் பெற்ற வரத்தை முற்றிலும் அழித்து விட்டது.

இராவணன் தன் தவத்தைச் சரியான போக்கில் கடைப்பிடிததிருந்தால் 'இராமனின் வரம்' இராவணனை ஒன்றும் செய்திருக்க முடியாது.

தவத்தில் அவன் நிலை நிற்காமையால் அதுவே அவமாக மாறி அவனை அலங்கோலப்படுத்தியது என்பது புலனாகிறது.

சீதையை நோக்கும் நிலை

சீதாப்பிராட்டியை எல்லோரும் காமக்கண் கொண்டு பார்க்க வில்லையே! அனுமன், சீதாப்பிராட்டியை, 'என் பெரும் தெய்வம் ஐயா' என்று குறிப்பிட்டுப் பேசுகிறான். அவனுடைய பார்வையில் அவள் கற்புக் கடம் பூண்ட மாபெரும் தெய்வமாகக் காட்சி தருகிறாள்.

இலக்குவனின் பார்வையில் சீதை ஒரு தாயாக அவன் கண்களுக்குத் தெரிகின்றாள்.

கம்பனின் பார்வையிலோ இவை எல்லாவற்றிலும் மிக உயர்ந்து உலகிற்கு ஒளியூட்டும் தவம் செய்த தவமாம் தையலாக அவள் உயர்ந்து நிற்கின்றாள். கங்கையில் நீர் எடுத்துக் கொண்டு வந்து தமிழகத்தில் 'சோழகங்கம்' என்பதனை இராசேந்திர சோழன் அமைத்ததைப் போல, நீராழி சூழ்ந்த இலங்கையையே அகழியாகக் கொண்டு, அதன் நடுவே இராக்கதர் நகரில், அசோகவனத்தில், இலக்குவன் படைத்த புல்லினால் தொடுத்த பர்ணசாலையையே திருக்கோயிலாகக் கொண்டு அங்கே உறையும் இறைவியாகவே சீதாப்பிராட்டியைக் கம்பன் தரிசிக்கின்றான்.

இராவணனின் எண்ணம் பழுதாக இருந்ததால், இயக்கமும் பழுதாயிற்று.

பகைப் புலத்துப் பெண்ணான மண்டோதரியின் கண்களுக்கு, சீதை, பெண்களுக்கு எல்லாம் ஆபரணம் போன்றவளாகத் தெரிகின்றாளே! "காந்தையருக்கு அணி அனைய சானகி" என்று மண்டோதரி குறிப்பிடுவதிலிருந்து இதனை அறிந்து கொள்ள முடியும்.

மலர் இருக்கை

மன்மதன் மலர் அம்பை வீசிக் காமத்தை எழுப்பும் இயல்பு உடையவன். அவன் எப்போதும் எல்லோர் மீதும் அம்பை வீசிக் கொண்டே இருப்பதற்கு அஞ்சுவானன். தவத்தில் இருந்த சிவபெருமான் மீது அம்பை வீசி அவன் அழிந்த வரலாற்றை இங்கே நினைத்துப் பார்க்க வேண்டும்.

மன்மதன் தன் மலர் அம்புகளை இராவணன் மீது வீசுவதற்கு எப்போதும் அஞ்சியது இல்லை. மன்மதன் இராவணன் மீது தன் மலர்க் கணைகளை எப்போதும் வீசிக் கொண்டே இருந்தான். இவ்வாறு தொடர்ந்து வீசிய அம்பு அவனது இருக்கையில் வந்து விழுந்த காரணத்தால் அவன் இருக்கை "மன்மதனார் மலர் இருக்கை" யாக ஆயிற்று. அதனால் தான் கணவனாகிய இராவணனைப் பற்றி மண்டோதரி சொல்லும் போது, "மாரனார் தனி இலக்கு" (இராவணன் வதைப் படலம்-24) என்று அவனுக்கு ஒரு தனிப் பெயரைச் சூட்டுகிறாள். மாரனாகிய மன்மதன் பிறரிடம் தன் மலர்க் கணையை விடுவதற்குச் சற்று அஞ்சுவது உண்டு என்பதும், இராவணன் என்னும் இலக்கின் மீது சுதந்திரமாக எப்போதும் மலர்க்கணையைச் சொரிந்து

கொண்டு இருந்தான் என்பதும், அவனுக்குப் பிடித்தமான இலக்கு அவன்தான் என்பதும் இப்பாடல் வரியால் புலனாகின்றன. மன்மதனின் பல அம்புகளில் திளைத்த இராவணனை இன்று இராமனின் ஒரே அம்பு துளைத்து விட்டதே என்று மண்டோதரி புலம்புகின்றாள். இன்பம் அனுபவிக்கக் காமனின் பல அம்புகள்; துன்பம் அனுபவிக்க இராமனின் ஒரே அம்பு என்பது இராவணனது வாழ்க்கை காட்டும் பாடமாகும்.

கம்பராமாயணத்தில் மண்டோதரியின் புலம்பலாக ஒன்பது பாடல்கள் வருகின்றன. அப்பாடல்களில் இராவணன் பெற்ற வரத்தின் பெருமையை மண்டோதரி கூறுகின்றாள். அந்த வரம் இராவணனிடம் இறுமாப்பாக ஆனது என்பதனையும் கூறுகிறாள். அந்த வரமே காமக் கொடுமையாக வளர்ச்சி அடைந்தது என்பதையும் அவள் சுட்டிக் காட்டுகிறாள். அவன் பெற்ற வரமே அவனுக்கு வீழ்ச்சியாக அமைந்து விட்டது என்பதனையும் மண்டோதரி மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகின்றாள். இராவணன் பெற்ற வரத்தால் நன்மை அடையாமல் அவன் கொடுமையின் உச்ச நிலைக்குச் செல்வதைச் சுட்டிக் காட்டி காப்பியத்தை முடித்து வைக்கிறாள். மண்டோதரி புலம்பலைக் காப்பியத்தின் முடிவுரை எனலாம். இப்புலம்பலின் வாயிலாக இராவணனின் வாழ்க்கை ஒரு பாடமாக இருப்பதை நாம் உணர்கிறோம்.

இன்ப வாழ்வின் ஊற்று

இத்தகைய இராவணனது நிலையின் பின்னணியில், பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் கூறிய அனுபவ மொழிகளைக் காண்பது மனநலத்திற்குப் பொலிவு தருவதாக இருக்கும்:

"நான் என்னுடைய குறைபாடுகளை ஒதுக்கித் தள்ளக் கற்றுக் கொண்டேன். உலகில் நான் கற்க வேண்டிய கலை ஞானங்கள், அறிந்து கொள்ள அறிவுப் பெட்டகங்கள், அன்பு செலுத்த வேண்டிய மாந்தர், உறவினர், நண்பர், அடைய வேண்டிய அனுபவங்கள், உழைத்துச் சாதிக்க வேண்டிய பணிகள் ஆகியவற்றில் என்னுடைய முழுக்கவனத்தையும் செலுத் துவதால் நான் இன்பமாக வாழ்கிறேன்" என்பது ரஸ்ஸலின் கருத்தாகும்.

நாம் கவனம் செலுத்த வேண்டியது எது என்பதனை நாம் அறுதியிட்டுக் கொள்ளாமலும் அதனைத் தொடராமலும் இருப்பின் மனம் தடுமாறும்;

அவ்வழியே வாழ்வும் தடுமாறும் என்பது கம்பன் இராவணனின் வாயிலாக உலகிற்குக் காட்டும் உண்மையாகும்.

பிரகலாதன் கதையின் உள்ளீடு

பிரகலாதனின் கதை வீடணன் அடைக்கலம் பெறுவதற்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ளது. இராவணனுக்கு இரணியனின் வரலாற்றை எடுத்து வீடணன் உரைக்கின்றான்.

இரணியனின் வரலாற்றைக் கூறும் பகுதியைச் சில அறிஞர் மூலக் கதையுடன் நேரடித் தொடர்பு இல்லாதது என்று கூறுவர்.

கம்பன் இராமாயணத்தைத் திருவரங்கத்தில் நாதமுனிகள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்த போது அங்கு இருந்த புலவர்கள், “இரணியனின் கதை வான்மீகி இராமாயணத்தில் கூறப்படவில்லை. கம்பர் கூறியிருப்பது புதுமையாக இருக்கிறது. ஏதேனும் தெய்வச்செயல் காட்டினால் தான் ஏற்க முடியும்” என்று கூறினார்கள். கம்பனுக்குத் தான் பாடி முடித்த இரணியன் கதைபற்றி எவ்வித மனக்குழப்பமும் இல்லை. ஆகவே இரணியன் கதை பற்றிய பகுதியைத் திருவரங்கத்தில் உள்ள மேட்டழகிய சிங்கர் சன்னிதியில் பாடி, கம்பன் அரங்கேற்றம் செய்து கொண்டிருந்த வேளையில், நரசிங்கப் பெருமான் கைகளை முன்னே நீட்டித், தலையை அசைத்துப் பேராரவாரம் செய்தான். அது கண்டு அனைவரும் அதிசயித் தனர். இறைவன் உள்ளம் மகிழ்ந்து இங்ஙனம் செய்தமையால் இக்காப்பியம் தெய்வத் தன்மையுடையது என்று அங்கிருந்தவர்கள் போற்றினார்கள் என்று செவி வழிச் செய்தியாகக் கூறப்படுகிறது.

இச்செவி வழிச் செய்தியில் நாம் பெரிதும் உணரத் தக்கது யாது எனில், புலவர் எல்லாம் புதுமையாக இருக்கிறது என்று சொல்லி அதனை ஏற்பதற்குச் சற்றே தடைகொண்டிருந்த நேரத்தில் கம்பன் எவ்வித மனக்குழப்பமும் இல்லாதவனாய் இருந்தான் என்பதாம். பொதுவாகவே பிரகலாதன் கதை அனைவரின் மனக் குழப்பத்தையும் தீர்க்கக் கூடியதான உள்ளீடு கொண்டது என்பதும் இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

கட்டியம் கூறுவது

இராமன் இராவணனோடு நிகழ்த்த இருக்கிற பெரும்போருக்கு முன்னாலே, சிங்கமூர்த்தி இரணியனோடு போரிட்ட வரலாறு ஒரு வகையில் பின்னால் நிகழவிருக்கின்ற நிகழ்ச்சிகளுக்குக் கட்டியம் கூறுவதாய் இருக்கிறது.

மேலும் இராவணன், அகங்காரம் மமகாரம் ஆகியவற்றில் இரணியனுக்குச் சற்றும் இளைத்தவன் அல்லன். இராவணனின் இயல்பும் இரணியனின் இயல்பும் பலவகைகளில் ஒத்துச் செல்வதால், வீடணன் இரணியனின் வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டி இருப்பது பொருட்பொருத்தம் உடையதாகவே தோன்றுகிறது.

வரபலம் மட்டும் போதாது

கம்பன் இந்தக் கதையை எடுத்துக் கொண்டதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது. இராவணனைப் போலவே இரணியனும் எதனாலும் தனக்கு இறப்பு வரக்கூடாது என்பது உள்ளிட்ட பல வரங்களைப் பிரமன் வாயிலாகப் பெற்றவன் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வரங்கள் அவன் இழைத்த பிழைக்கு முன்னே நிற்க மாட்டாமல், சிங்க மூர்த்தியின் வாயிலாக அவனுக்கு இறப்பு வந்து நேர்கிறதது என்பதை வீடணன் சுட்டிக்காட்டுகிறான். வரபலம் ஒன்று மட்டுமே வாழ்க்கைப் பாதையை நீட்டிக்கும் என்ற தவறான கருத்தை இராவணனின் மனத்திலே வீடணன் பதிய வைக்க வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்துக் கொள்கிறேன். இக்கருத்தை உடன்பட்டு, இராவணனின் வீழ்ந்து கிடந்த போது மண்டோதரி புலம்புகையில்,

> அளப்பரிய வரம் என்னும்
> பாற்கடலைச் சீதை என்னும்
> பிரை கடையிட்டு அழிப்பதனை
> அறிந்தேனோ தவப்பயனின் பெருமை பார்ப்பேன்
>
> (இரணியன் வதைப்படலம்-243)

என்று கூறுகிறாள். வரத்தின் பயனானது தவறு இழைக்கும் போது செயல் படாது என்பதை நான் புரிந்து கொள்ளாமற் போனேனே என்கின்றாள். இராவணனின் இறப்புக்குப் பின்னால் தான் இக்கருத்தை மண்டோதரி புரிந்து கொள்கிறாள்.

ஆனால் இராவணன் இது பற்றி ஒன்றும் கவலை கொள்ளாமல், இரணியன் வீழ்ந்ததற்குக் காரணம் திருமால் செய்த மாயமே என்று எதிர்மறுத்து மொழிகின்றான்.

நாராயண மந்திரம்

வரத்தின் பயனை விட, அகங்காரத்தை நீக்கி, இறைவனைச் சரண் அடைந்து அவன் நாமத்தைச் சொல்லுபவர்க்கே வெற்றிகள் கிடைக்கும் என்ற பிரகலாதனின் வாழ்வியலை முழுமையாக வீடணன் படம் பிடித்துக் காட்டுகிறான். வாழ்வை நிலை நிறுத்துவது வரபலமா, இறையருளைத் துணைக் கொள்கின்ற சரணாகதியா என்ற கேள்விக்குரிய விடை பிரகலாதனின் கதையில் கிடைக்கிறது. அதனால்தான் வீடணன் அக்கதையை இராவணனுக்கு விரிவாக எடுத்துச் சொல்லுகிறான்.

வீடணனை எதிர் மறுக்கும் இராவணன், 'பகைமை' ஒன்றையே தன் மனத்தில் எண்ணுகின்றான். வீடணன்கூறிய காரண காரியங்களை உணர்ந்து கொள்ளும் மனநிலை அவனுக்கு இல்லை. 'என்னையே நோக்கி இந்நெடும்பகை தேடிக் கொண்டேன்' என்று அவன் கூறுவதற்கு இணங்க, இறுதிவரை பகைவருடன் போராடும் மனநிலையையே அவனிடம் பார்க்க முடிகிறது.

பகைமை முற்றி நிற்கின்ற இராவணனின் முன்னே, வீடணன், "அறம் பிழைத்தவன் நீ" என்று கூறும் பேச்சு எடுபடவில்லை.

வாழ்க்கைத் துன்பங்களைக் கடப்பதற்கு இறையருளை வேண்டுவது வாழ்க்கையின் இயல்பான குணமாகும். இறைவனின் நாமத்தை இடையறாது கூறி அவனைச் சரண் அடைந்தால் துன்பங்கள் தூசாகும் என்பதே பிரகலாதான் கதையின் சாரமாகும்.

1. அகங்காரத்தை ஒழித்தல் 2. இறைவனைச் சரணாகதி பண்ணுவதால் துன்பத்தைத் துடைத்தல் 3. இறுதி வெற்றி பெறுதல் ஆகிய மூன்று கருத்துகளும் பிரகலாதன் கதையில் வலியுறுத்தப்படுகின்றன.

ஆகவே பிரகலாதன்கதை இறையருட் பாதையில் தெளிந்த மனம் கொள்ளுவதற்கான பயிற்சியை நமக்கு வழங்குகிறது.

தன்னையே கடவுளாக ஏற்றுத் தனது நாமத்தை மட்டுமே கூற வேண்டும் என்பது அனைத்து அண்டங்களுக்கும் இரணியன் இட்ட கட்டளையாகும். இந்தக் கட்டளையின் மீது அவன் மைந்தனாகிய சிறுவன் பிரகலாதன் கேள்வி எழுப்புகிறான்.

'நாராயணாய நம' என்ற மந்திரத்தின் பெருமையை, பெருவலி படைத்த தந்தையின் முன்னே அஞ்சாமல் எடுத்துரைக்கின்றான்.

அவன் உரை வருமாறு:

"முழுமுதற் கடவுள் ஒப்பற்றவன். அவன் தன்னுள் இருந்து எல்லா உலகங்களையும் உண்டாக்குகிறான். அவற்றுக் குள்ளே தான் பல வடிவம் எடுத்து நிற்கின்றான். மேலும் அவன் பாலில் நெய்போல அவற்றுக்குள்ளே தங்கியிருப்பான்" என்று உலகில் ஒன்று கலந்து இருக்கும் இறைத் தன்மையைக் கூறுகிறான்.

இறையருட் பயிற்சி

இறையருளை அடைவதற்குப் பயிற்சி தேவைப்படுகிறது. இப்பயிற்சி இரண்டு வகைப்படும். அவையாவன சாங்கிய மார்க்கம், யோக மார்க்கம் என்பனவாம்.

இவற்றுள் சாங்கிய மார்க்கம் என்பது, தன் மாத்திரைகள் ஐந்து, பூதங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கன் மேந்திரியங்கள் ஐந்து, மகான், அகங்காரம், மனம், மூலப்பிரகிருதி, புருடன் என்று சொல்லப்படும் இருபந்தைந்து தத்துவங்களின் இயல்புகளை உள்ளவாறு விவரித்துக் கூறுவது ஆகும்.

யோகமார்க்கம் என்பது உலகத்தை இறைவனுடைய உருவமாக நினைப்பதாகும். இயமம், நியமம், ஆசனம், பிராணா யாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டுவகையாலும் தவறாமல் நிற்றல் வேண்டும். மனத்தை அலைபாய விடாமல் மற்ற பொருள்களிலிருந்து மீட்டு, இறைவனிடத்தில் அம்மனத்தை நிலைநிறுத்துவது யோக மார்க்கம் ஆகும். யோகம் என்பதற்கு இறைவனை அடையும் வழி என்பது பொருளாகும்.

உலகில் உள்ள பொருள்களைப் பகுத்துப் பார்ப்பதற்கு இவ்விரு மார்க்கங்களும் உதவி புரிகின்றன. இம்மார்க்கங்களை உள்ளது உள்ளபடி உணர்ந்தவர்களே மூல முதல்வனாகிய இறைவனின் ஒப்பற்ற நிலையை அறிந்து கொள்ள முடியும்.

சாங்கியம் யோகம் , என்று
இரண்டு தன்மைய;
வீங்கிய பொருள் எலாம்
வேறு காண்பன;
ஆங்கு அவை உணர்ந்தவர்க்கு
அன்றி, அன்னவன்
ஓங்கிய தனிநிலை
உணரல் பாலதோ

(இரணியன் வதைப்படலம்-60)

என்பது பிரகலாதன் மொழியாகும்.

இறைவனைக் காண்பதற்கான மிகப்பெரிய பயிற்சித் தத்துவத்தை மேற்கண்ட பாடல் விவரிக்கிறது.

நாமம் போற்றல்

இத்தகைய நிலை ஒரு புறம் இருக்க, எளியவர்க்கு எளியவனாக இரங்கி வருகின்ற இறைவனை அடைய மற்றோர் வழியையும் பிரகலாதன் எடுத்து உரைக்கின்றான்.

காமம் யாவையும் தருவதும், அப்பதம் கடந்தால்
சேம வீடு உறச் செய்வதும், செந்தழல் முகந்த
ஓம வேள்வியின் உறுபதம் உய்ப்பதும் ஒருவன்
நாமம்; அன்னது கேள் நமோ நாராயணாய

(இரணியன் வதைப்படலம்-42)

இங்கே 'காமம்' என்பது நாம் விரும்புகின்றனவாகிய அறம், பொருள், இன்பம் என்ற பொருள்களைக் குறிக்கின்றது. இப்பொருள்களை யெல்லாம் தரும் நாமம் 'நாராயணாய நம' என்பது, இப்பயிற்சியை நாம் கடந்து

வந்தால் இந்த நாமம் வீடுபேறும் அளிக்கும். நெருப்பை வளர்த்துச் செய்யப்படும் ஓமத்தை உடைய யாகங்களில் வேண்டப்படுவது சுவர்க்கம் முதலான மேல் உலகங்கள். இந்த உலகங்களை அடையச் செய்யும் ஆற்றல் உள்ளது இந்நாமம். இந்த திருநாமம் ஒப்பும் உயர்வும் இல்லாதது.

இந்த நாமத்தை எளியவர்களும் கூறி உய்தி பெற முடியும். தத்துவ விளக்கமாகிய சாங்கியம் யோகம் ஆகிய மிக உயரிய வழியையும், இறைவன் திருநாமத்தை ஓதுதல் என்ற எளிய வழியையும் பிரகலாதன் புலப்படுத்திக் காட்டுகிறான். இறைவனை அடைவதற்கான மிக உயர் நிலையும், அவனை அடைவதற்கன மிக எளிய வழியும் என இருவகை நிலைகளைப் பிரகலாதன் கதை சுட்டுகிறது.

வீழ்ச்சியின் பின்புலம்

இராவணன் தவம் செய்திருந்த போதிலும் பிரகலாதன் கூறிய நிலைகளை எண்ணிப் பார்க்கவில்லை. அவனது அகங்காரத்தின் முன்னே இறையருள் நிலை எட்டாக்கனியாக இருக்கிறது. துன்பம் வரினும் அதைத் தடுத்து மாற்றும் ஆற்றல் இறையளுக்கு இருக்கிறது என்ற தத்துவம் பிரகலாதன் கதையால் உணர்த்தப்படுகிறது. இறையருள் நிலைக்கு முற்றிலும் முரண்பாடான எதிர்மறை வாழ்க்கையினால், இராவணன் அடைய இருக்கின்ற பெரிய வீழ்ச்சிக்குத் தகுந்த பின்புலமாக பிரகலாதன் கதை அமைந்துள்ளது.

மூவகைப் பேச்சு

அனுமன், வீடணன், இரணியன் ஆகிய மூவரிடமும் ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. இந்த மூவரும் இளமை தொட்டே வழிபாட்டில் சிறந்திருந் தார்கள். அறத்தை உலகில் நிலைநாட்ட வேண்டும் என்ற துடிப்பு உடையவர்களாகத் திகழ்ந்தனர்.

அனுமன் கிட்கிந்தையில் அறத்தின் செல்வனாக இருந்தான். வீடணன் இலங்கையில், தருமம் என்பது கரிய உருவம் கொண்டதனைப் போல எப்போதும் அறச் சிந்தனையுடன் திகழ்ந்தான். பிரகலாதன் இரணியனது நாட்டில் அறிஞர்க்கு அறிஞனாகவும் அறத்துக்கு நாதனாகவும் இருந்தான்.

இம் மூவரும் தத்தமது நாட்டில் உத்தமர்களாகத் தழைத்திருந்தனர். இவர் தம் உள்ளத்தில் இறைபக்தித் தியானம் தொடர்ந்து கொண்டே இருந்தது. இதன் பிரதிபலிப்பாக அனுமன், இலங்கையில் இராவணனுக்கு எதிராக மனவலிமையுடன் பேசும் திறம் பெற்றான். அவ்வாறே வீடணனும், அனைத்து வல்லமையும் பொருந்திய இராவணனை எதிர்மறுத்துப் பேசும் ஆற்றலுடன் திகழ்ந்தான்.

இரணியன், அண்டங்கள் அனைத்தும் தன்னையே வழிபட வேண்டும் என்று திருமால், பிரமன், சிவன் ஆகிய மூவர் தொழிலையும் ஏற்றுக்கொண்ட கொடியவன். அவன் முன்னாலே நாராயணனின் நன்மைகளை எடுத்து மொழியும் திறம் பெற்றிருந்தான், பிரகலாதன்.

அனுமன் உரைத்தவை

இராவணனுக்கு முன்னாலே அனுமன் கூறுவன:

"தனது பாதங்களை வணங்குபவர்களுடைய பிறப்பைப் போக்கி அருள்பவன். அறத்தை எல்லா இடங்களிலும் நிலைநிற்கச் செய்து, வேதங்கள் கூறிய நீதிகளை உலகத்தார் தெரிந்து கொண்டு ஒழுகுவதற்கு அவர்களைச் செம்மையான வழியிலே செலுத்தி, தீயவர்கள் இறந்துபட்டு ஒழியுமாறு அழித்து, நல்லவர்களுடைய துன்பங்களைப் போக்கி, தன்னை நோக்கி ஈர்த்துக் கொள்வதற்காக பூமியில் அயோத்தி என்னும் நகரில் அவதரித்தவன் இராமன் ஆவான்" என்று இவ்வாறு இராமபிரானின் இயல்புகளை இராவணன் மட்டும் அன்றி அவையில் உள்ளார் அனைவரும் அறிந்து கொள்ளும்படியாகக் கூறினான் அனுமன்.

அறம் தலை நிறுத்த, வேதம் அருள் சுரந்து
    அறைந்த நீதித்
திறம் தெரிந்து உலகம் பூண்ட செந்நெறி
    செலுத்தித் தீயோர்
இறந்து உக நூறித் தக்கோர்
    இடர் துடைத்து ஏக
ஈண்டுப் பிறந்தனன் தன் பொற்பாதம்
    ஏத்துவார் பிறப்பு அறுப்பான் (பிணி வீட்டுப் படலம்-81)

என வரும் இப்பாடல் இறைவனே மானுடனாக இவ்வுலகில் அவதரித்தான் என்பதையும், அவனை வாழ்த்துவோர் தம் இடரினை, அவன் துடைப்பான் என்பதையும் எடுத்து இயம்புகிறது.

வீடணன் கூறியவை

வீடணன் இராவணனை "நோக்கி ஐயனே! முனிவர்கள் இராம இலக்குவர் என்ற இருவரை அடைந்துள்ளனர். இவ்விருவரும் உலகம் எல்லா வற்றையும் வெல்வர் என்று அம்முனிவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். வெல்லத் தக்க பேராற்றல் படைத்துள்ள இருவருடன் நீ பகைப்பது உனக்கு வெற்றியைத் தாராது. மேலும் தன்னை விட மிக உயர்ந்த வேறு ஒரு பொருள் இல்லாத தனித் தலைவனாக இராமனே மானுட வடிவம் தாங்கி அவதரித்துள்ளான். நம்மைக் கொல்லும் பொருட்டே அவன் பிறந்துள்ளான். அவனுடன் போரிடச் செல்வது பொருந்தாது" என்றான் வீடணன்.

தன்னின் முன்னிய பொருள் இலா
ஒரு தனித் தலைவன்
அன்ன மானுடனாகி வந்து
அவதரித்து அமைந்தான்

(இராவணன் மந்திரப் படலம்–11)

என்ற பாடலில் வீடணன் இராமபிரானின் அவதாரப் பேராற்றலை வழிபடுவது குறிப்பிடப்படுகிறது.

பிரகலாதனின் பேச்சு

பிரகலாதன் இரணியனைப் பார்த்துச் சொல்லும் கருத்து வருமாறு:

"நாராயணன் ஞானத்தின் வடிவமாக இருக்கிறான். அவன் வேதத்தின் உயர்ந்த தத்துவமாகத் திகழ்கின்றான். தம்மைத் தாமே உணர்ந்த ஞானிகளுக்கே அவன் புலப்படுவான். அவனை மாறுபட்டு அறிகின்ற சில பத்தரும் உள்ளனர். அத்தகையோர் வீடு பெற இயலாது." என்று துணிந்து கூறுகின்றான்.

பித்தரும் உளர் சிலர்; வீடு பேறு இலார்
(இரணியன் வதைப்படலம்-61)

என்று தந்தையைப் பித்தன் என மொழிகின்ற துணிவைப் பிரகலாதவனுக்கு இறையருள் தியானமே கொடுத்திருக்கிறது.

இந்த மூன்று பேச்சுக்களையும் ஆராயும் போது இவை மூன்றிலும், முரண்பட்ட கொடியவரை எதிர்த்து நிற்கின்ற துணிவையும், இடையறாத இறையருள் ஞானத்தையும் காண முடிகிறது.

பின்னாளில் பெற்ற வெற்றி

இம்மூவரில் வீடணன் இலங்கையின் ஆட்சியையும், பிரகலாதன் தனது நாட்டின் ஆட்சியையும், அடைகின்றனர். அனுமனோ, எல்லோருடைய மனங்களையும் ஆளுகின்ற இராமபிரானின் திருவடித் தாமரைகளைச் சூடுகின்ற பெரும்பேறு எய்துகின்றான். இடையறா இறையருள் அன்பும், இறையருளின் துணை கொண்டு துன்பத்தைப்போக்கிக் கொள்ளும் இயல்பும் இம்மூவரால் கம்பராமாயணத்தில் காட்டப்படும் கருத்துகள் ஆகும்.

6. கம்பனின் உள்மனம்

படைக்கலம் வழங்கும் மரபு

விற்பயிற்சி வழங்கும் குருவானவர் சீடர்க்குப் படைக்கலம் வழங்குவது என்பது பண்டைய முறை ஆகும். விசுவாமித்திரரின் வேள்வியைக் காப்பதற்காக இராமனைத் தயரதச் சக்கரவர்த்தி அனுப்பி வைத்தார். வேள்வி காக்க வந்த இராமனுக்குப் படைக்கருவிகளை எடுத்து வழங்கினார் விசுவாமித்திரர். கம்பராமாயணத்தில் இது இன்றியமையாத இடம் ஆகும்.

வீரர் போர்க்களம் புகும் முன்னர் அரசர் அவ்வீரர்க்குப் போர்க் கருவிகளை வழங்குவதும், சீடர்களுக்குக் குருமார்கள் போர்க்கருவிகளை வழங்குவதும் பண்டைய மரபுகளில் தனிச்சிறப்பு வாய்ந்தவை ஆகும். அவ்வாறே போரில் வெற்றி பெற்ற பின்னர், பெறப்பட்ட செல்வங்களைப் போர்க்களம் புகுந்த வீரர்க்குப் பகிர்ந்து அளித்து, மன்னன் தனது கொடையளிச் சிறப்பை நிலைநாட்டுவதும் பண்டைய மிகச் சிறப்பு வாய்ந்த மரபு ஆகும்.

ஒரு சொல் உடையான்

தம்மை ஆதரித்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலை இன்றியமையாத இடங்களில் கம்பன் குறிப்பிட்டுச் சொல்கிறான்.

> அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும்
> உடையான் சடையப்பன்

என்ற புகழுக்கு உரியவர் சடையப்ப வள்ளல். வறியவர்க்கும் ஏழையர்க்கும் சடையப்ப வள்ளலின் வீட்டுக்கதவுகள் அடைபடாமல் திறந்தே இருக்கும். 'அஞ்சாமல் வருக' என்று அருள் உரை கூறும் இனிய சொற்களே சடையப்ப வள்ளலிடமிருந்து வரும். வறுமையால் வாடியவர்கள் "என்ன வார்த்தை

அவரிடமிருந்து வருமோ" என்று அஞ்சிக் கொண்டே செல்வார்கள். ஆனால் சடையப்ப வள்ளலை அண்மித்துச் செல்லுகிற போது அவர்களுடைய மனக்கலக்கம் எல்லாம் போய்விடும். அவ்வள்ளலிடமிருந்து மிகுந்த அன்பான சொற்களை அவர்கள் காது குளிரக் கேட்க முடியும். வறுமைப் பட்டவன் வாழ்நாள் முழுவதும் எண்ணி எண்ணி மகிழத்தக்க சொற்களே சடையப்ப வள்ளலிடமிருந்து வரும். அச்சொற்கள் தேனாக அமுதமாகத் தித்திக்கும். சடையப்ப வள்ளலின் இத்தகைய ஒப்பற்ற இனிய சொல்லைக் கம்பன் ஆணித்தரமாக "ஒரு சொல்" என்று குறிப்பிடுகின்றான்.

சொல்லுக்கு உவமை

வாழ்க்கை முழுவதும் வறுமையைப் போக்கும் 'ஒப்பற்ற அந்தச் சொல், எவ்வளவு வலிமை வாய்ந்ததோ அவ்வளவு வலிமை வாய்ந்த படைக் கருவியை விசுவாமித்திரர்' இராமனுக்கு வழங்கினார் என்று கம்பன் கூறுகின்றான்.

சடையப்ப வள்ளலின் சொல், வறியவனின் வாழ்க்கை முழுவதும் உதவும் சொல். விசுவாமித்திரர் இராமனுக்கு வழங்கிய படைக்கருவி அவனது வாழ்க்கை முழுவதும் வெற்றியை ஈட்டுவதற்கு உறுதுணையாகியது.

மண்ணவர் வறுமை நோய்க்கு
மருந்து அன சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே அன்ன
படைக்கலம் அருளினானே

(வேள்விப் படலம்-1)

என்ற பாடல், சடையப்ப வள்ளலுக்குக் கம்பன் காட்டிய 'நன்றியின் பட்டயமாகத் திகழ்கின்றது.

நரஸ்துதி

கம்பன் தனது இராமாயணத்தில் பல இடங்களில் சடையப்ப வள்ளலைக் குறிப்பிடுகின்றான். சடையப்ப வள்ளல் சோழ நாட்டுத் தேரழுந்தூரைச் சார்ந்தவர். அவர் கம்பனுக்குத் தேவையான அனைத்தையும் கொடுத்து அவனை ஆதரித்த வள்ளல். கம்பன் மிகவும் நன்றியுணர்வு உள்ளவன்.

உலகத்தில் தலைசிறந்த பண்பு நன்றி அறிதல். நன்றி பாராட்டுபவர்கள் உலகில் உன்னத நிலையை அடையமுடியும் என்பதற்குக் கம்பனே சான்று. கம்பன் தன் உள்ளத்தின் அடி ஆழத்தில் கிடக்கின்ற நன்றியுணர்வு காரணமாகத் தனது ஒப்பற்ற காப்பியத்தில் சடையப்ப வள்ளலைப் புகழ்ந்து பேசுகிறான்.

நன்றியின் மணிமகுடம்

கம்பன் திருவரங்கத்தில் இராமாயணத்தை அரங்கேற்றினான். அங்குக் குழுமியிருந்தவர்கள்,"ஆங்காங்கே இறைவனைப் பாடுகிற காப்பியத்தில் நரஸ்துதி வருகிறதே" என்று அங்கலாய்த்ததாக வரலாறு உண்டு.

கம்பன் கல்விக் கடல். அவன் இறைவனைப் பாடியது உண்மை. நேருக்கு நேர் காண்கின்ற வரலாற்றுச் செய்தியை பக்திக் காப்பியத்தில் அவன் இணைத்துள்ளான். சடையப்ப வள்ளலின் குன்றாப்பெருமையை நிலை நாட்டியுள்ளான். இதனை அக்காப்பியத்திற்குச் செய்த பெருஞ்சிறப்பாகவே கம்பன் கருதுகின்றான். அவனது பாடல்கள் இதனை மெய்ப்பிக்கின்றன. இங்ஙனம் 'நன்றி' என்ற பண்புக்கு மணிமகுடம் சூட்டி மகிழ்கிறான் கம்பன்.

பொன்னில் வைத்த வயிரம்

உலகியலைப் பாடவந்தவனே கம்பன் என்பதனை அறுதியிட்டு உறுதியாக, கம்பனை ஆராய்ந்த அறிஞர் பலரும் கூறியுள்ளனர். காப்பியக் காட்சிகளின் வாயிலாக உலகியல் சிறப்பை உயர்த்த வேண்டும் என்பதே கம்பனின் கொள்கை. எனவே அவன் தனது கொள்கைக்கு அரண் சேர்க்கும் வகையில், பொருத்தமான இடத்தில் தங்க நகையில் வயிரத்தை வைத்து இழைத்துக் காட்டுவதைப் போல 'நரஸ்துதி'யை அமைத்து இருக்கிறான் என்பது பெருமைக்கு உரியதே. நரஸ்துதி என்று நாம் அதனை இகழ வேண்டியதில்லை. நன்றி என்ற பண்பை நிலைநாட்ட, தமது கால வள்ளலைப் புகழ்ந்து பாடி நரஸ்துதியை நன்றியின் துதியாகக் கம்பன் படைத்துவிட்டான் என்பதே உண்மை.

நரஸ்துதி என்று அங்கலாய்ப்பவர்கள், கம்பன் பாடலையும் அதன் சூழலையும் நன்கு உணர்ந்து கொள்ளாதவர்கள் என்றே கூறவேண்டும்.

வரலாற்று நோக்கில் குறிப்பிடவேண்டும் என்றால், தமது சமகால வள்ளலைக் குறிப்பிட்டுக் கம்பன், கால ஓட்டத்தில் வள்ளலின் குன்றாப் பெருமை கரைந்து போகாவண்ணம், தனது காப்பிய மாளிகையில் பதிவு செய்து உறுதிப் படுத்தியுள்ளான் எனலாம். மேலே கூறப்பட்ட பாடலில் சடையப்ப வள்ளலைக் கம்பன் உவமை அணியின் வாயிலாகப் பெருமைப் படுத்தி இருப்பது தமிழ் மரபுக்கு உரியதே. அது குறித்து நாமெல்லாம் பெருமைப் பட வேண்டும்.

கம்பனின் தாய் மனம்

உலகில் உள்ள எல்லா உறவுகளிலும் மேம்பட்டது தாய் என்ற உறவு. தாய் தன்னை மறந்து குழந்தையின் நலம் ஒன்றையே நாடுகின்றாள். குட்டியின் நலம் பேணும் தாயின் உறவு விலங்குகளிடத்திலும் நெஞ்சை ஈர்ப்பதாக இருக்கிறது. அருள் மனம் கொண்ட இறைவியைத் தாயாகவும் அன்னையாகவும் வழிபடும் வழக்கம் நம் நாட்டில் தொல்ப[illegible]லம் முதல் நின்று நிலவி வருகிறது. இளம் காளையாகிய மகனைத் த[illegible] அடித்தால் தாய் அணைக்கும் இரக்க உணர்வைப் போற்றி அருட்பிரகாச வள்ளலார் பாடுகிறார்.

கவிஞன் தன்னை மறந்த லயத்தில் பாடும் இயல்பு உடையவன். மானிடம் தழைக்கப் பாடும் பண்பு உடையவன். தீங்கில்லா நெறியையே அவன் கவிதையில் வடித்துத் தருகிறான். கவிஞனின் உள்ளம் எத்தகைய உள்ளமாக இருக்கும் என்று ஆழ்ந்து காணும்போது அவனது உள்ளம் தாயுள்ளமாகத் தான் இருக்க முடியும் என்ற விடை கிடைக்கிறது.

தாயுள்ளத்தைப் பாரதிதாசன் பின்வருமாறு பாடுகிறார்:

தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு,
வீடு, சம்பாத்யம் இவை யுண்டு தானுண்டு
என்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளம்
கொண்டேன்; தெருவார்க்கும்
பயனற்ற சிறிய வீணன்!
கன்னலடா என் சிற்றூர் என் போன் உள்ளம்
கடுக்கு நேர் மூத்த துவரை உள்ளம்!

தென்னை யுள்ளம் ஒன்று உண்டு தனது
நாட்டுச் சுதந்திரத்தால்
பிறநாட்டைத் துன்புறுத்தல்!
ஆயதங்கள் பரிகரிப்பார், அமைதி காப்பார்,
அவரவர் தம் வீடு நகர் நாடு காக்க
வாயடியும் கையடியும் வளரச் செய் வார்!
மாம்பிஞ்சின் உள்ளத்தின்
பயனும் கண்டோம்!
தூய உள்ளம், அன்பு உள்ளம்,
பெரிய உள்ளம்,
தொல் உலக மக்கள் எல்லாம்
'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனில் அன்றோ
இன்பம் ஆங்கே சண்டை இல்லை
தன்னலம் தான் தீர்ந்ததாலே

இப்பாடலில் கடுகு உள்ளம், துவரை உள்ளம், தென்னையுள்ளம், மாம்பிஞ்சு உள்ளம் என்று உள்ளங்களின் உருவங்களுக்கு உவமை சொல்லிக் கொண்டு வந்த பாரதிதாசனார் தாயுள்ளத்திற்கு மட்டும் எவ்வித உவமையும் கூறவில்லை. அது ஒப்பும் உயர்வும் இல்லாதது என்பதால் உவமைப்படுத்தாமல் விட்டுவிட்டார் போலும். அது தன்னலமில்லாத உள்ளம் என்பதை மிக அழுத்தமாகக் கவிஞர் கூறியுள்ளார். இத்தகைய தாயுள்ளமே கவிஞனின் உள்ளமாகும்.

கவிச் சக்கரவர்த்தி கம்ப நாடனின் உள்ளமும் இந்தத் தாயுள்ளமாக தழைத்திருக்கிறது என்பதற்கு அவன் காப்பியம் முழுமையிலும் நிரம்பச் சான்றுகள் உண்டு.

பல்வகைச் சுதந்திரம்

மானுடம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே அவன் காப்பி யத்தைப் படைக்கின்றான். குறிப்பாகக் கோசலநாட்டின் வருணனையில் நான்கு வகையாகச் சிந்தித்து எல்லாவகையிலும் முழுமை பெற்ற மகோன்னத

நாடாகக் கோசலத்தைக் கம்பன் காண்கிறான். அங்கே பொருளைக் கவரும் வஞ்சகர் இல்லை; அதனால் அதனை காக்கின்ற வேலையும் இல்லை.

பொருளைப் பெற ஏங்கும் வறிஞர் இல்லை. அதனால் பொருளை வழங்கும் கொடையாளிகளும் இல்லை. கல்லாமை இருளில் மூழ்கிக் கிடப்பவர் இல்லாமையால் கல்வி ஞானம் முழுமையாகப் பெற்றோம் என்று சொல்லிக் கொள்பவர் யாரும் இல்லை. எல்லாரும் எல்லாச் செல்வமும் பெற்றிருப்பதாலே வறியவரும் இல்லை செல்வரும் இல்லை. இங்ஙனம் எல்லா வகையான சுதந்திரங்களும் பெற்ற தன்னேரில்லாத நாடு ஒன்றைக் காணவேண்டும் என்றால் மானுடத்தின் மீது மட்டிலா அன்பு பூத்த தாயுள்ளம் ஒன்றால் தான் இயலும்.

தன்முன்னே விரிந்து கிடக்கின்ற வறுமை, அறியாமை, சோம்பல், உழைப்பின்மை, வஞ்சகம் ஆகியவற்றைக் காணும் போதும், இவை காரணமாக மாந்தர் அடையும் வாட்டத்தைக் காணும் போதும் அவன் நெஞ்சு துடிதுடித்த நெகிழ்வின் நிலையில்தான் "முழுமையான விடுதலை பெற்ற கோசலம்" அவன் உள்ளத்தில் தோன்றியிருக்க வேண்டும்.

எல்லா வகையான சுதந்திரங்களையும் மக்களுக்கு வழங்குகின்ற அரசியல் நெறியையே கம்பன் இவ்வாறு கற்பனைப்படுத்துகிறான். இதில் நாம் உற்றுக் காணத் தக்கது, இத்தகைய மகோன்னத நிலை வேண்டும் என்றால், அந்த நாட்டு அரசில் தன்னலம் இருத்தல் கூடாது என்பதாம். தன்னலம் அழிந்த நிலையில்தான் கம்பன் காணுகின்ற அனைத்துச் சுதந்திரமும் உள்ள உயர் அரசு ஒன்று கனிந்து வர முடியும்.

அர்த்த சாஸ்திரமும், மகாபாரதமும், "மக்கள் அறியாமை உடையவர்கள் என்ற கொள்கையின் அடிப்படையில், அதிகாரம் தேர்ந்தெடுத்த சிலரிடமே இருக்க வேண்டும் என்று இவை வற்புறுத்துகின்றன"[1] என்று ஆய்வறிஞர் குறிப்பிடுவது இங்கு கருதத்தக்கது ஆகும்.

கம்பன் மக்களை அறியாமை உடையவர்கள் என்று ஒரு போதும் சொல்லவில்லை. அவன் விசால மனத்துடன், "கல்வி இல்லாரும் இல்லை" என்றே குறிப்பிடுகின்றான்.

---

1. எஸ். அப்துல் ரகுமான், கம்பனின் அரசியல் கோட்பாடு, ப.96

அரசாங்கமானது சுயநல நோக்கம் கொண்டு சீரழியும் போது முடியாட்சி, கொடுங்கோல் ஆட்சியாக மாறும் என்ற அறிஞர் கருத்தும் இங்கே காணத் தக்கதாகும்.

மக்களின் பக்கம் நிற்கும் கம்பன்

சுயநலப்போக்கு மிக்க அரசின் வல்லாண்மையின் பக்கம் சார்ந்து விடாமல் அவன் எப்போதும் சுதந்திரம் பெற்ற மக்களின் பக்கமே நிற்கிறான் என்பதற்கு,

பூவலயம் இன்று தனியன்று பொது

(கைகேயி சூழ்வினைப் படலம்-102)

என்ற பாடல் சான்றாக நிற்கிறது.

பட்டமேற்கின்ற நாளில் சுமந்திரன் அழைக்க, தேரின் மீது ஏறிச் செல்லும் இராமனைப் பார்த்து மக்கள் பேசும் பேச்சாக இந்த வரி அமைந்திருக்கிறது.

இராமன் முடிசூடிக் கொள்ள இருக்கிறான் என்று அறிந்த மக்கள், தங்களுக்கு மேலும் பல உரிமைகள் கிடைக்கும் என்று மகிழ்ச்சியில் பூத்தனர் என்பதை இப்பாடல் வரி குறிப்பிடுகிறது. மக்களை முன்னிறுத்தி உரிமை களைக் காண்கின்ற பேருள்ளம் படைத்தவன் இராமன் என்பதனையும் இதனால் அறிய முடிகிறது.

“அரசாங்கம் என்பது யாது? நான்தான் அரசாங்கம்” (What, is State? I am the State"?) என்று பிரெஞ்சு மன்னன் பதினான்காம் லூயி கூறியதாக வரலாற்றில் காணப்படுகிறது. பதினான்காம் லூயி மன்னனுக்குச் சளைத்தவர்கள் அல்லர் பிற நாடுகளின் முடி மன்னர்கள். வையகத்தைத் தமது உடைமையாகக் காண்கின்ற வல்லாண்மையை முடிமுன்னர் அனைவரிடமும் பார்க்க முடியும்.

இந்த நிலையில் அரசாங்கத்தைத் தனியொருவரின் உடைமையாகக் காணாமல் அது மக்களுக்குப் பொதுவானது என்ற கம்பனின் தாய்மைச் சிந்தனையைப் பல அறிஞர்கள் போற்றி உரைக்கின்றனர். அரசு என்பது தனி உடைமையாக இல்லாமல் “எல்லோர்க்கும் எல்லாம் என்று இருப்பதான

இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்" என்று பாரதிதாசன் கூறியாங்கு, மக்களின் உரிமைகளுக்காக அவர்களின் பின்னே நிற்கின்ற மாபெரும் சக்தியாகக் கம்பன் திகழ்கின்றான்.

ஆதிக்கத் தலைமையிடம் காண முடியாத நெகிழ்வுத் தன்மையைக் குடியாட்சித் தலைமையிடம் காணமுடியும் எனவும், குழு உறுப்பினர்களின் எண்ணங்களை எதிரொலிப்பதற்காகத் தமது எண்ணங்களில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வர் எனவும் சமூக உளவியல் அறிஞர் குறிப்பிடுகின்றனர்.

வசிட்டன் கூறும் செய்தி

மேலும் நாம் (We-feeling) என்ற உணர்வைக் குழுவில் ஏற்படுத்தி, எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதற்குக் கடுமையாக முயற்சிக்கவும் உழைக்கவும் ஊக்கப்படுத்துபவர்களே சிறந்த தலைவர்கள் எனவும் சமூக உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். வேள்வி செய்வதன மூலம் அரசன் தனது இறையாண்மையைப் பெற வேண்டும் என்று சதபத பிராஹமணம் கூறுகிறது.[1] ஆனால் கம்பன் இதனை மறுக்கிறான். மக்களிடமிருந்தே அரசன் இறைமையை அடைய வேண்டும் என்ற கொள்கையுடைய கம்பன், வேள்வியின் மூலம் அரசன் இறைமையை அடைகிறான் என்ற இந்த வேதக் கொள்கையைப் புறக்கணிக்கிறான். அறமும், அருளும், வாய்மையும் பேணி மக்களை உயிராய்க் கொண்டு காக்கும் மன்னன் வேள்வி செய்ய வேண்டிய அவசியமில்லை என்று அவன் கூறுகிறான்.

வையம் மன்னுயிராக, அம்மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னவனுக்கு
ஐயம் இன்றி, அறம் கடவாது, அருள்
மெய்யில் நின்ற பின், வேள்வியும் வேண்டுமோ?

கம்பன் இதனை வசிட்டன் கூற்றாக வைத்திருப்பதும் இங்கே கவனிக்கத் தக்கதாகும். வேதத்தின் விளக்கமாக இருக்கின்ற வசிட்டர். அன்றாட வாழ்க்கைப் பட்டறிவு அனுபவத்தின் பிழிவாக இந்த வரிகளைக் கூறுவது முற்றிலும் பொருத்த மனதாகவும், வலிமையூட்டவதாகவும் இருக்கிறது.

---

1. எஸ். அப்துல் ரகுமான், கம்பனின் அரசியல் கோட்பாடு, ப.96

மன்னனை "உயிர் எலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்" என்று கூறுவதும் கம்பனின் மக்கள் உரிமையின் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தே தோன்றியது. இவை எல்லாவற்றுக்கும் முடிமணியாக தயரதன் மக்களிடம் கொண்ட அன்பைத் 'தாய் ஒக்கும் அன்பின்' என்று தெரியப்படுத்துகிறான்.

பூமியானது அனைவர்க்கும் பொது என்ற கருத்தில் "பூவலயம் இன்று தனி அன்று; பொது" என்பதே அவனது அரசியல் கோட்பாட்டின் மூல மொழி என்று ஆய்வு அறிஞர் கூறுவர்.[1]

தாயுள்ளத்தின் தனிநிலை

மக்கள் உரிமைகளின் பாதுகாப்பாளனாகக் கம்பன் தோன்றுகிற அதே நேரத்தில், மக்களின் உரிமை என்ற இலட்சியங்களைச் சென்று அடையத் தக்க வழிமுறைகளையும் கூறுகிறான். அவன் காணும் நாட்டில் இன்பம் பூத்துக் குலுங்குவதற்கு அடிப்படைக் காரணம் கல்வி அறிவே என்று கம்பன் அறுதியிட்டு உரைக்கின்றான். எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்துவதற்கும், பொருள் காவல் இல்லாத, கள்வர் இல்லாத உலகத்தைப் படைப்பதறகும் அவன் காணுகின்ற வழி, "கல்வி" என்கின்ற வழியாகும். இன்றைக்கு ஏழ்மையைத் துடைத்து ஏறிய அனைத்து உலகத் தாய்லாந்து மாநாட்டில் உலகில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் கல்வி அறிவு பெறுவதே இலட்சியமாக முன்வைக்கப்பட்டு உறுதி பூணப்பட்டது. இதே சிந்தனையை ஒன்பதாம் நூற்றாண்டுக் கவிஞனான கம்பன், ஒப்பற்றதாகிய கல்வி என்றும் வித்து ஊன்றப்பட்டதால் அது போகக் கனியாகக் கோசலத்தில் பழுத்தது என்று கூறுகிறான்.

ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து...
போகக் கனி ஒன்று பழுத்தது

(நகரப்படலம்–75

(ஏகம்–மூலமுதலானது; ஒப்பற்றது,
போகக் கனி–மகிழ்ச்சி தரும் பழம்)

என்று கம்பனின் தாயுள்ளத்தின் தனிநிலையைத் தரிசிக்கின்றோம்.

---

1. எஸ். அப்துல் ரகுமான், கம்பனின் அரசியல் கோட்பாடு, ப.97

கம்பனின் அறிவு மனம்

கம்பன் பல்வேறு நூல்களைக் கற்று அறிவுத் தெளிவு உடையவன். தனது அறிவைக் கொண்டு மற்றவர் மனங்களில் அறிவுச் சுடர் ஏற்றுகின்ற பெரும்பணியில் அவனைப் போல வெற்றி கண்டவர் யாரும் இருக்க முடியாது. தான் கற்ற நூல்களில் உள்ள சிறந்தவை அனைத்தையும் தனது காப்பிய மாளிகையில் அவன் கொண்டு வந்து சேர்த்துள்ளான்.

தனது அறிவின் ஆழத்தை மற்றவர் மனத்தில் நிலைபெறச் செய்வதற்கு அவன் சமயம் என்ற பின்புலத்தைத் தேர்ந்தெடுத்து இருப்பது அவனுக்கு அழியாத் தன்மையைத் தந்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

சமயம் என்பது மனிதனிடம் மட்டுமே காணப்படுவது. தனது சூழ் நிலையுடன் ஒன்றிச் செல்வதற்காகவே சமயங்கள் மனிதனால் ஏற்படுத்தப் பட்டவை என்று அறிஞர் கூறுகின்றனர்.

மனிதனது சூழ்நிலை மூன்று பிரிவுகளைக் கொண்டது. அவையாவன 1. இயற்கைச் சூழ்நிலை 2. சமூகச் சூழ்நிலை 3. இயற்கைக்கு அப்பாற்பட்ட சூழ்நிலை (Super natural Environment) என்பனவாம். இவற்றில் சமயங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட சூழ்நிலையுடன் தொடர்பு உடையன என்று சம்னர் (Sumner), கெல்லர் (Keller) ஆகிய சமூக உளவியல் வல்லுநர்கள் கூறுவர்.[1]

பெருமை தருவது சமயம்

"சமயங்கள் பற்றி மிகவும் குறிப்பிடத்தக்கது யாது என்றால், அறநெறிகளே (Morals) சமயத்தின் அடிப்படையாக அமைந்திருப்பதாகும். அறநெறிப் போதனை என்பது சமயப்பணிகளில் முக்கியமானதாகும். கடவுள் உண்டா? இல்லையா? என்ற வாதம் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. என்றாலும் "கடவுள் நம்பிக்கை, அறநெறி வாழ்க்கையின் ஆதார விதியாகும்" (Postulate of Morality) என்று இமானுவல் காண்ட் (Immanual Kant) என்ற தத்துவ அறிஞர் கூறுவது ஈண்டு கருதத்தக்கது ஆகும். அறநெறிகள் முதலில் தோன்றியவைகளாக இருக்கலாம். சமயம் என்பது அதற்குப் பின்னால் தோன்றியிருக்கலாம். ஆனால் அறநெறிகளும் சமயமும்

1. எஸ். சந்தானம், கல்வி உளவியலும், கல்விச் சமூகவியலும் ப.596
2. மேலது, ப.598

பின்னால் ஒன்றாக இணைந்தன. இதனால் அறநெறிகளை வளர்ப்பதில் சமயம் பெரும் பங்கு வகிக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது.

மனித வாழ்க்கைக்குத் தனி மதிப்பையும் (Value) பெருமையையும் (Dignity) சமயங்கள் ஏற்படுத்துகின்றன" என்று சமூக உளவியல் அறிஞர்கள் ஆய்ந்து கூறுகின்றனர்.'

"கடவுள் நம்பிக்கை என்பது பொருளற்ற ஒரு சொற்றொடரோ அல்லது சிந்தனையின் அடிப்படையில் நம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தோ அன்று; அது நம்மை முழுமையாக மாற்றி அமைக்கும் ஓர் அனுபவமாகும். பிறக்கும் போதே மனிதன் முழுமை பெற்றுக் காணப்படுவது இல்லை; கடவுள் நம்பிக்கை வழியே தான் மனிதன் முழுமை பெறுகிறான்" என்று டாக்டர் எஸ். இராதா கிருட்டிணன் கூறுகிறார்.

கல்வியும் சமயமும்

கீழ்த்தரமான தூண்டல்களுக்கு அடிமையாக மனிதன் துடிக்கிறான். அத்தூண்டல்களுக்கு அவன் அடிமையாகி விடாமல் அவனைக் காத்து, சீரிய குறிக்கோள்களுக்காக அவன் வாழவும், உழைக்கவும் தேவைப்படும் மனத்துணிவைச் சமயங்கள் வழங்கி வந்திருக்கின்றன. "கல்வியிலிருந்து சமயத்தை ஒதுக்கித் தள்ளினால், பல்லாண்டுகளாக ஒழுங்கு வளர்ச்சிக்குப் பயன்பட்டு வந்த ஒன்றை ஒதுக்கித் தள்ளியவர்கள் ஆவோம்" என்று முதறிஞர் இராசாசி எச்சரித்துள்ளார். எல்லாச் சமயங்களிலும் நற்போதனைகள் உள்ளன. அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை எந்தச் சமயமும் மறுக்கவில்லை.

சமயம் - அறிவுச் சுடர் ஏற்றும் வாயில்

மேலே விவாதிக்கப்பட்ட சமயப் பின்னணியிலேயே கம்பநாடன் தனது கதையை நடத்தச் செல்லுகிறான். சமயத்தை அறிவுச் சுடர் ஏற்றும் வாயிலாக அவன் உள்ளம் ஏற்றுக்கொள்கிறது.

பண்டைக் காலத்தில் இயற்கை வழிபாடு தோன்றியது. அது நீத்தார் வழிபாடாக வளர்ந்தது. பின்னர் பல கடவுளரை வழிபடும் நம்பிக்கையாக

1. மேலது, ப.598

(Poly theism) ஆயிற்று. ஆனால் வளர்ச்சி பெற்றுள்ள சமயங்களில் ஒரு கடவுட் (Mono theism) கொள்கை மிகவும் சிறந்தது என்று கருதிப் போற்றப் படுகிறது.

இந்த ஒரு கடவுட் கொள்கை என்ற சிந்தனையைக் கம்பன் காப்பியம் முழுவதும் காணலாம். சமயத்தின் மிக உயர்ந்த நிலையான இதனைத் தனது காப்பியத்தில் வலியுறுத்துவதற்கு கம்பநாடன் மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டுள்ளான்.

கம்பனது காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் சைவ வைணவப் போராட்டம் நடந்து கொண்டு இருந்தது. இப்போராட்டங்களை அவன் 'எள்ளி நகையாடினான்' என்று அ.ச. ஞானசம்பந்தன் குறிப்பிடுகின்றார்.[1]

ஒரே பரம்பொருள்

படைத்தல் தொழிலைச் செய்பவன் நான்முகன் என்றும், காத்தல் தொழிலைச் செய்பவன் திருமால் என்றும் அழித்தல் தொழிலைச் செய்வன் உருத்திரன் என்றும் கூறினர். 'நான்முகனை நம்பித் தனியே வழிபடுபவர்கள் எவரும் இல்லாமற்போகவே, போராட்டம் சைவ வைணவர்களுக்குள் மிகுந்து நின்றது' என்றும் அறிஞர் கூறுகின்றனர்.[2]

மும்மூர்த்திகள் வழிபாடு செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் காப்பியம் பாடும் கம்பன், இராமனை மும்மூர்த்திகளுக்கும் மூலமான முதல்வன் என்று குறிப்பிடுகின்றான். இதற்கு எடுத்துக்காட்டாக "முப்பரம் பொருளுக்கும் முதல்வன் முந்துறும் என்ற அவதாரப் படலத்தின் 134–ஆம் பாடலும் இன்ன பிற பாடல்களும் கூறப்படுகின்றன. முதன்முறையாக இராமனைச் சந்தித்த இராவணன் மனத்தில் "இவன் மூன்று கடவுள்க்கும் மூலமானவன்" என்று எண்ணம் தோன்றுகிறது. இராவணனன், போர்க்களத்தின் இறுதியில் இராமனைக் கடைசி முறையாகக் காணும் போது,

சிவனோ அல்லன்; நான்முகன் அல்லன்;
திருமாலாம்

1. கம்பன் புதிய பார்வை - ப.204.
2. மேலது

அவனோ அல்லன்; மெய்வரம்
எல்லாம் சுடுகின்றான்;
தவனோ என்னின், செய்து
முடிக்கும் தரன் அல்லன்,
இவனேதான் அவ்வேத முதற்
காரணன்? என்றான்

(இராவணன் வதைப்படலம்-135)

என்று பேசுகிறான்.

இதில் இராமனின் அவதாரத்தைத் தொடங்கும் போது, 'முப்பரம் பொருளுக்கும் முதல்வன்' இராமன் என்று தொடங்கிய கவிச் சக்கரவர்த்தி கம்பநாடன், காப்பியத்தின் இறுதியில் இராவணன் இறக்கப் போகும் முன், அவன் கூற்றாகவே "இவனோ தான் அவ்வேத முதற்காரணன்?" என்று பேச வைத்திருக்கின்றன. அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமரச நிலையில்தான் கடவுளைப் பற்றிக் கூறியிருக்க வேண்டும்" என்று அறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் கம்பன் கண்ட பரம்பொருள் நிலையை ஆராய்ந்து கூறுகிறார்.[1]

எனவே பல தெய்வ வழிபாட்டு முறையிலிருந்து (Poly theism) ஒரு கடவுளை வழிபடும் (Monotheism) நிலைக்குச் சமுதாயம் மாற்றம் பெறும் உயரிய சமயநிலையையே கம்பன் காட்ட விழைகின்றான்.

மூன்றுமாகிய ஓர் உருவம்

முப்பெரும் கடவுளரும் ஓர் உருவம் தாங்கியே இராமனாக அவதரித்தனர் என்பது கம்பனின் கடவுட் கோட்பாடு ஆகும்.

மேற்காண் பாடலின் விளக்கத்தையும் காண வேண்டும்.

இராவணன் கூறுகிறான்: "எதிரே இருப்பவன் உண்மையான வரங்களை எல்லாம் இல்லாமல் ஆக்குகிறான். சிவனாய் இருக்கலாம் என்றால் அவனும் அல்லன். நான்முகனாக இருக்கலாம் என்று கருதிப் பார்த்தால் அவனும் அல்லன்; திருமாலோ என்று எண்ணினால் அவனும் அல்லன். தவம் செய்த

1. கம்பன் புதிய பார்வை.

முனிவனாக இருக்குமோ என்று பார்த்தால் என் தனியாண்மைக்கு எதிரே வீரத்துடன் போரிடும் தகுதி தவமுனிவனுக்கு இல்லை. எனவே இவன் வேதங்களுக்கு எல்லாம் முதற்காரணமான பரம்பொருளகவே இருக்க வேண்டும்" என்றான்.

இங்கே படைத்தல், காத்தல், அழித்தல் என்றும் மூன்று பணிகளையும் ஒருங்கு இணைத்து ஒரே பரம்பொருளாகக் காண்பதைப் பார்க்கிறோம்.

அயோத்தி வந்தவன்

இதே கருத்தை அனுமன் கூற்றிலும் வைத்துக் கம்பன் கூறுகிறான்.

அனுமன் கயிற்றினால் பிணைக்கப்பட்டு இலங்கை வீதிகளிலே கூட்டி வரப்படுகின்றான். அவன் இராவணான் எதிரே நிற்கின்றான். 'நீ யாவன்?' என்ற இராவணனின் கேள்விக்கு அனுமன், தூதுவனாக வந்தமையாலே, தன்னுடைய தலைவனின் பெருமையைப் பின்வருமாறு கூறுகிறான்:

மூலமும் நடுவும் ஈறும்
    இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த
    காரணன்; கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி அங்கும்
    கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் வெள்ளிப் பொருப்பும்
    விட்டு அயோத்தி வந்தான்

(பிணி வீட்டு படலம்-80)

என்பது அனுமனின் மொழி.

இப்பாடலின் கருத்தையும் நன்கு ஆராய்தல் வேண்டும்.

இராமன் என்பவன் முதலும் நடுவும் இறுதியும் இல்லாதவன். இறப்பு நிகழ்வு எதிர்வு என்ற மூன்று கால எல்லைகளைக் கடந்தவன். அவனது ஞானம், காட்சி, இன்பம், ஆற்றல், குணம், செயல் முதலியவற்றுக்குக் கணக்கு அல்லது வரம்பு கிடையாது. திரிசூலம், சங்கு சக்கரம், கரகம் என்பனவற்றைக் கைகளிலிருந்து நீக்கி விட்டு ஒருருவம் கொண்டவன்.

திரிசூலத்தைக் கையில் உடையவன் சிவபெருமான். சங்குச் சக்கரங்களைக் கையில் உடையவன் திருமால். கமண்டலம் என்னும் கரகத்தைக் கையில் உடையவன் பிரம்மன். இம் மூவரும் ஒன்றாகிய தோற்றமே இராமன். திருமால் தான் வதியும் ஆல இலையை விட்டு விட்டான். பிரம்மன் தான் வதியும் திருமாலின் நாபிக் கமலத்தை விட்டுவிட்டான். சிவன்தான் வாழும் கைலாச கிரியை விட்டு விட்டான். இம்மூவரும் ஒன்றாகி அயோத்தியில் தோன்றிய உருவமே இராமனின் உருவம். அவன் தன் கையிலே கோதண்டம் என்றும் வில்லை உடையவன் என அனுமன் கூறுவதால் மூன்று கடவுளின் மேம்பட்ட ஒரே உருவம் என்று ஒரு தனிக் கடவுளைக் காணும் தத்துவம் இப்பாடலில் பொதுளுகிறது.

சமயப் போராட்டம்

சமயச் சழக்குகளிலிருந்து கம்பன் விலகியிருக்கவே விழைக்கின்றான். சிவனே பெரியவன்; திருமாலே பெரியவன், என்று அவன் காலத்தில் நடந்த சமயப் பிணக்குகளில் இருந்து விடுதலை பெற்ற, இறையருட் கொள்கையை உடைய ஒரு சமுதாயத்தைக் காணவே கம்பன் விரும்புகிறான்.

"அரன் அதிகன்; உலகு
அளந்த அரி அதிகன்"
என்று உரைக்கும்
அறிவிலோர்க்குப்
பரகதி சென்று அடைவு
அரிய பரிசே போல் (நாட விட்ட படலம்-24)

என்று கூறிச் சமயச் சழக்கர்களுக்குப் பரகதி என்னும் இறைவனை அடையும் நிலை இல்லை என்று சாடுகிறான்.[1]

பரம்பொருளின் ஒருமை

அரனும் அரியும் ஒன்றே என்பது கம்பன் கண்ட சமரசங்களுள் இன்றியமையாதது ஆகும். இக்கருத்தை, பாலகாண்டம் ஆற்றுப் படலத்தில் உள்ள 2-ஆம் பாடலை எடுத்துக்காட்டி மு.மு. இஸ்மாயீல் பின்வருமாறு விளக்குகிறார்:

1. மு.மு. இஸ்மாயீல், கம்பன் கண்ட சமரசம், ப.22

நீறு அணிந்த கடவுள் நிறுத்த வான்
ஆறு அணிந்து சென்று, ஆர்கலி
மேய்ந்து, அகில்
சேறு அணிந்த முலைத் திரு மங்கை தன்
வீறு அணிந்தவன் மேனியின் மீண்டதே

இப்பாடலின் திரள் கருத்தாவது: திருநீற்றை அணிந்த சிவபெருமானது வெண்மை நிறத்தை உடைய மேகங்கள், வானவழியை அழகு செய்து கொண்டு போய், கடல் நீரைப் பருகி, இலக்குமி தேவியைத் தனக்குப் பெருமையாகத் திருமார்பிலே அணிந்த திருமாலின் கரிய திருமேனி போலத் திரும்பி வந்தன என்பதாம்.

"இந்தக் கூற்றிலிருந்து கவிஞன் நமக்கு உணர்த்தும் உண்மை யாது எனில் இருவேறு பட்ட மேகங்கள் இல; ஒரே மேகம் நீரற்றும், நீர்நிறைந்தும் இருவேறு நிறம் பெற்றாற் போல ஒரே பரம்பொருள் அழிவுத் தொழிலில் ஈடுபடும் பொழுது சிவபெருமானாகவும், காத்தல் தொழிலில் ஈடுபடும் பொழுது திருமாலாகவும் பெயர் பெறுகிறது என்பதே" என்றும் அவர் கூறுகின்றார்.[1]

சமயப் பூசல்கள் விடத்தக்கவை

"சமயப் பூசல்கள் பற்றிய தன் கண்டனத்தைப் பொதுவாகத் தெரிவித்த கவிஞன் பின்னர் அதனைக் குறிப்பாக எடுத்துக்காட்டி அத்தகு பூசல்கள் 'ஏதம் பெரிதும் பயப்பன' என உணர்த்தி, 'விடுதக்கன அவை' என்று எச்சரித்து காலம் காலமாக மக்கள் கருத்தோடு தோய்ந்து விட்ட கருத்துகளின் பின்னணியில் விளக்கி இறுதியில் இறைமை ஓர்மையை இவ்வாறாக நிலை நாட்டுகிறான் என்ற அறிஞர் கருத்து கம்பனின் ஒரு கடவுள் தத்துவத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது.[1] சமயம் பற்றிய மிகவும் முற்போக்கான சிந்தனைகளைக் கம்பன் கொண்டிருந்தான் என்பதனை மேற்கூறிய சான்றுகள் புலப்படுத்துகின்றன.

சமயத்தின் அடிப்படை

அறநெறிகளே சமயத்தின் அடிப்படை எனவும், அறநெறியைப் போதிப்பதே சமயத்தின் முக்கிய வேலை எனவும் ஏற்கனவே குறிப்பிட்டதற்கு

1. மு.மு. இஸ்மாயீல், கம்பன் கண்ட சமரசம், ப.26

இணங்க கம்பன் எவ்வாறு இதனைச் செயற்படுத்துகின்றான் என்பதைக் காண வேண்டும்.

தான் எடுத்துக்கொண்ட கதை வைணவ சமயம் சார்ந்த கதையாக இருப்பினும், அதனைப் பொதுமை பொதுள உலகக் கண்ணோட்டத்துடன் அவன் படைத்திருக்கிறன் என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன. முதலாவதாக அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப் பாடலில் 'அலகிலா விளையாட்டு உடையார் தலைவர்' என்று பொதுமைப் பொருள்பட இறைவனைக் கம்பன் காட்டுகிறான்.

பல்வேறு அறங்கள்

சமயத்தின் குறிக்கோள் உன்னதமான அறநெறிக் கோட்பாடுகளைப் புலப்படுத்துதல் என்ற சமூக உளவியல் கருத்துக்கு ஏற்ப, தான் பாடுகின்ற சமயக் காப்பியத்தில் பல்வேறு அறங்களைக் கம்பன் ஆங்காங்கே நிலைநாட்டிச் செல்கிறான்.

அறிவும் அறமும்

"அறநெறி என்பது பிறப்பால் வருவது அல்ல; அறிவால் வருவது"[1] என்பது கம்பனின் அறக்கோட்பாடு ஆகும்.

'அறநெறிஎல்லாம் அறிந்தவன் வாலி. அவற்றுக்கு மாறான தவறுகளைச் செய்தான். இருப்பினும் தான் செய்த தவறுகள் சரி என வாதிட்டான். இவ்வாறு வாதிடுவது சரியா என்று இராமன் வாலியைக் கேட்கிறான். இங்ஙனம் கூறும் அறிஞர் கூற்றின் கருத்தைப் பின்வரும் பாடல் தெரிவிக்கிறது.[2]

பொறியின் யாக்கையதோ? புலன்நோக்கிய
அறிவின் மேலது அன்றோ; அறத்தாறு தான்?
நெறியும் நீர்மையும் நேரிது உணர்ந்த நீ
பெறுதியோ, பிழை உற்றுறு பெற்றிதான்?

(வாலி வதைப் படலம்-108)

1. எஸ். அப்துல்ரகுமான், கம்பனின் அரசியல் கோட்பாடு, ப.42
2. மேலது.

இப்பாடலின் பொருளைச் சற்றே விரிவாகக் கண்டால், கம்பன் அறம் என்பது பற்றிக் கூறும் பொருண்மை விளக்கம் எய்தும். இராமனின் பேச்சு பின்வருமாறு அமைகிறது:

"வாலியே நீ உருவத்தால் வானரனாக இருப்பினும் உள்ளத்தால் மனிதனாகவே தோன்றுகிறாய். அறவழி என்பது, மெய்வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்புலன்களுக்கு இடமாக இருக்கின்ற உடம்பைப் பற்றியதோ? அந்த ஐம்பொறிகளை ஊக்குவிக்கின்ற சிந்தனையாகிய புலன் அறிவின் பாற்பட்டதோ என ஆராய்ந்தால் அறம் என்பது அறிவின் பாற்பட்டதே ஆகும். அறநெறியின் பெருமை நன்றாக உணர்ந்தவன் நீ! தவறுகளைச் செய்துவிட்டு, அத்தவறுகள் சரி என்று வாதிடுவது சரியா?

இருபத்தெட்டு மாதமாகியும் பிலத்தினுள் இருந்து வாலி வெளியே வராத காரணத்தால் தான், அமைச்சர்களின் அறிவுரைக்கு ஏற்ப அரசாட்சியை ஏற்றுக்கொண்ட சூழ்நிலையை விளக்கி சுக்கிரீவன், வாலியைச் சரண் புகுந்த போதும் அவனைத் துரத்தியடித்து அவன் மனைவியையும் அபகரித்துக் கொண்டான். இது அறம் ஆகாது. இச்செயல் உடலின் செய்கை என்பதை விட உள்ளத்தில் எழுந்த உந்துதலினால் ஏற்பட்டது என்று கூறுவதே பொருத்தம் உடையதாகும். எனவே அறிவுப் புலனைப் பொறுத்தே அறச்சிந்தனை அமைகிறது என்ற கம்பனின் வாதம் இன்றைய அறிவியல் ஆய்வுகளுக்கும் பொருத்தமானதாகவே இருக்கிறது.

சிந்தனையின் வழி அறம்

மனத்தின் செயல்கள் சிந்தித்தல், மன எழுச்சிகள், முயன்று செயற் படுதல் என மூவகையின என அறிஞர் கூறுகின்றனர். இம் மூவகைச் செயல்களில் சிந்தித்தல் என்பதன் வாயிலாகத்தான் அறிவு கிட்டுகிறது. அறிவின் வாயிலாகவே அறம் என்ற உயர்ந்த சிந்தனை மனித மனத்தில் நிலை நாட்டப்படுகிறது. அதனாலேயே வள்ளுவரும் 'மனத்துக் கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்' என்று அறம் என்பதனை மனத்தொடு படுத்து மொழிந்தார். மனத்தை நெறிப்படுத்துவதே அறத்தின் வேலை ஆகும். மாசு அற்ற நிலையை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதையே 'ஆதல்' என்ற சொல்லால், வள்ளுவர் குறித்தார் என்றே தோன்றுகிறது. எனவே மாசற்ற

நிலைக்கு மனப்பயிற்சி (Training) தேவை என்பதையே வள்ளுவரும் வலியுறுத்துகின்றார் என்றே கொள்ள வேண்டும்.

"சிந்தித்தல் என்பது பல்வகையான மனச் செயல்பாடு எனவும், சிந்தித்தல் என்பதனைக் கற்றல், நினைவு கூர்தல், கற்பனை செய்தல் முதலான வற்றிலிருந்து வேறுபடுத்த முடியாது எனவும்"[1] அறிஞர் தெரிவிக்கின்றனர்.

சிந்தனை என்பதைக் கற்றல் என்பதனுடன் மிக நெருங்கிய தொடர்பு உடையது என்று சொல்லும் போது அங்கே பயிற்சி இன்றியமையாத இடம் பெறுகிறது.

அறப்பயிற்சியை சிந்தனையின் வழியே வழங்குவதில் கம்பராமாயணம் தொன்று தொட்டு நம் நாட்டில் நிலையான இடம் வகித்து வருகிறது.

அரசியல் அறம்

காப்பியத்தின் தலைவன், நடையில் நின்று உயர் நாயகனாகப் படைக்கப் பட்டிருக்கிறான். அவனே அரசியல் அறத்தைச் சுக்கிரீவனுக்கு உரைப்பதாகக் காப்பியத்தில் வருகிறது. அரசியல் அறம் பதினொரு பாடல்களில் விரிவாகக் கூறப்பட்டிருப்பினும் அதன் மையக் கருத்தாக இருப்பது,

நாயகன் அல்லன் நம்மை நனிபயந்து
எடுத்து நல்கும்
தாயென இனிது பேணித் தாங்குதி
தாங்குவாரை

(அரசியற்படலம்-13)

என்பதாம். 'தாயைப் போல இருந்து அரசாட்சியை நடத்துக' என்பது இதன் கருத்து. பிறர் நலம் பேணும் 'தாய்மை' என்பது இங்கே குடியாட்சித் தத்துவத்தின் குறியீடாக (Symbol) விளங்குகிறது. அரசியல் அறத்தில்

1. "Thinking is a complex mental activity, cannot be easily seperatred from learning, memorising, imagining etc."
Yogendra K. Sharma
Psychological Philosophy of Education, P.277

குடிமக்களின் விருப்பத்தைப் பேணுகின்ற குடியாட்சித் தத்துவத்தையே சுக்கிரீவனுக்கு இராமன் போதிக்கின்றான்.

இறைமை அறம்

தொல் பழங்காலத்தில் கடவுள் என்ற உருவம் எவ்வாறு தோன்றியது என்பதனை ஆராய்பவர்கள் 'தந்தை' என்ற மூல வடிவத்திலிருந்து தான் இறைவன் என்ற உருவம் தோன்றியிருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். மகனுக்கும் மகளுக்கும் தந்தை என்பவர், அவர்களை நிலை நிறுத்துகிற ஆண்மை உடையவராக இருக்கிறார். தந்தையைப் பார்க்கும் போது ஒரு வகை அச்ச உணர்வு ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் ஏற்படுகிறது.

குழந்தை தொடையில் அமர்ந்திருக்க, பார்வதி தேவியுடன் காட்சிதரும் சோமாஸ்கந்த மூர்த்தி வடிவம் பல்லவர் காலச் சிற்பக் கலையில் காணப்படுகிறது. தந்தையைத் தெய்வநிலைக்கு உயர்த்தும் வளர்ச்சி நிலையை இச்சிற்பங்களில் காண்கிறோம்.

எனவே தந்தையைக் குழந்தை. பேருருவமாகக் காண்கிறது. இதன் வளர்ச்சி நிலையே கடவுளாக ஆயிற்று என்பர் அறிஞர்.

பிரகலாதன் தன் தந்தையை எதிர்த்து முரண்பட்ட நிலையில் இறைவனை வெளிக் கொணர வேண்டிய காட்டாயம் ஏற்பட்டது. தந்தையாக இருப்பினும் அவனைப் பித்தன் என்றும் இகழ்வதும், தந்தையின் அகங்காரத்தைச் சாடி, இறைவனே தொழத்தக்கவன் என்று கூறுவதும் அவன் உள்ளத்தில் உள்ள ஊக்க உணர்வை வெளியிடுகிறது.

செயல்படுவதன் தேவை

செயலைச் செய்து முடிக்க வேண்டிய தேவை (Need for Achievement) ஏற்படும் போது அதில் நாம் நமது ஊக்கத்தை முழுமையாகச் செலுத்துகிறோம்.

அமெரிக்காவில் உள்ள கல்லூரி ஒன்றில், செயலைச் செய்வதில் தீவிரம் காட்டிய ஆண் மாணவர்களின் மத்தியில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வை மேற்கொண்டவர் மேக்கிளிலான்ட் என்பவர்.

தீவிரமாகச் செயலை முடிக்க ஊக்கத்துடன் ஈடுபடும் மாணவர்களின் குடும்பத்தில் அவர்களது பெற்றோர்களின் நடத்தை எவ்வாறு இருக்கிறது என்பதைக் கண்டு பிடிப்பதே இந்த ஆய்வின் நோக்கம் ஆகும். இவ் வாய்வுக்காக உட்படுத்தப்பட்ட ஆண் மாணவர்கள், தங்கள் பெற்றோர்களை குறிப்பாகத் தந்தையர்களைப் பற்றிப் பின்வரும் அளவீடுகளைத் தந்துள்ளனர். அவை 1) நட்புக்குணம் இல்லாதவர்கள் 2) உதவி செய்யாதவர்கள் 3) வெற்றி பெறாதவர்கள் என்பனவாம்.

தமது பெற்றோரைப் பற்றி புத்திசாலித்தனமானவர்கள், வெற்றிகர மானவர்கள், தன்னம்பிக்கை உடையவர்கள் என்று உடன்படுகின்ற அளவீடுகளைத் தந்த மாணவர்கள் மிகவும் குறைவான செயல்களையே செய்து முடிப்பவர்களாக (Low Achievement) இருந்தனர்.

இந்த ஆய்வு பெற்றோர் வெற்றிகரமாக இல்லாத நிலையில் அவர்களுடைய பிள்ளைகள் மிகுந்த ஊக்கத்துடன் காரியங்களை வெற்றிகரமாக ஆக்குவதில் தீவிரமாக ஈடுபடுகின்றார்கள் என்பதாகும்.

தந்தை முரண்பாடான நிலையில் இருக்கும் குடும்பத்திலிருந்து வரும் மாணவர்கள், தீவிரமாகக் காரியங்களில் ஈடுபட்டு வெற்றிபெறல் என்ற தேவைக்கான உந்துதலை அதிகம் பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது இவ்வுளவியல் ஆய்வின் முடிவு ஆகும்.[1]

இப்பின்னணியில் பிரகலாதன் கதையை ஆயும்போது, கம்பன் மேலே கண்ட உளவியல் தத்துவத்தை இரணியன் வதைப் படலத்தில் கையாண்டிருப்பதைக் காண முடிகிறது.

---

1. "Mc Clelland found in the case of American college men who were high in Need for Achievement, that thay rated their parents, especially their fathers, as unfriendly, unhelpful, and unsuccessful while those who considered their parents clever successful and self confident tended to be low in need for achievement."

Yogendra K. Sharma
Psychological Philosophy of Education, P.322.

ஏழுவகைக் குணம் உடையோன்

பிரகலாதனின் இயல்பைப் பற்றிக் கம்பநாடன்,

ஆயவன் தனக்கு அருமகன்;
அறிஞரின் அறிஞன்;
தூயர் என்பவர் யாரினும்
மறையினும் தூயான்;
நாயகன்; தனி ஞானி; நல் அறத்துக்கு
நாதன்;
தாயின் மன்னுயிர்க்கு அன்பினன்
உளன் ஒரு தக்கோன்.

இந்த ஒரே பாடலில் பிரகலாதனின் ஏழு வகையான குணங்கள் புகழ்ந்து போற்றப்படுகின்றன. "இரணியனுக்கு அருமையாகப் பிறந்த மகன் பிரகலாதன். அவன் அறிவுடையவர்கள் யாவரினும் அறிவு மிகவுடையவன்; வேதத்தைக் காட்டிலும் தூயவன்; தலைமை ஏற்கத்தக்க சிறந்தவன்; பரம்பொருள் பற்றிய மிகுந்த ஞானம் உடையவன்; தருமத்திற்குத் தலைவன்; உலக உயிர்களிடம் தாயைப் போல அன்பு காட்டுபவன்; தகுதிகள் அனைத்தும் படைத்தவன்".

இத்தகைய தகுதி படைத்த பிரகலாதன், நாராயணனின் பெருமையைக் கூறும்போது, தந்தை எத்தகைய குறைபாடு உடையவன் என்பதைச் சுட்டுகிறான்.

சித்து என அருமறைச் சிரத்தில் தேறிய
தத்துவம் அவன்; அது தம்மைத் தாம் உணர்
வித்தகர் அறிகுவர்; வேறு வேறு உணர்
பித்தரும் உளர் சிலர்; வீடு பேறிலார்
(இரணியன் வதைப் படலம்-61)

இறைவன் ஞான சொரூபன் ஆவான். வேதாந்தங்களினால் சொல்லப் படுகிற சித்தாந்தத் தத்துவமாக அவன் விளங்குகிறான். தம்மைத் தாமே உணர்ந்த ஞானிகளே அவனை அறிவார்கள். அப்பரம் பொருளைப் பற்றி வெவ்வேறு வகையாக முரண்பாடாக எண்ணுகிற பித்தர்களும் சிலர்

இருக்கிறார்கள். அவர்கள் வீடுபேறு பெறுவதற்குத் தகுதியில்லாதவர்கள் என்பது இதன் கருத்தாகும். இங்கே தன் தந்தையை நேரிடையாகப் பித்தன் என்று பிரகலாதன் குறிப்பித்து மொழிகின்றான்.

மேலும் 'மெய்ம்மை கண்டிலார்' (இரணியன் வதைப்படலம்-62.) எனவும் 'மாயையால் அறிவு அற்றவர்' (இரணியன் வதைப்படலம்-66) எனவும் தந்தையின் முன்னரே இழித்தும் அவனை பழித்தும் பேசுகிறான்.

குன்றாத அன்பு

சிங்கப் பிரானாகத் திருமால் வடிவெடுத்து இரணியனை வதைத்த போது, பிரகலாதனிடம் பின் வருமாறு கூறுகிறார்:

"உந்தையை உன்முன் கொன்று,
உடலைப் பிளந்து அளையச்
சிந்தை தளராது, அறம்
பிழையாச் செய்கையாய்,
அந்தமிலா அன்பு என்மேல்
வைத்தாய்! அளியத்தாய்!
எந்தை இனி இதற்குக்
கைம்மாறு யாது?" என்றான்

என்பது சிங்கப்பிரானின் கூற்று ஆகும்.

"பிரகலாதனே! உன் தந்தையை உன் முன்னாலேயே யாம் எமது கைந் நகங்களால் உடம்பைப் பிளந்து கொன்றேன். அப்போது நீ மனம் தளராது அறநெறி தவறாதவனாய் இருந்தாய்! நீ எம்மீது எல்லையற்ற அன்பு வைத்தாய்! எம் அருளுக்குப் பாத்திரமானவன் நீ! என்னிடம் வைத்த பேரன்புக்கு ஈடாக யாம் உனக்குச் செய்யத்தக்க "பிரதிபுபகாரம் யாது?" என்று சிங்கப்பிரான் கேட்பதாக வருகிறது. மேலும்,

அயிரா இமைப்பினை ஓர் ஆயிரம்
கூறு இட்ட,
செயிரின் ஒரு பொழுதின்
உந்தையை யாம் சீறி

உயிர் நேடுவேம் போலும்
உடல் அளையக் கண்டும்,
செயிர் சேரா உள்ளத் தாய்க்கு
என் இனி யாம் செய்கேம்!
(இரணியன் வதைப் படலம்-167)

(அயிர்-நுண்மை; செயிர்-துன்பம்)

என்று சிங்கப்பிரான் கூறுவதையும் காண்கின்றோம்.

"கண் இமைக்கின்ற காலமாகிய ஒரு நொடிப் பொழுதை நுண்மையாக ஆயிரம் கூறாகப் பகிர்ந்த பகுப்பான ஒரு சிறுபொழுது. அப்பொழுதுக் குள்ளே, நான் உனது தந்தையை, அவன் செய்த குற்றம் காரணமாக வெகுண்டு, அவனது உயிரைத் தொடுவதைப் போல நெஞ்சைப் பிளந்து கொன்றதனை நீ பார்த்துக் கொண்டு இருந்தாய். அவ்வாறு பார்த்திருந்தும் உன்னிடத்தில் ஒரு துன்பமும் தோன்றவில்லை. உன்மன நிலை உறுதி வாய்ந்த மனநிலையாக இருந்தது. அப்படிப்பட்ட உனக்கு யாம் செய்யத்தக்க கைம்மாறு யாது?" என்று சிங்கப்பிரான் கேட்டார். அதற்குப் பிரகலாதன்,

என்பு பெறாத இழிபிறவி
எய்தினும் நின்
அன்பு பெறுகை அரும்பேறு
ஈனக்கு என்றான்
(இரணியன் வதைப் படலம்-169)

என்று வரம் கேட்பான்.

எலும்பு இல்லாத புழுவாகப் பிறந்தாலும் உன்மீது அன்பு குன்றாமல் இருக்கும் நிலை பெறுதலே எனக்கு நீ வழங்கும் அருமையான வரம் என்று பிரகலாதன் கேட்கின்றான். அவ்வாறே சிங்கப் பிரானும், "என்னைப் போல நீயும் அழியாது இருக்கக் கடவாயாக" என்று வரம் அருளுகின்றார்.

'புழுவாய்ப் பிறக்கினும், புண்ணியா! உன்னடி என் மனத்தே வழுவாது இருக்க' அடியார் வேண்டுவதும் இங்கு நினையத்தக்கது.

இதிலே சிந்திக்க வேண்டுவது யாது என்றால் எவ்வளவு பாதகனாக இருந்தாலும் தந்தைக்குத் துன்பம் வரும்போது, தான் ஆடாவிட்டாலும் தன்

சதை ஆடும் என்பதைப் போல மனக்கலக்கம் ஏற்படும். ஆனால் அத்தகைய கலக்கம் பிரகலாதனுக்கு ஒரு சிறிதும் ஏற்படவில்லை என்பது மட்டும் அல்லாமல் மனநிலையில் உறுதியாக இருந்தான் என்பதையும் பார்க்கிறோம். இது குறித்து ஆராய வேண்டியிருக்கிறது.

இராவணன் கதைக்கும், இரணியன் கதைக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது.

இராவணன் வீழ்ந்தபோது,

அரக்கியர் வாய்திறந்து
அரற்றும் ஓதையே
(இராவணன் வதைப்படலம்-229)

எங்கும் கேட்டது.

இராவணனை வந்து காண்பதற்காக வானத்தின் மீதாக வந்த அரக்கப் பெண்டிரின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக மழைபோலப் பொழிந்தது. அரக்க மகளிர் இராவணனின் மீது வீழ்ந்து வீழ்ந்து அழுதனர். அவ்வாறு அழுதமையாலே மயங்கிப் போயினர். இராவணனின் தலையும், தாள்களும் புயங்களும் மார்பும் எங்ஙனும் தழுவிக் குழுவினராய் அரற்றினர்.

இராவணனுடைய காதலியராகிய இயக்கியர், அரக்கியர், நாகசாதிப் பெண்டிர், சித்தசாதிப் பெண்டிர், வித்யாதர மகளிர் அவனைத் தழுவி அழுதனர்.

அவன் மனைவியாகிய மண்டோதரி,

"அன்னேயோ! அன்னேயோ! ஆ! கொடியேற்கு
அடுத்தவாறு! அரக்கர் வேந்தன்
பின்னேயோ இறப்பது?"
(இராவணன் வதைப்படலம்-238)

என்று பலவாறு கூறி இராவணனுக்காகப் பரிந்து அழுதாள்.

வீடணனும் இராவணனின் உடலின் மீது வீழ்ந்து அரற்றினான்.

போர்மகளைக் கலைமகளைப் புகழ்மகளைத்
தழுவியகை, பொறாமை கூரச்

சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்கும் தெரிவு அரிய
தெய்வக் கற்பின்
பேர்மகளைத் தழுவுவான் உயிர் கொடுத்துப்
பழி கொண்ட பித்தா! பின்னைப்
பார்மகளைத் தழுவினையோ, திசையானை
மருப்பு இறுத்த பணைத்த மார்பால்!
(இரணியன் வதைப்படலம்-226)

என்ற பாடல் கவிச் சக்கரவர்த்தி கம்பநாடனின் காப்பியத் தன்மையை என்றொன்றும் நிலைநட்டி நிற்கும்.

யாருடைய கண்களிலிருந்தும் கண்ணீரை வரவழைக்கும் இரக்கத்தை வீ.ணன் வாயிலாகக் கம்பன் புலப்படுத்தி இருக்கிறான். வீடணன் இராவணனின் வீழ்ச்சியை நினைந்து உருகும் உருக்கம் இவ்வாறு இராவணனின் துன்பத்தின் எல்லையை எட்டுகிறது. அவனுடைய பெருமை அனைத்தையும் உலகம் அறியுமாறு பலரும் புலம்புவதாக இராவணனின் வீழ்ச்சி அமைகின்றது.

ஆனால் இரணியன் வீழ்ந்த போது, அழுது புலம்பியதாகத் தெரிவிக்கப் படவில்லை. சிங்கப் பிரான், இரணியனின் "வயிர மார்பு தீயெழப் பிளந்து நீக்கித் தேவர் தம் இடுக்கண் தீர்த்தான்" (இரணியன் வதைப்படலம்-153) என்பதனோடு கதை நிறைவு பெறுகிறது. இரணியனின் இறப்புக்காக யாரும் இரங்கியதாகவோ, புலம்பி அரற்றியதாகவோ, குறிப்பிடப்படவில்லை. மாறாக இரணியனுக்கு அஞ்சி ஓடி ஒளிந்த தேவர்களும் சிவபெருமானும், இருடிகளும் இந்திரனும், பிரமனும் அவன் தொலைந்த பின்னாலே அச்சமின்றி அந்த இடத்திற்கு ஓடி வந்து, மொய்த்துக் கொண்டு,

எக்கணாற் காண்டும் எந்தை
உருவம் என்று இரங்கி நின்றார்
(இரணியன் வதைப்படலம்-154)

என்று தெரிவிக்கப்படுகிறது.

நரசிங்க அவதாரத்தைக் கண்ட தேவர் இருடிகள் முதலாயினோர் எம்பெருமானின் நரசிங்க அவதாரத்தை எந்தக் கண்களாற் காண்போம்

என்று கூறி, சிங்கப்பிரான் அனைவரையும் காத்தமை கருதி அவன் மீது இரக்கமும் கருணையும் கொண்டார்கள். இரணியன் மீது யாருக்கும் 'இரக்கம்' வரவில்லை.

இந்த இரணியனுக்குப் பெரிய வரங்களை அருளியவன் பிரமன். அவன் நரசிங்க உருவத்தைக் கண்டு நடுங்கினான். அந்த உருவத்தைக் குறுக்கிச் சீற்றம் தணிய வேண்டுமெனத் தெண்டனிட்டான். இவ்வாறு இரணியனின் முடிவு அமைகின்றது.

இராமனும் மன்னித்தான்

இராவணன் வீழ்ந்த போது வீடணன் புலம்பினாலும் அவன் உள்ளத்தின் உள்ளே இராவணன் தன்னை வைது கூறிய சொற்கள் வயிரம் என நிலையாக நிற்கின்றன.

இராவணனை, வீடணன் இடித்துக் கூறியபோது,

அஞ்சினை; ஆதலின் அமர்க்கும் ஆளலை;
தஞ்சு என மனிதர் பால் வைத்த சார்பினை;
வஞ்சனை மனத்தினை; பிறப்பு மாறினை
நஞ்சினை உடன்கொடு வாழ்தல் நன்றரோ

(வீடணன் அடைக்கலப் படலம்-8)

என்று வீடணனைப் பழித்துரைக்கின்றான்.

நஞ்சினை உடன் வைத்துக்கொண்டு வாழ முடியுமா? என்று இராவணன் பழிப்பின் உச்சத்துக்கே சென்று விடுகிறான். இம்மட்டில் நில்லாது,

ஒல்லை நீங்குதி!
விழியெதிர் நிற்றியேல் விளிதி!

(வீடணன் அடைக்கலப் படலம்-9)

(விளிதி-அழிவாய்)

என்று கடுங்கோபம் கொண்டு பேசுகிறான். "என் கண்ணெதிரில் நின்றால் என்கையாலேயே இறப்பாய்" என்று இராவணன் பேசும் பேச்சில் எவ்வித நியாயமும் இல்லை. மன்னனாக இராவணன் இருந்தாலும், தன்பின்

பிறந்தவனை "நகரத்தை விட்டு ஓடிவிடு; இல்லையாயின் உன்னைக் கொல்வேன்" என்று சொல்லுவதை யாரும் ஏற்க மாட்டார்கள். எனவே இந்தச் சொல் வீடணனின் நெஞ்சில் வயிரமாயிற்று. அதனால் இராவணனுக்கு இறுதிக்கடன்களை செய்யும் போது, "அறம் கூறிய என்னையும் வைதானே! சீதையை விடுவிக்கும் பொருட்டு நான் கூறிய சொற்கள் அவன் காதுகளில் விழவில்லையே!" என்ற நினைவுகள் வீடணன் மனத்தில் அலையாக எழுகின்றன.

எனவே 'இத்தகையோனுக்காக இறுதிக் கடன் ஆற்றுவதா?' என்று மனம் சற்றே சஞ்சலம் அடைந்தது. அப்போது இராமபிரான், வீடணனைப்பார்த்து, "இறந்து விட்டவன்மேல் பின்னும் வயிரம் கொண்டு வாளா இருத்தல் என்ன செயல்? இது தவறு; இவனுக்கு முறைப்படி நீ இறுதிக்கடன்களை ஆற்றுக!" என ஆணையிட்டான். 'பகைமைகளுக்கு மரணம்தான் முற்றுப்புள்ளி' என வான்மீகி முனிவரும் இந்த இடத்தில் குறிப்பிடுகின்றார்.

"வீடணா! தக்கது அன்றால்!
என்னதோ இறந்துளான் மேல்
வயிர்த்தல்? நீ இவனுக்கு ஈண்டு அச்
சொன்னதோர் விதியினாலே
கடன்செயத் துணிதி!"

(வயிர்த்தல்-வஞ்சகம் கொள்ளுதல்)

(இராவணன் வதைப்படலம்-216)

என இராமன் வீடணனுக்குத் தெரிவிக்கும் கருத்தில், இறந்துபட்ட இராவணனை இராமபிரானும் உளமார மன்னித்தான் என்ற கருத்தும் பெய்யப்பட்டிருக்கிறது.

இரணியனை யாரும் மன்னிக்கவில்லை. இராவணனை, இராமனும் மன்னித்தான் என்பதை மேற்கூறும் பாடல் காட்டுகிறது.

முரண்பட்ட குடும்பப் பின்னணி

மேலே கூறப்பெற்ற உளவியல் தத்துவத்தின்படி, தம் தந்தையானவர் உதவிக் கரம் நீட்டாமல் துன்புறுத்துபவராக இருந்தால், இந்த முரண்பட்ட குடும்பப் பின்னணி, உழைத்து முன்னேற்ற வேண்டும் என்ற ஊக்கத்தையும்,

காரியங்களைச் செய்து ஆற்றும் தேவையையும் இளைஞர்கள் மத்தியில் உண்டு பண்ணி விடுகின்றன என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இரணியன் வஞ்சனை

இப்பின்னணியில் தான் பிரகலாதன் கதையையும் கம்பன் நடத்திச் செல்கிறான். பிரகலாதன் இரணியனால் வஞ்சிக்கப்பட்டவன். அறிஞரில் அறிஞானகிய அவன், தனக்கு வரும் எத்தகைய இடையூற்றையும் தூசாக்க வல்ல நமோநாராயணாய நம என்ற வாசகத்தைக் கைக்கொள்கின்றான். தன்னை எதிர்த்து வருகின்ற எல்லா இடையூறுகளையும் பொடிப் பொடியாக்குகிறான்.

விடம் ஊட்டியும், யானையால் எற்றியும், கடலிடைக் கல்லால் பிணைத்து விட்டும் இரணியன் இயற்றிய இன்னபிற கொடிய பாதகச் செயல்கள் அனைத்தையும் பிரகலாதன் கடந்து ஏறிவந்தான். அதற்குக் காரணம் "ஆதிப் பண்ணவன் ஆயிரம் நாமம் ஓதுற்றான் "(இரணியன் வதைப்படலம்-103) எனவும், வாய் தந்தன சொல்லி வணங்கினனால்" (இரணியன் வதைப்படலம்-113) எனவும் சொல்லப்படுகிறது. மேற் கூறிய பாதகங்களால் பிரகலாதன் இறக்காது இருக்கவும், இரணியன் அவனைக் கொல்லப் புறப்பட்டு வந்தபோது, எல்லா இடங்களிலும் இருக்கின்ற இறைவனே என்னைக் காப்பான் என்று கூறினான்.

இரணியன் கொடுமையின் உச்சத்திற்கே சென்று, "இந்தத் தூணின் இடத்தில் நீ திருமாலைக் காட்டாய் ஆயின் உன்னைக் கொன்று, உன் இரத்தத்தைக் குடித்து, உன் உடலை உண்பேன்" என்று கூறினான்.

அப்போது தூணில் நின்ற இறைவனை வெளிக் கொணர வேண்டிய கட்டாயம் பிரகலாதனுக்கு ஏற்பட்டது. எனவே திருமாலிடம், "தொட்ட இடங்களில் வெளிப்பட்டு நீ வரவில்லை என்று சொன்னால், எனது உயிரை நானே மாய்த்துக் கொள்வேன். அதன் பின்னால் நான் வாழ்வேன் என்று சொன்னால், உனக்கு நான் அடியவன் ஆகமாட்டேன்" என்று இறைப் பற்று உறுதியுடன் திகழ்ந்தான். இறைவன் வெளிப்பட்டே ஆக வேண்டும் என்று பிரகலானுக்கு ஏற்பட்ட உந்துதலை மேற்காண் செய்தி பிரதிபலிகின்றது. இறுதியில் திருமால் "நன்று! நன்று!" எனப் பிரகலாதனின் கோரிக்கையை

ஏற்று, திசை திறந்து அண்டம் கீறி, சிரித்த செங்கண் சீயமாகப் புறப்பட்டு வந்தான். பிரகலாதனுக்கு ஏற்பட்ட மன உந்துதலையும் அதற்குக் கிடைத்த விடையையும் இவை புலப்படுத்துகின்றன.

இனி, இரணியன் வீழ்ந்துற்ற போது அங்கே யாரும் புலம்பவில்லை என மேலே கூறப்பட்டமைக்கான காரணத்தை ஆய்ந்து காணல் வேண்டும்.

இரணியன் செய்த பாதகங்கள்

கொடியரில் கொடியன் இரணியன். அவன் முப்பெரும் பாதகங்களைச் செய்தவனாவான்.

முதலாவது, சிவன், திருமால், பிரமன் என்று சொல்லப்படும் முப்பெருங் கடவுள் தமது தொழிலைச் செய்யவொட்டாது தடுத்தான். இரண்டாவதாக முனிவர்கள் வேத வேள்வியில் ஓமம் செய்த, தேவர்களுக்கு உரிய அவிர்ப் பாகங்களைத் தட்டிப் பறித்துத் தானே உண்டான். மூன்றாவதாக, அண்டங்கள் அனைத்திலும் உள்ளோரும் 'இரணியனே நம' என்று சொல்லுமாறு அண்டங்களை அடிமைப்படுத்தினான். சுருங்கக் கூறின் இறையாற்றலைத் தடுத்தான். தானே இறைவன் எனப் பிதற்றினான்.

இறைவனின் ஆற்றல் நிகழா வண்ணம் தடுத்தால் அது பேரழிவில் கொண்டு போய் முடியும் என்பதற்குச் சான்றாக இரணியனின் வாழ்வு அமைந்துள்ளது. பஞ்சபூதங்களைத் தடுமாறச் செய்ததால் அவன் வாழ்க்கையும் தடுமாற்றம் எய்தியது.

சந்திரன் ஏறும் தேரில் இரணியன் ஏறுவான்; சூரியன் தேரில் ஏறி அவனது பதவியின் அதிகாரத்தை இவனே செலுத்துவான்; அட்டதிக்குப் பாலகர்களை அகற்றிவிட்டு அவர்தம் அதிகாரங்களை இவனே கைகளில் எடுத்துக்கொள்வான். இவ்வாறு இயற்கையைத் திசை தடுமாறச் செய்தான். இதன் காரணமாகவே தன் தந்தை சிங்கப்பிரானால் பிளக்கப்பட்ட போது, பிரகலாதன் மனத்தில் வேதனையோ, சஞ்சலமோ, துன்பமோ சிறிதும் ஏற்படவில்லை.

இரணியனுக்கு மன்னிப்பு உண்டா?

இராவணன் வீழ்ந்த போது பலர் இரக்கம் கொண்டு அழுதனர். ஆனால் இரணியன் வீழ்ந்த போது யாரும் இரக்கம் கொண்டு புலம்பவில்லை.

'பகைமைக்கு மரணம்தான் முற்றுப்புள்ளி' என்ற வான்மீகியின் வாசகமும் செயற்படவில்லை. அண்டங்கள் இரணியனை மன்னிக்க முன்வர வில்லை. அவனுக்காக யாரும் அழவில்லை; அழவும் முடியாது. இறைவனது தொழிலையும் இயற்கையின் தொழிலையும் சீண்டிப் பார்த்து இடையூறு செய்தமையாலே, இரணியன் மீது அண்டங்கள் கொண்ட பகைமை எப்போதும் முடியாது போயிற்று. இராவணன் நெஞ்சமாம் சிறையில் வைத்த சீதைக்கு, இராமனின் அம்பு பதிலுரையாக அமைந்து, 'சானகியை மனச் சிறையில் கரந்த காதல் உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து தடவியதால்' அந்தச் சிறையிலிருந்தும் அவளுக்கு விடுதலை கிடைத்து விடுகிறது. அதனால் அவன் முகம், வாழ்க்கையின்போது இல்லாத அளவுக்கு இறப்பில் 'மும்மடங்கு பொலிந்து' தோன்றியது. இரணியனின் கொடுமை இராவணாகாரத்தை விஞ்சிவிட்டது. ஆகவே 'இரண்யாகாரம்' என்பது உலகில் எப்போதும் அக்கொடியனை எதிர்க்கும் பகைமையாகக் கனன்று கொண்டே இருக்கிறது. அதனால் அவன் மீது இரக்கமோ, புலம்பலோ, பரிவோ, துன்பமோ தோன்றவில்லை. இறைமை ஆற்றலுக்கும், இயற்கை ஆற்றலுக்கும் எதிர்மாறான சுற்றுச் சூழல் கேடு மன்னிக்க முடியாத மாபெரும் அபாயம் என்பதன் குறியீடாகவே (Symbol) இரணியனைக் கம்பன் காட்டுகிறான். இவ்வாறு இரணியன் கதைக்குத் திரையிடுகின்றான்.

இந்த இரணியன் கதையில் கம்பன் காணும் "இறைமை அறம்" என்பது மிகவும் தெளிவாகப் புலப்படுத்தப்படுகிறது.

இரணியனுக்குக் குருவாக இருந்தவன் பிரமன். இரணியனுக்கு வேதங்களின் பொருளைக் கற்பித்தவனும் பிரமனே. இரணியன் இறவா வரம் பெறுவதற்குத் துணை நின்றவன் பிரமனே.

இரணியனின் அட்டுழியம் மிகுந்து போகவே, சிங்கப்பிரான் தூணிலிருந்து புறப்பட்ட போது பிரமன் துணுக்கம் எய்தினான். தன்னால் வரம் பெற்ற இரணியன் காரணமாக திருமால் தோன்ற வேண்டிய நிலைக்காக அவன் உள்ளத்தில் வருத்தம் தோன்றுகிறது. அவ்வருத்தத்தின் வெளிப்பாடாக அவன் பேசும் போது இறைவனின் தத்துவத்தையும் ஒரு சேர வெளிப் படுத்துகின்றான்.

நின்னுளே என்னை நிருமித்தாய்; நின் அருளால்
என்னுளே எப்பொருளும் யான் ஈன்றேன்;
பின்னிலேன்; முன்னிலேன்; எந்தை பெருமானே!
பொன்னுளே தோன்றியதோர் பொற்கலனே போல்கின்றேன்
(இரணியன் வதைப்படலம்-160)

துதிசெய்து பிரமன் கூறும் மேற்காண் மொழிகள் மனம் கொள்ளத் தக்கன.

படைப்புக் கடவுளாகிய பிரமனின் தொழில் எல்லாவற்றையும் படைத்தல் ஆகும். அதனால் பிரமன் கூறுகின்றான்:

இறைவனே! உன்னிடத்திலிருந்து தான் நான் தோன்றினேன். எனவே என்னை நிருமித்து உண்டு பண்ணியவன் நீயே! உனது கருணையினால் தான் எல்லாப் பொருள்களையும் நான் படைத்தேன். எனக்குத் தந்தையும் தலைவனும் நீயே! உன்னை யன்றி எனக்குக் காரணமும் காரியமும் இல்லை. நான் எப்படி இருக்கிறேன் என்றால் பொன்னிலிருந்து உண்டான ஒரு பொன் ஆபரணத்தைப் போல இருக்கிறேன்' என்பது பிரம்மனின் கூற்று.

பிரமன் சிங்கப் பெருமானின் சீற்றம் கண்டு துணுக்குற்று அவன் அருகே செல்ல வொட்டாமல் அஞ்சி, தூரத்தில் நின்று இச்சொற்களைக் கூறினான்.

பிரமன் அச்சத்தால் மொழியும் இப்பேச்சில், எல்லா உயிர்களிலும் இறைவனே இருக்கிறான் என்ற அத்வைதக் கோட்பாடு மிகவும் தெளிவாக வெளிப்படுகிறது.

படைத்தல் என்னும் தொழில் என்னுடையதாக இருப்பினும் இறைவனே! நீ தான் எல்லா உயிர்களிலும் ஒளிர்கின்றாய் என்று இறைவனின் தத்துவத்தைப் பிரமன் மிகவும் அற்புதமாக வெளியிடுகின்றான்.

'பொற்கொல்லனாக நான் இருக்கிறேன்; பொன்னாக இருப்பவன் நீயே!' என்று திருமாலிடத்தில் பிரமன் கூறுவது ஈண்டு உற்று நோக்கத்தது.

இதே கருத்தையே பிரகலாதனும் பிரதிபலிக்கின்றான்.

“உலகங்கள் அனைத்தும் உன்னிடத்திலிருந்தே தோன்றுகின்றன. பின்னர் அவை பல்வேறு வகையனவாக மாற்றம் பெறுகின்றன. அப்படி ஆனாலும் அவை உன்னிலிருந்து வேறுபட்டன என்று கூற முடியுமா? பொன்னிலிருந்து ஆபரணங்கள் வெவ்வேறாகக் தோன்றுகின்றன. என்றாலும் அவ்வாபரணங்களைப் பொன்னிலிருந்து வேறுபட்டவை என்று கூற முடியுமா? பொன் ஆபரணங்கள் பொன்னின் பரிணாம வளர்ச்சியே அன்றி அதிலிருந்து வேறுபட்டவை என்று சொல்லிவிட முடியாது. அதுபோலவே உன்னிடத்திலிருந்து தோன்றிய அனைத்தும் உனது பரிணாம வளர்ச்சியேயன்றி உன்னிலிருந்து வேறுபடா” என்றான்.

இதனை

நின்னில் பிறிதாய், நிலையில் திரியாத்
தன்னில் பிறிதாயினதாம்; எனினும்
‘உன்னில் பிறிதாயினவோ உலகம்?’
பொன்னில் பிறிதாகில பொற் கலனே

(இரணியன் வதைப்படலம்-112)

என்பது கம்பன வாக்கு.

மேலும் இறைவன் மூன்று உலகங்களிலும் ஆலமரமும் அதன் வித்தும் போலவும், புகையும் நெருப்பும் போலவும் ஒன்று கலந்து இருக்கிறான்.

தன்னுள் இருந்து எல்லா உலகங்களையும் உண்டு பண்ணுபவன் இறைவன். அவற்றுக்குள்ளே பல வடிவங்களாக நிற்கின்றான். மேலும் அவன் அவற்றின் உள்ளே தங்கி இருக்கிறான். இவ்வாறு இறைவன் அனைத்திலும் கலந்து இருப்பது பேசப்படுகின்றது.

தன்னுளே உலகங்கள் எவையும் தந்து, அவை
தன்னுளே நின்று, தான் அவற்றுள் தங்குவான்

(இரணியன் வதைப்படலம்-59)

என்பதே கம்பனின் இறைமை அறத்தின் மூல வாக்கியம் ஆகும். எல்லாப் பொருள்களிலும் மறைந்து நிற்பதே இறைவனின் தன்மை என்பது கம்பனின் கடவுட்கோட்பாடாக இரணியன் வதைப்படலத்தில் உறுதிப்படுத்தப்படுகிறது.

'விறகில் தீயினன், பாலிற்படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்'

என அடியார் கூறியதும் ஒப்பு நோக்கத்தக்கது ஆகும்.

இத்தகைய இயற்கைத் தத்துவத்தை உள்ளத்தில் போற்ற வேண்டும் என்பதே கடவுள் குறித்த அறமாகக் கம்பன் தெரிவிக்கின்றான்.

இக் கருத்தையே

காரணன் நீ; கற்றவை நீ; கற்பவை நீ; நற்கிரிசை
நாரணன் நீ; நன்கு அறிந்தேன் நான்
(நான்முகன் திருவந்தாதி-2477)

என்று திருமழிசை ஆழ்வார் தெரிவிக்கின்றார்.

திருமங்கை ஆழ்வார்,

உள்ளத்தின் உள்ளே உளன் கண்டாய் சாழலே
(பெரிய திருமொழி-2001)

என்று பாடுகின்றார்.

7. கம்பன் ஒரு பண்பாட்டுச் சின்னம்

கம்பன் காப்பியம் செய்யத் தேர்ந்தெடுத்த கதை

கம்பன் தன் காலத்தில் மக்களிடையே வழக்கில் இருந்த கதையைத் தேர்ந்தெடுத்தான். அவன் பரந்து விரிந்த விசால அறிவு படைத்தவன். தனது அறிவின் விரிந்த பரப்புக்கு ஏற்ப மிகவும் விரிவான கதை ஒன்றைக் காப்பியம் பாடுவதற்கு உரிய களமாக அமைத்துக் கொண்டான். இதனாலேயே கம்பன் கவி, 'விஸ்தார கவி' என்று அழைக்கப் படலாயிற்று.

வடமொழியில் அமைந்த வேதங்கள், உபநிடதங்கள் முதலானவற்றில் அவன் தேர்ந்த அறிவு நிரம்பியவன். வடமொழி வான்மீகி இராமாயணத்தை உய்த்து உணர்ந்தவன். தன்காலத்தில் நின்று நிலவியிருந்த தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை ஆழ்ந்து கற்றான்.

மகிழ்வு தருவது கதை

எக்காலத்திலும் கதை சொல்லுவதும் கதை கேட்பதும் மனித இனத்தின் மாண்பு ஆகும். அவ்வாறே சோழப் பேரரசில் வளம்பெற்று வாழ்ந்த மக்கள் தம் உள்ளம் மகிழக் கதை கூறுபவர்களை வரவேற்றனர். கம்பன் இதனை, 'காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்' என்று கூறுகிறான். மேலும் தருமத்தைப் போதிப்பதை அக்கால மக்கள் செவிகொடுத்துக் கேட்டனர். இமயம் முதல் குமரி வரை இருந்த மக்கள் தரும போதனையை நெஞ்சார வரவேற்றனர். தரும போதனை செய்பவர்களுக்குத் தேவையானவற்றை அன்புடன் வழங்கி அவர்களை ஆதரித்தனர். இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களை இளம் குழந்தை முதல் முதியவர் வரை எத்தரப்பினரும் காதால் கேட்டும், நெஞ்சால் உணர்ந்து உவப்புக்கொண்டும், அவற்றில் உள்ள இறையருட் கருத்துகளை இல்லந்தோறும் போற்றுதல் செய்தும் உளமார விரும்பி வரவேற்புச் செய்தனர். இக்கதைகளில் தெய்வீகத் தன்மை பொதிந்து

கிடக்கிறது என்பதைக் கம்பன் உளமார நம்பினான். இதனைக் கம்பன் 'தெய்வ மாக்கவி' என்று தற்சிறப்புப் பாயிரத்தில் குறிப்பிடுகின்றான். 'மாக்கவி' என்பதால் அக்கதையின் பரப்பு எல்லை மிகவும் விரிவானது என்று உணர்த்துகிறான்.

வான்மீகியின் சிறப்பு

வடமொழியில் இராமாயணம் பாடிய வான்மீகி, வசிட்டர், போதாயனர் என்ற மூவரில், வான்மீகி பாடிய இராமாயணத்தை மூலநூலாகக் கொண்டதாகக் கம்பன் கூறுகின்றான். வான்மீகியின் நாவன்மையின் மீது கம்பன் அளப்பரிய மதிப்பு வைத்திருந்தான்.

'தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவரானவர் தம்முளும் முந்திய
நாவினன்'

(தற்சிறப்புப் பாயிரம்-10)

என்ற கம்பன் கவியால் இதை உணர முடிகிறது. வடமொழியில் இராமாயணம் செய்த மேலே கூறப்பட்ட மூவரில், வான்மீகி முதன்மைத் தன்மையுடன் சிறப்பு வாய்ந்த நா வல்லமையுடையவன் என்று தனக்குக் கதை தந்த வான்மீகியைப் புகழ்ந்து மொழிகின்றான் கம்பன். மேலும்

வாங்க அரும் பாதம் நான்கும்
வகுத்த வான்மீகி என்பான்
தீங்கவி செவிகள் ஆரத்
தேவரும் பருகச் செய்தான்

(நாட்டுப்படலம்-1)

எனவும் வான்மீகியைப் போற்றுகின்றான்.

நான்கு பாதங்கள் அல்லது அடிகளைக் கொண்ட சுலோகங்களால் வடமொழியில் பாடியவர் வான்மீகி. இப்பாடல்களில் ஒரு அடியை நீக்கிவிட்டு மற்றொரு அடியை வேறு எக்கவிஞர் செய்து வைத்தாலும் அதன் பொருட் பொருத்தமும் கவிமாண்பும் சிதைந்து போய்விடும். அத்தகைய அருமை வாய்ந்த பாடல் அடிகளைப் படைத்தவன் வான்மீகி. இந்நிலவுலகத்து மக்கள்

மட்டும் அல்லாமல் வான் உலகத்துத் தேவர்களும் வான்மீகியின் கவிதைகளைக் கேட்டால் செவிகளில் என்றும் இல்லாத இனிமை நிரம்பும். இத்தகு ஆற்றல் பொருந்தியவன் வான்மீகி என்று கம்பன் நெஞ்சாரப் பாராட்டுகிறான். வான்மீகியின் இராமாயணம் வடமொழிப்புலத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது. எனவே தனது அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற கதைப் பரப்பை இராமாயணம் வழங்கும் என்பதனால் கம்பன் இதனைத் தெரிவு செய்தான்.

பாத்திரங்களை நேர்பட அமைத்தது

கம்பன் நேர்மையான உள்ளம் கொண்டவன் என்பதை அவன் படைத்த பாத்திரங்களே உணர்த்துகின்றன. நேர்மையான உள்ளம் என்பது நடுவு நிலையில் நிற்பதைக் குறிக்கும்.

கம்பன் பல்வகைப் பாத்திரங்களைக் கதையில் உலவ விட்டிருக்கின்றான். உயர்ந்த தெய்வத்தன்மை உடைய காப்பிய நாயகனாகிய இராமன் முதல் கொடுமையின் உச்சமாகிய இரணியன் வரை அனைத்துப் பாத்திரங்களையும் அப்பாத்திரங்களாகவே தன்னை மாற்றிக் கொண்டு கம்பன் கதையை நடத்துகிறான். எல்லாம் பாத்திரங்களிலும் அவர்கள் தேவர்களாக இருந்தாலும் அசுரர்களாக இருந்தாலும் அப்பாத்திரங்களில் 'மானுடம்' என்ற வண்ணப் பூச்சு இன்றி அவன் எந்தப் பாத்திரத்தையும் படைக்கவில்லை. தன்னுடைய விருப்பு வெறுப்புகளை அவன் பாத்திரங்களின் மீது திணிக்கவில்லை. மாறாகப் பாத்திரங்களின் உண்மையான உளவியலைப் படம் பிடித்துத் தருகின்றான்.

பிரச்சனைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்

தன் கதைக்கு வேண்டிய பண்புகள், குணங்கள், இயல்புகள், நியாயங்கள் ஆகியவற்றைத் தான் வாழும் சூழலில் உள்ள மனிதச் சமுதாயத்திலிருந்தே அவன் பெற்றுக்கொள்கிறான். அதனாலேயே அவன் மானுடம் வென்றதம்மா என முழங்குகிறான். மனிதனின் உள்ளார்ந்த ஆசைகள், அவலங்கள், பிணக்குகள், சண்டை சச்சரவுகள் எல்லாவற்றையும் உரிய பாத்திரங்களின் வாயிலாகப் பதிவு செய்வதோடு மட்டும் அல்லாமல் அவற்றுக்கான தீர்வுகளையும் அவன் படைக்கத் தவறவில்லை. அவன்

காணும் தீர்வுகளே அவனை உலகமகா காப்பியக் கவிஞனாக உயர்த்தி யிருக்கின்றன என்பதிலே அணுவளவும் ஐயமில்லை.

வறுமையும் இல்லாமையும் ஒழிய வேண்டும் என்ற பிரச்சனைக்குத் தீர்வாகக் கல்வி என்றும் விதையை விதைக்க வேண்டும் என்கின்றான்.

போரும் பூசலும் தீர்ந்து புகழ் ஒடுங்காமல் நிலைக்க நாட்டில் அறம் தழைக்க வேண்டும் என்ற தீர்வைத் தருகிறான்.

காமமும் ஐம்புலவெறியும் நிறைந்த இலங்கையைக் காட்டி, அதற்குத் தீர்வாகக் கல்வியும் ஞானமும் மக்களிடையே பரவ வேண்டும் என்கின்றான்.

சமுதாய வீழ்ச்சிக்குக் காரணம் இலட்சியத்தைத் தொடராமையே (Sustainability of the goal) என்று இராவணனை எடுத்துக்காட்டித் தீர்வு காண்கிறான்.

சோழ இராச்சியத்தில் சுயநலமிக்க முடிமன்னர் ஆட்சியைக் கண்டு வெகுண்டு அதற்குத் தீர்வாகக் குடிமக்கள் ஆட்சியை மிக நுண்மையாகப் படைக்கின்றான். தாய்மை போன்ற அன்பினை அவன் முடிமன்னரிடம் காணாமையால் தசரதனைச் சொல்லும் போது 'தாய் ஒக்கும் அன்பில்' என்று படைக்கின்றான். ஆட்சி அதிகாரத்தின் அவலத்தை அவன் நன்கு உணர்ந்திருந்த காரணத்தால் மக்கள் பக்கம் நின்று மக்களுக்காகக் குரல்கொடுக்கிறான்.

எச் செயலையும் மனத் திண்மையால் செய்து முடிக்கலாம் என்பதை அனுமனின் கதையால் உணர்த்துகிறான். மனத்துக்கு வலிமை சேர்க்கும் பணியை இப்பாத்திரத்தைப் படைக்கும் போது கம்பன் செய்து முடிக்கின்றான்.

பாத்திரங்களின் உண்மைத்தன்மை

கதை நிகழ்ச்சிக்கான நுண்ணிய விவரங்களைச் சமுதாயத்திலிருந்து பெற்றுக் கொண்ட கம்பன் காப்பியத்தை நேர்பட அமைத்திருப்பதைப் பற்றி அறிஞர் வ.சு.ப. மாணிக்கம் பின்வருமாறு கூறுகிறார்:

"எப்பக்கத் தவராயினும், எவ்வினத் தவராயினும், எத்திறத்தவராயினும் காப்பிய மாந்தர்களுக்குள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது புறம் நின்று

இது சரி, இது சரியன்று என்று சமுதாயத்துக்கு நேர்மை தெரிவிக்கின்றான் காப்பியப்புலவன். இராமன் முதலாகச் சூர்ப்பணகை யீறாக எல்லாப் பாத்திரமும் புலவன் படைத்த குழந்தைகள்: ஆதலின் அவனுக்கு உண்மையில் எப்பாத்திரத்தின் பாலும் மிகையான பற்றும், மிகையான வெறுப்பும் இருக்கமாட்டா. புகழ வேண்டுமிடத்து எதனையும் புகழ்வான், இகழ வேண்டு மிடத்து இகழாது விடான்'[1]

இக்கூற்றுக்கு இணங்கப் பாத்திரங்களின் உண்மைத் தன்மையை உணர்ந்து அப்பாத்திரங்களின் இயல்பைக் கம்பன் கைதேர்ந்தவனாக விளங்குகின்றான்.

சூர்ப்பணகையின் பேச்சு

கம்பனின் கை வண்ணத்தில் சூர்ப்பணகையின் பாத்திரம் மிக அற்புதமாகப் படைக்கப்பட்டிருக்கிறது. மனத்தால் பாதிக்கப்பட்டவளாகிய அவள் பேசும், இடங்களில் எல்லாம் ஆழ்ந்த உளவியல் தத்துவம் வெளிப்படுத்தப் படுகிறது. அவள் உடலும் உள்ளமும் வஞ்சகமானவை. அவளுடைய பேச்சும் வஞ்சகமானது. எனவே இடத்துக்கு இடம் வேறுபடுகிறது. குறிப்பாக இராமனைப் பற்றி அவள் பேசுகின்ற பேச்சுகளில் மிக நுணுக்கமான நாடகத் திறனைக் கம்பன் கையாண்டு அனைவரையும் வியக்க வைக்கின்றான்.

கொடும் அரக்கியாகிய சூர்ப்பணகை இராமனை முதலில் சந்திக்கும் போது, 'எழுத அரு மேனியாய்!' (சூர்ப்பணகைப் படலம்-48) என்று புகழ்ந்து பேசுகிறாள்.

மூக்கும் முகமும் இலக்குவனால் அறுபட்டபோது அங்கே வந்த இராமன், 'இவள் யாது பிழை செய்தாள்?' என்று இலக்குவனிடம் கேட்டான். அப்போது இடைமறித்து சூர்ப்பணகை, இராமனிடம் பேசும் பொழுது,

சூல் தவளை, நீர் உழக்கும்
துறைகெழு நீர் நாட! (சூர்ப்பணகைப்படலம்-122)

என்று அவனது நிலவளத்தைக் குறிப்பிட்டு அழைக்கின்றாள். சூல்கொண்ட தவளை நீரில் அங்கும் இங்கும் திரிவதைப் போல யானும் இருக்க வேண்டும்

1. கம்பன், ப.119.

என்று சூர்ப்பணகை காமக்குறிப்பை உணர்த்தினாள். நும் நாட்டு விலங்கும் காமம் நிறைந்து உலாவும் போது, யான் அங்ஙனம் திரிவதற்காகக் கோருவதில் என்ன தவறு இருக்கிறது? என்னும் வினா இதில் குறிப்புப் பொருளாக அமைந்துள்ளது. மீண்டும் இராமனிடம் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு புலம்பும்போது,

சிவனும், மலர்த்திசை முகனும்,
திருமாலும் தெறுகுலிசத்து
அவனும், அடுத்து ஒன்றாகி
நின்றன்ன உருவோனே

(சூர்ப்பணகைப் படலம்-132)

என்று இராமனின் பராக்கிரமம், ஒழுக்கம், ஆட்சி, பொலிவு இவை அமைந்த தோற்றத்தை புகழ்ந்து பேசினாள். சிவன், பிரமன், திருமால், இந்திரன் ஆகிய நால்வரும் ஓர் உருவம் பெற்று வந்தனைப் போலப் தோற்றப் பொலிவு உடையவன் என்று இராமனை தெய்வத்தொடு படுத்து இங்கே பேசுவதைப் பார்க்கிறோம்.

மீண்டும் இராமன் தன்னை ஏற்றுக்கெள்ள வற்புறுத்தும் போது, 'நெல் எலாம் சுரந்து அளிக்கும் நீர் நாட!' (சூர்ப்பணகைப் படலம்-138) என்று நெல்லும் பிற தானியங்களும் இராமனது நீர் நிறைந்த நாட்டில் மேலும் மேலும் விளைதல் போலத் தனது காமமும் மேலும் மேலும் விளைகிறது என்று சூர்ப்பணகை குறிப்பாகக் கூறினாள்.

இராவணனிடம் கூறியது

மூக்கு அறுபட்ட நிலையில் இராவணனிடம் ஓடிச் சென்ற போது, 'உன்னை இது செய்தார் யாவர்?' என அவன் வினவினான். அதற்கு விடையாக,

'செய்தனர்கள் மானிடர்'

(மாரீசன் வதைப்படலம்-51)

என்று மட்டும் நிறுத்தாமல், இராம இலக்குவரின் வீரபாக்கிரமத்தைப் புகழ்ந்து உரைக்கின்றான்.

மன்மதனை ஒப்பர் மணமேனி; வடமேருத்
தன் எழில் அழிப்பர் திரள் தாளின் வலி தன்னால்
(மாரீசன் வதைப்படலம்-52)

மாரர் உளரே இருவர் ஓர் உலகில் வாழ்வார்?
(மாரீசன் வதைப்படலம்-55)

என்று தனது காமக்குறிப்பை, இராமன் இலக்குவன் இருவர் மீது ஏற்றிக் கூறினாள்.

இவ்வாறு சூழ்நிலைக்கு ஏற்றாற் போலத் தனது பேச்சை மாற்றிக் கொள்ளும் தந்திரம் மிக்கவள் அவ்வஞ்சமகள்.

உண்மையை மறைத்த வஞ்சகம்

மூக்கும், காதும் அறுபட்டு இரத்தம் ஒழுகும் நிலையில் அவளது உடல் வலி மிகுகுகிறது. அப்போது தன் உறவினர்களையும் அண்ணன்மார் களையும் அழைத்துக் கூவிப் புலம்புகிறாள். இராமன் தனது காமப் பசிக்குக் கிடைக்க மாட்டான் என்பது இப்போதைய நிலை. தன் கணவனைக் கொன்ற இராவணனை வஞ்சம் தீர்க்க வேண்டும் என்று அவளது அடி மன ஆழத்தில் உள்ள உண்மையை மறைத்து அண்ணனின் பேராற்றலைத் தனக்குச் சாதமாகப் புகழ்ந்து பேசுகிறாள்.

தழல் எடுத்தான் மலை
எடுத்த தனி மலையே!
(சூர்ப்பணகைப் படலம்-101)

எனவும்,

சிவன் தடக்கை வாள் கொண்டாய்!
(சூர்ப்பணகைப் படலம்-104)

எனவும் பலவாறாக இராவணனைப் புகழும் அதே வேளையில், தான் கொண்ட காமப் பார்வையில் உயர்ந்து தோன்றிய இராம இலக்குவரைத் தன் மனத்தின் அதல பாதாளத்தில் வீழ்த்தி, அருவருக்கத்தக்க கொடுஞ்சொற்களால் திட்டித்தீர்க்கின்றாள்.

இராம இலக்குவரைப் பற்றிய இழிவுரை

"இராவணனே! நீ போருக்கு எழுந்து கால்களை வலியப் பதிய வைத்துத் தரையின் மீது நடக்கும் போது நெருப்பு எழும். அங்ஙனம் நடந்து நீ எட்டுத் திசை யானைகளின் தந்தங்களை ஒடித்தாய்! இத்தகைய வலிமை ஏறிய இருபது தோள்களை உடையவனே! இராம இலக்குவர்கள் என்னும் இருவர் சாம்பல் ஆகிப் போய் விடாத மன்மதனனைப் போன்ற உருவத்தை உடையவர்கள்! (விரைவில் சாம்பல் ஆவர் என்பது குறிப்பு) அவ்விருவரும் உனது செருப்பின் அடியில் உள்ள தூசிக்கும் ஒப்பாக மாட்டார்கள். அவர்களை எதிர்த்துப் போரிடுவது உனது தோளாற்றலின் பெருமைக்குக் குறைவானது என்று கருதிப் போரிடாமல் இருக்கின்றாயோ?" என்று புலம்பி அழுதாள். இக்கருத்து அமைந்த பாடலின் அழகையும் காண வேண்டும்:

உருப்பு ஒடியா மன்மதனை
    ஒத்துளரே! ஆயினும் உன்
செருப்பு அடியில் பொடி ஒவ்வா
    மானிடரைச் சீறுதியோ?
நெருப்பு அடியில் பொடி சிதற
    நிறைந்த மதத் திசை யானை
மருப்பு ஒடியப் பொருப்பு இடியத்
    தோள் நிமிர்த்த வலியோனே!

(சூர்ப்பணகைப் படலம்-105)

இப்பாடலைப் பற்றிச் செவி வழிச் செய்தியாக ஒரு கருத்துக் கூறப்படுகிறது.

பாத்திரத்துக்கு ஏற்ற உணர்வு

கம்பர் திருவரங்கத்தில் இராமாயணத்தை அரங்கேற்றும் வேளையில் இப்பாடலை வாசித்தார். அப்போது அங்கு இருந்த வைணவ அடியார் ஒருவர் "ஐயா, கம்பரே! கடவுள் எல்லாம் ஒருருவாகி அவதரித்த இராமனைப் பற்றியும் சுமித்திரையின் சிங்கமாகிய இலக்குவனைப் பற்றியும், "செருப்படியில் பொடி ஒவ்வா மானிடர்" என்று கூறி இழிவு படுத்தி விட்டீரே!" என்று கேட்டார். அப்போது அங்கு இருந்த அம்பிகாபதி, அந்த அடியாரின் பாதத்தில் வீழ்ந்து

வணங்கி, "கம்பரது நோக்கம் இராம இலக்குவரை இழிவு படுத்துவது அன்று" என்று கூறினார். அங்கிருந்த நாத முனிகள் புன்னகை பூத்தார். அவர் அந்த வைணவ அடியாரை நோக்கி, "இது கவி கூறும் கூற்றாக வருகிறது. இராம இலக்குவர்கள் சூர்ப்பணகையின் காம விருப்பத்தின் படி நடந்து கொள்ளாமையாலும், மூக்கு முதலிய அவள் உறுப்புகளை அவர்கள் சேதப்படுத்தியமையாலும், அவள் இப்படித்தான் இழிவாகப் பேசுவாள்! அவளுடைய பாத்திர அமைப்புக்கு ஏற்றவாறு இராம இலக்குவரை இழிவாகப் பேசுவதாக அமைத்திருப்பதில் எந்த 'அபசாரமும்' இல்லை. செருப்படி என்னும் தொடரை செரு, படி எனப்பிரித்து இராவணனின் யுத்த பூமியில் ஒரு தூசுக்கும் கூட ஒப்பாகாத மானுடர் என்று வேறு ஒருகருத்தும் தோன்றும்படியாகச் சிலேடையாகவும் கம்பர் கூறியுள்ளார். இது கவியின் தனித்திறமையையும், நுண் மாண் நுழை புலத்தையும் புலப்படுத்துகிறதே அன்றி எவ்வகையிலும் 'அபசாரம் ஆகாது' என்று அருளினார். இது கேட்டு அந்த அவையில் இருந்தோர் அனைவரும் மிக்க மகிழ்வு கொண்டு ஆரவாரம் செய்தார்கள்.

நேர்பட உணர்தல்

செவி வழிச் செய்தியாகக் குறிப்பிடப்படும் இக்கருத்தில் நாம் காண வேண்டியது கம்பனின் காப்பிய நேர்மை ஆகும். எந்தப் பாத்திரத்துக்கு எந்த உணர்ச்சி தோன்ற வேண்டுமோ அவ்வுணர்ச்சியைப் படிப்பவர்களிடத்தே தூண்டுவதே உத்தமக்கவியின் இலக்கணமாகும். அவ்வகையில் பார்க்கும் போது, சூர்ப்பணகை இராம இலக்குவர்களைக் குறித்து இழிவாகப் பேசும் போது வைணவ அடியார்க்கு ஏற்பட்ட 'கோப ஆவேசம்' கம்பன் காப்பியத்தை உணர்ச்சி ததும்பவும், பாத்திரத்தின் அடிமன ஆழம் புலப்படும் படியாகவும், பாத்திரத்தின் உண்மையான உணர்ச்சி வெளிவரும் படியாகவும் படைத்திருக்கிறான் என்பதனையே காண்கிறோம்.

இங்ஙனம் பாத்திரங்களுக்கு ஏற்ற உணர்வுகளைத் தட்டி எழுப்புவதில் கம்பன் கைதேர்ந்தவன். உணர்வு ததும்பும் உயிர் ஓவியங்களாகத் தனது பாத்திரங்களைக் கம்பன் படைத்துத் தந்திருக்கிறான். பாத்திரத்தைக் குறித்து நேர்பட உணர்வதே 'காப்பிய நேர்மை' ஆகும். இதுகுறித்து விரிக்கின் பெருகும். இத்தகைய நேர்மையில் கம்பன், தனக்கு ஒப்பாரும் உயர்ந்தாரும் இன்றி தனியொரு கவிச் சக்கரவர்த்தியாக மிளிர்கின்றான்.

கம்பனின் ஆற்றல்

கம்பன் தனது ஆற்றல் முழுமையையும் காப்பியத்தில் கொட்டி இருக்கிறான். அவனது அறிவின் பரப்புக்கு ஏற்ப அவனது கவிதையின் வேகமும் அமைந்துள்ளது. ஏறத்தாழப் பன்னீராயிரம் கவிதைகளைப் பாடிய அவன் தனக்கு உதவியாளர்களாக ஏடு எழுதுவோர்களைக் கொண்டு இருந்தான். ஏடு எழுதுபவர்களின் கை சோர்ந்து போகும் படி அவனது கவிதை வீச்சு மிகவும் விரைந்து வந்ததாகக் கம்பனது வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது. தனக்கு இருக்கக்கூடிய திறமை அனைத்தையும் கொட்டி, அவன் காப்பிய மாளிகையை மன ஒருமையுடன் எழுப்பியிருக்கிறான்.

பாயிரத்தில் அவன் பணிவு

உலகக் காப்பிய வரிசையில் ஈடும் ஈடுப்பும் இல்லாத ஒப்பற்ற காப்பியத்தைப் படைத்து 'காப்பியம்' என்ற இலக்கிய வகைக்குப் புதிய வீச்சை ஏற்படுத்தித் தந்த பேரறிவாளன் தன்னை அறிமுகம் செய்து கொள்ளும் போது, 'ஞானம் இலாதவன்' எனவும், 'பித்தன், பேதையன், பத்தன்' எனவும் கூறுகின்றான். ஆசையை முதலீபாக வைத்ததாகவும், அறிவை முதலீபாக வைக்க வில்லை எனவும், அறிவுக் கடலாகிய கம்பன் பேசுகிறான். காப்பியம் படைத்த பின் உலகம் இகழுமோ எனவும் நினைத்துப் பார்க்கிறான்.

இறையும் ஞானம் இலாத என்புன்கவி,
முறையின் நூல் உணர்ந்தாரும் முனிவரோ?

(பாயிரம்-9)

என்று அவையடக்கத்தில் கம்பனின் மனம் வெளிப்படுகிறது. அறிவின் கடலாக இருப்பவன், 'அறிவு என்பது துளியும் இல்லாதவன்' என்று சொல்லிக் கொள்கிற அளவு, அவனது அவையடக்கம் அமைந்திருப்பதற்கான காரணத்தை ஆராய்ந்த அறிஞர், சோழப் பேரரசின் முடிமன்னர் ஆட்சியில் அவனுக்கு ஏற்பட்ட ஒடுக்கு முறையினால் இத்தகைய பணிவும் அடக்கமும் தோன்றியிருக்க வேண்டும் என்று கூறினர். அக்காலத்தில் இருந்த அரசியல் சூழ்நிலையும், புலவர்கள் மீதான அரசியல் அடக்குமுறையும் இத்தகைய பணிவாக வெளிப்படுகிறது என்றும் அறிஞர் கூறுவர்.

இதில் மற்றொரு கருத்தையும் சிந்திக்க வேண்டியுள்ளது.

கம்பன் தன் மனத்தில் காப்பியத்தை உருவாக்கம் செய்தபோது கம்பன் என்னும் கவிஞனாக இருந்தான். காப்பியம் முற்றுப்பெற்று நிறைவுறும் வேளையில் அவன் கம்பநாட்டு ஆழ்வானாக மிக உயர்ந்து விடுகிறான். காப்பியம் எழுதத் தொடங்கும் போது இருந்த அவன் மனநிலையிலும் காப்பியத்தை எழுதி முடிக்கும் போது அவனுக்கு இருந்த மனநிலையிலும் நிச்சயம் வேறுபாடு இருந்திருக்கும். கவி எழுதத் தொடங்கும் போது அவன் கவிஞன். காப்பியம் நிறைவுறும் போது அவன் கவிச்சக்கரவர்த்தி.

கம்பனின் மன உயர்வு

காப்பியத்தைப் பாடப் பாட அவன் மனம் உயர்ந்து கொண்டே வருகிறது.

காப்பியத்தின் இறுதியில் யுத்த காண்டத்தில் இரணியன் வதைப்படலம், இராவணன் வதைப்படலம் ஆகியவற்றைப் பாடும்போது அவன் மனம் கண்ட உண்மைகள் ஏராளமாகப் பதிவு செய்யப்படுகின்றன.

மிகச் சிறந்த எழுத்தாளர்கள் கதையை முடிக்கும் தருவாயில், அவர்கள் படைத்த பாத்திரங்களோடு அவர்களும் சேர்ந்து அழுது கண்ணீர் விட்டதாக அவர்களுடைய நூலில் தெரிவிக்கிறார்கள்.

பாத்திரங்களுடன் ஒன்றிச் செல்லும்போது அப்பாத்திரங்களின் மிக உயரிய குணங்கள், பாத்திரத்தைப் படைக்கின்ற படைப்பாளியின் மீது படிந்து விடுவதில் வியப்பும் ஒன்றும் இல்லை.

இரணியன் எத்தகையவன்?

இராவணன், அகங்காரம் மமகாரம் ஆகியவற்றின் உச்சம் என்றால், இரணியன் இவற்றின் உச்சத்தின் உச்சம்.

இராவணனின் வீழ்ச்சியில்

'போர் ஆசைப்பட்டு எழுந்த குலம் முற்றும்
பொன்றவும் தான் பொங்கி நின்ற
பேராசை பெயர்ந்ததோ'

(இராவணன் வதைப்படலம்-219)

என்று அவனது அகங்காரமும் மமகாரமும் வீழ்ந்து போனமை பேசப்படுகிறது. அவ்வீழ்ச்சியின் காரணமாக அவன் முகங்கள் பொலிந்தன என்றும் பேசப்படுகிறது.

ஆனால், இரணியனின் வீழ்ச்சி போரால் வந்தது அன்று. காக்கும் இறைவனே அழிப்பவனாகிக் கோபம் எய்திச் சிங்கப் பிரானாக உருவெடுத்து வந்தான்.

உயருமேல், அண்ட முகடு
தன் முடி உற உயரும்;
பெயருமேல், நெடும் பூதங்கள்
ஐந்தொடும் பெயரும்

(இரணியன் வதைப்படலம்-13)

என்று சொல்லுகிறபடி, இரணியனின் அகங்காரம் அண்டங்களையும் தாண்டிச் செல்கிறது. அவனது அழிவில் அனைவர்க்கும் மகிழ்வு ஏற்படுகிறதே அன்றித் துன்பம் ஏற்படவில்லை.

தத்துவத் தாக்கம்

இராவணன், இரணியன் ஆகிய இரண்டு பாத்திரங்களும் கம்பனின் மனத்தில் மிகப்பெரிய தத்துவத் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இதிலே இரணியன் வதைப்படலம், இராவணனின் மந்திரப் படலத்துடன் பொருந்தாத கிளைக்கதையோ என்ற ஐயப்பாடும் சில அறிஞர் மனத்தில் எழுந்தது உண்டு என்பது மேலே கூறப்பட்டது. இரணியன் வதைப்படலத்தை நீக்கி விட்டால், கம்பனின் கடவுட் கோட்பாடு நிறைவு பெறாது. கம்பன் தனது கடவுட் கொள்கையை இரணியன் வதைப் படலத்தில் பெய்து வைத்திருக் கிறான். மேலும் அகங்காரம் கொண்ட இராவணனின் வீழ்ச்சியைவிட, அகங்காரத்தின் உச்சத்தின் உச்சமாக இருக்கிற இரணியன் வதைப்படலம் இராமாயணத்தின் மிக முக்கிய பொருளாகிய மமகார அழிவிற்குக் கிடைத்த மற்றோர் மாணிக்கம் ஆகும். மமகார வீழ்ச்சி என்பதைக் கம்பன் இராவணன், இரணியன் என்ற இரண்டு கண்ணாடிகளில் காட்டுகிறான். இவை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கவும் வகை செய்திருக்கிறான். இந்த ஒப்பீட்டில்

இராவணனை விடவும் இரணியன் அகங்காரத்தில் விஞ்சிவிட்டான் என்று நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளவும் செய்திருக்கிறான். எனவே இரணியன் கதையை வீடணன் எடுத்துப் பேசி இருப்பது 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்ற இராமாயணத்தின் அடிப்படைக் கருத்துக்கு மிக முக்கியமானதாகவும், மிகுந்த வலுவானதாகவும் இருக்கிறது.

இதனாலேயே இது குறித்து வ.வே.சு. ஐயர்,

"அரக்கரின் மந்திரத்தில் தான் உபாக்கியான ரத்தினமாகிய இரணியன் வதைச் சரித்திரம் விபிஷணனால் ராவணனுக்குச் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ பாகவதத்திலுள்ள பிரகலாத சரித்திரத்தையும், அதை அனுசரித்துப் பொம்மர போதன்னா ஆந்திர பாகவதத்தில் எழுதிய பிரகலாத சரித்திரத்தையும் கம்பனது இரணியன் வதைப் படலம் வெகு சுலபமாக வென்று விட்டது." என்று கூறினார்.[1]

இரணியன் இராவணன் என்ற இரு பாத்திரங்களையும் நன்கு புரிந்து கொள்பவரின் மனத்தில் அகங்காரம் எழுவதற்கு வாய்ப்பு இல்லை. இவ்விருவரின் வீழ்ச்சியின் மூலமாக ஒவ்வொருவர் மனத்திலும் 'அகங்கார ஒழிப்பு' என்ற விதை தூவப்படுகிறது. தன்னலத்தை விட அகங்காரம் மிகக் கொடியது என்பர் அறிஞர்.

அறியாமைப் படையல்

இப்பாத்திரங்களை இயற்றித் தருகின்ற கம்பன், இராமாயணம் என்னும் மகா காவியத்தை இறைவனின் முன்னாலே படைப்பதற்கு வந்தபோது, "என் அறியாமையை, இறைவனே! உன்முன்னே படைக்கிறேன்!" என்று மிக்க அடக்கத்துடன் மொழிகின்றான்.

வையம் என்னை இகழவும், மாசு எனக்கு
எய்தவும், இது இயம்புவது யாது எனின்,
பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வ மாக் கவி மாட்சி தெரிக்கவே

(பாயிரம்-6)

1. கம்பராமாயண ரஸனை, ப.57

என்று அடக்கத்திலிருந்து புறப்பட்டு வரும் காப்பியப் பேரொளி, இன்று உலகைத் தன் கவி வளத்தால் அடக்கி ஆள்வதைக் காண்கிறோம்.

கம்பன் ஒரு பண்பாட்டுச் சின்னம்

கவிச் சக்கரவர்த்தியாக இருந்த போதிலும் அவன் மானுடம் (Humanity) போற்றிய காரணத்தால் பாரதப் பண்பாட்டின் சின்னமாகத் திகழ்கிறான். தமிழரின் கவிதை நாகரிகத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லவும், பாரதத்தின் அறப் பண்பாட்டை உலகில் உயர்த்திப் பிடிக்கவும் கம்பன் ஒரு சின்னமாகத் திகழ்கின்றான். அவன் பிறந்த நாட்டில் நாமும் பிறந்திருக்கிறோம் என்பது நமக்குப் பூரிப்பினையும், உயிர் உறும் அமுதத்தையும் தந்து கொண்டு இருக்கிறது.

துணை நூற்பட்டியல்

1. கம்பராமாயணம் - இராமவதாரம் - கம்பன் கழகம், சென்னை.
   1. கல்வி உளவியலும் கல்விச் சமூகவியலும்
      - பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி-2.
2. கம்பராமாயணம் - மூலமும் உரையும், 7 தொகுதிகள்,
   உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை-1.
3. கம்பராமாயண வசனம், பாகம் 1 மற்றும் 2 கழக வெளியீடு
4. திருமூலர் திருமந்திரம் திருவாவடுதுறை ஆதீனம்
5. திருக்குறள் - பரிமேலழகர் உரை கழகப்பதிப்பு
6. திருவாசகம் திருவாவடுதுறை ஆதீனம்
7. ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம்
   தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை.
8. அப்துல் ரகுமான், எஸ். டாக்டர் கம்பனின் அரசியல் கோட்பாடு.
9. இஸ்மாயீல், மு.மு. கம்பன் கண்ட சமரசம்
10. குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை - தொகுதி-5
11. தீனதயாளன்.பா பரமஹம்ஸர் - பொழியும் கருணை மழை
    கிழக்கு பதிப்பகம், சென்னை-4.
12. சந்தானம். எஸ்
    1. கல்வி உளவியலும் கல்விச் சமூகவியலும்
       பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி-2.
    2. கல்வியல் மனவியல் சாந்தா பப்ளிகேஷன்ஸ், சென்னை-14
13. சுப்பிரமணியன், ச.வே. முனைவர்
    1. கம்பனும் உலகியல் அறிவும்
       தமிழ்ப்பதிக்கம், சென்னை-96.
    2. கம்பனும் இளங்கோவும்
       உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், தமிழூர். அத்தியூற்று.

14. சுப்பிரமணியன், ச.வே.,முனைவர். திருக்குறள் முழக்கம்,
சிவராம கிருஷ்ணன். ஆ. பதிப்பாசிரியர்,
திருவள்ளுவர் கழகம், தென்காசி.

15. பாரதிதாசன் கவிதைகள்
ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை.

16. வ.வே.சு. ஐயர், ஸ்ரீ கம்பராமாயண ரஸனை,
ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5

17. ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்

ஆங்கில நூல்கள்

1. Panda, B.N.
Advanced Educational Psychology.
Discovery Publishing House, New Delhi-110002

2. Radhakrishnan, Sarvepalli.
Mahatma Gandthi,
Essays and Reflections
Jaico Publishing House, Mumbai-5.

3. Thomas Edison,
A Life Story, New Dawn Press, Elgin.

4. Willam Mc Dougall. A Text book of Psychology,
Discovery Publishing House,
New Delhi-110002.

5. Yogendra K. Sharma,
Psychological Philosophy of Education
Kanishka Publishers and Distributors,
New Delhi-110002.

ஆசிரியரின் பிற நூல்கள்

- ☆ கம்பனும் உளவியலும்
- ☆ கம்பன் காட்டும் தலைமைப் பண்புகள்
- ☆ அகிம்சையும் அதன் தத்துவங்களும்
- ☆ கம்பனின் காட்சிக் கோலங்கள்



டாக்டர் அ.அ. ஞானசுந்தரத்தரசு

தமிழகத்தின் தமிழ்ப் பண்ணை தருமபுர ஆதீனம். இவ்வாதீனத்தில் முதுபெரும் புலவர்களிடம் தமிழ் பயின்றவர். 'புலவர்' தேர்வில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சிறப்புத் தகுதி பெற்றமைக்காக, ஆதீனத்தின் "குருஞானசம்பந்தர் பரிசி"னைப் பெற்றவர்.

மறைமலை அடிகளாரின் மாணாக்கராகிய இளவழகனார், மாம்பாக்கத்தில் நிறுவிய குருகுலத்தில் தமிழ்ப் பணியாற்றியவர். சிற்றூர் குறள்நெறிக் கூட்டங்களில் பங்கேற்று அவரது பாராட்டைப் பெற்றவர். வேலூர், பாலமதி, ஊராட்சி மன்றத் தலைவர் நா.கி. இராகவனின் அன்புக்கு உரியவர்.

மேல்நிலைத் தமிழாசிரியராக, தலைமையாசிரியராகப் பணிபுரிந்து அந்நிறுவனங்கள் பன்முக வளர்ச்சிபெற உறுதுணையாக நின்றவர்.

புதுக்கோட்டை மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனத்தில் முதல்வராகப் பணிபுரிந்து, புதிய கல்விக் கொள்கையைச் செயல்படுத்தி மாநில அளவில் நற்பெயரை ஈட்டியவர்.

ஆசிரியர்களுக்குச் சிறப்பாகப் பயிற்சி வழங்கியமைக்காக டாக்டர் இராதாகிருட்டினன் நல்லாசிரியர் விருது பெற்றவர்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் கம்பனைப் பற்றி ஆய்வு செய்து 'முனைவர்' பட்டம் பெற்று இக்காப்பியத்திற்குப் புத்தொளி தந்தவர். பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் அனைத்துலகக் கல்வி மாநாட்டில் இவர் வழங்கிய "Enhancement of the Students' Achievement using Video Technology" என்ற ஆய்வுக் கட்டுரை பலருக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

இனுப்பூர் மேட்டுச் சாலை ஸ்ரீ பாரதி ஆசிரியப் பயிற்சி நிறுவனத்தின் முதல்வராகிய இவர், அனைத்து மாணவர்களும் செயலாய்வுப் (Action Research) பணியை மேற்கொள்ள ஊக்குவித்தவர். இந்நிறுவன மாணவர்கள் பல்வேறு தகுதிகளைப் பெற்று, கல்வி என்னும் முத்திரையைப் பதிக்க களம் அமைத்துத் தந்த பெருமைக்கு உரியவர்.